திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

கொலோ. 2:15

சிலுவை என்பது பாரம்பரியமும், தொன்மை, தன்மை, பூர்வீக வரலாறு நிறைந்த அடையாளச்சின்னமாகவே அநேகரால் கருதப்படுகின்றது. இது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே சொந்தமாக கருதப்படாமல் உலகம் முவதும் உள்ள அனைவராலும் மதிப்பிற்குரிய ஒன்றாக மாறியுள்ளது. இந்நாட்களில் இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட, சிலுவையை எடுத்துக்கொள்ள ஆயத்தமாக உள்ளனர். இப்படிப்பட்ட சிலுவையின் வரலாற்றுப் பின்னணியைக் குறித்து தியானிப்போம்.

I. சிலுவையின் துவக்கம்:-

a. சிலுவை என்பது சுமார் 4000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும். கிறிஸ்தவ காலத்திற்கும் முந்தினக் காலத்திருந்தே ஒரு மத சம்பந்தமான அடையாளச் சின்னமாக ஏறக்குறைய உலகலாவிய விதத்தில் சிலுவை பயன்படுத்தப் -பட்டுள்ளது என்று சரித்திரத்தின் மூலம் கருதப்படுகின்றது.

b. சிலுவை என்ற இந்தச் சொல் "லத்தின்" மொழியின் சொல்லான "க்ரக்ஸ் (crux)" என்ற சொல்லிலிருந்து வந்ததாகும். ஆதலால் இதை "குருக்ஸ்" என்றும், "குருஸ்" என்றும், "உசரூ" என்றும் அழைப்பார்கள்.

c. வெகு காலத்திற்கு முன்பே கிரேக்கர்களின் பாக்கஸ் தீரு தேசத்தாரின் "தம்மூஸ்", கல்தேயரின் "பெல்", ஸ்கான்டிநேவியரின் "ஓடின்" போன்ற விக்கிரகங் -களின் அடையாளச் சின்னமாகவும் சிலுவை பயன்படுத்தப் பட்டுள்ளது.

d. சிலுவை என்ற வார்த்தையைச் சொல்ல, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் "ஸ்டாரஸ்" என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளனர். "ஸ்டாரஸ்" என்ற வார்த்தையானது செங்குத்தானக் கம்பம் அல்லது கழுமரம் என்பதைக் குறிக்கிறதாகும்.

e. தி இம்பீரியல் பைபிளின்-அகராதி சிலுவையை கழு மரம் என்று சொல்வதை ஒப்புக்கொள்ளகிறது.

II. சிலுவையும்-ரோமர்களும்:-

a. ரோமானியர்கள் இந்த சிலுவையின் தண்டனை முறையை பிற நாட்டுக் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்க்காக கி.மு முதல் நூற்றாண்டு முதலே பயன்படுத்தி -யுள்ளதாக ஆய்வுகள் சொல்கின்றது.

b. செல்வாக்குள்ள சிலரைத் தவிர, தண்டனைப்பெற்ற குற்றவாளிகள் அனைவரையும், நிர்வாணமாகவே ரோமர்கள் சிலுவையில் அறைந்து கொள்ளுவார்கள்.

c. ரோம அரசாங்கத்தினர் பல்வேறு அளவுகளில் சிலுவைகளைச் செய்து, பொருள் கிடங்கில் வைத்திருப்பார்கள்.

d. ரோமர்களில் யார் எவ்வளவு பெரிய துரோகியாக இருந்தாலும், சிலுவையில் கொல்லப்பட மாட்டார்கள். அடிமைகளும், அந்நியர்களும் மட்டுமே சிலுவையில் கொள்ளப்படுவார்கள்.

e. இந்தியாவில் தூக்குதண்டனையைப் போன்று, பார சீகர்களும், மேதியர்களும், சீரியர்களும், மரணத் தண்டனையை நிறைவேற்ற சிலுவையையே பயன்படுத்தினர்.

f. கி.மு 27ல் ரோம ராயனாக "அகுஸ்து சீஷர்" என்பவரும் யூதேயாவை உள்ளடக்கின சீரிய ஆளுனராக "குரேனியுவும்" இருந்த நாட்களில் தான், யூதேயாவிலுள்ள பெத்லெகேமில் இயேசு பிறந்து வளர்ந்தார் (லூக் 2:1,2) இயேசுவின் புரட்சிகரமான வாரத்தைகளும், வல்லமை மிக்க செயல்களும் ரோம ஆளுனர்களை பயம் கொள்ள வைத்தது. அதனால்தான், இயேசுவை சிலுவையில் அறைந்து, கொள்ள வேண்டுமென்று யூதாஸ்காரியோத் மூலம் பலிதீர்க்கும் காரியத்தை ஆரம்பித்தார்கள்.

தொடரும்

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

கொலோ. 2:15

III. சிலுவையின் நிலை:-

a. சிலுவையானது 7 அல்லது 7.5 அடியாக இருந்துள்ளது. ஏனெனில் யோவா 19:29 ன் படி இயேசுவுக்குத் தாகம் உண்டானபோது 1 அல்லது 2 நீளம் மட்டுமேயுள்ள ஈசோப்புத் தண்டில் புளித்த திராட்சைரசத்தில் ஊறின கடற் பஞ்சை பொருத்தின ஒருவன் அதை இயேசுவின் வாய்க்கு அருகே நீட்டினான் என்பதிலிருந்து, சிலுவை தரையில் நாட்டப்பட்டப் பின்பு, ஒரு ஆள் உயரத்திற்கும் சற்று உயர்வாகத்தான் இருந்திக்கும்.

b. ஒரு முழுமையான சிலுவை என்பது நான்கு விதங்களில் இணைணக் -கப்படும்.
1. நெடுமரத்தின் நுனியில் குறுக்கு மரத்தை இணைத்தல்
2. சற்று கீழே இறக்கி இணைத்தல்
3. சரியாக நடுவில் இணைத்தல்
4. நடுபாகத்தில் பொருத்தி கூட்டல் (+) குறி போன்று, அல்லது பெருக்கல் (x) குறி போன்று வைப்பார்கள்

c. சில சிலுவைகளில் கை மற்றும் கால்களில் அடிக்கப்படும் ஆணிகள் ஊடுருவுவதற்க்காக ஓட்டைகளும் போடப்பட்டிருக்கும்.

d. சிலுவை என்பது இரண்டு மரத்துண்டுகளால் ஆனது. அவை, ஒன்று: நெடுமரம், இரண்டு: குறுக்கு மரம் என்றும் சொல்லப்படும்.

e. இயேசுவின் சிலுவை ஒருபோதும் பாலீஸ் செய்யப்பட்டது கிடையாது. அது கரடுமுரடாகத்தான் இருந்திருக்கும். காரணம், அக்காலத்தில், இயேசுவை சிலுவையில் அறைந்த யூதர்களும், சிலுவையில் அறைய கட்டளையிட்ட ரோமர்களும் முரடர்களாகத்தான் காணப்பட்டனர்.

f. ஒரே சிலுவையில் அடிக்கடி அநேகரை அறையும் பழக்கமும் இருந்தது. அதை யாரும் சுத்தம் செய்யாததினால் அது எப்பொழுதும் அசுத்தமாகவும், இரத்தக்கரைகளோடும், நாற்றமெடுக்கக் கூடியதாகவும் இருந்துள்ளது.

g. சிலுவையில் தொங்குபவரின் முழு எடையையும் அவர்களின் கைகளே தாங்கும் நிலை உருவாவதால் மூச்சுத்திணறலும், சோர்வும், நீரிழப்பும் ஏற்படுவதுடன் இரத்த ஓட்டமும் பாதிக்கப்படும். நிர்வாண நிலையில், நெஞ்சடைத்து தாகம் ஏற்படும். ஏதோ சில வார்த்தைகளை சொல்ல விரும்பியும் சொல்ல முடியாமல் சாவு என்னும் மரணத்துடன் போராடுவதே சிலுவை தண்டனையின் உச்சக்கட்ட வேதனையாகும்.

h. சிலுவையின் மரணம் வழங்கப்படும் இடம் எழும்புகளும், எழும்புக் கூடுகளும், மண்டையோடுகளும், இரத்தக்கரைகள் நிறைந்ததும், ஊருக்கு அப்பால் உள்ள இடமுமாயிருக்கும்.

i. சிலுவையில் அறையப்பட்டு இறந்தவர்களின் உடல்கள் பொதுவாக அதிலேயே தொங்கிக்கொண்டிருக்கும். அவற்றைத் தின்ன பறவைகள், எலிகள், இன்னும் வேதம் சொல்வதுப் போல சில நேரத்தில் பெரிய பெரிய கழுகும் வந்து அழையும் (ஆதி 40:19).

j. பெருபாலும் மரணத்தண்டனை குற்றவாளிகளின் கழுத்தில் ஒரு பலகையைத் தொங்கவிட்டு, ஊர்வமாக அழைத்துச் செல்வார்கள். அதில் இவன் என்னைக் குற்றத்திற்காக மரணத்தண்டனை அடைந்தான் என்றக் காரணம் எழுதப்பட்டிருக்கும்.

ஆனால், இயேசுவை சிலுவையில் அறைந்தப்பின்னர் தான் பிலாத்துவின் உத்தரவு போர்வீர்களுக்குக் கிடைத்தது(மத் 27:37). அதனால், இயேசுவின் கழுத்தில் பலகை தொங்கவிடப்படவில்லை.

k. கடந்த காலங்களில் மரணத்தண்டனை மூன்று விதங்களில் தனித்தனியாக வழங்கப்பட்டது:
1. கல்லெறிந்து கொள்ளப்பட்டனர் (யோசு 7:25,26).
2. உயிருடன் எரித்துக் கொள்ளப்பட்டனர் (சங் 106:18; வெளி 17:16).
3. மரத்திலே தொங்கவைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். (எஸ்த 2:23; ஆதி 40:19).

தொடரும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

கொலோ. 2:15

l. கொல்கொதா மலையில் இரண்டு மரத்துண்டுகளையும் இணைத்து இயேசுவைக் கிடத்தி, கால்களைக் கயறு கொண்டு கட்டினப் பின்பு, முதலில் ஒரு கையில் ஆணி அடித்தபோது, சிலுவையின் ஓட்டை வழியே அந்த ஆணி மறுபக்கம் வந்திருக்கும். அடுத்தக் கையில் ஆணி அடிக்க ஓட்டை பொருத்தமாயிராமல் இருக்குமானால், இயேசுவின் கையில் கயறு கட்டி உல்லின் மீது ஒரு காலை வைத்து மிதித்துக் கொண்டு கயிற்றை பிடித்து இழுத்து ஓட்டைக்கு நேராக வைத்து மற்றொறு கையில் ஆணி அடித்திருப்-பார்கள்.

இப்படி கயறு கட்டி இழுப்பதால் தோல்பட்டையின் உள்பகுதிகள் கிழிந்து போகும். அதனால் இன்னும் வேதனை கடுமையாயிருக்கும். அதனால் ஆணிகள் அறைந்த பின்பு,சிலுவையை புறட்டிப்போட்டு, ஆணிகளை வலைத்து விடுவார்கள். அந்நேரத்தில் இயேசுவின் முதுகின் மீது பாரமான மரச்சிலுவை அழுத்திக்கொண்டிருந்திருக்கும்.

m. எழும்புத்துண்டுகளையும், இரும்பு குண்டுகளையும், இரும்பினாலான கொக்கிகளையும் இடை இடையே இணைத்துப் பின்னப்பட்டிருந்த சவுக்கி-னால் இயேசுவை அடித்திருந்தனர். அப்படி கொடூரமான முறையில் அடித்திருந்ததால் அவரின் தோல் கிழிந்து தொங்கிக் கொண்டிருந்தது. இப்படி மகாகொடிய காயத்தோடுதான் இயேசு சிலுவையை சுமந்துக் கொண்டு போனார்.

n. பிலாத்துவின் அரண்மனையிலிருந்து கொல்கொதா மலை வரைக்கும் சிலுவையை தூக்கிக் கொண்டுப் போகும்போது வழியில் மூன்று விசை இயேசு தடுமாறித் தள்ளாடினதாக வரலாறு சொல்லுகிறது.

o. இந்த இயேசுவைக் கண்டு நாம் பரிதாபப்பட்டு அழ வேண்டும் என்பதற்-க்காக அவர் பாடுபடவில்லை. மனிதகுலம் அணைத்தும் பரலோகம் வந்து சேர வேண்டும் என்பதற்க்காகவே அவர் பாடுபட்டார்.

p. சிலுவை என்பது இயேசுவின் மரணக் கருவியாகவும், கிறிஸ்த்தவர்-களின் அடையாளமாகவும் பார்க்கப்படுகின்றது.

q. சிலுவையில் அறையப்பட்ட இயேசு என்று சொல்லி, படத்தை வரை-கிறவர்கள் அதையும் அழகாகவே வரைந்து வைத்திருக்கிறார்களே ஏன்? என்று கேள்வி கேட்டபோது, இயேசுவின் மேலுள்ள அன்பினால் என்று சொன்னால் அது பொய் என்று புறிந்துக் கொள்ள வேண்டும்.

IV. வரலாற்றுக் குறிப்புகள் :-

1. சிலுவையின் குன்று (Hill of Crosses):-

வட லித்துவேனியாவில் அமைந்துள்ள சியாவுலியாய் நகரின் வடக்கில் 12 கி.மீ தூரத்தில் உள்ளது சிலுவையின் குன்று. இது கிறிஸ்தவ யாத்ரீகர்கள் செல்லும் இடமாகும். 1831ம் ஆண்டு, இங்கு முதல் முதல் ஒரு சிலுவை வைக்கப்பட்டது.

பின்பு, அதுவே பாரம்பரிய பழக்கமாக மாறிப்போய் இப்போது ஏறாளமான சிலுவைகள் அங்கு பெருகிப் போயுள்ளான.
1990 ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, ஏறத்தாழ 55,000க்கும் அதிகமான சிலுவைகள் காணப்பட்டன. அதுவே கடந்த 2006ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 1,00,000 அதிகமான சிலுவைகள் அந்த குன்றின் மீது நடப்பட்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றது.

2. தமிழ்நாட்டில் ஓர் சிலுவைச்சேரி:-

தமிழ்நாட்டின் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஓர் கிராமம் தான் சிலுவைச்சேரி. இந்த ஊரில் அய்யனார் கோவிலும், மாரியம்மன் கோவிலும் பிரபல்யமானது. அப்படிப்பட்ட பிரபல்யத்திற்கு மத்தியில் அந்த ஊரின் பெயர் சிலுவையை சுமந்து கொண்டு இருப்பதால் இது ஓர் கிறிஸ்தவர்களின் ஊர் என்றே அனைவராலும் கருதப்படுகின்றது..

தொடரும்

கொலோ. 2:15

3. சிலுவைப் போர்கள்:-

இலத்தின் திருச்சபையின் அனுசரணையுடன் இடம் பெற்ற மதம் சார்ந்த போர்களின் தொடர்தான் சிலுவைப்போர் ஆகும்.

- இஸ்லாமியரிடமிருந்து எருசலேமை மீட்பது
- பாகனிய நெறிகளை ஒடுக்குதல்
- மத நிந்தனையை இல்லாததாக்குதல்
- ரோமன் கத்தோலிக்க குழுக்களுக்கான போட்டி நிலை-மைக்கு தீர்வுக்காணுதல் என்பவைகள்தான் சிலுவைப் போரின் முக்கியக் காரணமாக இருந்தது.

1095 முதல் 1272 வரையும் ஏறத்தால ஒன்பது சிலுவைப் போர்கள் நடைபெற்றுள்ளன.

4. எசுப்பானிய நாட்டின் தலைநகரான மத்ரீத் என்ற பட்டணத்தில் உலகின் உயரமான சிலுவை அமைந்துள்ளது.

5. பாகிஸ்தான் சிலுவை:-

பாகிஸ்தான் நாட்டின், கராச்சி பட்டணத்தில் கோரா கப்ரிஸ்தான் என்ற கல்லறைக்கருகில், ஆசியாவிலேயே பெரிய சிலுவையை பர்வேஸ் ஹென்றி கில் என்ற வியாபாரி கடந்த 2015ம் ஆண்டில் கட்டினார்.

இந்த சிலுவையானது 140 அடி (42.7 மீட்டர்) அளவு உயரம் கொண்டதாகும்.

என்ன கட்டுகிறோம் என்பதை முதலில் அவர் யாருக்கும் சொல்ல-வில்லை, ஒரளவு கட்டியப் பின்னர்தான் சிலுவை என்று தெரியவந்தது. அதனால், தொழிளாலர்கள் வேலையை பாதியிலேயே விட்டு விட்டு சென்றுவிட்டனர்.

ஆனாலும் ஒரே ஒரு முஸ்லிம் குடும்பம் வாரத்தின் ஏழு நாட்களும், ஒரு நாளைக்கு 14 மணி நேரம் வேலை செய்து கட்டிமுடித்தனர்.

யாராவது இந்த சிலுவையைத் தாக்கலாம் என்று நினைத்ததால், குண்டு துளைக்காத வகையில் இந்த சிலுவை கட்டப்பட்டுள்ளது.

V. கருத்துக்களும் கேள்வியும் :-

கருத்து - 1:-

a) "X" - CRUX DECUSSATA
b) "T" - CRUX COMMISSA
c) "✝" - CRUX IMMISSA
d) "I" - CRUX SIMPLEX

இதில் எந்த வகை சிலுவையில் இயேசு அறையப்பட்டார் என்ற கேள்வியோடு கூடிய பெரிய விவாதம் அறிஞர்கள் மத்தில் இன்றும் உண்டு. ஆனாலும் "+ CRUX IMMISSA" வடிவிலான சிலுவையாகத்தான் இருந்திருக்கும் என்றும் பலரும் நம்புகின்றார்கள்.

காரணம்: இயேசுவின் தலையின் மீது ஒர் பலகை மாட்டப்பட்டதாக வேதம் சொல்கின்றது (மத் 27:37). அதற்கு ஏற்ற இடவசதி இதில்தான் இருந்திருக்கும் என்று நம்புகின்றனர்.

கருத்து - 2:-

குருஸிஃபிகேஷன் இன் ஆன்டிகியுட்டி புஸ்தகம்:-

இயேசுவை ஒற்றை நேர் மரத்துண்டில்தான் சிலுவையில் அறைந்தனர். அதனால் அதனை சிலுவை என்று சொல்ல முடியாது என்று இந்த புஸ்தகம் விவரிக்கிறது.

தொடரும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

கொலோ. 2:15

கருத்து – 3:-

இயேசு இறந்து சுமார் 300 வருஷங்களுக்குப் பிறகு, ரோம பேரரசனான கான்ஸ்டன்டைன், சிலுவையை தன்னுடைய ராணுவப் படைகளின் சின்னமாக பயன்படுத்தினார். காலப்போக்கில் அதுவே சின்னமாக மாறிப்போனது.

கருத்து – 4:-

எழுத்தாளரும், தொல்லியலாளருமான அடால்ப் நப்பாலேயன் டிரான் என்பவரின் கருத்து:-

கிறிஸ்துவுக்குச் சமமாய் இல்லையென்றாலும், அவரைப் –போலவே சிலுவையும் வழிபாட்டிற்குறிய ஒன்றாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது. சொல்லப்போனால் மரத்தினால் செய்யப்பட்ட இந்த புனிதச் சின்னம் ஏறக்குறைய கடவுளுக்குச் சமமாகவே சில இடங்களில் பூஜிக்கப்படுகின்றது.

VI. சிலுவையும் காடியும் :-

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவுக்குக் காடி கொடுக்கப்பட்டது என்பது நன்க்குத் தெரியும். ஆனால், எத்தனை முறை கொடுக்கப் –பட்டது? எப்போது கொடுக்கப்பட்டது? எப்படி கொடுக்கப்பட்டது என்கிற குழப்பம் அநேகருக்கு உண்டு. இயேசுவுக்கு மூன்று முறை காடி கொடுக் கப்பட்டதாக வேதம் விவரிக்கின்றது. அதைத் தெரிந்துக்கொள்வோம்.

1. மாற் 15:23 சிலுவையில் அறைவதற்க்கு முன்:-

முக்கிய குறிப்பு: வெள்ளிப்போளம் கலந்த திராட்சைரசமான இது வலியை மறக்கக் கொடுக்கப்படும் பானம். ஆனால், கிறிஸ்துவோ முழு வேதனையையும் சகிக்கும்படி அதனை ஏற்க்கவில்லை.

2. லூக் 23:36 சிலுவையில் மத்தியானத்திற்கு முன்:-

முக்கிய குறிப்பு: இது படைவீரர்கள் கிறிஸ்துவை ராஜா என எள்ளி நகையாடி கொடுத்தது. அக்காலத்தில் அரசர்கள் பதவி ஏற்ற –வுடன் மரியாதை நிமித்தம் இனிய பானம் வழங்குவதைப்போல இயேசுவுக்குக் கொடுத்து, நீ யூதரின் ராஜாவானால் இரட்சித்துக் –கொள் என்று கிண்டல் செய்தனர் (லூக் 23:36). சிலுவையின் இரண்டாவது வார்த்தைக்கு முன்பு இது நிகழ்ந்தது (லூக் 23:43). அதன் பின்பு பகல் 12 மணி முதல் மாலை 3 மணி வரை அந்தகாரம் உண்டானது (மாற் 15:33).

3. யோவா 19:29,30 } சிலுவையில் மத்தியானத்திற்குப் பின்:-
மாற் 15:36

முக்கிய குறிப்பு: சங் 69:21; 22:15 போன்ற வேத வசனங்களின் நிறைவேறுதலாக இயேசு கூறியபோது, பஞ்சில் தோய்த்து, ஈசோப் –புத்தண்டில் மாட்டிக்கொடுத்தனர். கிறிஸ்து அதை சுவைத்தப்பின் முடிந்தது என்றார். சிலுவையில் நான்காவது வார்த்தைக்குப் பிறகு (மாற் 15:34). ஐந்தாவது வார்த்தையைத் தொடர்ந்தும் இது நிகழ்ந்தது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

VII. ஒரே நாளில் நிறைவேறிய சிலுவைக்கான தீர்க்கதரிசனங்கள்:–

வ.எ	சொல்லப்பட்டது		நிறைவேறுதல்
1.	சங் 41:9	காட்டிக்கொடுக்கப்படுவார்	மத் 10:4; 26:49,50
2.	சக 11:12,13	முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்படுவார்	மத் 26:15
3.	சக 11:13	அந்தக் காசு தேவாலயத்தில் எறியப்படும்	மத் 27:5
4.	சக 11:13	அந்தக்காசினால் குயவன் நிலத்தை வாங்குவர்	மத் 27:7
5.	சக 13:7	சீடர்களால் கைவிடப்படுவார்	மாற் 14:50
6.	சங் 35:11	பொய்க் குற்றம் சாட்டப்படுவார்	மத் 26:59,60
7.	ஏசா 53:7	குற்றம் சாட்டப்படும்போது மௌனமாக இருப்பார்	மத் 27:12
8.	ஏசா 53:5	காயப்படுத்தப்படுவார்	யோவா 20:25
9.	ஏசா 50:6	அடிக்கப்படுவார், துப்பப்படுவார்	மத் 26:67
10.	மீகா 5:1	கன்னத்தில் அடிக்கப்படுவார்	மாற் 14:65
11.	சங் 22:7,8	பரியாசம் பண்ணப்படுவார்	மத் 27:31
12.	சங் 109:24,25	மிகவும் தள்ளாடுவார்	யோவா 19:17; லூக் 23:26
13.	சங் 22:16; சக 12:10	கரங்கள் துளைக்கப்படும்	லூக் 23:33
14.	ஏசா 53:12	அக்கிரமக்காரருடன் தீர்ப்பிடப்படுவார்	மத் 27:38
15.	ஏசா 53:12	அக்கிரமக்காரருக்காகவும் வேண்டுதல் செய்வார்	லூக் 23:34
16.	ஏசா 53:3	சொந்த மக்களால் கைவிடப்படுவார்	யோவா 7:5,48
17.	சங் 69:4	காரணமின்றி பகைக்கப்படுவார்	யோவா 15:25
18.	சங் 38:11	நண்பர் தூரமாவர்	லூக் 23:49
19.	சங் 109:25	மக்கள் தலைகளைத் துலுக்குவர்	மத் 27:39
20.	சங் 22:17	அவர்கள் நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பர்	லூக் 23:35
21.	சங் 22:15	உடைக்காக சீட்டிடுவர்	யோவா 19:23,24
22.	சங் 69:21	தாகமாயிருப்பார்	யோவா 19:28
23.	சங் 69:21	காடியைக் குடிக்கக் கொடுப்பர்	மத் 27:34
24.	சங் 22:1	அவரது கதறல் கேட்கப்படவில்லை	மத் 27:46
25.	சங் 31:5	பிதாவினிடத்தில் தனது ஆவியை ஒப்படைப்பார்	லூக் 23:46
26.	சங் 34:20	எலும்புகள் முறிக்கப்படாது	யோவா 19:33
27.	சங் 22:14	இருதயம் உடைந்தவராவார்	யோவா 19:34
28.	சக 12:10	குத்தப்படுவார்	யோவா 19:34
29.	ஆமோ 8:9	அந்தகாரம் தோன்றும்	மத் 27:45
30.	ஏசா 53:9	ஐசுவரியவானாக அடக்கம் பண்ணப்படுவார்	மத் 27:57-60

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

கொலோ. 2:15

VIII. சிலுவையும் – சில அடையாளங்களும்:–

a. ரோமன் கத்தோலிக்கச் சபையினர் தாங்கள் கிறிஸ்தவ பக்தியுள்ள –வர்கள் என்பதைக் காண்பிப்பதற்க்காக தந்தை, மகன், தூய ஆவியானவர் என்றுச் சொல்லி கண், மார்பு, தோஸ்பட்டைகளைத் தொட்டு சிலுவையின் அடையாளத்தைப் போட்டுக் கொள்வார்கள்.

இதில் தந்தை என்றால் பிதாவையும், மகன் என்றால் இயேசுவையும், தூய ஆவி என்றால் பரிசுத்த ஆவியானவர் என்றும் அர்த்தமாகும். அது போல, கண் என்றால் ஆவியையும், மார்பு என்றால் ஆத்துமாவையும், தோஸ்பட்டை என்றால் சரீரத்தையும் குறிப்பிடுவதாகச் சொல்லுவார்கள். இது அவர்களுக்கென்று, அவர்களே உருவாக்கிக் கொண்ட அடையாளமாகும்

b. நாம் படிக்கும் கல்வி பாடத்தில் கூட பலவிதங்களிலும் சிலுவையோ அல்லது சிலுவையின் அடையாளமோ பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1. ரோமன் இலக்கம் 10 என்பது " X " ஆகும்.
2. இலத்தின் அகர வரிசையில் " X " என்ற எழுத்தும் " t " என்ற எழுத்தும் சிலுவையைக் குறிக்கும்.
3. ஹன் என்ற எழுத்தில் 10 என்பது " ✝ " ஆகும்.
4. கூட்டல் அடையாளத்திற்கு " ✝ " ஆகும்.
5. பெருக்கல் அடையாளத்திற்கு " X " ஆகும்.
6. பிழை என்பதை குறிக்கவும் " X " ஆகும்.

இப்படி அனுதின வாழ்கையில் ஏதோ ஒரு வகையில் சிலுவை நம்மோடுகூட கலந்து நிற்கிறது.

c. சங்கீத புஸ்தகத்தில் வரும் **22 ம் சங்கீதம்** இயேசுவின் சிலுவையை –யும், சிலுவையின் பாடுகளையும் குறிப்பிடும் ஓர் சங்கீதமாக உள்ளது. 6,14,15,18 ஆகிய வசனங்களே இற்கு ஆதாரம். ஆதலால் 22 ம் சங்கீதம் இயேசுவின் சிலுவையின் அடையாளமாகும்.

d. ஏசாயாவின் புஸ்தகம் 53ம் அதிகாரமும் இயேசுவின் சிலுவையை படம்பிடித்து காண்பிப்பதைபோல் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக 9 மற்றும் 10 ஆகிய வசனங்கள் இயேசு சிலுவையில் சந்தித்த, சகித்த துன்பங்களை தெளிவாக விவரிக்கின்றது. இதன் மூலம் தீர்க்கதரி சனங்களும், தீர்க்கதரிசிகளும் சிலுவையைத் தவிர்க்க முடியாது என்பதைக் காட்டுகிறது. ஆதலால், ஏசாயா 53ம் அதிகாரமும் ஓர் அடையாளம் தான்.

e. சிரேனே என்ற ஊரைச் சேர்ந்தவனும், அலெக்சந்தர் மற்றும் ரூப் என்னும் இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பனுமாகிய **சீமோன்** என்பவன் மீது, போர்வீரர்கள் அந்த பாரமான சிலுவையை வைத்தார்கள் (லூக் 23:26). தேசாதிபதியின் அரண்மனையின் வெளியில் இருந்து, ஏறத்தால கபாலஸ்தலம் என்ற இடம் வரைக்கும் இந்த சீமோன் சிலுவையைச் சுமந்திருக்கலாம் (மாற் 15:16,21). ஆதலால், இயேசுவின் சிலுவையின் அடையாளங்களில், தவிர்க்க முடியாத அடையாளமாக சீமோன் மாறிவிட்டான்.



f. கிறிஸ்தவக் கொடி :–

வட அமெரிக்கா, ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இடங்களில் உள்ள **சீர்திருத்த திருச்சபைகளின்** மூலம் இந்த கொடி உருவாக்கப் –பட்டது. இந்த கொடியின் பின்புறம் வெள்ளை நிறமும், இடப்புறத்தில் நீள நிறமும், அதன் உள்ளே சிகப்பு நிறமும் காணப்படும்வண்ணம் வரையப்பட்டுள்ளது. இதில் **சிவப்பு நிறம்** இயேசுவின் இரத்தத்தையும், **நீளநிறம்** ஞானஸ்நானத்தையும் மற்றும் விசுவாசத்தையும், **வெள்ளை நிறம்** இயேசுவின் பரிசுத்தத்தையும் காட்டுவதாக உள்ளது.

தொடரும்

IX. தற்க்கால சிலுவைகள் சில (பாகம்–1) :–

கிரேக்க சிலுவை Greek Cross	பரி. ஜார்ஜ் சிலுவை St.George's Cross
இலத்தின் (அ) ரோமர் சிலுவை Latin (Roman) Cross	பரி. கெலமெண்ட் சிலுவை St. Clement's Cross
பைசன்டைன் சிலுவை Byzantine Cross	பரி. கில்பெர்ட் சிலுவை St. Gilbert Cross
மூன்று கட்டை சிலுவை Three bar Cross	பரி. யாக்கோபின் சிலுவை Cross of St. James
இரட்டைச் சிலுவை Double Cross	பரி. ஜீலியன் சிலுவை St. Julian Cross
எருசலேம் சிலுவை Jerusalem Cross	பரி. நினோவின் சிலுவை St. Nino's Cross
பரி. பேதுருவின் சிலுவை Cross of St.Peter	பரி. தோமாவின் சிலுவை St. Thomas Cross
டாயு சிலுவை Tau Cross	பரி. பிலிப்பின் சிலுவை St. Philip Cross
பரி. அந்திரேயாவின் சிலுவை St.Andrew's Cross	பரி. யோவானின் சிலுவை Cross of St. John
மணப்பெண் சிலுவை Brigid's Cross	பரி. சாட் சிலுவை Cross of St. Chad

தொடரும்

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

தற்க்கால சிலுவைகள் சில [பாகம்–2] :-

	பரி. லாசருவின் சிலுவை **Cross of St. Lazarus**
	ஆர்மேனியன் சிலுவை **Armenian Cross**
	கேன்டர்பரி சிலுவை **Canterbury Cross**
	செல்டிக் சிலுவை **Celtic Cross**
	கௌகாசியன் அல்பேனியன் சிலுவை **Caucasian Albanian Cross**
	புதிய காப்டிக் சிலுவை **New Coptic Cross**
	கிழக்கு சிரியன் சிலுவை **East Syrian Cross**
	நாஸ்டிக் சிலுவை **Gnostic Cross**
	மால்டீஸ் சிலுவை **Maltese Cross**
	மரோனைட் சிலுவை **Maronite Cross**

	ஒக்சிடன் சிலுவை **Occitan Cross**
	ரோஸ் சிலுவை **Rose Cross**
	செர்பியன் சிலுவை **Serbian Cross**
	திருத்துவத்தின் கேடய சிலுவை **Shield of the Trinity Cross**
	அனுராதாபுரம் [இலங்கை] சிலுவை **Anuradhapura Cross**
	நோர்டிக் / ஸ்காண்டி நேவிய சிலுவை **Nordic/Scandinavian Cross**
	பாப்பல் சிலுவை **Papal Cross**
	ஸ்டெப்பிடு சிலுவை **Stepped Cross**
	போல்னிசி சிலுவை **Bolnisi Cross**
	சேலம் சிலுவை **Cross of Salem**

தொடரும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

X. சிலுவையும் வாரநாட்களும் :-

சிலுவையில் மரித்த இயேசுவின் கடைசி ஒரு வாரமாகிய ஞாயறு முதல் சனி வரை என்ன நடந்தது என்பதை மருத்துவராகிய லூக்கா தனது சுவிசேஷ நூல் 19ம் அதிகாரம் முதல் 24ம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதியில் மிக விபரமாக கூறியுள்ளார். அதனை கிழமைகளின் வரிசைபடி தியானிப்பது மிக நல்லது.

1. ஞாயிறு: எருசலேம் பவனி (லூக். 19:28-44)
2. திங்கள்: தேவாலயம் தூய்மையாக்குதல் (லூக். 19:45-48)
3. செவ்வாய்: பொதுமக்கள் நடுவில் (லூக். 20:1-21)
   i) அவரது அதிகாரத்தை கேள்வி கேட்டல் (லூக். 20:1-8)
   ii) அவரது அதிகாரம் உவமையின் மூலம் வெளிப்படுத்தப்படல் (லூக். 20:9-18)
   iii) அதிகாரத்தைத் தடுத்தல் (லூக். 20:19-40)
   iv) அதிகாரம் திரும்பவும் உரைக்கப்படுதல் (லூக். 20:41 - 21:4)
   v) மறைபொருளில் உரையாடல் (லூக். 21:5-38)
4. புதன்: யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுக்க ஆயத்தம் (லூக். 22:1-6)
5. வியாழன்: பஸ்காவும் இயேசுவின் கைதும் (லூக். 22:7-53)
   i) கர்த்தரின் பந்தி (இராபோஜனம்) (லூக். 22:7-30)
   ii) கெத்செமெனே தோட்டம் செல்லுதல் (லூக். 22:39-46)
   iii) இயேசு கைது செய்யப்படுதல் (லூக். 22:47-53)
6. வெள்ளி: விசாரணையும் சிலுவையிலறைதலும் (லூக். 22:54 - 23:55)
   i) பேதுருவின் மறுதலிப்பு (லூக். 22:54-62)
   ii) அடிக்கப்படும் கிறிஸ்து (லூக். 22:63-65)
   iii) ஆலோசனைச் சங்கம் முன் கிறிஸ்து (லூக். 22:66-71)
   iv) ஆளுநர் பிலாத்துவின் முன் கிறிஸ்து (லூக். 23:1-6)
   v) ஏரோது ராஜாவின் முன் கிறிஸ்து (லூக். 23:7-12)
   vi) ஆளுநர் முன் மீண்டும் கிறிஸ்து (லூக். 23:13-25)
   vii) சிலுவையில் கிறிஸ்து அறையப்படுதல் (லூக். 23:26-49)
   viii) கிறிஸ்து அடக்கம் பண்ணப்படுதல் (லூக். 23:50-55)
7. சனி: கல்லறையில் கிறிஸ்து இயேசு (லூக். 23:56)
8. உயிர்த்த இயேசு மனிதருக்குக் தரிசனமாகுதல் (லூக். 24:1-53)
   i) மரணத்தை வென்ற கிறிஸ்து (லூக். 24:1-12)
   ii) தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிய கிறிஸ்து (லூக். 24:13-35)
   iii) உயிர்த்த உடலில் உணவு உண்ட கிறிஸ்து (லூக். 24:36-43)
   iv) சபையில் தலைவர் (லூக். 24:44-48)
   v) பரிசுத்த ஆவியானவரை அருளுபவர் (லூக். 24:49)
   vi) பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கிறிஸ்து (லூக். 24:50-53)

தொடரும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

XI. சிலுவையும் பேதுருவின் மறுதலிப்பும் :-

பேதுரு எத்தனை முறை மறுதலித்தாரென்பதில் வேதாகம அறிஞர் நடுவில் கருத்து வேறுபாடுகள் உண்டு. நான்கு சுவிசேஷ நூலாசிரியர்களும் மூன்று முறை மறுதலிப்பாய் என்ற கூற்றை முன்னிறுத்திக்கொண்டு மூன்று மறுதலிப்புகளையே குறிப்பிடுகின்றனர். ஆனால் அவர் யாருக்கு முன்பெல்லாம் மறுதலித்தார் என்று வரும் குறிப்புகள் வேறுபடுகின்றன. அவற்றை பட்டியலாக காண்போம்.

பொருளடக்கம்	மத்தேயு	மாற்கு	லூக்கா	யோவான்
கூற்று	இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் (மத் 26:34,75)	இந்த இராத்திரியிலே சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே, நீ மூன்று தரம் என்னை மறுதலிப்பாய் (மாற் 14:40,72)	இன்றைக்குச் சேவல் கூவுகி-றதற்கு முன்னே, நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்று-தரம் மறுதலிப்பாய் (லூக் 22:34,61)	சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் (யோவா 13:38)
மறுதலித்தோர் முன்னிலை	1. வேலைக்காரி (மத் 26:69) 2. வேறொருத்தி (மத் 26:71) 3. நின்ற சிலர் (மத் 26:73)	1. வேலைக்கரி (மாற் 14:66) அப்பொழுது சேவல் கூவிற்று (மாற் 14:68) 2. அதே வேலைகாரி (மாற். 14:69) 3. நின்ற சிலர் (மாற் 14:70)	1. வேலைக்கரி (லூக் 22:56) 2. வேறொருவன் (லூக் 22:58) 3. வேறொருவன் (லூக் 22:59)	1. வேலைக்கரி (யோவா 18:17) 2. சிலர் (யோவா 18:25) 3. மல்குசின் உறவினன் (யோவா 18:26)
	உடனே சேவல் கூவிற்று (மத் 26:74)	உடனே சேவல் இரண்டா-ந்தரம் கூவிற்று (மாற் 14:72)	இப்படிச் சொன்னவுடனே சேவல் கூவிற்று (லூக் 22:60)	உடனே சேவல் கூவிற்று (யோவா 18:27)

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

தொடரும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

XII. சிலுவையும் – இயேசுவின் ஆவி, ஆத்துமா, சரீரமும் :-

கிறிஸ்துவே ஜீவாதிபதி ஜீவனைக் கொடுக்கவும் எடுக்கவும் ஆற்றலுள்ளவர். அவரைக் கொலை செய்தனர் என்பது மிகவும் எளிதாக புரிந்து கொள்ளக்கூடிய காரியமன்று. கிறிஸ்து மனிதனாக அவதரித்தபோது ஆவி, ஆத்தும, சரீரம் உடையவராக இருந்தார் என வேதவசனங்களில் காணலாம்.

ஆவி	ஆத்துமா	சரீரம்
மாற் 2:8	மாற் 14:34	எபி 10:5
மாற் 8:12	யோவா 12:27	மத் 1:20
லூக் 10:21	ஏசா 53:10	லூக் 2:7,51,51
லூக் 23:46	சங் 16:10	லூக் 4:2
	சங் 69:1	யோவா 4:6,8
	சங் 22:20	1பேதுரு 2:24

நமக்காக அவர் பலியானபோது:-

1) மாம்சத்தில் பாடுபட்டார், கொலையுண்டார் – (1பேது 4:1; 3:18)

2) ஆத்துமா மரணத்துக்கு ஏதுவான துக்கம் கொண்டிருந்தது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார் – (மாற் 14:34; ஏசா 53:12)

3) ஆவியில் கலங்கினார், பிதாவின் கரங்களில் ஆவியை ஒப்புக்கொடுத்தார் – (யோவா 13:21, லூக் 23:46)

எனவே கிறிஸ்து நமக்காக மரித்தார், பின்பு உயிர்த்தார்.

தொடரும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

கொலோ. 2:15

XIII. சிலுவைக்காக ஆறு குற்ற விசாரணைகள்:-

அவரை இருவகை குற்ற விசாரணைகளுக்கு உட்படுத்தினர். ஒன்று மதசம்பந்தமானது. இன்னொன்று அரசு சட்ட சம்பந்தமானது. மதத்தின் தொடர்பில் மூன்று விசாரணைகள். 1. அன்னா, காய்பா, ஆகியோர் முன், சனகெரித் சங்கம் முன், 2. சட்ட சம்பந்தமான விசாரணைக்காக பிலாத்து, ஏரோது, மீண்டும் பிலாத்து ஆகியோர் முன்.

அன்னாவும், காய்பாவும், பிரதான ஆசாரியர்களாகக் கூறப்படுகின்றனர். இஸ்ரவேலில் ஒருதடவை ஒரு பிராதன ஆசாரியர்தான் இருக்க முடியும். ஆனால் கால ஓட்டத்தில் ஆண்டவரைவிட்டு அரசியல் கலந்த மதமாக அது மாறியதால் இத்தகைய நிலை ஏற்பட்டது. (மத் 26:57-68; மாற் 14:53-65; லூக் 22:54,63-65; யோவா 18:13-24)

இருவர் முன்பும் விசாரிக்கப்பட்ட பின்பு யூதர்களின் நீதிமன்றமாக கருத -ப்பட்ட 70 பேர் அடங்கிய ஆலோசனைச் சங்கத்திற்குக் கொண்டு செல்ல -ப்படுகிறார். அங்கும் விசாரனை நடக்கிறது (மத் 27:1; மாற் 15:1; லூக் 22:66-71)

அதன்பின்பு சட்ட முறையிலான விசாரணைக்காக பிலாத்துவின் முன்பு கொண்டு செல்லப்படுகிறார். ஆலோசனைச் சங்கத்தில் மரண தண்ட -னையை தீர்ப்பளித்தாலும் ரோம அரசாங்க ஆளுநரான பிலாத்துவின் அனுமதியிருந்தால் தான் நிறைவேற்றமுடியு மென்பதால் அவரிடம் கொண்டு செல்கின்றனர். அரசதுரோக குற்றமும், சமூக சமாதானத்தைக் குலைத் -தார் என்ற குற்றமும் சாட்டப்பட்டன. அவர் முன் கிறிஸ்து தமது இராஜ் -யத்தின் இருப்பிடத்தை விளக்கினார். ரோம சட்டப்படி இயேசு குற்றவா -ளியல்ல என்று தீர்ப்பிட்டார் பிலாத்து (மத் 27:2, 11-14; மாற் 15:1-5; லூக் 23:1-5; யோவா 18:28-38).

அதன் பின்பு தேவையின்றி அவர் ஏரோதின் முன்பு அனுப்பப்பட்டார். இந்த ஏரோதுதான் தமது சகோதரனின் மனைவியான ஏரோதியாளை மனைவியாக்கியபோது யோவானால் குற்றஞ்சாட்டப்பட்டவரும் யோவானின் தலையைப் பரிசாக்கியவரும் ஆவார்.

பிலாத்து இயேசுவை கலிலேயன் என்று கூறப்பட்டதால் ஏரோதிடம் அனுப்பி, தம்மை அந்த பழியிலிருந்து விலக்க நிலைத்திருக்கலாம் (லூக் 23:7-12). மேலும் அந்த செய்கையால் முன்பு தாம் செய்த ஒரு குற்றத்துக்கு ஏரோது தம்மிடம் கொண்டிருந்த பகையை நீக்கிக் கொண்டார்.

மீண்டும் பிலாத்துவின் முன்பு விசாரணை, சூழ்நிலைக்கு முன் குற்றமற்றவரை குற்றவாளியாக்கினார் பிலாத்து. தற்பாதுகாப்பை எண்ணிப்பயந்து நீதிமானை சிலுவை மரணத்துக்குத் தீர்ப்பளித்தார். (மத் 27:15-26; மாற் 15:6-15; லூக் 23:13-25; யோவா 18:39-19:6)

நியாயமற்ற விசாரணைகள்:-

கிறிஸ்துவின் குற்ற விசாரணைகள் பலநிலையிலும் நியாயமற்றவையாக இருந்தன.

1. குற்றம் செய்தவரைப் பிடித்து விசாரிப்பதே நியாயம். ஒருவரை பிடித்து வைத்துக் கொண்டு குற்றம் தேடுவது அநியாயம் (யோவா 11:50; மாற் 14:1; 14:55)
2. பொய்சாட்சிகளை ஏற்படுத்தினர் (மத் 26:61)
3. குற்றவாளியின் சொற்கள் கவனிக்கப்படவில்லை (லூக் 22:67-71)
4. ஆலோசனைச் சங்கம் இரவில் கூடியதே அவர்களது சட்டப்படிதவறு (மத் 26:63-66)
5. பிரதான ஆசாரியனை ஆணையிட வைத்து, அந்த ஆணையைக் கொண்டு தீர்பிட்டது அநியாயம் (மத் 26:63-66)
6. ஆலோசனைச் சங்கம் கூடிய இடம் பிரதான ஆசாரியனின் வீடு. முறைப்படி தேவாலயத்துடன் இணைந்திருக்கும் நீதிமன்ற அறையில் கூடிதான் தீர்ப்பிட வேண்டும் (லூக் 22:54).

அவர் குற்றமற்றவரே:-

1. குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேன் (மத் 27: 4) – யுதாசு.
2. நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம் (மத் 27:19) – பிலாத்துவின் மனைவி
3. இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை (லூக் 23:4) – பிலாத்து
4. பாவமறியாதவர் (2கொரி 5:21) – பவுல்
5. அவர் பாவஞ் செய்யவில்லை (1பேது 2:22) – பேதுரு
6. அவரிடத்தில் பாவமில்லை (1யோவா 3:5) – யோவான்

XIV. இயேசுவை சிலுவைக்கு அனுப்பின யூதாஸின் 7 வித வாழ்க்கை:-

I. யூதாஸின் அறிமுகம்

முழு பெயர் : யோவா6:71 சீமோனின் குமாரனகிய டயூதாஸ் காரியோத்து.

யூதாஸ் (எல்) கொண்டாடபடுகின்ற (அ) துதி

அப்பா பெயர் : யோவா 6:71 சீமோன்

ஊர் பெயர் : எரே 48:41 கீரியோத்

எல்லை : யூதேயாவின் தெற்கில் உள்ளது கீரியோத்.

வித்தியாசம்:- மற்ற 11 சீசர்களும் கலேயாவைச் சேர்ந்தவர்கள் இவன் மட்டும் யூதேயாவைச் சேர்ந்தவன்

II. யூதாஸின் மற்ற பெயர்கள்:-

1. யோவா 12:4 சீசனாகிய யூதாஸ்
2. மத் 26:14 பன்னிரண்டு பேரில் ஒருவன்
3. மத் 10.4 காட்டிக் கொடுத்த டயூதாஸ்
4. அப் 1:16 எதிரிகளுக்கு வழிகாட்டி
5. யோவா 17:12 கேட்டின் மகன்
6. யோவா 12:6 திருடன்
7. லூக் 6:16 துரோகி

III. யூதாஸின் நற்குணங்கள்:-

1. யோவா 18:2 இயேசு ஜெபித்த இடத்துக்கு அடிக்கடிப்போனவன்.
2. சங் 41:9 பிராண சிநேகிதன்.
3. சங் 41:9 நம்பிக்கைக்குறியவன்.
4. மத் 27:3 நல்ல மனஸ்தாபமுள்ளவன்.
5. மத் 27:4 அவன் தன் தவறை பாவ அறிக்கை செய்தான்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

IV. யூதாஸின் பொறுப்புகள்;-

1.யோவா 12:6 பணப்பையை சுமப்பவன்

2.யோவா 13:29 பண்டிகைகளுக்கு பொருட்களை வாங்குபவன்

3.யோவா 13:29 ஏழைகளுக்கு உதவிசெய்யும் பொறுப்பும் இருந்தது

4.யோவா 12:5 தைலம் போன்ற பொருட்களின் விலைப்பட்டியலை அறிந்திருந்தான்.

V. யூதாஸின் சுபாவங்கள்:-

1. யோவா 12:3,4 இயேசுக்கு தைலம் பூசியதில் குற்றம் கண்டான்
2. யோவா 13:30 இராக்கால நேரத்தில் வெளியே போகிறவனாயிருந்தான்.
3. மாற் 14:45 முத்தம் செய்யும் குணம் இருந்தது.
4. யோவா 13:18 எதிரியைப்போல தன் குதிங்காலைத் தூக்குபவன்.
5. மத் 27:4 குற்றமில்லாதவர்களையும் காட்டி கொடுப்பவன்.
6. மத் 27:4 பாவத்தை பாவம் என்று தெரிந்தும் செய்பவன்.
7. மாற் 14:11 பணத்துக்காக எதிரிகளை சந்தோஷப்படுத்துபவன்.
8. மத் 27:5 சம்பாதித்த பணத்தை தூக்கியெரியும் குணமுள்ளவன்.

VI. யூதாஸின் பின் விளைவுகள்:-

1. மாற் 3:19 சீசர்களின் பெயர் வரிசையில் கடைசிக்குத் தள்ளப்பட்டான்.
2. மத் 27:4 அவன் நம்பின அதிகாரிகளால் கை விடப்பட்டான்.
3. யோவா13:2 பிசாசினால் தூண்டப்பட்டான்.
4. லூக் 22:3 சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான்.
5. யோவா 6:70 பிசாசின் சொரூபமாகவே வாழ்ந்தான்.
6. அப் 1:24 ஊழியத்தை இழந்துபோனான்.

VII. யூதாசின் முடிவு:-

1. சங் 109:8 அவனுடைய நாட்கள் கொஞ்சமாகக் கடவது.
(மற்ற 11 சீசர்களை விட சீக்கிரமாகவே செத்துப்போனான்)
2. மத்27:5 நான்று(தூக்கிட்டுக்) கொண்டான்
3. அப் 1:18 தலைகீழாக விழுந்தான்
4. அப் 1:18 யூதாசின் வயிறு வெடித்தது
5. அப் 1:18 குடல்களெல்லாம் சரிந்துப் போனது
6. அப் 1:20 அவனுடைய வாசஸ்தலம் பாழாய்ப்போனது

XV. சிலுவையின் ஏழு வார்த்தைகள்:-

முதலாம் வார்த்தை:

துணுக்குகள்:

1. பெயர் வித்தியாசங்கள்:-

ஆங்கிலம் – குட்பிரைடே (Good Friday) – நள்ள வெள்ளி

தமிழ் – புனிதவெள்ளி – புனித்தைக் குறிக்கும் வெள்ளி

மளையாளம் – துக்கவெள்ளி – பாடுகளை காண்பிக்கும் வெள்ளி

2. இயேசு சிலுவையை சுமந்த தெருவின் இப்போதைய பெயர் வயாடோரோசோ (எல்) பாடுகளின் பாதை எனப்படும்.

3. கெத்சமெனே (எல்) எண்ணெய்செக்கு (அ) திராட்சை செக்குத் தோட்டம் எனப்படும்

வார்த்தை: லூக் 23:34 பிதாவே இவர்களுக்கு மன்னியும்:

மத் 5:44 துன்ப படுத்தினோருக்காக ஜெபித்தார்

1கொரி 4:13 தூசிப்போருக்காக வேண்டிக் கொண்டார்

லூக் 23:34 அரியாதவர்களுக்காகவும் ஜெபித்தார்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

இரண்டாம் வார்த்தை

துணுக்குகள்:

1. பரதீசு என்ற வார்த்தை வேதாகமத்தில் மூன்று முறை மட்டும் வருகிறது:
   1. லூக் 23:43; 2. 2கொரி 12:3; 3. வெளி 2:7
2. பரதீசு என்றால் பேரின்ப வீடு என்பதாகும்
3. பரதீசு (எல்) கிரேக்க மொழியில் பாரடைசோஸ் எனப்படும்
4. பரதீசு என்ற வார்த்தையை செனபான்தான் என்பவர் ஏற்படுத்தினார்
5. பரதீசு (எல்) பூந்தோட்டம்; பாதுகாப்பான இடம் என்றும் பொருளாகும்
6. இப்போது மரிக்கும் விசுவாசிகள் நல்ல உணர்வுகளோடுகூட பரதீசில் இருப்பார்கள்.
7. லூக் 16:23 ஆபிரகாமின்மடி (அ) 2கொரி 12:2 மூன்றாம் வானம் } இவைகளும் கூட பரதீசைக் குறிக்கும்

வார்த்தை: லூக் 23:43 நீ இன்றைக்கு பரதீசியிலிருப்பாய்:-

2கொரி 12:2,3 பரதீசியில்

1. மனுஷர்பாஷை இருக்காது
2. மனுஷருக்கு அந்த வார்த்தைகள் புரியாது
3. பரதீசு மூன்றாம் வானத்திலுள்ளது

வெளி 2:7

1. தேவ சப்தம் கேட்போர் போவார்கள்
2. ஜெயங்கொள்போர் போவார்கள்
3. ஜீவ விருட்ச கனி அங்கே உண்டு

மூன்றாம் வார்த்தை

துணுக்குகள்:

1. இயேசுவின் முகத்தை துணியால் துடைத்த பெண்ணின் பெயர்: வெரோணிகா எனப்படும்
2. மரியாள் யோவானின் வீட்டில் 12 ஆண்டுகள் அதாவது சாகும் வரை இருந்தாள்
3. யோவா 18:4,5,6 இயேசுவை பிடிக்கவந்தோர் ஏறத்தாழ 500
4. இயேசு சிலுவையில் நிர்வாணமாகத் தொங்கினார்

வார்த்தை: யோவா 19:26,27 அதோ உன் மகன்; அதோ உன் தாய்

1. மகன் யார்?

யோவா 13:23 இந்த யோவான் இயேசுவின் மார்பினில் சாய்ந்தவன்

யோவா 21:7 இயேசுவுக்கு அன்பாயிருந்தவன்

யோவா 21:20,23 மரிப்பதில்லை என்று பெயர்பெற்றவன்

1தீமோ 5:2 தாயைப்போல அன்புள்ளம் கொண்டவன்

2. தாயைப்பற்றி:

யோவா 2:5 இயேசுவின் சொல்படி செய்கிறவள்

லூக் 1:28 தேவனோடு இருக்கிறவள்; ஆசீர்வதிக்கப் பட்டவள்

லூக் 2:7 சத்திரத்தில் தங்கினாள் (தாழ்மை)

அப் 1:13 சீசர்களுடன் இருந்தாள் (ஐக்கியம்)

அப் 1:14 ஜெபத்தில் தரித்திருப்பவள்

தொடரும்

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

நான்காம் வார்த்தை

துணுக்குகள்:

1. யூதர்களின் ஆலோசணை சங்கத்தில் 70 பேர்கள் இருந்தார்கள்
2. இயேசுவின் மார்பின்மீது முழங்காலால் அழுத்தி கொண்டே கையில் ஆணி அரைந்துள்ளனர்
3. சிலுவையை முதன் முதலில் பயன்படுத்தின நாடு பொனிசியா
4. சிலுவை என்ற வார்த்தை முதன்முதலில் மளையாளத்தில் வழங்கப்பட்டது.

வார்த்தை: மத் 27:46 என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?

a. சங் 22:1 தீர்க்கதரிசனம் நிறைவேறினது
b. ஏசா 53:10 இயேசுவை நொறுக்க பிதா சித்தமானார்
c. ஏசா 54:7 இமைப்பொழுது இயேசு கை விடப்பட்டார்
d. புல 1:12 துக்கம் தாங்காமல் ஜெபித்தார்
e. எபி 5:7 சாவிலிருந்து இரட்சிக்கும்படி ஜெபித்தார்
f. மத் 27:46 மாலை 3 மணிக்கு (ஒன்பதாம் மணி) ஏன் கை விட்டீர் என்று கதறினார்

ஐந்தாம் வார்த்தை

துணுக்குகள்:

1. மத் 27:45 சிலுவையில் இருள் சூழ்ந்த நேரம் பகல் 12 முதல் 3மணி வரைக்கும்
2. இயேசுவின் தலையில் சூட்டியமுள்ளின் பெயர் கிறிஸ்து முள்
3. மாற் 16:1 சலோமே என்பவள் இயேசுவின் சித்தி

வார்த்தை: யோவா 19:28 தாகமாயிருக்கிறேன்:

1. காடி (எல்) என்ன?

   எண் 6:3 திராட்சைரசமும், மதுபானமும் கலந்த கலவைதான் காடி

   மத் 27:34 காடியில் கசப்பு கலந்திருக்கும்

2. இயேசுவுக்கு மூன்றுமுறை காடி கொடுக்கப்பட்டது:

   i) சிலுவையில் அறையும் முன் கொடுத்தனர்

   மாற் 15:23 வெள்ளைபோளம் கலந்தது. இது வழியை மறக்க கொடுக்கப்படும். ஆனால் இயேசு அதை பருகவில்லை

   ii) லூக் 23:36 சிலுவையில் மதியத்துக்கு முன் கொடுக்கப்பட்டது

   iii) லூக் 23:37 இயேசுவை ஏளனம் செய்வதற்க்காக கொடுக்கப்பட்டது

ஆறாம் வார்த்தை

துணுக்குகள்:-

பிலாத்துவின் அரண்மணையின் பெயர் அதோனியோ

ஒரு சிலுவையின் விலை 110 இரத்தால்

கிரீடம் என்பதில் கிரேக்கச் சொல் ஸ்தேபானால்

வார்த்தை: யோவா 19:30 எல்லாம் முடிந்தது

அப் 20:24 உயிரைப் பெரிதாக நினைக்காதவர்

யோவா 17:4 பிதா நியமித்த வேளையை முடித்தார்

2தீமோ 4:6,7 ஓட்டம் முடிந்தது

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

ஏழாவது வார்த்தை

துணுக்குகள்:

1. இயேசுவின் சிலுவை கரடு முரடாக இருந்தது
2. லூக் 23:47 நூற்றுக்கதிபதி லாங்கீஸ் இரட்சிக்கப்பட்டான்
3. யோவா 19:39,40 நிக்கதேமு கொடுத்த 100 இராத்தல் கொண்டு யோசேப்பு இயேசுவை அடக்கம் செய்தார்.

வார்த்தை: லூக் 23:46 பிதாவே என் ஆவியைத் தருகிறேன்:

அப் 1:18 யூதாஸ் ஆவியை தூக்கு கயருக்கு தந்தான்

யோசு 7:25 ஆகான் ஆவியை கல்லுக்குத் தந்தான்

1சாமு 31:4 சவுல் ஆவியை பட்டயத்துக்கு தந்தான்

லூக் 23:46 இயேசுவோ பிதாவின் கையில் ஆவியை தந்தார்

XVI. இயேசுவின் ஏழுவித இரத்தம் (பாகம்-1):-

இயேசு மரணத்திற்கு முன்பும் இரத்தம் சிந்தினார்,மரிக்கும் போதும் இரத்தம் சிந்தினார். இயேசு இரத்தம் சிந்தினார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், எந்த எந்த இடங்களில், எப்படியெல்லாம் இரத்தம் சிந்தினார், எப்போது சிந்தினார், எத்தனை முறை இரத்தம் சிந்தினார் என்று அநேகர் அறிவதில்லை. அந்த விபரங்களை பொறுமையோடும், ஆழ்ந்தும் கவனிப்போம்.

1. ஜெபிக்கும்போது சிந்தின இரத்தம்:

லூக் 22:44 இரத்தம் வரும்வரை ஜெபித்தார்

இடம்: மாற் 14:32 கெத்செமனே தோட்டம்

வா.ம்: லூக் 22:44 ஊக்கமும், தேவபாரமும் வரும்

பலன்: மத் 26:41 ஜெப ஆவியைத் தரும்

2. சிரசில் சிந்தின இரத்தம்:

யோவா 19:2 முள்முடியை சிரசில் வைத்து அடித்தனர்

இடம்: மத் 27:27 தேசாதிபதியின் அரண்மனை

வா.ம்: ஏசா 59:17 சிரசு (எ) இரட்சிப்பு

ஆதி 49:26 சிரசு (எ) ஆசீர்வாதம்

பலன்: ஏசா 51:11 மகிழ்ச்சி தலையின் மேல் இருக்கும்

3. கன்னத்தில் வடிந்த இரத்தம்:-

கேள்வி: எத்தனை பேர் அறைந்தனர்?

மத் 26:67 சிலர் (ஒன்றுக்கும் அதிகமானோர்) அறைந்தனர்

கேள்வி: அறைந்தது யார்?

மாற் 14:65 வேலைக்காரர்கள்

வா.ம்: உன் 1:10; 5:13 கன்னம் (எ) பூ போன்றது (அ) அழகானது

பலன்: உன் 2:14 உங்கள் முகம் அழகாகும்

4. தாடையில் வடிந்த இரத்தம்:-

ஏசா 50:6 தாடை மயிரைப் பிடுங்கினார்கள்

உ.ம்: சங் 3:7 சத்துருக்களைத்தான் தாடையில் அடிப்பார்கள்

வா.ம்: நியா 15:15,16 சிம்சோன் தாடை எலும்பினால் ஜெயித்தான்

சங் 133:2 தாடையின் இரத்தம் அபிஷேகத்தைத் தரும்

5. முதுகில் வடிந்த இரத்தம்:-

ஏசா 50:6 முதுகில் அடித்தார்கள்

யோவா 19:1 வாரினால் (சாட்டையால்) அடித்தார்கள்

இடம்: யோவா 19:1 பிலாத்துவின் அரண்மனை

வா.ம்: ஏசா 38:17 பாவத்தை முதுகுக்குப் பின் எறிந்தார்

பலன்: மாற் 2:12 முதுகின் இரத்தம் படுக்கையை மாற்றும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

6. கை, கால்களில் வடிந்த இரத்தம்:-

யோவா 20:20,25 கை, கால்களில் ஆணியின் காயம் இருந்தது

இடம்: யோவா 19:17 கொல்கொதா மலை [அ] கபால ஸ்தலம்

வி.ம்: கொல்கொதா [எ] அந்த மலை மண்டை ஓடு வடிவத்தில் இருந்தது.

கபாலஸ்தலம் [எ] மண்டை ஓடுகள் நிறைந்து இருந்த இடம்

வா.ம்: கொலோ 2:14,15 அதிகாரங்களை வெற்றி சிறந்தார்

பலன்: ஏசா 35:3 உங்கள் கைகளை, முழங்கால்களைப் பலப்படுத்தும்

7. விலாவில் வடிந்த இரத்தம்:-

யோவா 19:34 விலாவில் இரத்தம் வடிந்தது

இடம்: யோவா 19:17 கபால ஸ்தலம் [மண்டை ஓடுகள் நிறைந்த இடம்]

வா.ம்: ஆதி 2:21,22 விலாவைக் கொண்டு மனுஷியை உண்டாக்கினார்

வா.ம்: அப் 12:7 பேதுருவை தட்டி எழுப்பினார்

பலன்: சங் 107:14 கட்டுகளை அறுப்பது

XVII. பஸ்கா என்றால் என்ன? :-

இஸ்ரவேலர் ஆசாரித்து வந்த மூன்று விசேஷித்த பண்டிகைகளில் பஸ்காவும் ஒன்று. இது நிசான் [பங்குனி–சித்திரை]மாதம் 14–ம் தேதி தொடங்கி 21–ம் தேதிவரை கொண்டாடப்பட்டு வந்தது. பஸ்கா என்பது அடிக்கப்படும் ஆட்டுகுட்டியையே குறிக்கிறது.

நிசான் மாதம் 10–ம் தேதி ஒவ்வொரு வீட்டுத் தலைவனும் ஒரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து எடுப்பான். 13–ம் தேதி சாயந்திரம் வீடுகளிலிருந்து புளித்தமா அகற்றப்படவேண்டும். 14–ம் மேதி சாயங்காலத்திற்குமுன், எல்லா வேலைகளும் நிறுத்தப்படும். பகற் சாப்பாட்டின் பின் சாப்பிடவும் மாட்டார்கள். இந்த பண்டிகை நினைவுகூருதலாக மாத்திரமல்ல, முன்னடையாளமாகவுமிருந்தது. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே [1கொரி 5:7].

இன்னும் வேறு அடையாளங்களையும் கவனிக்கலாம்.

1] பஸ்கா பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகுதல்.
2] இயேசுவின் இரத்தத்தில் வைக்கிற விசுவாசத்தினித்தும் பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து தப்பிக்கொள்ளுகிறோம்.
3] இரத்தம் கதவு நிலையில் தெளித்தல், நம்முடைய விசுவாசத்தின் அறிக்கையைக்காட்டுகிறது. 4] பஸ்காவைச் சாப்பிடுவது போல, நாமும் அவரோடு ஐக்கியப்பட்டிருந்தால்தான் ஜீவனைப் பெறலாம். 5] கசப்பான கீரைகளோடு சாப்பிடவேண்டும். இது நாம்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

அடையவேண்டிய மனஸ்தாபத்தையும், செய்யவேண்டிய அறிக்கையும் குறிக்கிறது. 6) இஸ்ரவேலர் பிரயாணத்துக்கு ஆயத்தமாகிச் சாப்பிட்டது போல, நாமும் தேவ ஊழியத்துக்கும், மோட்ச பிரயாணத்துக்கும் ஆயத்-தமாக வேண்டும்.

சீசர்கள் பஸ்காவை ஆயத்தம் செய்தனர்:

I. துணுக்குகள்:

a. யோவா 18:39 பஸ்கா என்றால் என்ன?
பஸ்கா (எல்) பலி (அ) விடுதலை (அ) உடன்படிக்கை

b. நெகே 2:1 பஸ்காவின் மாதம் எது?
நிசான் மாதம் (எல்) பங்குனி – சித்திரை (எல்) ஏப்ரல்–மே

c. யாத் 12:26,27 பஸ்கா எதற்கு அடையாளம்?
எகிப்திலிருந்து பறப்பட்டதற்கு அடையாளம்.

d. ஆட்குட்டி என்ற வார்த்தை வெளிப்படுதலில் மட்டும் 28 முறை வருகிறது

II. பஸ்காவின் உணவுகள் எவை?

a. பழைய ஏற்பாட்டில்:-
யாத் 12:8 1. மாம்சம், 2.புளிப்பில்லா அப்பம், 3.கசப்பான கீரை

b. புதிய ஏற்பாட்டில்:-
மத் 26:26–28 1. அப்பம், 2. ஸ்தோத்திரபாட்டு, 3. இரத்தம்

III. பஸ்காவை சாப்பிட நிபந்தனைகள்:-
யாத் 12:11

a. காலை வரை மீதம் வைக்கக் கூடாது
b. இடுப்பில் கட்சை கட்டிகொள்ள வேண்டும்
c. காலில் செருப்பு போட வேண்டும்
d. கையில் தடியை பிடித்துக்கொள்ள வேண்டும்
e. தீவிரமாய் (சீக்கிரமாய்) சாப்பிட வேண்டும்

IV. பஸ்கா பொருட்களின் விளக்கம்:-

a. யாத் 12:7 இரத்தம் (எல்)
எபி 12:22 பாவமன்னிப்புகாக தெளிக்கனும்

b. யாத் 12:8 புளிப்பில்லா அப்பம் (எல்)
1கொரி 5:8 தூய்மை – உண்மை

c. யாத் 12:8 கசப்பான கீரை (எல்)
எபே 4:31 பாவத்துக்காக மனஸ்தாபம்

d. யாத் 12:11 அரைக்கட்சை (எல்) அப் 12:15 உறுதி (சாதனை)

e. யாத் 12:11 காலில் செறுப்பு (எல்) மாற் 6:9 ஆயத்தம்

f. யாத் 12:11 கையில் தடி (எல்)
சங் 23:4 பாதுகாப்பு (அ) தேவ வார்த்தை

V. பஸ்காவை ஆசரித்தவர்கள் யார் யார்?

a. யோசு 5:10,11 இஸ்ரவேலர் ஆசரித்தனர்
b. 2இரா 23:23,22 யோசியா இராஜா ஆசரித்தான்
c. 2நாள 30:1,17 எசேக்கியா இராஜா ஆசரித்தான்
d. எஸ்றா 6:19 சிறையிலிருந்து வந்தவர்கள் ஆசரித்தனர்
e. லூக் 2:41–43 இயேசுவும் – பெற்றோம் ஆசரித்தனர்
f. மத் 26:17–19 இயேசுவும் – சீசர்களும் ஆசரித்தனர்

VI. செய்தி:

a. யாத் 12:5 ஆட்டுக்குட்டி (எல்)
1கொரி 5:7 கிறிஸ்துவே பாவம் சுமக்கும் ஆட்டுகுட்டி (பஸ்கா)

b. யாத் 12:8 புளிப்பில்லா அப்பம் (எல்)
1கொரி 5:8,9 துர்குணம், பொல்லாப்பு, விபச்சாரம்

c. யாத் 12:8 கசப்பான கீரை (எல்)
எபே 4:31,32 1. கசப்பு, 2. கோபம், 3. மூர்க்கம்,
4. கூக்குரல், 5. தூஷணம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XVIII. சிலுவையும் கள்ளர்கள் :-

இயேசுவின் சிலுவைக்கும் யூதாசுக்கும் எப்படி நெருங்கிய தொடர்புண்டோ, அதேப் போல கொல்கொதா மலைக்கும் இரண்டு கள்ளர் -களுக்கும் நிறைய தொடர்புண்டு. அந்த இரண்டு கள்ளர்களைக் குறித்து நுணுக்குகளோடும், வசனங்களோடும், ஆழ்ந்து சிந்தித்து தியானிப்போம்.

வலதுபுறத்துக் கள்ளன்:-

வலதுபுறத்துக் கள்ளனின் பெயர் – திஸ்மாஸ்

1. லூக் 23:40 ஆக்கினையை அறிந்தவன்
   உ.ம்: செப் 3:15 ஆக்கினையை அகற்றுவார்
2. லூக் 23:40 தேவனுக்குப் பயப்படுகிறவன்
   உ.ம்: அப் 10:22 கொர்நேலியு தேவனுக்குப் பயந்தவன்
3. லூக் 23:41 தக்கப் பலனைக் குறித்து அறிந்தவன்
   உ.ம்: வெளி 22:12 பலன் என்னோடே கூட வருகிறது
4. லூக் 23:41 இயேசு தகாததை நடப்பிக்கவில்லை (இயேசுவை குறித்துச் சாட்சி சொன்னான்)
   உ.ம்: மத் 3:11 என்னிலும் வல்லமையுள்ளவர்
5. லூக் 23:41 கடிந்துக்கொண்டான் (எச்சரித்தான்)
   உ.ம்: யோவா 8:11 நீ போ இனிப்பாவம் செய்யாதே
6. லூக் 23:42 ராஜ்யத்தில் நினைத்தருளும் (பரலோகத்துக்காக ஜெபித்தான்)
   உ.ம்: மத் 10:32,33 இயேசுவை அறிக்கைச் செய்தான் பரலோகம் கிடைத்தது.

இடதுபுறத்துக் கள்ளன்:-

இடதுபுறத்துக் கள்ளனின் பெயர் – ஹெஸ்பாஸ்

1. லூக் 23:39 இயேசுவை நீ என்றான் (இயேசுவை தன்னுடைய அடிமையைப் போல நினைத்தான்)
   உ.ம்: மத் 26:62 பிரதான ஆசாரியனும் இயேசுவை நீ என்றான்
2. லூக் 23:39 கிறிஸ்துவானால் (இயேசுவோ என்று சந்தேகப்பட்டான்)
   உ.ம்: மத் 14:31 ஏன் சந்தேகப்பட்டாய்
3. லூக் 23:39 உன்னையும் (இயேசுவை அவமரியாதை செய்தான்)
   உ.ம்: மத் 26:61 இவன் சொன்னான் என்றார்கள் (இயேசுவை)
4. லூக் 23:39 இரட்சித்துக்கொள் (இரட்சிப்பைக்குறித்தும் கிண்டல் செய்தான்)
   உ.ம்: அப் 16:17 குறிசொல்லுகிற பெண் பவுலையும் கிண்டல் பண்ணினாள்
5. லூக் 23:39 இகழ்ந்தான் (இயேசுவைத் திட்டினான்)
   உ.ம்: மத் 26:74 பேதுருவும் இயேசுவைத் திட்டினான்

XIX. உலகின் 40 சிலுவை கொடிகள் (பாகம்-1) :-

	ஆஸ்திரேலியா கொடி **Flag of Australia**
	புருண்டி கொடி **Flag of Burundi**
	டென்மார்க் கொடி **Flag of Denmark**
	ஃபாரோ தீவுகளின் கொடி **Flag of Faroe Islands**
	டொமினிகா கொடி **Flag of Dominicia**
	டொமினிகன் குடியரசு கொடி **Flag of Dominican Republic**
	ஃபிஜி கொடி **Flag of Fiji**
	ஃபின்லாந்து கொடி **Flag of Finland**
	ஜோர்ஜியா கொடி **Flag of Georgia**
	கிரீஸ் கொடி **Flag of Greece**

	ஐஸ்லாந்து கொடி **Flag of Iceland**
	ஜமைக்கா கொடி **Flag of Jamaica**
	மார்ஷல் கொடி **Flag of Marshall**
	மால்டா கொடி **Flag of Malta**
	மால்டோவா கொடி **Flag of Moldova**
	மொண்டெனேகுரோ கொடி **Flag of Montenegro**
	நியூசிலாந்து கொடி **Flag of New Zealand**
	நார்வே கொடி **Flag of Norway**
	போர்ச்சுகலில் கொடி **Flag of Portugal**
	சான் மரினோ கொடி **Flag of San Marino**

உலகின் 40 சிலுவை கொடிகள் (பாகம்-2) :-

	ஸ்காட்லாந்து கொடி **Flag of Scotland**
	செர்பியா கொடி **Flag of Serbia**
	ஸ்லோவாகியா கொடி **Flag of Slovakia**
	ஸ்பெயின் கொடி **Flag of Spain**
	ஸ்வீடன் கொடி **Flag of Sweden**
	சுவிச்சர்லாந்து கொடி **Flag of Switzerland**
	டோங்கா கொடி **Flag of Tonga**
	துவாலு கொடி **Flag of Tuvalu**
	ஐக்கிய ராஜ்யம் கொடி **Flag of United Kingdom**
	வாடிகன் நகரம் கொடி **Flag of Vatican City**

	ரெசிஃபின் கொடி, பிரேசில் **Flag of Recife, Brazil**
	பிரிட்டிஷ் கொலம்பியா கனடாவின் கொடி **Flag of British Columbia**
	லைபீரியாவின் கொடி (1827-1847) **Flag of Liberia (1827-1847)**
	இத்தாலி இராஜ்ஜியத்தின் கொடி **Flag of the Kingdom of Italy (1861-1946)**
	கடங்கா மாநிலத்தின் கொடி **Flag of the State of Katanga (1960-1963)**
	மொண்டேனேகுரோ கொடி **Flag of Montenegro**
	சுதந்திர பிரான்ஸின் கொடி **Flag of the Free France (1940-1944)**
	பாலஸ்தீன கொடி **Palestinian flag (1936-1939)**
	செஞ்சிலுவையின் கொடி **Flag of the Red Cross**
	மொன்செராட், இங்கிலாந்தின் கொடி **Flag of Montserrat, England**

XX. சிலுவையைச் சூழ்ந்த அதிசயங்கள்:-

1. ஆறாம் மணி நேரம் முதல் ஒன்பதாம் மணி நேரம் வரை-க்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. (மத் 27:45 மாற் 15:33; லூக் 23:44,45)

2. தேவலாயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. (மத் 27:51; மாற் 15:38; லூக் 24:45).

3. பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. (மத் 27:51)

4. கல்லறைகளும் திறந்தன. (மத். 27:52)

5. நித்திரையடைந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்-களும் எழுந்திருந்தன. (மத் 27: 52)

6. சிலுவைக் கள்ளரில் ஒருவன் இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும் போது அடி-யேனை நினைத்தருளும் என்றான். (லூக் 23:42,43)

7. நூற்றுக்கதிபதி சம்பவித்ததைக் கண்டு; மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி தேவனை மகிமைப்படுத்தினான். (லூக் 23:47, மாற் 15:39 மத் 27:54)

XXI. இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொல்ல பத்துக் காரணங்கள்:-

1. தம்மை இராஜா என்று சொன்னதினால். (மத் 2:2,3,16; யோவா 18:33-40; 19:12-22)

2. சத்தியத்தைச் சொன்னதினால். (லூக் 4:21-30; யோவா 8:40,45,46)

3. ஓய்வு நாளில் வியாதியஸ்தரைச் சுகமாக்கினதினால். (மத் 12:9-14; மாற் 3:1-6; யோவா 5:16; 9:16)

4. பொறாமையினால். (மத் 26:3,4; 27:18; மாற் 14:1 15:9,10; லூக் 22:2; யோவா 11:48)

5. தேவனுடைய குமாரன் என்று சொன்னதினால். (மத் 26:63-66; மாற் 14:61-64)

6. தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக. (யோவா 12:38-40 18:31,32; 19:11,28,36,37; அப் 2:22:36; 3:18)

7. நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று சொன்ன-தினால். (யோவா 5:18; 10:24-30; 19:7)

8. அவரை விசுவாசியாதபடியினால். (யோவா 5:38-47; 6:36; 9:39-41; 12:36-38)

9. ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கி-றேன் என்று செகன்னதினால். (யோவா 8:51-59; 10:33 மத் 22:41-56)

10. தங்கள் சுயகவுரவமாகிய அந்தஸ்து அழித்துப்போடப்-படும் என்று பயந்து. (யோவா 11:46-53; 12:10,11,19)

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 908796 8955 Email: ssksamuel69@gmail.com

XXII. இயேசுவை நிந்தித்து, பரியாசம்பண்ணி தூஷித்த ஏழுபேர்:-

1. போர்ச்சேவகர்கள். மத் 27:27-31
2. வழிப்போக்கர். மத் 27:39,40
3. பிரதான ஆசாரியர். மத் 27:41
4. வேதபாரகர். மத் 27:41,42
5. மூப்பர்கள். மத் 27:41-43
6. வலது பக்கத்துக் கள்ளன். மத் 27:44
7. இடது பக்கத்துக் கள்ளன். மத் 27:44

XXIII. இயேசு கிறிஸ்து மற்றவர்களால் நடத்தப்பட்ட சந்தர்ப்பங்கள்:-

1. யூதர்கள் செங்குத்தான மலையின் சிகரத்திலிருந்து அவரைத் தலைகீழாய்த் தள்ளிவிடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள். (லூக் 4:29)
2. முதலாவது அன்னா என்பவனிடத்தில் கொண்டுபோனார்கள். யோவா 18:13
3. பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள். (மத் 26:57; மாற் 14:53; லூக் 22:54; யோவா 18:24)
4. பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசுவை கொலை செய்யும்படி, அவருக்க விரோதமாக ஆலோசனைபண்ணி, அவரைக் கட்டி தேசாதிபதியாகிய பொந்தியு பிலாத்துவினிடத்தில் கொண்டுபோனார்கள். (மத் 27:1,2 லூக் 23:1)
5. பிலாத்துவினால் இயேசு ஏரோதினிடத்தில் அனுப்பப்பட்டார். (லூக் 23:7-11)
6. போர்ச்சேவகர் மறுபடியும் பிலாத்துவினிடத்தில் கொண்டுபோனார்கள். (லூக் 23:11-25)
7. போர்ச்சேவகர் சூட்டத்தில் கொண்டுபோகப்பட்டார். (மாற் 15:16,19)
8. போர்ச்சேவகர் அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி சிலுவையில் அறையும்படி கொண்டுபோனார்கள். (மத் 27:31, மாற் 15:20; லூக் 23:26,32; யோவா 19:16)

XXIV. இயேசு கிறிஸ்துவைக் குறித்து பத்து குற்றச்சாட்டுகள்:-

1. பிரதான ஆசாரியன்: இவன் தேவ தூஷணம் சொன்னான். (மத் 26:64,65; மாற் 14:62-64; லூக் 22:69-71)
2. வேதபாரகர்: இவன் பெயெல்செபூலைக் கொண்டிருக்கிறான், பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான். (மாற் 3:22)
3. பரிசேயர்: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூவினாலே பிசாசுகளைத் துரத்துகிறான். (மத் 12:24; லூக் 11:15)

4. பரிசேயர்: உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம்பண்ணுகிறார். மத் 9:11

5. நியாய சாஸ்திரிகள்: போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமான மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன். (லூக் 7:30-34; மத் 11:19)

6. ஜனங்கள்: நீ பிசாசு பிடித்தவன். யோவா 7:20

7. அவருடைய இனத்தார்: அவர் மதிமயங்கியிருக்கிறார். மாற் 3:20,21

8. ஆலோசனை சங்கத்தாராகிய கூட்டத்தார்: இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட இராஜாவென்றும், இராயனுக்கு வரிகொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம். (லூக் 23:1,2)

9. பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளா-ததினால், அவன் தேவனிடத்திலிருந்து வந்தவனல்ல. (யோவா 9:16)

10. யூதர்கள்: இவன் தன்னை இராஜாவென்று சொன்னான், ஆகவே இவன் இராயனுக்கு விரோதி. (யோவா 19:21)

XXV. A) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் (பாகம்-2):-

1. நன்மையானவைகளைப் பேசுகிறது. (எபி 12:24,25)
2. தூரமானவர்களைச் சமீபமாக்குகிறது. (எபே 2:13-20)
3. பாவமன்னிப்பாகிய மீட்பை அளிக்கிறது. (கொலோ 1:12-15; எபே 1:7; 1பேது 1:19)
4. சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது. (1யோவா 1:7)
5. பாவங்களற நம்மைக் கழுவுகிறது. (வெளி 1:6)
6. ஜனத்தைப் பரிசுத்தம் செய்கிறது. (எபி 13:12; 10:10,14)
7. மனச்சாட்சியைச் செத்த கிரியைகளற சுத்திகரிக்கிறது. (எபி 9:14)
8. தேவனோடு ஒப்புரவாக்குகிறது. (கொலோ 1:20)
9. இயேசுவோடு நிலைத்திருக்கச் செய்கிறது. (யோவா 6:56)
10. பிசாசின்மேல் ஜெயத்தைத் தருகிறது. (வெளி 12:11)
11. சமாதானத்தை அளிக்கிறது. (கொலோ 1:20)
12. தைரியத்தை உண்டுபண்ணுகிறது. (எபி 10:19,20)
13. பாவிகள்மேல் தெளிக்கப்படுகிறது. (எபி 12:24; 1பேது 1:2 யாத் 24:7,8; லேவி 14:4-7,49,50)
14. நித்திய மீட்பை உண்டாக்குகிறது. (எபி 9:12)
15. நித்திய ஜீவனைக் கொடுக்கிறது. (யோவா 6:54)
16. நித்திய உடன்படிக்கை செய்கிறது. (எபி 13:20; 10:29)
17. பாவிகளை நீதிமான்களாக்குகிறது. (ரோம 5:8,9)
18. நம்மைக் குணமாக்குகிறது (1பேது 2:24)
19. அங்கிகளைத் தோய்த்து வெளுக்கிறது. (வெளி 7:14)
20. சபையைச் சம்பாதிக்கிறது. (அப் 20:28)
21. நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்குகிறது. (வெளி 1:6; 5:9,10)

B) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் :-

1. தேவ இரத்தம். அப். 20:28
2. மாசற்ற இரத்தம். 1பேது 1:19
3. விலையேறப்பெற்ற இரத்தம். 1பேது 1:19
4. குற்றமில்லாத இரத்தம். மத் 27:4
5. புது உடன்படிக்கையின் இரத்தம். [மத் 26:28; மாற் 14:24; லூக் 22:20]
6. தெளிக்கப்படும் இரத்தம். எபி 12:24; 1பேது 1:2
7. பாவங்களை நீக்கி சுத்திகரிக்கும் இரத்தம். [1யோவா 1:7;வெளி 1:6]

XXVI. கர்த்தருடைய இராப்போஜனம்:-

கர்த்தருடைய இராப்போஜனத்தில் விசுவாசிகள் தேவனுடைய பிள்ளைகள் பங்குபெறுவதால் அடையும் ஏழுவிதமான நன்மைகள்.

1. யோவா 6:54,53 இராப்போஜனத்தைப் புசித்து, பானபண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டாகிறது.
2. யோவா 6:54 இராப்போஜனத்தைப் புசித்து, பானம்பண்ணுகிறவன் கடைசி நாளில் எழுப்பப்படுவான்.
3. யோவா 6:56 இராப்போஜனத்தைப் புசித்து, பானம்பண்ணுகிறவன், கிறிஸ்துவிலும் கிறிஸ்து அவனிலும் நிலைத்திருப்பார்கள்.
4. யோவா 6:55 இராப்போஜனம் தேவனுடைய பிள்ளைகளுக்கு மெய்யான போஜனமும் மெய்யான பானமுமாயிருக்கிறது.
3. “மெஸாலா” என்னும் பெயரையுடைய நூற்றுக்கு அதிபதிக்கு அந்த வஸ்திரம் கிடைத்தது. ஆனால், அவனோ பட்டயத்தினாலே அந்த வஸ்திரத்தைக் கீறிப்போட்டான். இந்த நூற்றுக்கு அதிபதி–யிடம் டெமெட்ராஸ் என்னும் ஓர் அடிமை இருந்தான். அவன் தான் கிழிக்கப்பட்ட இயேசுவின் வஸ்திரத்தைக் கொண்டுபோய் ஒளித்து வைத்தான்.

4. கல்லறையில் வைக்கப்பட்ட இயேசுவின் சரீரத்தை மூடின வஸ்–திரமனது 14அடி 3அங்குல நீளமும், 3அடி 7அங்குலம் அகலமும் கொண்ட மெல்லிய வெண் வஸ்திரமுமாய் இருந்தது.

5. இயேசுவின் பாடுகளிலும், அவருடைய மரணத்திலும் கடைசி வரையும் அவரை தொட்டுக் கொண்டிருந்த பொருள் வஸ்திரம்தான். வஸ்திரங்கள் என்னும் பலவித உடைகளைக் குறித்துச் வேதத்தில் சொல்லியிருந்தாலும், மத்தேயு, மாற்கு லூக்கா, யோவான் என்னும் நான்கு விசேஷங்களில் 37 அதிகாரங்கள் மூலம் ஏறத்–தால 66 முறை வஸ்திரம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள–தை கவனிக்க வேண்டியதாகும். இவைகளில் நான்கு வகை வஸ்திரங்கள் அவருடைய கடைசி கட்ட நேரத்தில் பயன்படுத்தப்பட்–டுள்ளது. அவைகளை குறித்து கவனிப்போம். வஸ்திரம் என்றால் பழமையாய் போகுதல் என்ற அர்த்தம் உண்டு (எபி 1:11). வஸ்திரம் பழமையாய்ப் போனாலும் நம்முடைய இரட்சிப்பும் மனந்திரும்புதலும் பழமையாகப் போய்விடக் கூடாது.

6. வஸ்திரம் என்பது பொதுவான பெயராகும். அது குறிப்பிட்ட எந்த ஒரு உடையையும் விவரிக்காது. இயேசுவின் சரீரத்தை சீலைகள், மினுக்கான வஸ்திரம், துய்யதான துப்பட்டி, சிவப்பான மேல் அங்கி,கண்களை கட்டிய துணி, உடை போன்றவைகளும் இயேசுவின் மீது காணப்பட்டது. அவைகளைக் குறித்து ஒவ்வொன்–றாக பின்வரும் பகுதிகளில் விபரமாய்க் காணப் போகின்றோம்.

C. இயேசுவின் பாடுகளுக்கு இணையாக 5 வகையான வஸ்திரங்ள் சொல்லப்பட்டுள்ளது.

1. மத் 27:35 என் வஸ்திரம்
2. மத் 27:31 அவருடைய வஸ்திரம்
3. லூக் 23:11 மினுக்கான வஸ்திரம்
4. மத் 27:28 கழற்றப்பட்ட வஸ்திரம்
5. மத் 27:35 சீட்டு போடப்பட்ட வஸ்திரம்

வஸ்திரம் என்றால் என்ன?

யோவே 2:13 வஸ்திரம் (எல்) இருதயம், ஜீவியம்.
இருதயத்தில் மனம் திரும்ப வேண்டும்.

விளைவு:

யோவே 2:13 ஆறு நன்மைகள் கிடைக்கும்.

1. இரக்கம் கிடைக்கும்.
2. மனஉருக்கம் கிடைக்கும்.
3. நீடியசாந்தம் கிடைக்கும்.
4. மிகுந்த கிருபை கிடைக்கும்.
5. கிறிஸ்துவின் மனஸ்தாபம் கிடைக்கும்.

யோவே 2:14 6. ஆசீர்வாதமும் கிடைக்கும்.

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

D. உவமையின் வஸ்திரங்கள் சில:—

1) மத் 17:2 – வெளிச்சமான வஸ்திரம்
2) மத் 27:28 – இயேசு கழற்றின வஸ்திரம்
3) மத் 27:35 – சீட்டு போடப்பட்ட வஸ்திரம்
4) லூக் 19:36 – வழியிலே விரித்த வஸ்திரம்
5) லூக் 23:11 – மினுக்கான வஸ்திரம்
6) யோவா 13:12 – இயேசு தரித்துக் கொண்ட வஸ்திரம்

E. மாற் 11:7 கழுதை குட்டியின் மீது போட்ட வஸ்திரங்கள்:—

வி.ம்: ஆதி 49:11 கழுதை குட்டியின் மீது போட்ட வஸ்திரம் (எல்) திராட்சைரசத்தையும், இரத்தத்தையும் குறிக்கும்

உ.ம்: எண் 28:7 திராட்சரசம் (எல்) பானபலி

மு.கு: 2தீமோ 4:6 கழுதைகுட்டியின் மீது ஜனங்கள் வஸ்திரங்களைப் போட்டதினால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது என்ற தீர்க்கதரிசனம் இதன் மூலம் நிறைவேறினது

F. மத் 21:8 வழியிலே விரித்த வஸ்திரங்கள்:—

வி.ம்: மத் 21:9,10,11 இயேசுவை வரவேற்கும் விதமாக ஜனங்கள் வஸ்திரங்களை வழியில் விரித்ததினால் ஏறத்தால 6 காரியங்கள் அங்கு சம்பவித்தது

a) இயேசுவுக்கு முன்னும் பின்னும் திரள் ஜனங்கள் நடக்க ஆரம்பித்தனர்

b) ஓசன்னா என்கிற ஆராதனை இயேசுவுக்கு உண்டானது

c) கர்த்தருக்கு ஸ்தோத்திரம் ஏறெடுக்கப்பட்டது

d) அனைவருக்குள்ளும் ஆர்ப்பரிப்பு ஏற்பட்டது

e) எருசலேம் பட்டணத்தார் ஆச்சரியப்பட்டனர்

f) இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசி என்கிற சாட்சி கொடுக்கப்பட்டது

மு.கு: லூக் 1:79 உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்று யோவான்ஸ்நானகனைக் குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் இயேசுவின் வாழ்க்கையிலும் நிறைவேறினது

G. மத் 27:31 அவருக்கு உடுத்தப்பட்ட வஸ்திரங்கள்:—

வி.ம்: ஏசா 52:1 இயேசுவுக்கு உடுத்தப்பட்ட வஸ்திரம் (எல்) விருத்தசேதனமில்லாதவர்களோடும், அசுத்தமானவர்களோடும் அவர் இருக்கப் போவதில்லை என்பதைக் காட்டுகின்றது.

மு.கு: எசே 42:14, மத் 27:31 அவர் ஏற்கனவே உடுத்தியிருந்த அங்கியை கழற்றிவிட்டு, வேறேவஸ்திரம் உடுத்துவிக்கப்பட்டதால், வேறேவஸ்திரங்களை உடுத்திக் கொண்டு ஜனங்களின் பிரகாரத்திலே போவார்கள் என்ற தீர்க்கதரிசன வசனம் இதன் மூலம் நிறைவேறினது

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

H. மத் 27:35, யோவா 19:23 பங்கிட்டு, சீட்டுப்போட்ட வஸ்திரங்கள்:—

இயேசுவின் பாடுகளுக்கு அடையாளமான அவருடைய வஸ்தி–ரங்களை முதலாவது நான்காக பங்கிட்டார்கள் (யோவா 19:23). இரண்டாவது, அந்த வஸ்திரங்களின் பேரில் சீட்டுப் போட்டார்கள். ஆதலால், பங்கிடுதல் மற்றும் சீட்டுப்போடுதல் ஆகியவைகளைக் குறித்து தனித்தனியாக பார்ப்போம்.

வி.ம்: 1. ஏசா 9:3 பங்கிடுதல் (எ) மகிழ்ச்சி (அ) களிகூறுதல்

இயேசுவின் வஸ்திரங்களை பங்கிட்டதால் மூன்று தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின:—

a. பிரச 11:2 "பங்கிட்டுக் கொடு, பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது" என்ற வசனத்தின்படி, தனக்கு யூதர்களால் ஆபத்து வந்தபோது, தன்னுடைய வஸ்திரங்களை பஙகிட அவர் விட்டுக் கொடுத்தார்

b. சங் 22:18, மத் 27:35 } சங்கீதக்காரனைக் கொண்டு தீர்க்கதரிசனத்–தின் மூலம் சொல்லப்பட்ட "என் வஸ்திரங்க–ளைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு" என்ற வார்த்தையை தேவன் நிறைவேற்றினார்

c. ஏசா 53:12 பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாக பங்கிடுவார் என்றதீர்க்கதரிசன வார்த்தையின்படி, சிலுவையைச் சுற்றியிருந்த அநேக பலவான்களும், வீரர்களும் கிறிஸ்துவின் வசமாகத் திரும்பினர்

வி.ம் 2. எண் 34:13, நீதி 18:18 } சீட்டுப்போடுதல் (எ) சுதந்தரித்துக் கொள்ளுதல் (அ) விரோதங்களை ஒழிப்–பது (அ)சிக்கறுப்பது

இயேசுவின் வஸ்திரங்களின் பேரில் ஏன் சீட்டுப் போட்டார்கள்?

1. யோவா 19:24 வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக சீட்டுப் போட்டார்கள்
2. மாற் 15:24 தன் பங்கை எடுக்கும்படிக்குச் சீட்டுப் போட்டார்கள்
3. மத் 27:35 தீர்க்கதரிசனம் நிறைவேறவேண்டியதாயிருந்தது. அதனால் சீட்டுப் போட்டார்கள்
4. யோவா 19:24 யாருக்கு வருமோ என்று அறிந்து கொள்வதற்க்–காக சீட்டுப் போட்டார்கள்
5. லூக் 23:34 தாங்கள் செய்வது இன்னதென்று அறியாததி–னால் சீட்டுப் போட்டார்கள்

மு.கு யார் யார் சீட்டுப் போட்டிருப்பார்கள்?

1நாளா 25:8 சிறியவனும், பெரியவனும், ஆசானும், மாணாக்–கனும் ஒருவேளை சீட்டுப் போட்டிருப்பார்கள்

ii. மினுக்கான வஸ்திரம்:-

"அப்பொழுது ஏரோது தன் போர்ச் சேவகரோடு கூட அவரை நிந்தித்துப் பரியாசம் பண்ணி, மினுக்கான வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்தில் அனுப்பினான்" (லூக் 23:11).

வாழ்க்கையில் சில நேரம் எதிர்பார்க்காத வினோதங்கள் நடப்பதுண்டு. சில சமயம் அந்த விநோதங்களை நம்மால் தடுக்கக் கூட முடியாது. அப்படிப்பட்ட சம்பவம்தான் இயேசுவின் வாழ்க்கையிலும் நடந்தது. எப்போதுமே நீளமான அங்கியும், வெண்ணுடையும் மட்டுமே அணிந்து வந்த இயேசுவுக்கு ஏரோது என்கிற இராஜா மினுக்கான வஸ்திரத்தை உடுத்துவித்தான்.

மினுக்கான வஸ்திரம் என்பது இரண்டு காரியங்களுக்கு அடையாளமாய் சொல்லப்பட்டுள்ளது. ஒன்று: நிந்தனை, இரண்டு: பரியாசம் இவை இரண்டுமே இயேசுவுக்கு நேரிட்டது (லூக் 23:11). இவை இரண்டுமே ஏரோது என்கின்றஇராஜாவினால் இயேசுவுக்கு நேரிட்டது. ஏரோது என்றால் வீரியம் என்று அர்த்தமாகும். அதே போல மற்றவர்களை நிந்திக்கிறதிலும் ஏளனம் பண்ணுகிறதிலும் அவன் வீரியம் மிகுந்தவனாக காணப்பட்டுள்ளான்

இயேசுவுக்கு உடுத்துவித்த வஸ்திரங்களில் மினுக்கான வஸ்திரமும் ஒன்றாகும். மினுக்கான வஸ்திரம் என்றால் பொன் மோதிரத்திற்கு ஒப்பானது (யாக் 2:2) என்றும் நிந்தனை என்றும் அர்த்தமாகும் (லூக் 23:11). ஆம் பொது ஜனங்களும், யூதர்களும் இயேசுவை பொன் மோதிரத்தைப் போலப் பார்த்தார்கள். ஆனால், அதிகாரிகளும், பிரதான ஆசாரியர்களும், ராஜாக்களும் நிந்தனைக்குரியவராக பார்த்தார்கள். ஆனபடியால் அவர் பொன் மோதிரத்தை அணிந்து கொள்ளவும் இல்லை. மினுக்கான வஸ்திரத்தை விரும்பி ஏற்றுக் கொள்ளவும் இல்லை.

லூக் 23:11 ஏரோது ராஜா மினுக்கான வஸ்திரத்தை உடுத்திவித்து இயேசுவை நிந்தித்தான்

லூக் 23:8,12 ஆனால், இயேசுவோ ஏரோதுவுக்கு

a) அவரைக்குறித்த அநேக காரியங்களை கேட்கும்படி செய்தார்

b) அவர் செய்த அடையாளங்களைக் குறித்த விருப்பத்தை ஏரோதுக்கு ஏற்படுத்தினார்

c) ஏரோதுவின் ஆசையின்படி தன்னையே அவனுக்கு வெளிப்படுத்தினார்

d) அவனை சந்தோஷப்படச் செய்தார்

e) பகைவர்களாயிருந்த பிலாத்துவையும், ஏரோதுவையும் சிநேகிதர்களாகமாற்றினார்

மு.கு: இப்படியெல்லாம் நன்மை செய்த இயேசுவுக்கு மினுக்கான வஸ்திரத்தை உடுத்தி விட்டபடியினால், உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய் (எசே 28:17) என்கிறதுர்ச் சாட்சிக்கு ஏரோது ராஜா ஆளானான்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

மினுக்குதல் என்றால் மேட்டிமை என்று வேதம் எச்சரிக்கின்–றது (எபே 28:17). மேட்டிமை வேண்டாம் என்பதற்காகத்தான் இயேசு பரியாசத்தை ஏற்றுக் கொண்டார். நாமும் இயேசுவைப் போலவே மேட்டிமையை வெறுப்போம். தாழ்மையாய் வாழுவோம். கிறிஸ்து இயேசுவை உயர்த்தி காண்பிப்போம். உலகமும் உலகத்தில் உள்ளவைகளும் மினுக்கான வஸ்திரங்களாய் மாறட்டும். நாமும், நம்முடைய வாழ்க்கையும் பிரகாசிக்கும் வெண் வஸ்திரங்களாக மாறுவோம். உலகையே பிரகாசிக்கச் செய்வோம்.

சில பொதுவான மினுமினுப்புகள்:–

1) எபே 28:7 ஞானத்தினால் மினுக்குதல்
2) எபே28:17 அழகினால் மினுக்குதல்
3) லூக் 23:11 பரியாசம் என்னும் மினுக்குதல்
4) யாக் 2:2 மினுக்கும் பொன் மோதிரம்
5) யாக் 2:2 மினுக்கும் வஸ்திரம்
6) யாக் 2:3 மினுக்கும் பெரிய மனுஷன்
7) நீதி 23:31 பளபளப்பாய்த் தோன்றும் மதுபானம்

iii. அங்கிகள்:-

"சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியை பின்னி அவருக்கு சூட்டி (மாற்15:17)"

இயேசு உடுத்தியிருந்த வஸ்திரங்களில் இது மிகவும் முக்கியம் வாய்ந்தது என்று சொன்னால் மிகையாகாது. அங்கி, இயேசுவின் சரீரம் முழுவதையும் தொட்டுக் கொண்டு இருந்தது. மேல் தொடங்கி கீழ்வரைக்கும் ஒரே துணியினால் நெய்யப்பட்டதாகவும் இருந்துள்–ளது (யோவா19:23). அங்கி என்றால் உபத்திரவம் என்றும், இரத்த சாட்சி என்றும் பொருளாகும் (வெளி7:14;6:11). "சாபத்தை அவன் தனக்கு அங்கியாக உடுத்திக் கொண்டான் (சங்109:18)" என்றும் வேதம் சொல்கின்றது. அப்படியானால், அங்கி என்பது சாபத்தையும் குறிக்கும்.

இயேசுவின் சரீரத்தைத் தொட்ட பொருட்களில் அங்கியும் ஒன்று. இயேசுவின் பாடுகளின் போது பயன்படுத்தப்பட்ட அங்கியைக் குறித்து இரண்டு விதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அங்கியை எப்படி தைக்க வேண்டும் என்று முதன்முதலில் தையல் கலைஞர்களுக்கு சொல்லிக் கொடுத்ததே கர்த்தர்தான் (யாத் 39:22–27). ஆதியில் அவர் சொல்லிக் கொடுத்த அந்த அங்கியானது, பிற்காலத்தில் அவருடைய மரணத்தை மகிமைப்படுத்–துவதாக மாறினது. அங்கி என்றால் இஸ்ரவேலின் தேவனுடைய மகிமை என்று அர்த்தமாகும் (எசே 9:3). அப்படிப்பட்ட மகிமை பொருந்திய அங்கியைக் குறித்து தியானிப்போம்.

இயேசுவைக்குறித்து பார்க்கும் போது மூன்று வித அங்கிகளை கவனிக்க முடியும்.

1) மேல் அங்கி (மத்27:31). இது மிகுந்த உபத்திரவத்தை குறிக்கும்.
2) சிவப்பான அங்கி (யோவா19:2). இது இரத்த சாட்சியாக மரிப்பதைக் குறிக்கும்.
3) தையல் இல்லாத அங்கி (யோவா1923). இது சாபத்தைக் குறிக்கும். இவைகளைக் குறித்து சற்று விரிவாக பார்ப்போம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

a. மாற் 15:20 சிவப்பான அங்கி:—

வி.ம்: மாற் 15:20 சிவப்பான அங்கி (எ) பரியாசம்

இயேசு எட்டு விதங்களில் பரியாசம் பண்ணப்பட்டார்.

a) லூக் 22:63 அடித்து பரியாசம் பண்ணினார்கள்

b) மாற் 10:34 துப்பி பரியாசம் பண்ணினார்கள்

c) மத் 27:29 ராஜா என்று சொல்லி பரியாசம் பண்ணினார்கள்

d) லூக் 23:11 நிந்தித்துப் பரியாசம் பண்ணினார்கள்

e) மாற் 15:31 இரட்சிக்கத் திராணியில்லாதவன் என்று பரியாசம் பண்ணினார்கள்

f) மத் 27:29 வாழ்க என்று சொல்லி பரியாசம் பண்ணினார்கள்

g) மாற் 15:20 வெளியே கொண்டுபோய் பரியாசம் பண்ணினார்கள்

h) மத் 27:31 அவருடைய அங்கியை கழற்றி பரியாசம் பண்ணினார்கள்

b. யோவா 19:23 தையல் இல்லாததும், நெய்யப்பட்டதுமான அங்கி

வி.ம்: வேதத்திலுள்ள மற்ற ஆடைகள் அனைத்தும் சித்திரத் தையலாடை என்ற பெயரில் தையல் உள்ளதாகவே காணப்படு–கிறது. இயேசுவின் அங்கி மட்டும்தான் தையல் இல்லாத ஆடை–யாகக் காணப்பட்டது. காரணம்: இயேசுவின் சரீரத்தின் எழும்புக–ளில் ஒன்றும் முறிக்கப்படாமல் எப்படி பாதுகாக்கப்பட்டதோ (யோவா 19:36), அதேபோல அவருடைய அங்கியும் தையல் இல்லாததாய் பிதாவாகிய தேவன் பாதுகாத்தார்.

யோவா 19:23 நெய்யப்பட்டது:—

நெய்யப்பட்டது (எ) கிழியாதபடிக்கு உறுதியானது என்று அர்த்தம் (யாத் 28:32). ஆம், இயேசுவைக் குற்றம்சாட்டின பிரதான ஆசாரி–யனின் வஸ்திரம் கிழிந்தது (மத் 26:65). தேவாலயத்தின் திரைச்–சீலை கிழிந்தது (மத் 27:51). சீஷர்கள் மீன் பிடித்த வலைகூட கிழிந்து போனது (லூக் 5:6). ஆனால் இயேசுவின் அங்கியோ கிழியவே இல்லை.

c. இயேசுவின் பாடுகளில் மூன்று வகையான அங்கிகளைப் பார்க்கலாம்:—

1. மத் 27:31 மேல் அங்கி
2. யோவா 19:2 சிவப்பான அங்கி
3. யோவா 19:23 தையல் இல்லாத அங்கி

அங்கி என்றால் என்ன?

வெளி 6:11 அங்கி (எல்) இரத்தசாட்சி

வெளி 7:14 மிகுந்த உபத்திரவம்

விளைவு:–

நான்கு விலையேறப்பெற்ற ஆசீர்வாதம் கிடைக்கும்.

வெளி 7:9
1. வெள்ளை அங்கி கிடைக்கும்.
2. குருத்தோலை கிடைக்கும்.
3. சிங்காசனம் கிடைக்கும்.
4. ஆட்டுக்குட்டியானவரே கிடைப்பார்.

1. மாற் 12:38 உபதேசம் என்னும் அங்கி
2. மாற் 15:20 பரியாசம் என்னும் சிவப்பு அங்கி
3. லூக் 20:46 முதன்மையை விரும்பும் நீண்ட அங்கி
4. யோவா 19:2 பாடுகள் என்னும் சிவப்பான அங்கி
5. யோவா 19:23 தையல் இல்லாத நெய்யப்பட்ட அங்கி
6. அப் 9:39 மரணம் என்னும் தொற்காளின் அங்கி
7. வெளி6:11 இரத்தசாட்சி என்னும் வெள்ளை அங்கி
8. வெளி 7:9 பரலோகத்தில் காணப்படும் வெள்ளை அங்கி
9. வெளி7:14 இரத்தத்தினால் தோய்க்கப்பட்ட அங்கி

iii. துய்யுதான துப்பட்டி:-

"யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி" (மத் 27:59).

தூய்மை என்றும், சுத்தம் என்றும் நாம் பேசுகின்றோம். ஆனால், பல நேரத்தில் நம்மிடத்தில் சுத்தம் என்பது சுத்தமாக இல்லாமல் போய் விடுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் மனுஷகுமாரனாய் வாழ்ந்த இயேசு சுத்தமுள்ளவ -ராய் வாழ்ந்துள்ளார். எங்கும் பரிசுத்தமாய் நடமாடியுள்ளார். ஆனபடியினால்தான், அவருடைய மரண அடக்கத்தில் (தூய்மை யான) துப்பட்டியை பயன்படுத்தியுள்ளனர். துய்யாதானத் துப்பட்டி என்பதற்கு மெல்லிய துப்பட்டி என்றும் பொருள் உண்டு.(மாற் 15:46)

a. துப்பட்டி என்றால் என்ன?

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலபீடத்தையும், பலிபீடத்துக்கான பொருட்களையும் மூடி வைப்பதற்க்காக துப்பட்டி பயன்படுத்தப்பட்டுள் -ளது. ஆனபடியினால்தான் இயேசுவும் தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்ததினால் அவருடைய உடலையும் துப்பட்டியினால் மூடினார்கள். இந்த சம்பவம் எதேச்சகரமாக (முன்கூட்டியே தீர்மானித்து) நடந்தது கிடையாது. நம்மை பலிபீடமாக மாற்றிக் கொண்டு, துய்யதான துப்பட்டியைப் போல தூய்மையாக நம்மை காத்துக் கொள்ள வேண்டும்.

துப்பட்டி என்பது எச்சரிப்பையும் காட்டுவதாக உள்ளது. இயேசு சிலுவையை சுமந்து கொண்டு கொல்கொதா என்று சொல்லப்படும் மண்டை ஓடு என்று அர்த்தம் கொள்ளும் இடத்திற்கு போகும் போது ஒரு வாலிபன் துப்பட்டியால் தன்னை மூடிக் கொண்டு இயேசுவுக்கு பின் சென்றான். அவனை அழைத்து கொஞ்ச தூரம் சிலுவையை சுமக்கச் சொன்னதும், தன் சரீரத்தை மூடியிருந்த துப்பட்டியை போட்டு விட்டு நிர்வாணமாக ஓடிப் போனான் (மாற்14:51,52). இது ஓர் எச்சரிப்பின் செய்தியாகும்.

எல்லாரும் சிலுவையை சுமக்க முடியாது, எல்லாரும் பலிபீடமாக மாறமுடியாது. எல்லாராலும் இயேசுவைப் பின்பற்றவும் முடியாது. துய்யதான துப்பட்டி என்கிற பரிசுத்தம் யாரிடம் அதிகமாக உள்ளதோ அவர்களால் மட்டும்தான் முடியும். எனக்கு அன்பான சகோதரர் -களே, சகோதரிகளே நீங்கள் பரிசுத்தமாய் இருக்கின்றீர்களா? உங்கள் உள் உறுப்புகள், எண்ணங்கள், சிந்தனைகள், யாவும் பரிசுத்தமாக உள்ளதா என்று கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இல்லாவிட்டால் கர்த்தர் உங்களை பரிசுத்தமாக மாற்ற வல்லவராக இருக்கிறார்.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

ஒழுப் போகின்றவர்கள் உலகத்தை ஜெயிக்க முடியாது. இயேசு -வுக்குள், இயேசுவுக்காக, சத்திய வசனத்தைக் கொண்டு நிலைத்து நிற்பவர்கள் தான் உலகத்தையும், சாத்தானையும் ஜெயிக்க முடியும்.

துப்பட்டியை வைத்திருந்த இரண்டு பேரை பாருங்கள் (மாற்14:51,52; 15:46). ஒருவன் வாலிபன், மற்றொருவன் யோசேப்பு. வாலிபன் துப்பட்டியை போட்டு விட்டு ஓடிப்போனான். அதனால் அவன் நிர்வாணி என்கிற அவமானச் சின்னமாய் மாறினான். ஆனால் யோசேப்பு துய்யதான மெல்லிய துப்பட்டியோடு இயேசு -வின் சரீரத்துக்காக ஆயத்தமாய் இருந்தான். அதனால், அவன் பெயர் வேதத்தில் இடம் பிடித்தது. நீதிமான் என்கிற உயர்ந்த பட்டத் -தையும் பெற்றுக் கொண்டான்.

இதை வாசிக்கும் எனக்கன்பானவர்களே, நீங்கள் வாலிபனை சார்ந்தவர்களாக இருக்கின்றீர்களா? அல்லது யோசேப்பு என்னும் நீதிமானாக மாறவிரும்புகின்றீர்களா என்பதை சிந்தித்து தீர்மானம் பண்ணுங்கள்.

சாதாரண துப்பட்டி மெல்லிய துப்பட்டியாக மாறட்டும், மெல்லிய துப்பட்டி துய்யதான துப்பட்டியாகட்டும். மெல்லிய துப்பட்டியும், துய்யதான துப்பட்டியும் பலிபீடமாக மாறட்டும். கிறிஸ்து இயேசுவுக் -காக உங்களையே பலியாக ஒப்புக் கொடுங்கள். கிறிஸ்துவும் உங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

இயேசுவின் பாடுகளின் போது இரண்டுவித துப்பட்டி பயன்படுத் -தப்பட்டது. அந்த துப்பட்டிகள் இரண்டுக்கும் இரண்டு வித பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிபீடத்திற் -கும், ஆசரிப்பு கூடாரத்திற்கும் பயன்படுத்தப்பட்ட துப்பட்டி, பின் நாட்களில் இயேசுவின் மரணத்திற்கு பயன்படுத்தப்பட்டது. துப்பட் -டியில் கிடைத்த தரிசனம்தான் பேதுருவை புறஜாதியாருக்கும் பிரசங்கிக்கும் அப்போஸ்தலனாக மாற்றினது (அப் 11:5). துப்பட்டி என்றால் போத்துக் கொள்ளுதல் என்று அர்த்தமாகும். நாமும் துப்பட்டியாய் மாறுவோம். இயேசுவின் ஊழியத்தைச் செய்வோம்.

b. மத் 27:59 துய்யதான துப்பட்டி:–

வி.ம்: எபே 5:27 துய்யதான என்றால்

a) கறைதரை இல்லாதது
b) பரிசுத்தமானது
c) பிழையற்றது
d) மகிமைக்கு ஒப்பானது
e) சபைக்கு இணையானது
f) ஒப்புக் கொடுக்கப்பட்டது

c. மாற் 15:46 மெல்லிய துப்பட்டி:–

வி.ம்: லூக் 7:25 மெல்லிய என்றால்

a) அலங்கார வஸ்திரம்
b) செல்வமான வாழ்க்கை
c) அரசனுக்கு ஒப்பானது
d) அரண்மனைக்கு இணையானது

உ.ம்: வெளி 19:14 பரலோக சேனைகள் மெல்லிய வஸ்திரம் தரித்து இயேசுவைப் பின்பற்றினார்கள்

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

d. இயேசுவுக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பட்டி நான்கு விதங்களில் சொல்லப்பட்டுள்ளது:--

1. மத் 27:59 துய்யதான துப்பட்டி.
2. லூக் 23:53 மெல்லிய துப்பட்டி.
3. மாற் 15:46 வாங்கிக் கொண்டு வந்தது.
4. மாற் 15:46 இயேசுவைச் சுற்றியது.

e. துப்பட்டி என்றால் என்ன?

எண் 4:13 துப்பட்டி (எல்) பலிபீடம்.

1நாளா 22:1 பலிபீடம் (எல்) கர்த்தருடைய ஆலயம்.

1கொரி 3:17 நீங்களே அந்த ஆலயம்

ஆலயத்தின் வாக்குத்தத்தம்:

யோவே 3:28 ஆலயத்திலிருந்து ஒரு ஊற்று உண்டாகி உங்களை நிரப்பும்.

f. வித்தியாச வித்தியாசமான துப்பட்டிகள்:--

1) எண் 4:6 நீளமான துப்பட்டி
2) எண் 4:8 சிவப்பு துப்பட்டி
3) எண் 4:9 இளநீள துப்பட்டி
4) எண் 4:13 இரத்தாம்பர துப்பட்டி
5) நியா 14:12 விடுகதை என்னும் துப்பட்டி
6) மத் 27:59 துய்யதான துப்பட்டி
7) மாற் 14:51,52 நிர்வாணம் என்னும் துப்பட்டி
8) மாற் 15:46 மெல்லிய துப்பட்டி
9) அப் 10:11 தரிசனம் என்னும் துப்பட்டி

iv. சீலைகள்

a. குறிப்புகள்:--

"அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைக் கந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்" (யோவா19:40).

சீலை என்றதும் இது பெண்கள் பயன்படுத்தும் வஸ்திரமல்லவா பிறகு எப்படி இது இயேசுவின் சரீரத்தை தொட்டிருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். இந் நாட்களில்தான் சீலையை பெண்கள் மட்டும் பயன்படுத்துகின்றனர். பழைய ஏற்பாட்டு காலத்தில் முக்கியத் தலைவர்களும், பாடகர்களும், இசைக்கலைஞர்களும் கூட சீலை -யைதான் கட்டிக் கொண்டார்கள் (1நாளா 15:27). அதாவது முக்கி -யமான ஆண்கள் முக்கியமான நிகழ்ச்சியின் போது சீலையை பயன்படுத்தியுள்ளனர்.

அந்த காலத்திலேயே நிறைய வேலைப்பாடுகள் நிறைந்த சீலை -களை தயாரித்துள்ளனர். இளநீலம், இரத்தாம்பரம், சிவப்பு நூல், பஞ்சு நூல் (வெள்ளை நிறம்) ஆகிய நான்கு நிறம் கலந்த அழகான சீலைகளை வடிவமைத்துள்ளனர் (யாத் 36:35). கேருபீன்களின் உருவமும் தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது, விசித்திரமான வேலைப் -பாடுகளும் செய்யப்பட்டிருந்தது (யாத்26:31). இதில் இன்னுமொரு ஆச்சரியமும் உண்டு. அதாவது இந்நாட்களில் தரி நெய்கிறவர்கள் என்று ஒரு கூட்டத்தாரை நாம் சொல்வது போல, சீலைகளை நெய்வதற்க்காகவே ஒரு வம்சம் தனியே உருவாக்கப்பட்டு வாழ்ந்து வந்தது (1நாளா4:21). இவர்கள் மெல்லிய சீலைகளை நெய்வதில் மிகத் திறமையானவர்கள்.

சீலை என்பது வேதத்தில் மூன்று விதத்தில் சொல்லப்பட்டுள்ளது. a) சீலை, b) சேலை, c) புடவை.

a) சீலை: தேவனுக்கும், பலிபீடத்துக்கும், கிருபாசனத்துக்கும் பயன்படுத்தப்பட்டது (யாத் 30:6).

b) சேலை: தண்டனையால் மரித்தவர்களுக்கு மட்டும் பயனபடுத்தக் கூடியது (அப் 5:6).

c) புடவை: தலைவர்கள், பாடகர்கள், இசைக் கலைஞர்கள் பயன்படுத்தினார்கள் (IIநாளா 5:12).

இந்நாட்களில், கூடிதார் என்ற வஸ்திரத்தை எடுத்துக் கொண்டால், அதில் பல விதங்கள் இருப்பதைப் போல, அந்நாட்களில் உருவாக்கப்பட்ட சீலைகளிலும் பலவிதங்கள் காணப்பட்டன. உடுப்பு போன்ற சீலை, மெல்லிய புடவைக்கு ஒப்பான சீலை, பட்டுப்புடவை போனற சீலை, சித்திர தையல் வேலைப்பாடுகள் நிறைந்த சீலை போன்ற பலவிதங்களில் கிடைத்துள்ளன. இவைகளைத் தவிர செத்துப் போனவர்களின் பிரேதங்களை சுற்றி வைப்பதற்க்காகவே சீலைகள் தயாரிக்கப்பட்டன (யோவா 11:44). அதற்கு பிரேதச் சீலை என்று பெயர்.

பழைய ஏற்பாட்டு சீலைக்கும், புதிய ஏற்பாட்டு சீலைக்கும் ஆவிக்குரிய வித்தியாசமுண்டு. பழைய ஏற்பாட்டு சீலை, கிருபாசனத்தையும், புதிய ஏற்பாட்டு சீலை மரணத்தையும் குறிக்கும். இயேசு நமக்காக மரித்து சீலைகளினால் சுற்றப்பட்டபடியினால் நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டை நெருங்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டோம்.

இயேசுவின் பாடு மரணத்தின் போது ஏறத்தால மூன்று விதமான சீலைகள் பயன்படுத்தியுள்ளனர். சீலை என்றால் முதலாவது: மறைவைக் குறிக்கும் (எண் 4:5) இரண்டாவது: காரிருளையும் குறிக்கும் (ஏசா 50:3). ஆம், சீலையால் சுற்றி இயேசுவின் சரீரம் மறைக்கவும்பட்டது. மரணம் என்ற காரிருளும் அவருக்கு வந்தது. சீலை என்ற வார்த்தை சேலை என்றும் புடவை என்றும் சொல்லப்பட்டுள்ளது (யோபு 16:15, அப் 5:6, Iசாமு 21:9). ஆனால் சீலையை இயேசுவுக்கும், சேலையை மனிதர்1களுக்கும், புடவையை ஆயுதங்களைச் சுற்றி வைப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

இப்படி சீலையைக் குறித்து ஏராளம், ஏராளமான ஆதாரங்களும், அருமையான உதாரணங்களும் காணப்பட்டாலும், இயேசு கிறிஸ்துவின் பாடுகளோடு சம்பந்தப்பட்ட சீலைகள் மூன்று வகைப்படும். அந்த மூன்று வகை சீலைகளும் நமக்கு நிறைய பாடங்களையும், இயேசுவின் பாடுகளைக் குறித்த விளக்கங்களையும் கற்றுத் தரும் என்பதில் சந்தேகமில்லை. வாருங்கள் போய், வாசித்து அறிந்து, தெரிந்து கொள்வோம்.

b. இடுப்பில் கட்டிய சீலை:—

"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த **சீலையினால்** துடைக்கவும் தொடங்கினார்" (யோவா 13:5).

இயேசுவின் வாழ்க்கையில் பாடுகள் என்பது இங்குதான் ஆரம்பிக்கிறது. அதாவது, பஸ்கா பண்டிகைக்கு முன்பு, இராப்போஜனம் கொடுப்பதற்கு முன்னதாக, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷர்களின் கால்களைக் கழுவிதான் இடுப்பில் கட்டியிருந்த **சீலையினால்** அவர்களின் கால்களைத் துடைத்தார். அப்படியானால், **சீலையை** அவர் தொட்டார் என்பது நன்கு புலப்படுகின்றது.

இந்த **சீலை** சுத்திகரிப்புக்கும், கழுவப்படுவதற்கும் இணையாக சொல்லப்பட்டுள்ளது. இயேசு சொன்னார்: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார் (யோவா 13:8). ஆம், கிறிஸ்துவுக்காக, கிறிஸ்தவ வாழ்க்கைக்காக நாம் கழுவப்பட வேண்டும். IIகொரி 7:1 சொல்வதைப் போல நம்முடைய மாம்சத்திலும் ஆவியிலும் உள்ளதான அசுசி நீங்க நாம் சுத்திகரிக்கப்பட வேண்டும். **சீலையைக்** கொண்டு சீஷர்களின் கால்களை துடைத்து சுத்தப்படுத்தினார். அதுபோல நாமும் சுத்தமாக்கப்படுவது மிக முக்கியமான ஒன்றாகும்.

c. யோவா 13:4 இயேசு இடுப்பில் கட்டியிருந்த சீலை:—

யோவா 13:5 இடுப்பில் கட்டியிருந்த **சீலை** (எல்) சுத்திகரிப்பை குறிக்கும்

வி.ம்: யோவா 13:7 அது இன்னதென்று நாம் அறியாத சுத்திகரிப்பு

d. உடலைக் கட்டிய சீலை:—

"அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம் பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்கங்களுடனே **சீலைகளில்** சுற்றிக் கட்டினார்கள்" (யோவா 19:40)

முதலாவது: இயேசுவின் சரீரத்தை சுற்றிலும் கட்டின இந்த **சீலை** கிறிஸ்தவ வாழ்க்கை வாழும் கிறிஸ்தவர்களின் கட்டுப்பாடான வாழ்க்கையைக் காண்பிக்கின்றது. மேற்கண்ட வசனத்தில் அடக்கம் பண்ணும் முறை என்று வாசிக்கிறோம். அடக்கம் என்றால் செத்தவர்களை பிரேத குழியில் புதைப்பதைக் குறிக்குவில்லை. "என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது" (மத் 26:12). ஆம், அடக்கம் அல்ல செய்கை. இதுபோலதான் நம்முடைய மூலையில் இருந்து எழும்பும் தவறான எண்ணங்கள், யோசனைகள், சிந்தனைகளை அடக்கம் பண்ணப்பட வேண்டும். இவைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் அடக்கம் பண்ணுகிறவர்கள்தான் மெய்யான கிறிஸ்தவன், கிறிஸ்தவள்.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

இரண்டாவதாக: அந்த சீலையில் சுகந்தவர்க்கங்களை பயன்படுத்தினார்கள் என்று பார்க்கின்றோம். சுகந்த வர்க்கம் என்றால் தூபம் என்று பொருள் (IIநாளா2:4). தூபம் என்றால் துதி. துதியை காலையிலும், மாலையிலும், விசேஷித்த நாட்களிலும் செலுத்த வேண்டும் என்று அதே வசனம் சொல்கின்றது. ஆம், தூபம் என்னும் துதியின் சீலையினால் நாம் கட்டப்படும்போது நம் வாழ்க்கை பாதுகாக்கப்பட்ட, கட்டுப்பாடுள்ள வாழ்க்கையாக மாறும்.

சீலையைக் கொண்டு இயேசுவின் சரீரத்தை நான்கு இடங்களில் கட்டினார்கள். அதாவது கைகள், கால்கள், தலை, மற்றும் உடல். இதே போல நம்முடைய உடலிலும் நாம் கட்டுபாடாய் பாதுகாத்துக் கொள்ள கூடிய நான்கு பகுதியுண்டு. கண், செவி, நாவு, வாய் இந்த நான்கையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டால் எந்த சோதனையையும் உங்களால் ஜெயிக்க முடியும். கண்களால் இயேசுவை மட்டும் பாருங்கள். செவியால் இயேசுவின் சத்தத்தை மட்டும் கேளுங்கள். நாவை துதிக்க மட்டும் பயன்படுத்துங்கள். வாயை சுவிசேஷம் சொல்ல மட்டும் உபயோகியுங்கள். இப்படி செய்தால் உங்களுக்காக இயேசு சீலையினால் கட்டபட்டது வீண் போகாது.

e. யோவா 19:40 இயேசுவின் உடலை சுற்றியிருந்த சீலை:–

வி.ம்: புல 1:14 சுற்றிக்கட்டினது என்பது

a) பூட்டப்பட்டதற்குச் சமம்

b) கழுத்தை சுற்றிக் கொண்டதற்கு சமம்

c) பெலன் விழுந்து போனதற்குச் சமம்

d) ஒடுக்குகிறவர்களின் கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டதற்குச் சமம்

உ.ம்: யோவா 11:44 சீலையினால் சுற்றிக் கட்டுதல் (எ) மரித்து போனதற்குச் சமம்

f. தேவாலய சீலை:–

"அப்பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கி கீழ் வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது" (மாற் 15:38).

சீலைகளில் தேவாலயத்தின் திரைச் சீலையும் முக்கிய பங்காற்றுகின்றது. இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் இந்த மூன்றோடும் திரைச்சீலை சம்பந்தப்பட்டுள்ளது. "இளநீலநூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், பஞ்சு நூல்" என்னும் நான்கு வகையான நூல்களைக் கொண்டு திரைச்சீலை உருவாக்கப்பட்டிருந்தது (யாத் 26:31). இந்த திரைச்சீலையின் மைய பகுதியில் கேருபீன்களும் வரையப்பட்டிருந்தது. தேவாலயத்தின் ஒவ்வொரு சீலையும் உச்சி முதல் அடிபாகம் வரை அளந்து பார்த்தால் 60 அடி உயரமாயிருக்கும்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

கொல்கொதா மலையில் மகா சத்தமாய் கூப்பிட்டு இயேசு . ஜீவனை விட்டதும், தேவாலயத்தின் திரைசீலை கிழிந்தது. தேவா-லயத்தின் திரைச்சீலை ஒன்றுதான். ஆனால், அது இரண்டு விதங்களில் கிழிந்ததாக வேதம் சொல்கின்றது. ஒன்று: மேல் தொடங்கி கீழ்வரைக்கும் கிழிந்தது (மத்27:51). இரண்டாவது: நடு-வில் கிழிந்தது (லூக் 23:45). ஒரே திரைச்சீலை இரண்டு விதங்களில் கிழிந்தது எதைக் காட்டுகின்றது தெரியுமா? பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆராதனை ஸ்தலத்திற்குள் நுழையும் முன், பரிசுத்த ஸ்தலத்தில் ஒரு திரைச்சீலையும், மகா பரிசுத்த ஸ்தலத்-தில் ஒரு திரைச்சீலையும் இருக்கும். இந்த இரண்டுக்காகத்தான் இயேசுவின் மரண நேரத்தில் தேவாலயத்தின் திரைச்சீலை இரண்-டு விதங்களில் கிழிந்தது.

தேவாலய திரைச்சீலை இரண்டு விதங்களில் கிழிந்ததால், இன்னும் இரண்டு பாக்கியம் உண்டானது. ஒன்று: யூதர்களுக்கும், புறஜாதியார்களுக்கும் இருந்த வேற்றுமை ஒழிந்தது. கிறிஸ்துவுக்-குள் அனைவரும் ஒன்றுதான் என்கிறபெரிய வெளிப்பாடு கிடைத்-தது. இரண்டாவது: நாம் யாவரும் கிருபாசணத்தண்டை நெருங்-கும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டோம். இதனால், யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் இயேசுவிடம் நெருங்க முடியும்.

எப்படியெனில், அவரே நம்முடைய சமாதானக் காரணராகி, இருதிறத்தாலையும் ஒன்றாக்கி பகையாக நின்றபிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து பகையை சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புர-வாக்கினார் (எபே 2:14,16) என்றதீர்க்கதரிசனமான வசனமும் நிறைவேற ஆரம்பித்தது.

இப்படியாக சீலையை குறித்த தேவ வெளிப்பாடுகளும், விளக்கங்களும் ஏராளமாக இருந்தாலும், ஏரேமியா என்கிறதீர்க்-கதரிசியை காப்பாற்றினதே. இந்த சீலைதான் என்று வேதம் சொல்கின்றது (ஏரே 38:11). அப்படியானால் இந்த செய்தியை பொறுமையோடும், கவனமாகவும் படிக்கின்றஉங்களை தேவன் தம்முடைய சீலை என்னும் கிருபையை அனுப்பி காப்பாற்றுவார். சத்தியத்துக்காக, சத்தியத்துக்குள்ளாக சகல கட்டுப்பாடோடும் வாழ உதவி செய்வார்.

மு.கு: 1தீமோ 5:10 கால்களை கழுவி சீலையினால் துடைப்பது:-

a) உபத்திரவத்தில் உதவி செய்வதற்கு சமம்

b) நற்கிரியைகளை செய்வதற்கு சமம்

c) ஜாக்கிரதையாய் இருப்பதற்கு சமம்

d) நற்சாட்சி பெற்றதற்கு சமம்

g. யோவா 20:7 இயேசுவின் தலையில் சுற்றியிருந்த சீலை:—

உ.ம்: யோவா 20:7முன்பு தலையில் சுற்றியிருந்த சீலை,பின்பு சுருட்டி வைக்கப்பட்டிருந்தது

வி.ம்: 1சாமு 21:9 சுருட்டி வைக்கப்படுதல் (எ) பாதுகாக்கப்படுதல் ஆகும்

எ.கா: லூக் 4:20 முன்பு புஸ்தகத்தை இயேசு சுருட்டினார். இப்போது அவருடைய சீலை சுற்றப்பட்டிருக்கிறது

யோவா 13:5 தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக் —கவும் தொடங்கினார்.

h. சீலை என்றால் என்ன?

யோவா 11:44 பிரேதத்தைக் கட்டக்கூடியதுதான் சீலை

(அப்படியானால் சீலை என்பது மரணத்தைக் குறிக்கின்றது)

இயேசுவின் நாட்களில் சீலை மூன்று முறை தொடர்புடையதாய் வருகிறதை நம்மால் காணமுடியும்.

1. லூக் 19:20-26 பத்து இராத்தல் வாங்கினவன். அதை சீலையில் கட்டி வைத்திருந்தான். (இது சோம்பேறித்தனம்)
2. யோவா 13:4,5 இயேசு சீலையினால் சீஷர்களின் கால்களை துடைத்தார். (இது தாழ்மை)
3. யோவா 19:40 இயேசுவை கல்லறையில் வைக்கும்போது (இது பரிசுத்த மரணத்தைக் குறிக்கும்)

மு.வ: யோவா 11:44 இயேசு அவர்களைக் நோக்கி; இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.

i. நிழலாட்டமாய் சொல்லப்பட்டுள்ள சில சீலைகள்:—

1.	யாத் 26:31	விசித்திர வேலையாள் செய்யப்பட்ட சீலை
2.	யாத் 26:33	தொங்கவிட்ட சீலை
3.	யாத் 36:35	பிரிவை உண்டாக்கும் சீலை
4.	ஏசா 50:3	கேருபீன்களுள்ள சீலை
5.	மத் 27:51	தேவாலயத்தின் சீலை
6.	மாற் 15:38	கிழிந்துபோன சீலை
7.	லூக் 19:20	ராத்தல் வைத்திருந்த சீலை
8.	யோவா 11:44	பிரேத சீலை
9.	யோவா 13:4	அரையில் (இடுப்பில்) கட்டிய சீலை
10	.யோவா 13:5	கால்களைத் துடைத்த சீலை
11.	யோவா 19:40	சுகந்தவர்க்கங்களுடன் இருந்த சீலை
12.	யோவா 20:7	சுருட்டி வைத்திருந்த சீலை

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXV. சிலுவையில் மரித்தவர்கள் :—

சிலுவையில் மரித்தவர் இயேசு மட்டும் தான் என்று சொல்கிற—வர்கள் உண்டு. இரண்டு கள்ளர்களையும் சேர்த்து மூன்று பேர் சிலுவில் மரித்தார்கள் என்று சொல்கிறவர்களும் உண்டு. ஆனால் ஒன்பது விதமான மனிதர்கள் சிலுவையில் அறையுண்டு மரித்துள்ளனர். இதையும் வேதம்தான் சொல்கின்றது.

ஒன்று: தீர்க்கதரிசிகள்:—

மத் 23:34 தீர்க்கதரிசிகளை சிலுவையில் அறைந்தனர். அத—னால் உண்டான விளைவு என்ன தெரியுமா? யாரெல்லாம் தீர்க்—கதரிசிகளை சிலுவையில் அறைந்தார்களோ அவர்களின் வீடுகள் அனைத்தும பாழாய் போயின (மத்23:31,38). இதை சுத்தமான மொழியில சொல்ல வேண்டுமானால், அவர்களின் வீடுகள் அனைத்தும் நாசமாய் போனது என்பதாகும். தீர்க்கதரி—சிகளிடம் கவனமாய் இருங்கள்.

இரண்டு: ஞானிகள்:—

மத் 23:34 ஞானிகளை சிலுவையில் அறைந்தனர். ஞானி—களை சிலுவைக்கு ஏன் தேவன் ஒப்புக் கொடுத்தார் என்று எண்ணலாம். அதற்கும் உண்மையானக் காரணம் உண்டு. ஞானி—களின் ஞானத்தை பைத்தியமாக்கவும், தர்க்க சாஸ்திரங்களை அழிக்கவும், அவர்களை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தார் (Iகொரி1:19,20). அந்நாட்களில் வாழ்ந்த ஞானிகளில் சிலர் தங்களுடைய ஞானத்தினால் தேவனுடைய வல்லமையை மறைக்கவும் முயற்ச்சித்தனர். அதனால், அவர்களை தேவனே தண்டனைக்கு ஒப்புக் கொடுத்தார்.

மூன்று: வேதபாரகர்கள்:—

மத்23:34 வேதபாரகர்களை (வேத பண்டிதர்களை) சிலுவையில் அறைந்தனர். காரணம் என்ன தெரியுமா? வேதபாரகர்கள் மோசேயின் ஆசனத்தில் உட்காரப் பார்த்தார்கள் (மத்23:2ற்ர்7). வேதபாரகர்களும், வேத பண்டிதர்களும் பல நேரங்களில் தவறானதைத்தான் செய்தார்கள். மோசேயின் ஆசனத்தில் போய் உட்காரலாமா? கூடாது. காரணம் மோசே பரிசுத்தவான், நீதிமான், தேவனோடு கூட சஞ்சரித்தவன். பண்டிதர்கள் மனை—வியை தள்ளி விடவும், அழகான பெண்களை தெரிந்தெடுக்—கவும் ஆலோசனை கொடுத்தனர் (எஸ்1:14,15). இப்படி பல வரலாற்று தவறுகளை செய்தபடியினால் அவர்களை சிலுவை—யில் அறைய தேவன் ஒப்புக் கொடுத்தார். இந்த சம்பவத்தை இன்னொரு முறையிலும் எடுத்துக் கொள்ளலாம். அதாவது: வேதபாரகர்களை சிலுவையில் அறைந்ததால், மரித்த வேதபார—கர்கள் மோசேயின் ஆசனத்தில் போய் உட்கார்ந்தனர்.

நான்கு: வலது புறத்துக் கள்ளன்:—

மத்27:38 வலது புறத்துக் கள்ளனை சிலுவையில் அறைந்தனர். அதனால் அவனுக்கு இரண்டு பெரிய பலன்கள் கிடைத்தன (மத்25:34). 1) பிதாவின் ஆசீர்வாதம் கிடைத்தது. 2) ராஜ்யத்தையும் சுதந்தரித்து கொண்டான். இந்த இரண்டு ஆசீர்வாதங்களும் வலது புறத்தில் உள்ளவர்களுக்கான பிரத்தியேக ஆசீர்வாதங்கள்.

ஐந்து: இடது புறத்துக் கள்ளன்:—

மத் 27:38 இடது புறக் கள்ளன் சிலுவையில் அறையப்பட்டான். சிலுவையில் அறையப்பட்ட இந்த இடது புறத்துக் கள்ளன் முக்கி–யமான மூன்று வார்த்தைகளை இயேசுவுக்கு எதிராகச் சொன்–னான் (லூக்23:39). 1) நீ கிறிஸ்துவானால் 2) இரட்சித்துக் கொள் 3) இகழ்ந்தான். அவன் சொன்ன மூன்று வார்த்தைக்கு தக்கபடி மூன்று தண்டனை அவனுக்குக் கிடைத்தது (மத்25:41). 1) சாபம் 2) பிசாசு 3) நித்திய அக்கினி. எவ்வளவு பெரிய தண்ட–னை பார்த்தீர்களா?

வலதுபுறத்து, இடதுபுறத்து கள்ளன்கள் இரண்டு பேரையும் சிலுவையில் அறையவில்லை. அதற்கு பதிலாக அவர்களின் கைகளையும், கால்களையும் சிலுவையோடு சேர்த்துக் கட்டினார்–கள் என்றும் சில வேத பண்டிதர்கள் கூறுகின்றனர். காரணம், இரண்டு பேரும் பெரிய குற்றவாளிகள் ஒன்றும் கிடையாது. வெறும் திருடர்கள்தான். அதனால்தான் வேதத்தில் கூட கள்ளன் என்று சொல்லப்பட்டுள்ளதாக விவரிக்கின்றனர். எது எப்படியோ! இரண்டு பேரும் இரண்டு பக்ககத்தில் சிலுவையில் அறையப்பட்ட–னர் (மாற்15:27) என்று தான் வேதம் சொல்கிறது. வேதம் சொல்வதுதான் நமக்கு முக்கியம்.

ஆறு: இயேசு:—

மத்27:35 இயேசுவை சிலுவையில் அறைந்தனர். இயேசுவின் சிலுவை கீழ் பகுதியைத் தவிர மற்ற மூன்று பகுதியும் மூன்று திசைகளை நோக்கி இருந்தது. அதே போல மாலை மூன்று மணி வரைதான் இயேசு சிலுவையில் தொங்கி கொண்டிருந்–தார். கன்னிமரியாள், கிலெயொப்பா மரியாள், மகதலேனா மரியாள் ஆகிய மூன்று மரியாள்கள் சிலுவைக்கு அருகில் நின்–றிருந்தனர். சேவகன், நூற்றுக்கு அதிபதி, அன்பின் யோவான் என்னும் மூன்று ஆண்கள் சிலுவை அருகே இருந்தார்கள். இயேசுவுக்கு காடி மூன்று முறைகொடுக்கப்பட்டது. இயேசு சிலு–வையில் சொன்ன மிக மிக முக்கியமானது வார்த்தைகள் மூன்று அடங்கியது: பிதாவே, இவர்களை மன்னியும். இயற்கை–யில் மூன்று சம்பவம் நடந்தது. பூமி அதிர்ந்தது. கன்மலைக–ளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது.

இவைகள் அனைத்தும் மூன்று மூன்றாக நிகழ என்ன காரணம் தெரியுமா? உங்களுடைய கடந்தகாலம், நிகழ்காலம். வருங்காலம் என்னும் முக்கால பாவங்களையும் மன்னிக்கத்தான்.

இயேசு சிலுவையில் அறையப்பட்டபடியினால் மிக முக்கியமான மூன்று மாற்றங்கள் நம்முடைய சரீரத்தில் நடைபெறுகின்றது (IIகொரி13:4).

1) நம்முடைய பெலவீனங்கள் மறைகிறது 2) நமக்கும் கிறிஸ்து –வின் வல்லமை விளங்குகிறது 3) நாம் ஆவியில் பிழைத்தும் இருக்கின்றோம். இப்படிப்பட்ட வித்தியாசமான கிருபையுள்ள மாற் –றங்களை சிலுவையின் மூலம் நமக்கு தந்த தேவனை நாம் துதிக்க வேண்டும்.

ஏழு: பவுல்:–

கலா 2:20 கிறிஸ்துவுடனே கூட பவுல் சிலுவையில் அறையப் –பட்டார். அதனால் அவருக்கு உண்டான விளைவு என்னத் தெரியுமா? மாம்சம், ஆசை, இச்சை மூன்றையும் முற்றிலுமாக ஜெயித்தார் (கலா5:24,25). அதனால் ஆவியினால் பிழைத்து, ஆவியனால் நடக்கிற மகா உன்னதமான நிலைமைக்கு உயர்த்தப் –பட்டார். உயிரோடு இருக்கும் போதே தன்னை இயேசுவோடு கூட சிலுவையில் அறைந்துக் கொண்டேன் என்று பவுல் சொல்கின்ற –வார்த்தையைப் பாருங்கள். நான் அநுதினமும் சாகிறேன். அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் சொல்லு –கிறேன் (Iகொரி15:31). இதை போல தைரியமாக, பகிரங்கமாக உங்களால் சொல்ல முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

ரோம 6:6 பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டான்

கலா 5:24 "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக் –கிறார்கள்."

எட்டு: பழைய மனுஷன்:–

ரோம 6:6 நம்முடைய பழைய மனுஷனும் சிலுவையில் அறை –யப்பட்டான். ஏன்? இரண்டு காரணங்களுக்காக பழைய மனுஷ –ன் சிலுவையிலறையப்பட்டான்.

ஒன்று: நாம் பாவத்தில் ஊழியம் செய்யாத படிக்கு (ரோம 6:6). பிலிப்புவினால் இரட்சிப்புக்குள் நடத்தப்பட்டு, பிலிப்பு செய்த ஊழி –யங்களை கவனித்துக் கொண்டிருந்த சீமோன் (அப் 8:13,9). பின் நாட்களில் அவன் பணத்தினால் பேதுருவையும், தேவ –னுடைய வல்லமையையும் ஏமாற்றப் பாத்தான் (அப் 8:20–23). இப்படிப்பட்ட பாவத்தோடு நாம் ஊழியம் செய்யாதபடிக்கு சிலுவை –யில் அறையப்பட வேண்டும்.

இரண்டு: பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக (ரோம 6:6). பாவசரீரம் என்றால், மாம்சீகத்தின் பாவங்களாகும் (கொலோ 2:11). சிம்சோன் தன்னுடைய பாவசரீர இச்சைகளை விடாதபடியினால் அவனுடைய கண்கள் பிடுங்கப்பட்டது. விலங்கி –டப்பட்டான். மாவு அறைக்கும் அடிமையாக மாறினான் (நியா 16:21). சிம்சோனைப் போல நாமும் ஆகிவிடாதபடிக்கு நம்முடைய பாவ சரீரங்களை சிலுவையில் அறைய ஒப்புக் –கொடுத்தால், கிறிஸ்து இயேசுவோடு கூட நித்தியகாலமாக நிலைத்திருப்பாம்.

ஒன்பது: கிறிஸ்துவினுடையவர்கள்:—

கலா 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் என்றால் மாம்சம், ஆசை இச்சை மூன்றையும் சிலுவையில் அறைந்தவர்கள்தான் கிறிஸ்துவினுடையவர்கள்.

யோசேப்பு தன் சரீரத்தை அறைந்தது போல் வாழ்ந்தான். அதனால் அவனால், மாம்சீக பாவத்தை செய்ய முடியவில்லை (ஆதி 39:10). அதனால் அவன் தேசம் முழுவதற்கும் உயர்த்தப்–பட்டான் (ஆதி 41:41,42).

பார்வோனும் அவன் சேனையும், தங்கள் ஆசையை அடக்கத் தெரியாமல், மோசேயையும், இஸரவேல் ஜனங்களையும் கொல்–லும் ஆசையோடு பின் தொடர்ந்து விரட்டினான் (யாத் 15:9,10). அவர்களின் ஆசையே அவர்களை சமுத்திரத்தில் தள்ளி கொண்–றுப்போட்டது. ஆதலால் நாம் ஆசையை வெறுப்போம். கிறிஸ்து–வை நேசிப்போம்.

இஸ்ரவேல் ஜனங்கள் இச்சையுள்ளவர்களாகி, பூண்டுக்காகவும் கீரைக்காகவும் முறுமுறுத்தனர் (எண் 11:4,5). ஆதலால், அவர்க–ளின் இச்சையே, அவர்களை குறைந்து போகப்பண்ணினது. ஆதலால், நாம் நம்முடைய மாம்சம், ஆசை, இச்சைகளை சிலு–வையில் அறைவோம். நாமும் கிறிஸ்துவினுடையவர்கள் என்ற உயிருள்ள சாட்சியை பெறுவோம்.

XXXVI. இயேசுவின் முள்முடி :-

"இயேசு, முள்முடியும் சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார்" (யோவா19:5)

இயேசுவின் தலை என்று சொன்னாலே, அவருக்கு முள்ளு–களால் சூட்டப்பட்ட முள்முடி என்கிற முட்கிரீடம்தான் நினைவுக்கு வரும். முள்ளுகள் என்ற வார்த்தைக்கு கவலைகள், ஐசுவரி–யம், சிற்றின்பம், நெருக்கம் என்ற நான்கு அர்த்தங்கள் உண்டு (லூக் 8:14). ஆனால், ஆண்டவர் இயேசுவிடம் கவலை, ஐசுவ–ரியம், சிற்றின்பம் என்ற மூன்றுமே இல்லாவிட்டாலும் அவர் முட்களைப் போல நெருக்கப்பட்டார் என்பதில் சந்தேகமே இல்லை.

முடி என்ற வார்த்தைக்கு கிரீடம் என்ற சொல்லும் உண்டு. இயேசுவின் தலையில் சூட்டப்பட்ட முள்ளுகளின் அளவு ஏறத்–தால இரண்டு முதல் மூன்று இஞ்சு உள்ளதாக இருந்தது. அந்த முள்ளு செடியின் பெயர் "லோகஸ்ட்ரீ" என்பதாகும். லோகஸ்ட்ரீ என்றால் வெட்டுக்கிளி மரம் என்று அர்த்தமாகும். இந்த மரத்தின் முட்கள் ஒவ்வொன்றும் மிகவும் கூர்மையானதா–கவும் உறுதியானதாகவும் இருந்தது.

இப்படிப்பட்ட மிகக் கொடூரமும், விஷமும் நிறைந்த முட்க–ளைக் கொண்டு செய்யப்பட்ட முள் முடியை இயேசுவின் தலை–யில் வைத்து அழுத்தினதுமல்லாமல் கோலைக் கொண்டு அடிக்கவும் செய்தார்கள் (மத்27:30).

அதனால் 17 முட்கள் இயேசுவின் தலையை கிழித்துக் கொண்டு உள்ளே இறங்கினதாக சரித்திரம் சொல்கின்றது. முள்முடி சூட்டின –தால் முகமும் தலையும் அடைந்த மாற்றத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி தெளிவாக சொல்லியுள்ளார்.

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ ஜனமே, காகத்தை போல கருமையான முடியைக் கொண்ட இயேசுவின் தலையும், தலை முடியும் சிகப்பு என்னும் நிறத்தினால் ஆன இரத்தத்தினால் கறை படிந்தது. யூதர்களின் இராஜவாய் முடி சூட்டப்பட வேண்டி –யவர், முழு உலகத்தின் கிருபாதர பலியாகும்படி முட்கிரீடத்தை சூட்டிக் கொண்டார்.

சங் 131:1 சொல்வது போல தலையில் உண்டாகும் இருமாப்பு, மேட்டிமை, மிஞ்சின கருமங்கள் போன்ற போராட்டங்களில் இருந்து விடுவிப்பதற்க்காகவே இயேசுவின் தலையை முள்முடி தொட்டது. நீங்கள் எது போன்ற பிரச்சனையில் அகப்பட்டுக் கொண்டு அதிலி –ருந்து விடுதலை ஆக முடியாத சூழ்நிலையில் தவிக்கலாம்.

"மனுபுத்திரனே, நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்; அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்ச வேண்டாம்; நெரிஞ்சில்களுக்குள்ளும் முள்ளுகளுக்குள்ளும் நீ தங்கியிருந்தாலும், நீ தேள்களுக்குள் வாசம் பண்ணினாலும், நீ அவர்கள் வார்த்தைகளுக்குப் பயப்படா –மலும் அவர்கள் முகத்துக்குக் கலங்காமலுமிரு;" (எசே2:6) என்ற வாக்குத்தத்த வசனத்தின்படி எதைக்குறித்தும் கவலைப் –படாதீர்கள். உங்கள் தலையில் உண்டாகும் கவலைகள் –அனைத்தையும் இயேசு தமது தலையில் சுமந்து தீர்த்தார்.

இயேசுவின் தலையைத் தொட்டவைகளில் முள்ளுக்கு மிகப் –பெரிய பங்கு உண்டு. முள் என்பது கூறிய முனை உடையது. முள்ளின் முன்பகுதி மெலிந்தது, நீளமானது. ஆனால், உறுதி –யானது. மனிதனுக்கு காலத்தைக் காட்டும் கடிகாரத்தில் இருப் –பது இரண்டு கூர்மையான முள்ளுகள்தான். சில வகை பூ, மற்றும் செடிகளில் இவை தற்காப்புக்காகவும் படைக்கப்பட்டுள் –ளது. வேதாகமத்தில் முள் என்ற வார்த்தை முதன்முதலில் ஆதி 3:18–ல் முள்ளும் குறுக்கும் என்று ஆரம்பித்து, கடைசியாக அப் 26:14–ல் முள்ளில் உதைக்கிறது என்ற வார்த்தையோடு முடி –கிறது. இவ்விதமாய் ஏறத்தால 18 ஆகமங்கள் முள்ளைக் குறித்துப் பேசுகின்றது. முள்ளுகளோடு ஒப்பிடப்பட்டுள் லீலி புஷ்பத்தைக் குறித்து முழு வேதத்திலும் ஏறத்தால 12 முறை சொல்லப்பட்டுள்ளது.

b. மாற் 15:17 முள்முடியைச் சூட்டினார்கள்:—

வி.ம்: சங் 103:4 முடியைச் சூட்டினார்கள் (எ) கிருபையும், இரக்கமும் நிறைந்தது என்று பொருள்

தீ.த: உன்ன 3:11 இயேசுவுக்கு முள்முடி சூட்டப்பட்டதும் முடியோ –டிருக்கிற அவரைப் பாருங்கள் என்ற தீர்க்கதரிசன வார்த்தை இதன் மூலம் நிறைவேறினது

மறுரூபம்: உன்ன 2:2,3 முள்முடியால் இயேசு சூட்டப்பட்டதால் அவர் லீலி புஷ்பத்தைப் போல மறுரூபம் அடைந்தார் என்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை

b. யோவா 19:2,3 முள்மடியை தலையில் வைத்து அடித்தார்கள்:—

இயேசுவின் தலையில் முள்முடியை வைத்து அடித்ததினால்

a. எண் 33:55 முள்ளு கண்களுக்குள் குத்தியிருக்கும்

b. எசே 28:24 மூளையையும், கண்ணின் இமைகளையும் தைத்திருக்கும்

c. எசே 2:6 தேள் கொட்டினதைப் போல வலித்திருக்கும்

d. **உ.ம்:** நீதி 26:9 முள்முடியைப் பின்னினவர்களும், சூட்டிவிட்ட –வர்களும் வெறியர்கள்

e. **பலன்:** வெளி 19:12 முள்முடியை பொறுமையோடு ஏற்றுக் கொண்டதால், அவருடைய தலையில் பிதாவாகிய தேவன் அநேக கிரீடங்களை சூட்டி மகிழ்ந்தார்

1. இயேசுவின் தலையில் 17 முட்கள் குத்தியிருந்தன.
2. அவருடைய தலையைக் கிழித்துக் கொண்டு ஏறத்தால 19 முட்கள் உள்ளே சென்றன.
3. ஒருவித முட்கள் நிறைந்த கொடியை வளையமாகப் பின்னி, கிரீடம் போல செய்து, இயேசுவின் தலையில் வைத்து, ஒரு கோலால் அடித்து, அதை தலையிலே இறுக்கமாக்கி வைத்தார்கள் (யோவா 19:1).

இஸ்ரவேல் மற்றும் பாலஸ்தீனப் பகுதிளில் காணப்படும் அந்த முட்கள் ஏறத்தால ஒன்று அல்லது ஒன்றரை அங்குல நீளமாக இருக்கும்.

c. முள்முடியைக் குறித்து உவமையாய் சொல்லப்பட்ட சில வசனங்கள்:—

1. மத் 27:29 : முள்ளுகளால் ஆன முடி
2. யோவா 19:2 : பின்னின முள் முடி
3. மாற் 15:17 : சூட்டின முள் முடி
4. IIகொரி 12:7 : மாம்சம் என்னும் முள்
5. உன்ன 2:2 : லீலி புஷ்பமாய் மாறும் முள்

d. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில முள்ளுகள்:—

a. மத் 13:7 வளர்ந்து நெருக்கும் முள்
b. மத் 13:22 வசனத்தை நெருக்கும் முள்
c. மத் 27:29 பின்னப்பட்ட முள்
d. மாற் 4:7 வளர்ந்த முள்
e. மாற் 4:18,19 பலனனற்ற மனிதர்களாகிய முள்
f. லூக் 8:14 விதைக்கப்பட்ட முள்
g. யோவா 19:2 சிரசில் வைக்கப்பட்ட முள்
h. சங் 118:12 நெருப்புப் போன்ற முள்
i. அப் 9:5 கழனமான முள்
j. அப் 26:14 எபிரேயு பாஷையில் சொல்லப்பட்ட முள்

e. முள்ளோடு இணைத்து உவமையாகச் சொல்லப்பட்டுள்ள சில:—

1. சங் 118:12 முள்ளு – நெருப்பு
2. அப் 9:5 முள்ளு – கழனம்
3. அப் 26:14 முள்ளு – உதைத்தல்
4. எண் 33:55 முள்ளு – கண்கள்
5. நியா 8:7 முள்ளு – வனாந்தரம்
6. நியா 8:16 முள்ளு – நெரிஞ்சில்கள்
7. யோபு 31:40 முள்ளு – கோதுமை
8. நீதி 24:31 முள்ளு – காடு
9. நீதி 26:9 முள்ளு – பழமொழி
10. பிர 7:6 முள்ளு – படபடப்பு
11. உன்ன 2:2 முள்ளு – லீலிபுஷ்பம்
12. எரே 4:3 முள்ளு – விதை
13. எசே 28:24 முள்ளு – தைத்தல்
14. ஓசி 2:6 முள்ளு –அடைப்பு
15. மத் 27:29 முள்ளு – முடி (கிரீடம்)

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXVII. சிலுவையில் ஆணிகள் :-

"அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்" (அப் 2:23).

இயேசுவை தொட்ட பொருட்களில், ஆணிஎன்றஇரும்பு கைகளையும், கால்களையும் உருவ குத்தி குடைந்து சென்றது என்று தான் சொல்ல வேண்டும். அப்படியானால், அந்த ஆணிகளை இயேசுவின் கைகளில் ஓங்கி அடித்து அறைந்த மனிதர்கள் எவ்வளவு கொடியவர்களாக இருந்திருப்பார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

a. முக்கிய குறிப்புகள்:

இயேசுவை சிலுவையில் அறைந்த ஆணிகளைக் குறித்த மிக முக்கியமான சில குறிப்புகளை இப்போது காண்போம்.

ஆணி என்றால் உறுதி (அ)கடாவுதல் என்று பொருள் (ஏசா 22:23). கடாவுதல் என்றால் உயர்வை குறிக்கும். ரோதை என்ற சிறு பெண் உறுதியாய் இருந்தாள் அவளுடைய பெயர் வேதத்தில் இடம் பிடித்தது (அப்12:13,15). நாமும் கூட ஆணியை போல எப்போதும், எல்லாவற்றிலும் உறுதியாக இருக்க வேண்டும்.

இயேசுவை சிலுவையில் அடித்த ஆணி முழுக்க முழுக்க இரும்பினால் செய்யப்பட்டதாக இருந்தது. இந்நாட்களில் நாம் கடைகளில் வாங்கும் ஆணியைப்போல் வழவழப்பாகவும் அழகாகவும் அந்நாட்களில் இருந்திருக்காது. துரு பிடித்ததும், சொறசொறப்பாகவும், கரடு முரடாகவும் தான் இருந்திருக்கும்.

நாம் வாங்குகிற ஆணியின் மேல் கொண்டை பகுதி வட்டமாக இருக்கிறதை பார்த்திருப்பீர்கள். ஆனால், இயேசுவை அடித்த ஆணியின் மேல் கொண்டை பகுதி நான்கு பக்கங்களைக் கொண்ட சதுரமாக இருந்துள்ளதாக ஆதாரங்கள் உள்ளது ஒவ்வொரு ஆணியும் ஏழு முதல் எட்டு இஞ்ச் அளவுக்கு நீளமானதாக இருந்துள்ளது. அந்நாட்களில் ஆணிகளில் இரண்டு வித ஆணிகள் காணப்பட்டது.

ஒன்று: வழக்கமான ஆணிகளைப் போல கூர்மையாகவும் நீளமானதாகவும் இருக்கும். **இரண்டு:** கொக்கி போல வளைந்த ஆணிகள். அதாவது, இது மனிதர்களை அரைவதற்காகவே இருந்தது. சிலுவையில் மனிதர்களை அறைந்ததும் அந்த ஆணியின் பின் பக்கத்தை வளைத்து விடுவார்கள். அந்த அளவுக்கு அது வளைந்தும், கொக்கி போலவும் மாறக் கூடியது.

இயேசுவை பிடித்து சிலுவையில் அறையும் போது அவருடைய உள்ளங்கைகளில் ஆணி அடித்திருக்க முடியாது என்று சில ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர். ஏனென்றால், மருத்துவ ஆராய்ச்சியின்படி உள்ளங்கைகளில் ஆணி அடித்து அவரை தொங்க விட்டால், பாரம் தாங்காமல் போயிருக்கும் என்கின்றனர். ஆதலால், உள்ளங்கைகளுக்கு பதிலாக கீழ் பகுதியில் அதாவது மணிக்கட்டு பகுதியில் ஆணி அடித்திருப்பார்கள். அதுதான் உறுதியாய் இருந்திருக்கும் என்கின்றனர்.

ஆக, எது எப்படியோ, இயேசுவை சிலுவையில் ஆணிகளால் அறைந்தது உண்மையிலும் உண்மை. அதற்கு ஆதாரம் வேதத்தி-லும் காணப்படுகின்றது (அப் 2:23; யோவா20:25). வேதமும், வேதத்தில் உள்ள ஆதாரமும் தான் நமக்கு முக்கியம். அதுதான் சத்தியம். அந்த சத்தியம்தான் இந்த உலகத்தின் ஒளி. ஆகவே, நாமும் ஆணியைப் போல உறுதியாகவும், வெளிச்சமாகவும் மாறுவோம்.

புதிய ஏற்பாட்டில் மூன்று முறைமட்டுமே ஆணியை குறித்து சொல்லப்பட்டுள்ளது. இது, இயேசுவை சிலுவையில் சுமந்த மூன்றாணிகளுக்கு ஒப்பானது. அவைகளைக் குறித்து பார்ப்போம்.

I. அக்கிரமத்தின் ஆணி:—

அப் 2:23 அக்கிரமத்தின் ஆணி என்றால் கொலை என்று அர்த்தமாகும். இந்த வசனத்திலிருந்து இரண்டு காரியங்களை நாம் தெரிந்து கொள்ள முடியும். முதலாவது: இயேசுவை ஆணிக-ளால் அறைந்தது, ஆசாரியர்களோ, மூப்பர்களோ அல்ல, அக்-கிரமக்காரர்கள்தான் ஆணியடித்துள்ளனர். இரண்டாவதாக: கொலை கொய்யும் நோக்கத்தோடு ஆணியடித்துள்ளனர். கொலையில் பலவிதமான கொலைகள் உண்டு. ஆனால், இந்த -விதமாக ஆணிகளால் அறைந்து கொல்வது மிக மிக கொடூர-மான, ஈவு இரக்கமற்ற மிருகத்தனமான கொலை.

அன்பான தேவ ஜனமே, அக்கிரமக்காரர்களால் இயேசு கொலை செய்யப்பட்டதின் நோக்கமே நம்முடைய அக்கிரமங்களை அவர் சுமந்து தீர்க்க வேண்டும் என்பதற்க்காகத்தான்.

அக்கிரமம் என்றால் என்ன? என் நாவிலே அக்கிரமம் உண்டோ? என் வாய் ஆகாதவைகளைப் பகுத்தறியாதோ (யோபு 6:30) நாவின் சொற்களும், வாயின் வார்த்தைகளும் தான் அக்கிரமத்தை கொண்டு வருகின்றது. ஆனபடியினால், சிலுவையில் ஆணிகளால் தன்னை கடாவ ஒப்புக் கொடுத்த இயேசுவை நோக்கிப் பார்த்து நாவின் சொற்களை சுருக்கி, வாயின் வார்த்தைகளை அடக்குவோம். அப்போது நம்முடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்படும். இயேசுவின் இரத்தத்தால் மீட்-கப்படுவோம்.

II. காயத்தின் ஆணி:—

யோவா 20:25 காயத்தின் ஆணி என்றால் விசுவாசம் என்று அர்த்தமாகும்.

இயேசுவின் கைகளிலும், கால்களிலும் அடிக்கப்பட்ட ஆணி-யினால் உண்டான காயத்தின் அளவு எவ்வளவு என்பதையும் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. "பின்பு அவர் தோமாவை நோக்கி நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்" (யோவா 20:27). அதாவது, ஆணி-யினால் உண்டான காயம் ஒரு விரலை விட்டு பார்க்குமளவுக்-கும், ஈட்டியினால் உண்டான காயம் கையை விடும் அளவுக்-கும் மிகப் பெரிதாக இருந்துள்ளது.

நம்முடைய சரீரத்தில் சிறிய காயம் உண்டானாலே மிகப் பெரிய வேதனையை அனுபவிக்கிறோம். இயேசுவைப் பாருங்கள் மிகப் பெரிய காயங்களை ஏற்றுக் கொண்டு உங்களுக்காக, எனக்காக பொறுமையாய் சகித்துள்ளார். காயம் என்றால் என்ன என்று யோபுவின் புஸ்தகம் தரும் விளக்கத்தைப் பாருங்கள். நியாயம் என்னிடத்தில் இருந்தும் நான் பொய்யனென்று எண்ணப்படுகிறேன். மீறுதல் இல்லாதிருந்தும் எனக்கு உண்டான காயம் ஆறாததாயி-ருக்கிறது (யோபு 34:6). ஆம், நியாயத்தை அநியாயம் என்றும், மீறுதல் இல்லாதபோது மீறினாய் என்று குற்றம் சாட்டப்படுவதும்-தான் காயம் ஆகும்.

"நாம் செய்த தவறுகளுக்கும், பாவங்களுக்கும் சூட்டுக்கு சூடு, காயத்துக்கு காயம், தழும்புக்கு தழும்பு, பழி கொடுக்க வேண்டும்" (யாத் 21:25) என்ற சத்தியத்தின்படி நாம் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அந்த தண்டனைகள் அனைத்தையும் இயேசு சிலுவையில் மூன்று ஆணிகளில் சுமந்து தீர்த்து விட்டார். ஆதலால், இனிமேல் பாவம் செய்யாமல் குற்றங்களுக்கு இடம் கொடாமல் கவனமாக இருந்து, இயேசுவுக்காகவும், சத்திய வச-னத்துக்காகவும் வாழ்வோம். அப்போது, சத்தியவானாகிய இயேசுவும் நம்மைக்குறித்து சாட்சி கொடுப்பார்.

III. சிலுவை என்ற ஆணி:-

"கொலோ 2:14 சிலுவை என்ற ஆணி என்றால் வெற்றி" என்று அர்த்தமாகும். "சிலுவையில் வெற்றி சிறந்தார் என்று வேதம் சொல்கிறது" (கொலோ 2:15). சிலுவை என்ற ஆணியை இயேசு சுமந்ததினால் நமக்கு கிடைத்த பலன்கள் என்ன என்று பார்ப்போம்.

b. எதிரான கட்டளைகள் (கொலோ 2:14):-

எஸ்தர் ராஜாத்தியின் காலத்தில் சிறியோர், பெரியோர், குழந்-தைகள் ஸ்திரீகள் ஆகியோரை அழித்து நிர்மூலமாக்க ஆமான் என்ற கொடியவனால் ஆலோசனை கொடுக்கப்பட்டு கட்டளை ஏற்படுத்தப்பட்டது. ஆனால், கர்த்தர் கட்டளைகளை செல்லாமல் போகப் பண்ணினார் (எஸ் 3:13 ; 8:5). அதேபோல, உங்கள் வேலையிலும், ஊழியத்திலும் உங்களுக்கு எதிராக யார் எப்படிப்-பட்ட கட்டளைகளை பிறப்பித்தாலும் அதை வாய்க்காமல் போகப் பண்ணி, உங்களையோ வெற்றி சிறக்கப் பண்ணுவார்.

c. விரோதங்கள் யாவும் மாறும் (கொலோ 2:14):-

சவுல் என்கிற இராஜா தாவீதை விரோதியைப் பார்ப்பது போலவே பார்த்து, நீண்ட காலங்களாக தாவீதை விரட்டிக் கொண்டே இருந்தான். ஆனால் முடிவில் கர்த்தர் தாவீதுக்கு மாபெரும் ஜெயத்தைத் தந்தார் (IIசாமு 3:1). விரோதியாய் நினைத்தவன் மாண்டான். விரோதியை கூட விரோதியாய் நினைக்காதவன் வாழ்ந்தான்.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

இப்பொழுதோ என் தேவனாகிய கர்த்தர் எங்கும் எனக்கு இளைப்பாறுதலைத் தந்தார்; விரோதியும் இல்லை, இடையூறும் இல்லை (1இரா 5:4) என்ற வசனத்தை சாட்சியாக சொல்லும் -படி உங்களுக்கு கிருபை செய்து சிலுவையின் ஆணிகளினால் மாபெரும் வெற்றியை தந்தருளுவார். சிலுவையை பாடுகளின் சின்னமாக பார்க்காமல் வெற்றியின் அடையாளமாக பாருங்கள், வெற்றியின் மேல் வெற்றியைக் காண்பீர்கள்.

1. சரீரத்தில் அடித்த ஆணியின் நீளம் 8 அங்குலம்
   அகலம் 3/4 அங்குலம்

2. கைகளின் நடுப்பகுதியில் தடித்த ஆணிகளை அறைவதால் ஒவ்வொரு அடியினாலும் மகா வேதனை. ஆணிகள் அறைந்த பின்பு சிலுவையை புரட்டிப் போட்டு, ஊடுருவிய ஆணிகளை வளைத்து விடுவார்கள். அந்நேரத்தில் இயேசுவின் முகமும், மார்பும் தரையில் பதிந்திருக்க, இயேசுவின் முதுகின் மீது பார -மான மரச் சிலுவை அழுத்தி கொண்டிருந்திருக்கும்.

3. ஆணி அறையப்பட்டப் பின்னர் நெடுமரத்தின் அடிப்பகுதியை குழிக்குள் இறக்கின பொழுது, தரைக்குள் மரத்தின் அடிப்பகுதி தட்டும்போது மிகுந்த அதிர்வு ஏற்பட்டது. மூன்று ஆணிகளுள் அவரது சரீரம் இங்கும் அங்கும் அசைந்தது. இதைப் பார்த்த சிலர் தங்கள் முகத்தை மூடிக் கொண்டனர்.

(ஏசா 53:2,3,5,7,9,12) அந்த அளவுக்கு அவரது முகம் கொடூர மாக இருந்தது. அந்த தோற்றத்தை யாராலும், சித்திரத்தில் தீட்ட முடியாது.

i. ஆணிகள் இரண்டு விதத்தில் இறங்கினது.

1. யோவா 20:25 ஆணிகள் இயேசுவின் கைகளில் இறங்கினது.
2. அப் 2:23 ஆணிகள் சிலுவையில் இறங்கினது.

ii. ஆணிகள் (எல்) என்ன அர்த்தம்?

ஏசா 22:23 ஆணி (எல்) உறுதி.

உ.ம்: அப் 12:15 ரோதை என்ற பெண் உறுதியாக இருந்தால்

iii. இயேசுவை ஆணிகளால் அறைந்தது யார் தெரியுமா?

அப் 2:23 "அக்கிரமக்காரர்கள் அறைந்தனர்."

iv. ஆணிகளால் உண்டான காயம் எவ்வளவு பெரியது தெரியுமா?

யோவா 20:25 ஒரு விரலை உள்ளே விடும் அளவுக்கு பெரிய காயம்.

v. கைகளில் அடித்த ஆணி எதைக் குறிக்கிறது?

யோவா 20:25 விசுவாசத்தைக் குறிக்கிறது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

vi. சிலுவை (மரத்தில்)யில் அறைந்த ஆணி எதைக் குறிக்கிறது?

கொலோ 2:14 கொலை செய்யப்படுவதைக் குறிக்கிறது.

vii. இயேசுவை ஆணிகளால் அடித்ததினால் நமக்கு என்ன பலன்?

கொலோ 2:14
1. எதிரானவைகள் எல்லாம் மறையும்.
2. கட்டளைகள் அனைத்தும் உடையும்.
3. விரோதங்கள் யாவும் மாறும்.
4. பொய்யான கையெழுத்து செல்லாமல் போகும்.

d. உவமையாய் சொல்லப்பட்டுள்ள சில ஆணிகள்:-

1. நியா 4:21 — தூக்கத்தின் ஆணி
2. நியா 4:22 — நெற்றியில் அடித்த ஆணி
3. நியா 5:26 — தலையை உடைத்த ஆணி
4. நியா 16:14 — பிடுங்கப்பட்ட ஆணி
5. பிர 12:11 — ஞானி என்ற ஆணி
6. ஏசா 22:23 — உறுதியான ஆணி
7. யோவா 20:25 — அவிசுவாசத்தின் ஆணி
8. அப் 2:23 — அக்கிரமத்தின் ஆணி

XXXVIII. சிலுவையும் பலகையும் :-

"இவன் யூதருடை ராஜா என்று, கிரேக்கு, லத்தீன், எபிரெயு எழுத்துக்களில் எழுதி, அவருக்கு மேலாக வைக்கப்பட்டது" (லூக் 23:38).

இயேசுவின் மகா வேதனையின் நேரத்தின் போது "அவர் அடைந்த ஆக்கினையின் முகாந்தரத்தைக் காண்பிக்கும் பொருட்டு, யூதருடைய ராஜா என்று எழுதி சிலுவையின் மேல் கட்டினார்கள்" (மாற்15:26). இந்த வார்த்தைகளை கண்டிப்பாக பலகையில்தான் எழுதி மாட்டியிருப்பார்கள். காரணம், ஆசாரிய -னாகிய சகரியாவின் நாட்களில் அதாவது இயேசு கிறிஸ்து -வின் பிறப்பின் நாட்களில் எழுதுவதற்காக பலகையைத்தான் பயன்படுத்தியுள்ளனர் (லூக் 1:63). இதுதான் இயேசுவின் மர -ணத்தின் நேரத்திலும் நடந்துள்ளது.

இயேசு யூதர்களின் இராஜா என்ற வார்த்தையை கிரேக்கு, இலத்தீன், எபிரெயு ஆகிய மூன்று மொழியில் எழுதியுள்ளனர். அதே சமயம் இந்த வார்த்தை நான்கு சுவிஷேங்களிலும் நான்கு விதமாக எழுதப்பட்டுள்ளது. இவைகளை பிலாத்து தன் கைபட எழுதியுள்ளான் (யோவா19:19) என்று வேதமே சாட்சி கொடுக்கின்றது.

பலகையை சிலுவையின் மீது கயிற்றினால் கட்டினார்களா அல்லது ஆணியால் அடித்தார்களா? என்கின்ற சந்தேகம் சிலருக்கு வருவதுண்டு. "சிலுவையின் மீது கட்டினார்கள்" (மாற்15:26) என்று வேதம் அற்புதமான பதிலை தருகின்றது.

கட்டினார்களா, அடித்தார்களா என்பதை விட, இயேசுவை ராஜா என்று சொல்லி கனத்துக்குரிய வார்த்தையை அதில் எழுதினார் –கள் பாருங்கள் அதுதான் முக்கியம்.

இந்த பலகை எதைக் குறிக்கிறதோ என்று சொல்லி சிலர் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். இந்த பலகை அவருடைய ஆக் –கினையை அதாவது தண்டனையை குறிக்கின்றது. இந்த பலகையை இயேசுவின் சிலுவையின் மீது கட்ட முயற்சிக்கும் போது நிச்சயமாக இந்த பலகை இயேசுவின் சரீரத்தின் எந்த பகுதியையாவது நிச்சயம் தொட்டிருக்கும்.

இந்த பலகை இயேசுவின் சரீரத்தை ஏதோ ஒரு வகையில் தொட்டு விட்டபடியினால் தான் அதற்கும் கனம் வந்தது. அதா –வது, இயேசு சிலுவையில் கீழே தொங்கி கொண்டிருக்க இந்த பலகையோ இயேசுவின் தலைக்கு மேலே ஆடிக் கொண்டிருந் –தது. இதுவே பலகைக்குக் கிடைத்த ஒரு பெரிய கனம்தான்.

பெரும்பாலும் மரணத்தண்டனை குற்றவாளிகளின் கழுத்தில் ஒரு பலகையைத் தொங்க விடுவார்கள். அதில், இவர் என்ன குற்றத்திற்க்காக மரண தண்டனை அடைகிறார் என்ற காரணத்தை எழுதியிருப்பார்கள். ஆனால், நமது இரட்சககர் இயேசுவுக்கோ சிலுவையில் அறைந்த பின்தான் தண்டனையின் காரணம் பிலாத்துவினால் எழுதி தரப்பட்டது. அதனால் இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு (மத் 27:37) என்று, இயேசு –வின் தலைக்கு மேல் இருந்த பலகையில் எழுதி வைத்தனர்.

நாம் ஆக்கினை என்கிற தண்டனையை அடைய கூடாது என்ப –தற்க்காக சிலுவையில் தொங்கின இயேசுவானவர் உங்கள் ஆக்கினை மற்றும் தண்டனையிலிருந்து உங்களை காப்பார். "ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறவர்களினின்று எளியவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கும்படி, அவர் அவன் வலதுபாரிசத்தில் நிற்பார்" (சங்109:31) என்ற வேத வாக்கியத்தின்படி, உங்கள் வலது பாரிசத்தில் நிற்பார். எல்லா துன்பத்திற்கும் விலக்கி தப்பு –விப்பார். நீங்கள் சாட்சி சொல்லுவீர்கள்.

பலகையில் ஆங்கிலத்தில் சுறுக்கமாக எழுதப்பட்டுள்ள INRI எழுத்துக்களின் முழு வார்த்தையை கீழே காணலாம்:–

I - IESUS
N - NAZARINE
R - REXO
I - IDONEUS

இந்த வார்த்தைகளின் பொருள்:– "நசரேயனாகிய இயேசு யூதருக்கு ராஜா".

நான்கு சுவிசேஷத்திலும் நான்கு விதமாக எழுதப்பட்டுள்ள ஒரே கருத்துடைய வார்த்தைகள்:–

1. மத் 27:37 — இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு
2. மாற் 15:26 — யூதருடைய ராஜா
3. லூக் 23:38 — இவன் யூதருடைய ராஜா
4. யோவா 19:19 — நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா

XXXIX. இயசுவை அடித்த வார் :-

"அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்" (யோவா19:1).

தமிழில் இரண்டு எழுத்துக்களை மட்டும் உடைய சிறிய வார்த்தையை உடைய வார் இயேசுவின் சரீரத்தில் ஏற்படுத்திய பெரிய காயங்கள் ஏராளம், ஏராளம்.

வார் அல்லது சாட்டை என்றாலே கொலை என்று அர்த்தமாகும் (லூக்18:33). ஒரு குற்றவாளியை பிடித்தால் கொலை செய்யும் எண்ணத்துடன்தான் வாரினால் அடிப்பார்களாம்.

இயேசுவை அடித்த சாட்டை என்னும் வாரின் அடிப்பகுதியில் ஓர் மரத்தினாலான கைபிடி ஒன்று இணைத்திருக்கும். அதில் ஒன்பது வார் (சாட்டை)கள் இணைத்திருக்கும். ஒன்பது வாரும் சுத்தமான தோலினால் உருவாக்கப்பட்ட கடினமான வாராக இருக்கும்.

சில வார்களின் இடை இடையே கூர்மையாக்கப்பட்ட எழும்புத் துண்டுகள் இணைந்திருக்கும். மற்றசில வார்களில் இரும்பினால் செய்யப்பட்ட குண்டுகள் (உருளைகள்) தொங்கவிடப்பட்டிருக்கும். எவ்வளவு பயங்கரமான ஆயுதம் பாருங்கள்.

இப்படிப்பட்ட கொடூரமான வாரைக் கொண்டு இயேசுவை அடித்ததினால் அவருடைய உடல் முழுவதும் ஏறத்தாழ 5480 காயங்கள் ஏற்பட்டிருந்ததாகவும், முதுகில் மட்டும் ஏறத்தாழ 150 ஆழமான தழும்புகள் உண்டானதாகவும் சரித்திரம் சொல்கின்றது. இப்படிப்பட்ட கொடூரமான காயங்களையும், தழும்புகளையும் தன் முதுகின் மேல் ஏற்றுக்கொண்டு சிலுவையையும் சுமந்து சென்றார் என்பதை நினைக்கும்போதே மனம் வலிக்கிறது. அப்படியானால் எழும்புத் துண்டுகளும், இரும்புக் குண்டுகளும் இணைக்கப்பட்ட வாரினால் அடிக்கப்பட்ட இயேசு எவ்வளவு துடித்திருப்பார் என்பதை சிந்தித்து பாருங்கள்.

இந்த கடைசி காலத்தில் வாழும் நாம் இப்போது இருக்கும் இந்த நிலைமையை நினைத்து நினைத்து ஆண்டவரைத் துதிக்க வேண்டும். இயேசுவை அடித்த வாரையும், அதனால் உண்டான காயங்களையும் நினைத்து பார்க்கும் யாருமே பாவம் செய்ய மாட்டார்கள்.

இந்த செய்தியை வாசிக்கும் சகோதர சகோதரிகளே ஆண்டவர் இயேசுவுக்காகவும், அவரால் அருளப்பட்ட சத்தியத்திற்காகவும் பாடுகளை சந்திக்க நீங்கள் ஆயத்தமா என்று உங்களை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்

இனிவரும் காலங்கள் பாடுகளும் உபத்திரவங்களும் நிறைந்த காலம். இயேசுவைப் போல பாடு அனுபவிக்க தன்னையே தந்த -வர்கள் மட்டுமே கிறிஸ்துவுக்காக வாழ முடியும். பரலோகத்தை அடைய முடியும்.

"அவரோடே கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்" (IIதீமோ2:12) என்ற மகிமையான வசனத்தின்படியே பாடுகளை சகிக்க ஒப்புக் கொடுக்கின்ற உங்களை சீக்கிரமாக தேவ இராஜ்யத்தில் ஆளுகை செய்யும் அதிகாரத்தில் வைப்பாராக.

a. வாரும் — குறிப்புகளும்:—

1. இயேசுவின் முதுகில் ஏறத்தால 10 ஆழமான சாட்டையின் கீறல்கள் இருந்துள்ளன.

2. எலும்புத்துண்டுகளையும், இரும்புக் குண்டுகளையும் இரும் -பினாலான கொக்கிகளையும், இடைமிடையே பின்னப்பட்டிருந்த சவுக்கினால் இயேசுவை அடித்திருந்தனர். அந்த அடிகளினால் இயேசுவின் சரீரத்தின் சதைகளெல்லாம் பிய்ந்து, ஆங்காங்கே தொங்கியது. அந்த நிலைமையிலும் துரிதமாய் நடக்க வேண்டு -மென்று கட்டாயப்படுத்தி, அந்த சூழ்நிலையிலும், சவுக்குகளி -னாலும், தடிகளினாலும் தாக்கப்பட்டார்.

3. ரோமர்களுடைய சவுக்கின் நுனி ஒன்பது பிரிவுகளாக இருக்கும். ஒவ்வொரு எலும்புத் துண்டாக ஒன்பது எலும்புத் துண்டுகளும், அனைத்து எலும்புத் துண்டிலும் ஒரு இரும்புக் கொக்கியும்

4. சில இடங்களில் தோலும் மாமிசமும் பிய்க்கப்படும். அதனால் மிக அதிகமான வேதனை உண்டாவதுடன், அதிக அளவு இரத்த -மும் வெளியேறும்.

5. யூதருடைய தண்டனைக் கணக்குப்படி 40 அடிகளும், ரோமருடைய கணக்குப்படி 80 அடிகளும் அடிப்பார்கள். பிலாத்து உத்தரவின் காரணமாக ரோமக் கணக்குப்படி அந்த கொடூரமான சவுக்கினால் 80 அடிகள் அடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. யூதர்கள் சில சமயங்களில் 40 அடிகள் அடிக்கும் தண்ட -னையை உத்தரவாகப் பெற்று, 39 அடிகள் அடித்துவிட்டு, நிறுத்தி சற்று ஓய்வெடுப்பார்கள். திரும்ப அடிக்கும்போது மீண்டும் ஒன்று, இரண்டு, என்று எண்ணத் துவங்குவார்கள். போர்ச் -சேவகர் கூட்டம் முழுவதும் கூடி வந்து வாரினால் அடித்தபோது இயேசுவின் முதுகு உழுது போடப்படும் படைச்சால்களைப்போல் ஆனது (சங் 129:3).

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

மூன்று காரணங்களுக்காக வாரினால் அடித்தனர்.

1. மாற் 15:15 ஜனங்களைப் பிரியப்படுத்த
2. மத் 27:26 சிலுவையில் அறைவதற்காக
3. லூக் 18:33 கொலை செய்வதற்க்காக

இயேசுவை யார் யார் வாரினால் அடித்தனர்?

1. மத் 27:27 போர்ச்சேவகரின் கூட்டம் முழுதும்
2. யோவா 19:1 பிலாத்தவும் வாரினால் அடித்தான்
3. லூக் 22:63 மனிதர்களும் இயேசுவை வாரினால் அடித்தனர்

வாரினால் அடிப்பது எதைக் குறிக்கின்றது?

மாற் 10:33 மரண (தண்டனை) ஆக்கினையைக் குறிக்கின்றது

நமக்கு என்ன பலன்?

யோவா 3:17 அவருடைய ஆக்கினையினால் நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது

b. உவமையின் வார்கள் சில:—

1. மத் 10:17 : தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட வார்
2. மத் 23:34 : ஆலயத்தில் வைத்து அடிக்கும் வார்
3. மாற் 10:34 : பரியாசம் பண்ணி அடிக்கும் வார்
4. மாற் 15:15 : ஜனங்களின் பிரியத்துக்காக அடிக்கும் வார்
5. லூக் 18:33 : அடித்து கொலை செய்யும் வார்
6. யோவா 19:1 : பிலாத்து இயேசுவை அடித்த வார்
7. அப் 22:25 : அழுந்த கட்டும் வார்

XXXX. பாடுகளின் அடிகளும், கோல்களும் :—

"யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்" (யோவா 19:3).

வேதத்தில் உள்ள ஒவ்வொரு வசனத்திற்கும், ஒவ்வொரு வார்த்–தைகளுக்கும் ஆழமான அர்த்தங்களும், காரணங்களும் உண்டு. "பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான்: அவன் மேல் அன்பாயிருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்–டிக்கிறான்" (நீதி 13:24) என்கிற வேத வார்த்தை நிறைவேறுவ–தற்க்காகவே இயேசுவும் தண்டனைக்கு ஒப்பான அடிகளை வாங்கிக் கொண்டார்.

அவர் அடிக்கப்பட்டார் என்பது உண்மையிலும் உண்மை. ஆனால், அவரை அடித்ததைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் உண்டா? உடலில் எங்கெல்லாம் அடித்தார்கள், எதை கொண்டு அடித்தார்கள், எப்படியெல்லாம் அடித்தார்கள், யார் யார் அடித்–தார்கள் என்பவைகளை வேதத்தின் வெளிச்சத்தோடும், பரி–சுத்த ஆவியானவரின் வெளிப்பாடுகளோடும், கவனித்து பார்த்–துத் தெரிந்து கொள்வோம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

a. அடிகளை குறித்த தீர்க்கதரிசனங்கள்:–

அ. "உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்து போனேன்,
நீரே இதைச் செய்தீர் என்று நான் என் வாயைத் திறவாமல்
மௌனமாயிருந்தேன்" (சங் 39:9,10). சங்கீதக்காரனைக்
கொண்டு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம், இயேசுவின் வாழ்வில்
நடந்தது. ஆண்டவர் இயேசுவும் வாயைத் திறவாமல் மௌன
–மாகவே காணப்பட்டார்.

ஆ. "அவன் உன்னைக் கோலால் அடித்து, எகிப்தியரைப்
போல் தன் தண்டாயுதத்தை உன்மேல் ஓங்குவான்"
(ஏசா 10:24). ஏசாயாவைக் கொண்டு சொன்ன இந்த வார்த்தை
–யின்படியே இயேசுவை கோலைக் கொண்டும் அடித்தார்கள்.
கோல் என்றால் அடையாளம் என்று அர்த்தம் (யாத் 4:17).
உடலில் அடையாளம் உண்டாகும் அளவுக்கு கோலால் இயேசுவை
அடித்துள்ளனர். "வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பப்ப
–டுத்துவீர்கள்" (மத் 23:34). இயேசுவின் சீஷர்களில் ஒருவனா
–கிய மத்தேயுவை கொண்டு சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்
–தின்படி இயேசுவை ஊருக்கு ஊர் துன்பப்படுத்தினார்கள்.

"அவரை வாரினால் அடித்து அவரை கொலை செய்வார்கள்"
(மாற்10:34). இந்த வாக்கின்படியே இயேசுவை நாற்பதுக்கு
ஒன்று குறைய முப்பத்தி ஒன்பது விசை வாரினால் அடித்தனர்.
அதனால், அவருடைய முதுகு படைச்சால்களைப் போல
கிழிக்கப்பட்டது.

"மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட
–வைகளெல்லாம் நிறைவேறும்" (லூக் 18:31). ஆம், இந்த உல
–கத்தில் இயேசு மனுஷகுமாரனாகத்தான் வந்தார், வாழ்ந்தார்.
ஆனாலும், எந்த ஒரு மனுஷனும் அனுபவிக்க முடியாத அடிக
–ளையும் அவர் நம் ஒவ்வொருவருக்காகவும் அனுபவித்தார்.

b. எங்கெல்லாம் அடித்தார்கள்:–

1. "அவரை சிரசில் அடித்தார்கள்" (மத் 27:30). சிரசு என்
–றால் அலங்காரம் என்று அர்த்தமாகும். (நீதி1:9) அலங்கார
–மாய் இருந்த அவரின் தலையை அடித்தே அலங்கோலம்
ஆக்கினார்கள்.

2. "கிறிஸ்துவே உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்
–டியினால் எங்களுக்கு சொல்லும்" (மத்26:68) என்று சொல்லி
அவரைப் பரியாசம் பண்ணினார்கள். பரியாசம் என்றால் நிந்த
–னை என்று பொருள் (நீதி 17:5). நிந்தனையும், பரியாசமும்
அனுபவிக்கக் கூடாத ஆண்டவர் நமக்காக அனுபவித்தார். ஆன
–படியால் யாரையும், எந்த சூழ்நிலையிலும், ஒரு போதும் பரியா
–சம் பண்ணாதீர்கள்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

நீங்கள் யாரையாவது பரியாசம் பண்ணினால், உங்களுக்காக சிலுவையில் அடிக்கப்பட்ட இயேசுவை நிந்திக்கின்றீர்கள் என்று அர்த்தமாகும். மத் 26:68–ல் இயேசுவை எந்த இடத்தில் அடித்–தார்கள் என்று சொல்லப்படவில்லை. ஆனால் அடித்தார்கள் என்று இருப்பதால் எங்கோ, ஒரிடத்தில் நிச்சயமாய் அடித்துள்ள–னர். "அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும் ஒப்புக் கொடுத்தேன்" (ஏசா 50:6). அநேக அடிகள் வாரினால் அடித்தபோது, அதில் பெரும்பாலும், முதுகில்தான் பட்டது. முதுகு என்றாலே சத்துருவின் போராட்டம் என்று அர்த்தமாகும் (யோசு 7:8,12). இயேசுவை அடித்த ஒவ்வொருவனும் சத்துருவாக மாறிதான் அடித்தனர். அதனால்தான் அவர் அந்த அளவுக்கு காயப்பட்டார்.

c. எவைகளைக் கொண்டு அடித்தார்கள்:–

1."கோலை எடுத்து, அவரை சிரசில் அடித்தார்கள்" (மத் 27:30). அநேகருக்கு ஆகாரத்தையும், விடுதலையையும் தந்தார் என்பதை மறந்து, கோலால் அவரை அடித்தார்கள். கோல் என்றால் துஷ்டரின் தண்டாயுதம் (ஏசா 14:5) என்று அர்த்தமாகும். இயேசுவை சுற்றிலும் இருந்தவர்கள் வேதம் சொல்கிறபடி துஷ்டர்களாகவும், அவர்களின் கைகளில் இருந்த கோல் தண்டாயுதமாகவும் இருந்துள்ளது.

2. "அவர்கள் அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினால் அடித்து" (மாற் 10:34). இயேசுவை பயங்கரமான முறையில் அடித்தவைகளில் வாரினால் அடித்ததுதான் மிக முக்கியமான அடியாகும். இரும்பு குண்டுகளும், இரும்பு கொக்கிகளும் ஆங்–காங்கே அந்த வாரில் மாட்டியிருந்தபடியினால் ஒவ்வொரு அடி–யும் தோலையும், சதையையும் பிய்த்துக் கொண்டு வந்தன. அதனால், அவருடைய முதுகில் மட்டும் ஏறத்தால 150 காயங்–கள் இருந்ததாக வேதாகம வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

3. "யூதருடைய ராஜாவே வாழ்க என்று சொல்லி, அவரைக் கையினால் அடித்தார்கள்" (யோவா19:3). பல ஆயுதங்களைக் கொண்டு, பல விதத்தில் அடித்திருந்தாலும், அது போதாதென்று கையினாலும் ஓங்கி ஓங்கி அடித்துள்ளனர். கையினால் அடிப்–பது கொலைபாதகத்துக்கு சமானம் (எண் 35:21). ஆனபடியி–னால் தான் யூதர்கள் இயேசுவைக் கொலை செய்த கொலை–பாதகர்கள் என்று உலகம் சொல்கின்றது. இந்த செய்தி உங்க–ளுக்கு ஓர் எச்சரிப்பாகும். அவசரப்பட்டு யாரையும் கை நீட்டி அடித்து விடாதீர்கள். அது உங்களை கொலைகாரர்களாகவும் மாற்றி போடும்.

d. எந்த விதங்களில் அடித்தார்கள்?

1. "கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்" (மத் 26:68) கிறிஸ்து என்றால் கன்மலை என்று அர்த்தமாகும் (Iகொரி 10:4). கன்மலையைப் போல உறுதியாய் இருந்தவரை, ஒரு ஆட்டை அடிப்பதுபோல அடித்தனர். பழைய ஏற்பாட்டில் மோசே கன்மலையை அடித்தான். இங்கு யூதர்கள் கிறிஸ்துவை அடிக்கின்றனர். மோசே காலத்து சம்பவம் இதன் மூலம் கிறிஸ்துவின் நாட்களில் நிறைவேறுகின்றது.

இதைப்போல உங்கள் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டிக்கு கிடைத்த தரிசனங்களும், சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களும் உங்கள் நாட்களில், உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும். நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

2. "யூதருடைய ராஜாவே, என்று சொல்லி, அவரை அடித்தார்கள்" (யோவா19:3). அடிக்கும்போது, சொல்லி சொல்லி அடித்துள்ளனர். அப்படி அவர்கள் சொன்ன வார்த்தைகளில் ஒன்றுதான் யூதருடைய இராஜாவே என்பதாகும். யூதருடைய இராஜா என்று சொன்னால் நசரேயனாகிய இயேசு என்று விளக்கமாகும் (யோவா19:19). கொடூரர்களாகிய அவர்கள் கூட இயேசு ஓர் நசரேயர் என்பதை தெரிந்து வைத்துள்ளனர்.

3. "அவரை அடித்து, அவர்மேல் துப்பி" (மாற் 15:19) பலரும் சூழ்ந்து நின்றிருந்து அவரை தாக்கவும் அடிக்கவும் தொடங்கின போது, அவர்மேல் துப்பி அதன் பின்பு அடித்துள்ளனர். துப்புதல் என்றால் வெட்கம் என்று அர்த்தமாகும். இயேசுவை அடித்தால் மட்டும் போதாது, வெட்கப்படுத்தவும் வேண்டும் என்று சொல்லி, துப்பி, துப்பி அடித்துள்ளனர்.

4. "அவருடைய கண்களைக் கட்டி, உன்னை அடித்தவன் யார் என்று அவரைக் கேட்டதுமன்றி" (லூக் 22:64). கண்களை கட்டுவது என்பது, ஒரு நபரை கடத்திக் கொண்டு போகும் போதுதான் கண்களைக் கட்டுவார்கள். அங்கு இருந்த முரட்டாட்டமான மனிதர்களில் யாரோ சிலர் கொஞ்சம் இரக்கம் உள்ளவர்களாகவும் இருந்துள்ளனர். கொடுமைகளை இயேசு பார்க்க வேண்டாம் என்றஎண்ணத்தில் இயேசுவின் கண்களை கட்டினர் என்று சில வேத பணடிதர்கள் கூறுகின்றார்கள்.

e. யார் யார் அடித்தார்கள்:-

1. "அவரை புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்" (மத் 20:19). இயேசுவை அடித்ததில் புறஜாதியார்தான் முதல் வரிசையில் உள்ளனர். புறஜாதியார் என்றால் பரிசுத்த ஆலயத்தைத் தீட்டுபடுத்தினவர்கள் என்றும், எருசலேமை மண் மேடுகளாக்கினவர்கள் என்றும் பேர் பெற்றவர்கள் (சங் 79:1). பரிசுத்தமுள்ள இயேசுவை பரிசுத்தர்களால் அடிக்க முடியாது. தீட்டுபட்டவர்களால் தான் அடிக்க முடியும். ஆனபடியினால்தான் புறஜாதியார் கையால் அடிக்கப்பட்டார்.

தன்னை அடித்து கொடுமைப்படுத்தின புறஜாதியாருக்கு சுவிசே -ஷத்தை அறிவிக்க அப்போஸ்தலனாகிய பவுலை பின் நாட்களில் அனுப்பினார் (அப் 9:15). இதன் மூலம் இயேசுவின் அன்பும் மன -துருக்கமும் வெளிப்படுகின்றது.

2. "பிரதான ஆசாரியன், கிறிஸ்துவே உம்மை அடித்தவன் யார்? எங்களுக்குச் சொல்லும் (மத் 26:65,68). இயேசுவின் சரீரத்தில் பலத்த அடியை கொடுத்தவர்களில் பிரதான ஆசாரி -யன் இரண்டாவது நிலையில் வருகின்றான். பிரதான ஆசாரி -யன் என்றால் பிடிவாதமாய் குற்றஞ்சாட்டுகிறவன் என்று வச -னம் சொல்கின்றது (லூக் 23:10). அந்நாட்களில் வாழ்ந்த பிர -தான ஆசாரியர்கள், யார் மேலாவது ஏதாவது ஒன்றை சொல்லி குற்றஞ்சாட்டுவதை பழக்கமாக கொண்டிருந்தனர். அப்படியா -னால், இயேசுவை அடிக்கும் போது, குற்றஞ்சாட்டி, குற்றஞ் -சாட்டி அடித்துள்ளனர்.

3. "அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்" (யோவா19:1). இயேசுவைப் பிடித்து அடித்தவர் -களில் ஒரு VIP-யாக இருந்தவன் பிலாத்துவாகும். இவன், திபேரியு இராயனால் யூதேயாவுக்கு VI-ம் தேசாதிபதியாகக கி.பி. 25 -ல் நியமிக்கப்பட்டவன். இவனுடைய தலைநகரம் செசரியாவாக இருந்தாலும், பண்டிகை நாட்களில் எருசலேமில் போய்த் தங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

யூத ஜனங்களை தன் போர்சேவகர்களைக் கொண்டு, கொன் -றுக் குவித்தவன் இந்த பிலாத்து. எருசலேமுக்குப் பலியிடப் போன கலிலேயரைக் கொன்று, செத்து போனவர்களின் இரத்தத் -தை எடுத்து, பலியிடும் இரத்தத்தோடு கலந்தவனும் இவனே (லூக் 13:1). இவன் இயேசுவை அடித்தது மட்டுமல்ல, சிலுவை -யில் அறைய ஒப்புக் கொடுத்தவனும் இவனே.

அவன் மீண்டும் கி.பி.39-ம் ஆண்டு தன் சொந்த நாட்டுக்கு கடந்து சென்றபோது, அங்கே தன் சுய தேசத்தாரால் துரத்தப்பட்டு, அவன் தற்கொலை செய்து கொண்டான். அவனுடையப் பிரேதம் மலையிலிருக்கிற ஒரு குளத்தில் எறிந்து விடப்பட்டது. "அவன் வடி -வைப் பொட்டரிப்பைப் போல் அழியப்பண்ணுகிறீர். நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே" (சங் 39:11) என்ற வசனம் அவன் வாழ்க்கையில் நிறைவேறினது.

இயேசுவை அடித்தபடியினால், தன் மிகப் பெரிய தேசாதிபதி என்கிறப தவியையும், பட்டத்தையும் இழந்தான். உங்களுக்கு விரோ -தமாக நியாயத்தில் எழும்புகின்ற யாரையும் பிலாத்துவின் முடிவைப் போலவே அவர்களையும் காணச் செய்வார். நீங்கள், செம்மை -யாய் உண்மையாய் இருந்தால் உங்களுக்கு வருகின்ற எல்லா அடியிலிருந்தும் ஆண்டவர் காப்பாற்றுவார். இயேசுவை அடித்தவர் -களில் இதுவரை நாம் பார்த்த புறஜாதியார், பிரதான ஆசாரியர், பிலாத்து இவர்களைத் தவிர இன்னும் சிலரும் இயேசுவை அடித் துள்ளனர் என்று வேதம் தெளிவாக கூறுகின்றது. அந்த சிலர் யார் யார் என்பதை சுருக்கமாக பார்ப்போம்.

4. "இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனுஷர் அவரைப் பரியா-சம் பண்ணி, அடித்து" (லூக் 22:63). இயேசுவை பிடிக்க வந்தவர்களில் பொது மக்களும் சிலர் இருந்துள்ளனர். அவர்களும் இயேசுவை அடித்துள்ளனர்.

5. "தேசாதிபதியின் போர்ச்சேவகர் இயேசுவை கொண்டுபோய்" (மத்27:27). மெய்காப்பாளன் போன்ற விசேஷ போர்ச்சேவகன் தேசாதிபதிக்கு உண்டு. அவனும் இயேசுவை அடித்தான்.

6. "போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடிவரச் செய்து, அவரை சிரசில் அடித்தார்கள்" (மத் 27:27,30). தேசாதிபதியின் அரண்மனையில் வேலைச் செய்யும் போர்ச்சேவகர்கள் ஓர் கூட்டமாக இருந்தனர். அத்தனை பேரும் வரவழைக்கப்பட்டு அவர்கள் அனைவராலும் அடிக்கப்பட்டார்.

7. "சமீபத்தில் நின்றசேவகரில் ஒருவன்" (யோவா 18:22,23). பிரதான ஆசாரியனுக்கு அனுஷாரியாகவும், சேவகனாகவும் இருந்த ஒருவன், யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் ஓங்கி இயேசுவை அடித்து விட்டான்.

இயேசுவை அடித்தார்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனாலும், இயேசுவுக்கு உண்டான அடியைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், இயேசுவின் சரீரத்தில் எங்கெல்லாம் அடித்தார்கள், எந்த பொருட்களைக் கொண்டு அடித்தார்கள்? என்னவெல்லாம் சொல்லி சொல்லி அடித்தார்கள், யார் யார் அடித்தார்கள் போன்ற ஆழமான சத்தியங்களை இதன் மூலமாக உங்களுக்கு வெளிப்படுத்தி தந்த தேவன், உங்களையும் தம்முடைய கிருபையுள்ள பாத்திரமாக எடுத்துப் பயன்படுத்துவார்.

f. அடிகளைக் குறித்ததான சில வசனங்கள்:—

1.	ஏசா 50:6	முதுகில் விழுந்த அடி
2.	மத் 10:17	வாரினால் அடித்த அடி
3.	மத் 21:35	ஊழியக்காரரை பிடித்து அடிப்பார்கள்
4.	மத் 27:30	சிரசிலே (தலையில்) அடித்தனர்
5.	மாற்12:5	அடித்துக் கொன்று போடுவார்கள்
6.	மாற் 13:9	ஜெப ஆலயங்களில் அடிப்பார்கள்
7.	லூக் 12:47	ஊழியக்காரரை அநேக அடிகள் அடிப்பார்கள்
8.	லூக் 23:48	மார்பில் அடித்துக் கொண்டு போவார்கள்
9.	யோவா19:3	கையினால் அடித்தார்கள்

இயேசுவையும் சுவிசேஷத்தையும் எப்படித் தனித்தனியே பிரிக்க முடியாதோ, அதேபோல வேதத்தையும் கோலையும் தனித்தனியா–கப் பிரிக்க முடியாது. முதன் முதலாக யாக்கோபு கோலோடு பிர–யாணத்தை துவங்கினான் (ஆதி 32:10). பின்பு மோசேயின் நாட்களில் அந்த கோல் அற்புதங்களைச் செய்யும் கோலாக மாறி–னது (யாத் 4:17). அதன் பின்பு ஆசாரியனை தெரிந்தெடுக்கும் அற்புதக் கோலாக மாறினது (எண் 17:8). அதே கோல் பின் நாட்களில் துலாக்கோலாக மாறி, பொருட்களையும்,இடங்களையும் அளக்கும் கருவியாக உருவெடுத்தது (ஏசா 40:12). கோலுக்கு இப்படிப் பல விசேஷங்கள் இருந்தபடியினால் வழிக்கு ஒரு தடி என்கிற கோலை மாத்திரம் எடுத்துக் கொண்டு போங்கள் என்று இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (மாற் 6:8). ஏனெ–ன்றால் இயேசுவை அடிக்கப் பயன்படுத்தின ஆயுதம் எரே 48:17–ன்படி, ஒரே நேரத்தில் பெலனான தடியாகவும், அலங்காரமான கோலாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாடுகளின் நாட்களில் இயேசுவைத் தொட்டவைகளில் கோலும் முக்கியமான ஒன்றாகும். கோல் என்பது பார்வைக்கு சாதாரண–மாகக் காணப்பட்டாலும், அதற்குள்ளும் பல இரகசியங்களையும் வெளிப்பாடுகளையும் தேவன் மறைத்து வைத்துள்ளார். யாத்4:17–ஐ வாசிக்கும்போது கோல் என்பது அடையாளத்தை குறிக்கும் என்று வேதம் கற்றுக் கொடுக்கின்றது.

புதிய ஏற்பாட்டில் உள்ள சம்பவங்கள் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டின் நிழலாட்டமாகத்தான் எழுதப்பட்டுள்ளது. மோசே கோலைக் கொண்டு கன்மலையை இரண்டு தரம் அடித்தான் (எண் 20:11) என்று எழுதப்பட்டுள்ளது. அதே போல இயேசுவை–யும் ஒரே நேரத்தில் இரண்டு தரம் அடித்திருப்பார்கள் என்று விசு வாசிக்கின்றேன். ஏனென்றால் கன்மலையும் இயேசுவை தான் குறிக்கின்றது.

இயேசுவின் கடைசிக்கட்ட பாடுகளின்போது ஏறத்தால ஐந்துவித–மான கோல்களை சத்துருக்கள் இயேசுவுக்கு எதிராகப் பயன்ப–டுத்தியுள்ளனர். அது எந்தெந்த கோல் என்றும், அதன் விளக்–கங்கள் என்ன என்பதையும் வேதவசனங்களைக் கொண்டு கவனிப்போம்.

"நான் இரண்டு கோல்களை எடுத்து, ஒன்றிற்கு அநுக்கிரகம் என்றும், ஒன்றிற்கு நிக்கிரகம் என்றும் பேரிட்டு" (சக 11:7).

1. இயேசுவின் கையில் கொடுத்த கோல்:–

இயேசுவை தேசாதிபதியின் அரண்மனைக்குள் கொண்டு சென்று பலவிதத்திலும் துன்புறுத்த ஆரம்பித்தனர். அப்போது அவரை உட்கார வைத்து அவருடைய வலது கரத்தில் ஒரு கோலை கொடுத்தார்கள். இங்கு சொல்லப்பட்டுள்ள இந்த கோல் பரியாசம் பண்ணப்படுதலை குறிக்கின்றதாக இருந்தாலும், அநுக்கிரகத்தை–யும் குறிக்கும். ஏனென்றால், கோலை இயேசுவின் கையில் கொடுத்தார்கள். ஆனால், அதனைக் கொண்டு அவரை அடிக்–கவில்லை. அதுவே பெரிய அநுக்கிரகம்தான்.

அதே சமயம் அவரை பல சமயத்திலும் பரியாசமும் பண்ணினார்கள். ஆனால், நன்றாக வாசித்துப் பாருங்கள் அந்த பரியாசமும் கூட மரியாதையானதாகத்தான் இருந்தது. அதாவது அதிலும் ஓர் அநுக்கிரகம் காணப்பட்டது.

- ➤ அவருக்கு முன்பாக முழங்கால் படியிட்டனர்.
- ➤ இயேசுவை இராஜா என்று சொன்னார்கள்.
- ➤ அவர் வாழ்க என்று முழக்கமிட்டனர்.

அநுக்கிரகம் என்பது பொறுமையையும், ஆறுதலையும் குறிக்கின்றது (ரோம 15:6). இயேசுவின் கையில் கொடுக்கப்பட்ட கோலை அவர் பொறுமையோடு பெற்றுக்கொண்டு அதையே தனக்கு ஆறுதலாகவும் மாற்றிக் கொண்டார். இதை வாசிக்கும் நமக்கும் கூட இதை போன்ற மகிமையான அனுபவங்கள் வர வேண்டும்.

h. i) மத் 27:29 இயேசுவின் வலது கையில் கொடுக்கப்பட்ட கோல்:–

a. வி.ம்: சங் 73:23 வலது கை (எ) தாங்குதல்

ii). இந்த கோல் எப்போது கொடுக்கப்பட்டது?

மத் 27:29 தேசாதிபதியின் அரண்மனையில் இருக்கும் போது கொடுக்கப்பட்ட கோல்

iii) இந்த கோல் எதைக் குறிக்கின்றது?

மத்27:29 அவரைப் பரியாசம் பண்ணினார்கள்

iv). இது ஏன் நடந்தது?

எசே 20:37 நான் உங்களைக் கோலின் கீழ் செல்லும்படி செய்வேன் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்க்காக

v). இதனால் நமக்கு என்னப் பலன்?

ஏசா 9:4 நுகத்தடியும், மிலாறும் உடைந்து போகும்

i. இயேசுவை அடித்த கோல்:–

"அவரை சிரசில் கோலால் அடித்து அவரை வணங்கினார்கள்" (மாற் 15:19).

இரண்டாவதாக ஒரு கோலைக் கொண்டு இயேசுவை சிரசில் (தலையில்) அடித்தார்கள். இது சகரியா தீர்க்கதரிசி சொன்னதைப் போல நிக்கிரகத்தைக் குறிக்கும் கோலாகும். நிக்கிரகம் என்றால் மனஸ்தாபத்தை வெளிப்படுத்துகின்றது (ஆதி 6:7). தேசாதிபதியின் அரண்மனையில் இருந்தவர்களும் கூட இயேசுவின் மீது மனஸ்தாபத்துடன்தான் காணப்பட்டனர். அதனால் தான் அவர்களால் பரிசுத்தராகிய இயேசுவை அடிக்க முடிந்தது. முகத்தில் துப்ப முடிந்தது. அவரின் வஸ்திரங்களை கழற்றி அவரை நிர்வாணப்படுத்த முடிந்தது. இறுதியாக சிலுவையில் அறையவும் முடிந்தது.

ஆனாலும், இயேசு அந்த மனஸ்தாபம் என்னும் நிக்கிரகத்திற்கு ஒப்பான கோலை உடைத்து போட்டார். "நிக்கிரகம் என்னப்பட்ட என் இரண்டாம் கோலையும் முறித்தேன்" (சக 11:14). அப்படியானால், நாமும் கூட மற்றவர்கள் மேல் வைத்திருக்கும் மனஸ்தாபத்தை முறித்து போட்டால் தான், அவர்களை தண்டிக்க வேண்டும், பழி வாங்க வேண்டும் என்ற சிந்தனை நமக்குள் வராமல் இருக்கும். அப்பொழுதுதான் கிறிஸ்துவும், கிறிஸ்துவின் ஆவியானவரும் நமக்குள் வாசம் பண்ண முடியும். இநத உலகத்தையும் நம்மால் ஜெயிக்க முடியும்.

j. i) மீகா 5:1 கன்னத்தில் அடித்தக் கோல்:-

a. வி.ம்: உன் 1:10 கன்னம் (எ) அழகு

b. மத் 5:39 கன்னத்தில் அடித்தார்கள் (எ) தீமையோடு எதிர்த்து நிற்க்காமல், தீமையைச் சகித்துக் கொள்ளுதல்

ii) நிறைவேறின தீர்க்கதரிசனங்கள்:-

1. புல 3:30 தன்னை அடிக்கிறவனுக்குத் தன் கன்னத்தைக் காட்டி, நிந்தையால் நிறைந்திருப்பது
2. யோபு 16:10 நிந்தையாக என்னைக் கன்னத்தில் அடித்தார்கள்

iii) கன்னத்தில் அடித்ததினால் அவருக்கு என்ன நடந்தது?

ஏசா 52:14 இயேசுவின் முகப்பார்வை மாறினது. அவருடைய ரூபம் மாறினது. அந்தக்கேடு அடைந்தார். அவரைக் கண்டவர்கள் பிரமித்தனர்

iv. நமக்கு என்னக் கிடைக்கும்?

வெளி 1:16 அவருடைய முகம் உங்கள்மேல் வல்லமையோ -டும், சூரியனைப் போலவும் பிரகாசிக்கும்.

k. கடற்காளானை மாட்டினகோல்:-

"ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள்" (யோவா19:29).

இந்த கோலைக் குறித்து சற்று விரிவாக பார்த்தால் இதன் பெயருக்குரிய விளக்கம் தெளிவாக தெரிய வரும்.

ஈசோப்பு என்பது தரையில் வளரும் புல் பூண்டு இனத்தைச் சேர்ந்த ஓர் சாதாரண சின்ன சின்ன செடியாகும் (Iஇரா4:33). அந்த செடிகளை பறித்து ஒன்றாக சேர்த்தால் ஒரு கொத்தாக காணப்படும் (யாத்12:22). அதை சிவப்பு நூலைக் கொண்டு ஒரு தண்டில் (குச்சியில்) கட்டிக் கொண்டு அதை இரத்தத்திலோ அல்லது தண்ணீரிலோ முக்கினால் அவைகளை இந்த ஈசோப்பு என்னும் கொத்து உறிஞ்சு கொண்டு பஞ்சு போல அப்படியே வைத்திருக்கும். இதற்கு பெயர்தான் ஈசோப்புத் தண்டு.

இந்த ஈசோப்பு தண்டை பழைய ஏற்பாட்டில் சுத்திகரிப்புக் -காகவும் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் தாகத்தைக் தீர்க்கவும் பயன்படுத்தினார்கள். (எண்19:18, எபி9:19, யோவா 19:29).

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / ஏ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

உறைந்த மழையைப் போல மாறுமளவுக்கு என்னை சுத்திகரி -யும் என்று சங்கீதக்காரனைப் போல ஊக்கமாக ஜெபியுங்கள். அப்பொழுது ஈசோப்பினாலும், ஈசோப்பின் தண்டினாலும் ஆண்ட -வர் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவார். நீங்களும் பரிசுத்தமாவீர்கள்.

l. மத் 27:48 கடற்காளானை மாட்டின கோல்:—

a. ஈசோப்புத்தண்டு எதினால் செய்யப்பட்டது?

லேவி 14:4 (i) கேதுரு மரக்கட்டையினாலும்

(ii) சிவப்பு நூலினாலும் செய்யப்பட்டது

b. ஈசோப்புத்தண்டு எதற்கு அடையாளமானது?

லேவி 14:49 தோஷம் [சாபம்] நீங்குவதற்கு அடையாளமானது

c. ஈசோப்புத்தண்டை எத்தனை முறைபயன்படுத்த வேண்டும்?

லேவி 14:51 ஏழுதரம் பயன்படுத்த வேண்டும்

d. ஈசோப்புத் தண்டு எந்தவித சாபத்தை நீக்கக் கூடியது?

எண் 19:18
லேவி 14:51 } வீட்டில் இருக்கும் சாபத்தை நீக்கக் கூடியது

e. ஈசோப்புத் தண்டு யாரை சுத்தம் பண்ணினது?

சங் 51:7தாவீது வெண்மையான மழையைப் போலானான்

f. ஈசோப்புத்தண்டு என்னும் கோலால் நமக்கு என்ன லாபம்?

சங் 51:8 i. சந்தோஷம் கிடைக்கும்

ii. மகிழ்ச்சி கிடைக்கும்

iii. களிகூறுதல் கிடைக்கும்

M. தடி என்ற கோல்:—

"நீங்கள் தடிகளையும் எடுத்துப் புறப்பட்டு வந்தீர்களே" (லூக் 22:52).

தடி என்பது நாய் பிடிக்கிறவர்களை அல்லது நாயை விரட்டு -தலைக் குறிக்கும். Iசாமு17:43 வாசிக்கும் போது, கோலியாத் தாவீதை பார்த்து கேட்கிறான். நீ தடியோடு கூட என்னிடத்தில் வர நான் என்ன நாயா என்று கேட்டான்.

ஆம், இதை போலதான், இயேசுவை காட்டி கொடுத்து அவ -ரை பிடித்து கொடுக்க நினைத்த யூதாஸ், தன்னோடு வந்தவர் -களின் கையில் தடியை கொடுத்து அழைத்து வந்தான். ஆனால், அவர்களை பார்த்தோ, அவர்களின் கையில் இருந்த தடியை பார்த்தோ இயேசு பயப்படவே இல்லை. அதற்கு பதிலாக அவர்களைப் பார்த்து ஆச்சரியப்படத்தான் செய்தார்.

இந்த சம்பவம் நமக்கு ஒர் பாடத்தை கற்றுக் கொடுக்கின்றது. உங்களை யாராவது நாய் என்றோ, அதைவிட கேவலமாகவோ பேசினால் நீங்கள் மனம் தளர வேண்டாம். தாவீதோடு கூட இருந்த தேவன் உங்களோடும் இருக்கின்றார்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

சங்கீத காரணாகிய தாவீது சொல்வதைப் போல, உம்முடைய கோலும், தடியும் என்னைத் தேற்றும் என்று அறிக்கையிட்டுப் பாருங்கள். எல்லா எதிர்ப்புகளும் மறைந்து விடும். தேவனுடைய மகிமையினாலே நீங்கள் தேற்றப்படுவீர்கள். பரிசுத்த ஆவியானவ-ரின் தேற்றுதல் உங்களோடு கூட இருக்கும்.

N. i) மத் 26:47 தடி என்ற கோல்:—

வி.ம்: ஏசா 10:15 தடி (எ) மிரட்டுதல்
மாற் 14:43 இயேசுவைப் பிடிக்க தடிகளைக் கொண்டு வந்தனர்

உ.ம்: மத் 26:55 தடி பட்டயத்திற்குச் சமமானது
எண் 22:27 தடி (எ) அடிப்பது

தீ.து: மாற் 6:8 ஒரு தடியையும் எடுத்துக் கொண்டுப் போங்கள் என்று இயேசு சொன்னத் தீர்க்கதரிசனம் அப்ப-டியே நிறைவேறினது

ii. மத் 27:30 சிரசில் அடித்தக் கோல்:-

a. வி.ம்: நீதி 1:9 சிரசு (எ) அலங்காரம்

b. 2சாமு 3:29 கோல் (எ) சாபம். கோலினால், இயேசுவின் தலையில் அடிக்கப்பட்டதால் நம்முடைய சாபங்கள் அனைத்தும் அவர் தலையில் இறங்கினது

c. தீ.து: யோபு 19:9 என்னிலிருந்த என் மகிமையை அவர் உரிந்து கொண்டு என் சிரசின் கிரீடத்தை எடுத்துப் போட்டார் என்றதீர்க்கதரிசனம் இதன் மூலம் நிறைவேறினது

iii. இயேசுவுக்கு கிடைத்த பலன் என்ன?

1. சங் 21:3 இயேசுவின் தலையில் பொற்கிரீடம் தரிப்பிக்கப்படும்
2. தானி 7:9 அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப்போல துப்புரவாகவும் மாறினது

iv. நமக்கு என்ன பலன்?

சக 3:5 தேவதூதர்களால் நமக்கு சுத்தமான பாகையும், சுத்-தமான வஸ்திரங்களும் தரிப்பிக்கப்படும்

O. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில கோல்கள்:—

a. வெளி 11:1 — கைக்கோல்
b. எபி 11:21 — யாக்கோபு சாய்ந்த கோல்
c. வெளி 21:15 — பொற்கோல்
d. லூக் 11:52 — அறிவாகிய திறவுகோல்
e. வெளி 7:2 — முத்திரைக் கோல்
f. மத் 16:19 — பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்
g. எபி 1:8 — ராஜ்யத்தின் செங்கோல்
h. வெளி 1:18 — பாதாளத்தின் திறவுகோல்
i. வெளி 9:1 — பாதாளக் குழியின் திறவுகோல்
j. வெளி 21:16 — அளக்கும் கோல்
k. வெளி 3:7 — தாவீதின் திறவுகோல்

p. ஏசா. 9:4 இயேசுவைத் தொட்ட கோல்கள் நம்மேல் இருக்கும்:—

மூன்று கோல்கள் இயேசுவைத் தொட்டது:

1. இயேசுவின் கையில் கொடுத்த கோல்:

இந்த கோல் எப்போது கொடுக்கப்பட்டது?

மத் 27:27-29 தேசாதிபதியின் அரண்மனையில் இருக்கும் போது கொடுத்த கோல்

இந்த கோல் எதைக் குறிக்கின்றது?

மத் 27:31 அவரைப் பரியாசம் பண்ணினார்கள்

இது ஏன் நடந்தது?

லூக் 18:32 தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காக நடந்தது.

இதனால் நமக்கு என்ன பலன்?

ஏசா 9:4 நுகத்தடியும், மிலாறும் உடைந்து போகும்.

2. மாற் 15:19 இயேசுவை அடித்த கோல்:-

கோலால் எங்கெல்லாம் அடித்தார்கள்?

i. மத் 27:30 தலையில் அடித்தார்கள்

ii. மீகா 5:1 கன்னத்தில் அடித்தார்கள்

தலை என்றால் என்ன?

நீதி 11:26 தலையின் மேல் ஆசீர்வாதம் தங்கும்

கன்னம் என்றால் என்ன?

உன் 5:13 கன்னம் புஷ்பத்ததைப் போன்றதாகும்

அடித்ததினால் அவருக்கு என்ன நடந்தது?

ஏசா 52:14 மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார் –வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்.

நமக்கு என்ன பலன்?

வெளி 1:16 அவருடைய முகம் உங்கள்மேல் வல்லமையோடு சூரியனைப்போல் பிரகாசிக்கும்.

3. யோவா 19:29 ஈசோப்புத்தண்டு என்ற கோல்:-

ஈசோப்புத்தண்டு எதினால் செய்யப்பட்டது?

லேவி 14:4 i. கேதுருமரக் கட்டையினாலும்

ii. சிவப்பு நூலினாலும் செய்யப்பட்டது

ஈசோப்புத்தண்டு எதற்கு அடையாளமானது?

லேவி 14:49 தோஷம் (சாபம்) நீங்குவதற்கு அடையாளமானது.

ஈசோப்புத்தண்டு எத்தனை முறை பயன்படுத்த வேண்டும்?

லேவி 14:51 ஏழுதரம் பயன்படுத்த வேண்டும்

ஈசோப்புத்தண்டு எந்த சாபத்தை நீக்கக் கூடியது?

எண் 19:18 }
லேவி 14:51 } வீட்டில் இருக்கும் சாபத்தை நீக்கக் கூடியது

ஈசோப்புத்தண்டு யார் பயன்படுத்த வேண்டும்?

எண் 19:18 சுத்தமானவர்கள் பயன்படுத்த வேண்டும்

ஈசோப்புத்தண்டு யாரை சுத்தம் பண்ணினது?

சங் 51:7 தாவீது வெண்மையான மழையைப் போலானான்

நமக்கு என்ன பலன்?

சங் 51:8 i. சந்தோஷம் கிடைக்கும்

ii. மகிழ்ச்சி கிடைக்கும்

iii. களிகூறுதல் கிடைக்கும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXXI. உபத்திரவத்தின் தண்ணீர் :-

ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் (யோவா 13:14)

தண்ணீர் என்ற வார்த்தையையும் இயேசுவையும் பிரிக்கவே முடியாது என்று சொல்லும் அளவுக்கு அவருடைய வாழ்க்கையில் நிறைந்து வழிகின்றதை வேதத்திலிருந்து நம்மால் காண முடியும். அதிலும், அவருடைய உபத்திரவங்களின் போது தண்ணீர்தான் ஒரு தாக்கத்தையே உண்டு பண்ணினது.

இயேசுவின் பாடுகளில் காணப்பட்ட நான்கு விதமான தண்ணீர்களைக் குறித்துக் காணலாம்.

a. சுத்திகரிப்பு என்ற தண்ணீர்:-

நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று சொன்ன ஆண்டவர் தன்னுடைய சீஷர்களையும் பரிசுத்தத்திற்கு இணையாக இருக்கும்படி சுத்திகரிக்க ஆரம்பித்தார். அப்போது தான் அவர் ஒரு பாத்திரத்தில் தண்ணிரை வார்த்து சீஷர்களின் கால்களை கழுவ தொடங்கினார்.

ஆம் இங்கு சொல்லப்பட்டுள்ள சம்பவம் சுத்திகரிப்புக்கு ஒப்பானது ஆகும். பழைய ஏற்பாட்டு காலத்தில் சுத்திகரிப்புக்கு என்றே சில நாட்களை நியமித்திருந்தனர் (லேவி 12:4,5,6). அந்நாட்களில் சுத்திகரிப்பு என்பது ஜனங்களின் இரண்டு கண்களைப் போல காணப்பட்டது. ஆனபடியினால் தான் அவர்களில் பலரையும் தேவன் கிருபையாய் பாதுகாத்தும் வந்தார்.

அப்படியானால் நம்முடைய வாழ்க்கையில் எது சுத்திகரிக்கப்பட வேண்டும்? நமக்குள் காணப்படுகின்ற அக்கிரமும், பாவமும் முற்றிலுமாய் சுத்திகரிக்கப்பட வேண்டும் (சங் 51:2). சுத்திகரிப்பு இல்லாத வாழ்க்கை உப்புகரிக்கும் ஜீவியமாக மாறி விடும்.

இயேசு சொன்னார் "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை" (யோவா13:8). தேவகிருபை, பரிசுத்த ஆவியின் அபிஷேகம், பரலோக இராஜ்ஜியம், கிறிஸ்துவின் சமாதானம் ஆகியவைகளில் நல்ல பங்கு கிடைக்க வேண்டுமானால் தண்ணீர் என்னும் அபிஷேகத்தால் சுத்திகரிக்கப்படுங்கள். அப்போது உங்களையும் தம்முடைய சிஷர்களைப் போல மாற்றி, சாட்சியாக நிறுத்துவார். நல்ல பங்கையும் தந்தருளுவார்.

b. கைவிடப்படுதல் என்ற தண்ணீர்:-

மனிதனை மனிதன் கைவிடுவான். சில சமயம் சூழ்நிலைக் கூட நம்மைக் கைவிடும். அதேபோல இயேசுவை தண்ணீரே கைகழுவி விட்டதை வேதத்தில் நாம் காணலாம். "பிலாத்து கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்களுக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தபழிக்கு நான் குற்றமற்றவன். நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றான்" (மத்27:24). ஜனங்களின் அதிபதியாக இருந்தவன் பிலாத்து. தன் முயற்சிகள் எதுவும் வாய்க்காதபடியினால் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை கொண்டு வரச் சொல்லி எல்லாருக்கு முன்பாகவும் கை கழுவி விட்டான்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

பிலாத்து இயேசுவை கை கழுவுவதற்கு காரணமாக இருந்தது தண்ணீர் தான். ஆனால், இதே தண்ணீரை குறித்து பல இடத்தில் இயேசு மகிழ்ச்சியாக பேசினார், தண்ணீரை உவமையாய் காண்பித்தார். ஜீவனுக்கு ஈடான வாழ்க்கையை ஜீவ தண்ணீர் என்று அழைத்தார். சிலுவையில் தன் ஜீவனை விட்ட பிறகும் கூட விலாவிலிருந்த தண்ணீரையும் இந்த பூமியின் மனிதர்களுக்காக சிந்தி விட்டுத்தான் பரலோகத்திற்கு ஏறிப் போனார்.

இப்படியெல்லாம் முக்கியப்படுத்தப்பட்ட தண்ணீர் ஒரு நாள் இயேசுவை கைவிட்டது போன்ற செய்கையை நாம காணும் போது, எந்த மனிதனும், எப்போர்பட்ட பொருள்களும் கூட ஒரு நாள் நம்மை கைவிட்டுவிடும் என்பதில் சந்தேகமே கிடையாது. ஆனாலும், கர்த்தராகிய இயேசு நம்மை கைவிட மாட்டார். முடிவுபரியந்தமும் அவர் கரம் பிடித்து நடத்துவார். தண்ணீரை தன் பாதங்களுக்கு கீழ்ப்படுத்தின இயேசுவை மட்டும் நோக்கி பாருங்கள். அப்பொழுது எந்த சூழ்நிலையும் உங்களை அடிமைப்படுத்த முடியாது.

c. தாகம் என்ற தண்ணீர்:–

முழு உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் ஆட்டுக்குட்டியாக சிலுவையில் இயேசு சொன்ன மிக முக்கியமான ஏழு வார்த்தைகளில் "தாகமாயிருக்கிறேன்" (யோவா19:28) என்ற வார்த்தை தண்ணீரை குறித்த வார்த்தையாகும். ஆம், இயேசுவின் வாழ்க்கையின் முடிவு கூட தாகத்தோடுதான் முடிந்தது.

தலையில் முள்முடி சூட்டப்பட்டு, சாட்டையினால் உடல் முழுவதும் அடிக்கப்பட்டு, பாரமான சிலுவையை வழி நெடுக சுமந்து வந்தபடியால் அவருடைய சரீரத்தில் இருந்து இரத்தம் எல்லாம் பெரும்பாலும் வெளியேறி விட்டது. ஆனபடியினால், மிகுதியான தாகம் உண்டானது. அவர் மனுஷகுமாரனாக இவைகளையெல்லாம் அனுபவித்தபடியினால் அவருக்கு தாகம் ஏற்பட்டது ஓர் ஆச்சரியமே கிடையாது.

தாகம் என்றால் விசுவாசம் என்று அர்த்தமாகும் (யோவா6:35). இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். எந்த அளவுக்கு நீங்கள் அவர் மேலும், அவருடைய சத்திய வசனத்தின் மீதும் விசுவாசமாக இருக்கின்றீர்களோ, அந்த அளவுக்கு உங்களை இரட்ச்சித்த தேவனின் தாகத்தை நீங்கள் தீர்க்கின்றீர்கள் என்று அர்த்தமாகும். ஏனென்றால் "விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே" (ரோம 14:23) என்று வேதம் எச்சரிக்கின்றது.

ஜெபியுங்கள், விசுவாசியுங்கள், இயேசுவின் தாகத்தை தீருங்கள், அப்போது உங்களின் மனவிருப்பங்களையும் பிரயாசங்களையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுவார். நீங்களும் வெற்றியுள்ள வாழ்க்கையை வாழ்வீர்கள். "தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்" (மத்2535) என்ற மகிமை பொருந்திய இயேசுவின் வார்த்தை உங்களில் நிறைவேறுவதாக.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

d. அடையாளம் என்ற தண்ணீர்:-

"அடையாளம்" ஆம் இந்த வார்த்தை மிகவும் பரீச்சயமான வார்த்தையாகும். பரிசுத்த வேதம் கூட ஏராளமான அடையாளங்களைக் குறித்து சுட்டிக் காண்பிக்கின்றது. நெற்றி, முத்திரை, மாட்டுக் கொட்டகை, மேகம், அத்திமரம் துளிர்விட்டது. இவைகளெல்லாம் எப்படி அடையாளமாக காணப்படுகின்றதோ, அதே போல இயேசுவின் விலாவில் இருந்து வழிந்த தண்ணீரும் ஓர் மிக முக்கியமான அடையாளமாகும். இயேசு உங்களுக்காக எனக்காக சிலுவையில் மரித்து விட்டார் என்ற உறுதிபாட்டை கொடுத்ததே அவருடைய விலாவில் இருந்து வழிந்த கடைசி சொட்டு தண்ணீர்தான்.

இதேபோல நாமும் கூட நம்மை அழைத்த ஆண்டவருக்காய் நம்முடைய ஜீவனையும் கூட கிறிஸ்துவுக்காக இழக்கவும் ஆயத்தமாய் இருக்க வேண்டும் என்பதே தேவனின் நோக்கமாகும்.

இதே போல கடைசி நிமிடம் வரை கிறிஸ்து இயேசுவுக்காக வாழ வேண்டும், நமக்கு கிடைத்த ஒரே ஜீவன் என்கிற உயிரை ஆண்டவருக்காக விட வேண்டும், முடிந்தால் நம்முடைய உடலில் உள்ள ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் கூட இயேசுவின் நாம மகிமைக்காக சிந்தி, இரத்த சாட்சியாக மரிக்கவும் நாம் ஆயத்தமாக வேண்டும் என்பதையே மேற்கண்ட சம்பவம் காண்பிக்கின்றது.

இதை வாசிக்கும் நீங்கள் எப்படி, உங்கள் மனநிலை எப்படிப்பட்டது என்பதை சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவர் உங்களுக்காக எவ்வளவோ செய்திருக்க உங்கள் இரத்தத்தை, உடலின் தண்ணீரை கிறிஸ்துவுக்காக நீங்கள் சிந்த முன் வருவீர்களானால், உண்மையாகவே தேவ இராஜ்யமும், தேவ இராஜ்யத்தில் உள்ளதான சீயோன் பர்வதமும் உங்களுக்கு சொந்தமாகும் என்பதில் சந்தேகமில்லை.

e. இயேசுவின் பாடுகளுக்கு ஒப்பாக உவமையாய் சொல்லப்பட்டுள்ள சில தண்ணீர்கள்:-

1.	மத்27:24	பிரயோஜனமில்லாத தண்ணீர்
2.	மாற்14:13	குடத்தில் உள்ள தண்ணீர்
3.	லூக்7:44	கண்ணீர் என்ற தண்ணீர்
4.	யோவா4:14	தாகமுண்டாக்காத தண்ணீர்
5.	யோவா7:38	வேத வாக்கியம் என்ற தண்ணீர்
6.	யோவா 13:5	சுத்திகரித்த தண்ணீர்
7.	யோவா 19:34	இயேசுவின் கடைசி தண்ணீர்

XXXXII. பாடுகளும் பெத்தானியா மரியாளும் :—

"கர்த்தருக்கு பரிமளதைலம் பூசி தன் தலைமயிரால் அவரு–டைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே" (யோவா 11:2).

வேதனைக்கும் பாடுகளுக்கும் ஒப்பான இயேசுவின் சரீரத்தைத் தொட்ட ஸ்திரீகளில் பெத்தானியா ஸ்திரீக்கு மிக அதிகப் பங்குண்டு இயேசுவின் சரீரத்தைத் தொட்டதினாலோ என்னவோ, இவளைக்–குறித்த பல நல்ல சம்பவங்கள் நிறைய சொல்லப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் கன்னி மரியாளை குறித்து பேசப்படும் அளவுக்கு இந்த பெத்தானியா மரியாளைக் குறித்துப் பேசப்படாதது சற்று வருத்தமானதுதான். அநேகருக்கு மறைக்கப்பட்ட சத்தியம் நமக்கு வெளிப்படுத்தப்பட்டு இருப்பதால் நாம் தேவனைத் துதிப்–போம்.

a. ஊர்:—

ஒரு நபரைக் குறித்து தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவர்களின் ஊரை தெரிந்து கொண்டாலே போதும். அந்த நப–ரைக் குறித்த குணாதிசயங்களும் நமக்கு நன்றாக தெரிந்து விடும். அதைப் போல்தான் மரியாளும்.

இந்த மரியாளின் ஊர் பெத்தானியா என்பதாகும். பெத்தா–னியா என்றால் அத்திபழ வீடு என்று அர்த்தமாகும். இது, ஒலி–வமலைக்கு அடிவாரத்தில், எருசலேமிலிருந்து ஏறத்தால இரண்–டு மைல் தூரத்தில், அதாவது, மூன்று கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. எருசலேமிலிருந்து எரிகோ என்னும் ஊருக்கு போகின்றவர்கள் பெத்தானியாவைக் கடந்துதான் போக வேண்டும். வேதாகமக் காலத்தில் பெத்தானியா என்று அழைக்கப்பட்டப் பெயர் தற்காலத்தில் லாசரியா என்று அழைக்கப்படுகின்றது. லாசரியா என்பது லாசரு என்னும் பெயரிலிருந்து வந்ததாகும்.

இயேசுவுக்கு மிகப் பெரிய விருந்து கொடுத்த சீமோன் என்–னும் குஷ்டரோகியின் வீடும் இந்த ஊரில்தான் இருந்தது. இயேசு தம்முடைய ஊழிய நாட்களில் அதிகமாய் வந்து போன ஊர்களில் இதுவும் ஒன்று. இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெ–ழுந்து, கடைசியாக பரலோகத்துக்கு ஏறிப் போனதும் இந்த பெத்தானியாவிலிருந்துதான். இப்படி பல விஷேசங்கள் நிறைந்த ஊரைச் சேர்ந்தவள்தான் மரியாள்.

b. பெயர்:—

மரியாள் என்றப் பெயர் அனைவருக்கும் பரிச்சயமானதாக இருந்தாலும் பரிசுத்த வேதாகமத்தில் மொத்தம் ஏழுவித வேறு வேறு மரியாள்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. அந்த ஏழு பேரில் இவளுடைய பெயர் பெத்தானியா மரியாள் என்பதாகும். மரியாள் என்பதற்கு கண்ணீர் என்பது பொருளாகும். கண்ணீர் என்னும் பொருளுக்கேற்ப தன் கண்ணீரால் இயேசுவின் பாதங்க–ளையும் துடைத்தாள். பெத்தானியா மரியாளாகிய இவளுடைய பெயர் அநேக இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. அதிலும் விசேஷ–மாக யோவான் 11–ம் அதிகாரம் முழுவதும் இவளுடைய பெய–ரைக் காணலாம்.

இவளுடைய சகோதரியின் பெயர் மார்த்தாள், சகோதரனுடைய பெயர் லாசரு. இயேசு உயிரோடு எழும்பின லாசருவை குறித்து சொல்லும் போது, இந்த மரியாளின் பெயரையும் உச்சரிக்காத ஊழியக்காரரே இருக்க மாட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்–டும். அந்த அளவுக்கு இவளுடைய பெயரை பரிசுத்த ஆவியான–வர் பரிசுத்த வேதாகமத்தில் பிரபல்யப்படுத்தியுள்ளார். எபிரேய பாஷையில் மிரியாம் என்றாலும், கிரேக்கப் பாஷையில் மரியாள் என்றாலும் அர்த்தம் ஒன்றுதான்.

C. நற்க்கிரியைகள்:–

i. பாதத்தில் விழுந்தாள்:–

பெத்தானியா மரியாளிடம் காணப்பட்ட மிக நல்ல பழக்கங்க–ளில் ஒன்று இயேசுவின் பாதத்தில் விழுந்து அழுவதாகும் (யோவா 11:32). இயேசுவின் பாதத்தில் விழுந்த ஐந்து பேரை புதிய ஏற்பாட்டில் காணலாம். அந்த ஐந்து பேருமே விடுதலையை–யும், கிருபைகளையும் பெற்றுக் கொண்டனர்.

1. மாற் 7:25 அசுத்த ஆவி பிடித்த சிறு பெண்ணின் தாய் இயேசுவின் பாதத்தில் விழுந்தாள். மகளுக்கு விடுதலையைப் பெற்றுக் கொண்டாள்.

2. லூக் 5:8 சீமோன் பேதுரு இயேசுவின் பாதத்தில் விழுந்–தான். வலை கிழிந்து போகத்தக்கதாக மீன்களைப் பிடித்தான்.

3. லூக் 8:41 ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்பவன் இயேசுவின் பாதத்தில் விழுந்தான். பன்னிரெண்டு வயதுள்ள தன் மகளை மரணத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டான்.

4. வெளி 1:17 அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் இயே–சுவின் பாதத்தில் விழுந்தான். நான் (இயேசு) முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன் என்ற பெரிய வெளிப்–பாட்டைப் பெற்றுக் கொண்டான்.

5. பெத்தானியா மரியாள் இயேசுவின் பாதத்தில் விழுந்தாள். மரித்துப்போன தன் சொந்த சகோதரனை உயிருடன் திரும்பப் பெற்றுக் கொண்டாள். பெத்தானியா மரியாளைப் போலவும், மற்ற–வர்களைப் போலவும் நாமும் இயேசுவின் பாதங்களில் விழு–வோம். நமக்குள் போராடிக் கொண்டிருக்கிற போராட்டங்களிலிரு–தும், மரணக் கட்டுகளிலிருந்தும் முற்றிலுமாய் ஜெயத்தைப் பெற்–றுக் கொள்ளுவோம்.

ii. பரிமளம் பூசினாள்:–

வாசனைத் திரவியங்களை இயேசுவுக்காக அநேகர் பயன்படுத்–தினர். ஆனால் அவர்கள் எல்லாரிலும் இந்த மகதலேனா மரி–யாள் செய்ததுதான் மேன்மையாய் கருதப்படுகின்றது. காரணம், மற்றவர்கள் பயன்படுத்தின வாசனைத் திரவியங்களுக்கும், பெத்–தானியா மரியாளாகிய இவள் பயன்படுத்தின வாசனைத் திரவிய–மாகிய பரிமளத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

1. விலையேறப் பெற்றது.
2. களங்கமில்லாதது.
3. நளதம் போன்றது.
4. ஒரு ராத்தல் (300 பணம் மதிப்புள்ளது).
5. வாசனையினால் முழு வீட்டையும் நிரப்பக் கூடியது (யோவா 12:3).
6. இயேசுவின் மரண அடக்கத்தைக் காண்பிக்கக் கூடியது.

இந்த பரிமள தைலத்தைப் பூசினபடியினால், இயேசு சீக்கிரத்தில் மரிக்கப் போவதையும், அதனால் அவரை அடக்கம் பண்ணப் போவதையும், சொப்பனம் அல்லது தரிசனம் மூலம் கண்டிருக்க–லாம். அல்லது இயேசு தன்னுடைய மரணத்தை குறித்து சீஷர்–களுக்குச் சொன்னபோது லாசரு அங்கே இருந்திருந்து, அதை கேட்டிருந்தபடியினால் அவைகளை தன் சகோதரியாகிய மரியா–ளுக்குத் தெரிவித்திருந்திருக்கலாம். ஆக மொத்தம் இந்த சம்ப–வத்தின் மூலம் மரியாளும் ஓர் தீர்க்கதரிசியைப் போல இருந்துள்–ளாள் என்பது நன்றாக தெரிகின்றது.

பரிமளத் தைலத்தை இயேசுவின் பாதங்களில் பூசினாள் என்றும், துடைத்தாள் என்றும் வேதம் சொல்கின்றது. அப்படியானால் இவள் இயேசுவை தொட்டிருக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இப்படிப்பட்ட பாக்கியமும் சிலாக்கியமும் அங்கிருந்த வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. பெத்தானியா மரியாளுக்கு மட்டும் தான் கிடைத்தது.

iii. உட்கார்ந்திருந்தாள்:–

உட்காருதல் என்ற வார்த்தையை கேட்பது எளிது. ஆனால், ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்திருத்தல் என்பது கூடாத காரியமாகும். ஆனால், பெத்தானியா மரியாளோ உட்கார்ந்திருந்தாள் என்று இரண்டு இடங்களில் வாசிக்கின்றோம். இரண்டுமே ஆழ்ந்த சத்தியத்தை வெளிப்படுத்தும் பகுதிகளாகும்.

ஒன்று:– "அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள் (லூக் 10:39). எவ்வளவு இனிமையான அனுபவம் என்று பாருங்கள். வசனத்தை பேசுகிறவர்கள் இந்நாட்களில் அதிகம். ஆனால் தேவனுடைய சமூகத்திலும், கர்த்தருடைய பாதத்திலும் உட்கார்ந்து வசனத்தை கவனமாய்க் கேட்கிறவர்கள் மிக மிக குறைவு.

இயேசுவின் பாதங்களை மரியாள் தொட்டபடியினால் இயேசுவின் வசனங்களை கேட்கும் குணமும் மரியாளுக்குள் ஊடுருவ ஆரம்பித்தது. அதனால் நல்ல பங்கைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியமுள்ளவளாக மாறினாள்.

"வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள்" (மாற் 4:20) என்ற வசனத்தின்படி பலனுக்கு மேல் பலன் கொடுக்க ஆரம்பித்தாள். அன்பானவர்களே, வசனத்தை கேட்பதற்கு மட்டும் உங்கள் காதுகளை மூடி விடாதீர்கள். எப்போதெல்லாம் சமயம் வாய்க்கின்றதோ, அப்பொழுதெல்லாம் தவறாமல் வசனங்களைக் கேளுங்கள், அப்பொழுது உங்களுடைய பலன் நாளுக்கு நாள் பெருகி கொண்டேயிருக்கும்.

இரண்டு:– மரியாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள் (யோவா 11:20, 28). அமைதலும் அடக்கமும் உள்ளவள் என்பதை இந்த சம்பவம் வெளிப்படுத்துகின்றது. லாசரு மரித்து விட்டபடியினால் மார்த்தாள் புலம்பிக் கொண்டிருக்கிறாள். யூத ஜனங்கள் அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டுள்ளனர். சீஷர்கள் திகைத்துப் போயுள்ளனர். இயேசுவோ அழுது கொண்டுள்ளார்.

இப்படி பலரும் பலவிதங்களில் அங்கலாயத்துக் கொண்டிருக்கும் போது மரியாளோ அமைதியாய் வீட்டிற்குள் உட்கார்ந்திருந்தாள். இதுதான் தேறின அனுபவமுள்ள விசுவாசிகளுக்கு அடையாளம். ஊர் முழுவதும் எல்லாரும் திண்டாடினாலும், விசுவாசியோ அல்லது கர்த்தருடைய ஊழியக்காரர்களோ திண்டாடவும் கூடாது, அங்கலாய்க்கவும் கூடாது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

எல்லாரும் துக்கத்தினால் நிறைந்திருந்தனர். ஆனால் மரியா–ளோ அமைதியாய் இருந்தாள். இயேசுவிடம் இருந்து அழைப்பு வரும் வரை அவள் உட்கார்ந்தே இருந்தாள். அழைப்பு வந்ததும் கொஞ்சம் கூட தாமதம் இல்லாமல் எழுந்து ஓடிப் போய் இயே–சுவை சந்தித்தாள். இந்த முன்மாதிரியின் ஜீவியம் நம்முடைய வாழ்விலும் கட்டாயம் காணப்பட வேண்டும். எப்போதும், எல்லா இடங்களுக்கும் ஓடிக் கொண்டிருக்காதீர்கள். அமைதியாய் இருங்–கள், உட்கார்ந்தே இருங்கள். அப்பொழுது பெரிய இடங்களில் இருந்து உங்களுக்கு அழைப்பு வரும். உங்களுக்கு கனமும், மேன்மையும் உண்டாகும்.

அன்பானவர்களே, உங்கள் ஊரை ஓர் அடையாளமாக மாற்–றுங்கள். உங்களுடைய பெயர் சாட்சியாய் சொல்லப்படும்படியாக ஜீவியம் பண்ணுங்கள். தேவனுடைய பாதத்தில் விழுந்து கிடந்து ஜெபியுங்கள். பல மணி நேரம் கர்த்தருடைய பாதத்தில் உட்கார்ந்–திருக்க பழகிக் கொள்ளுங்கள். யாரும் அழைக்காமல் எங்கேயும் போகாதிருங்கள். இப்படி நீங்கள் உங்களை மாற்றிக் கொண்டால் உங்களையும் உங்கள் வாழ்க்கையும் ஆண்டவர் இயேசு பரிமள தைலத்தைப் போல வாசனை வீசச் செய்வார்.

d. பெத்தானியா மரியாளைக் குறித்து மரியாள் என்றப் பெயருடன் சொல்லப்பட்டுள்ள உவமையான சில வசனங்கள்:–

1. லூக் 10:42 — தேவையான ஒன்றைதெரிந்து கொண்ட மரியாள்
2. யோவா 11:2 — கர்த்தருயை பாதங்களைத் துடைத்த மரியாள்
3. யோவா 11:20 — வீட்டிலே உட்கார்ந்திருந்த மரியாள்
4. யோவா 11:28 — போதகரின் அழைப்புக்காக காத்திருந்த மரியாள்
5. யோவா 11:32 — இயேசுவின் பாதத்தில் விழுந்த மரியாள்
6. யோவா 11:31 — சீக்கிரமாய் செயல்படுகிற மரியாள்
7. யோவா 11:45 — அநேகர் இயேசுவை விசுவாசிக்கக் காரணமாய் இருந்த மரியாள்
8. யோவா 12:3 — வீட்டை வாசனையால் நிறைத்த மரியாள்

XXXXIII. இயேசுவைத் தொட்டவர்கள் :–

"நான்தான் என்று அறியும்படி என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள். என்னைத் தொட்டுப் பாருங்கள்"(லூக் 24:39).

தொட்டுப்பார்க்குதல் என்பது ஒரு சாகசமான அனுபவம் ஆகும். பலரும் பலரையும் தொட்ட சம்பவங்களை வேதம் முழுவதும் நம்–மால் பார்க்க முடியும். தூதன் விடியற்காலத்தில் யாக்கோபை தொட்டான். எஸ்தர் அகாஸ்வேரு இராஜாவின் பொற்செங்கோ–லைத் தொட்டாள். நெருப்புத்தழல் ஏசாயா தீர்க்கதரிசியை தொட்–டது. காபிரியேல் தூதன் தானியேலைத் தொட்டான். பேதுருவின் மாமியின் கையை இயேசு தொட்டால் ஜுரம் நீங்கினது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால், இயேசுவின் பாடுகளின் போதும், அவருடைய மகா உபத்திரவத்தின் போதும் அவரைத் தொட்டவர்கள் யார் யார் என்றும், இயேசுவை ஏன் தொட்டார்கள் என்பதையும் உற்று கவனிப்பது உண்மையாகவே பிரயோஜனமான ஒன்றாக இருக்கும். அறிந்ததையே அறிந்துக் கொள்வதும், தெரிந்ததையே தெரிந்து கொள்வதும் பல நேரங்களில் பலன் தராது. அதற்குப் பதில் சலிப்பைதான் தரும். புதிதானவைகளை அறிந்து கொள்வோம், வித்தியாசமானவைகளை தெரிந்துக் கொள்வோம். மற்றவர்களுக்கு முன் மாதியாக மாறுவோம்.

a. போர்ச்சேவகர்கள்:-

இயேசுவின் பாடுகளின் போதும், உபத்திரவம் மற்றும் விசாரணை போன்றபல கொடிய நேரங்களிலும் பங்காளார்களைப் போல அருகிலேயே இருந்து சம்பவங்களை நிறைவேற்றினது. இந்த போர்ச் சேவகர்கள்தான். காரணம், இவர்களின் செய்கைகள் மிகவும் முரட்டு குணமுள்ளதாகவே இருந்ததைக் காணலாம். பலவிதமான போர்ச்சேவகர்கள் இயேசுவின் நாட்களில் இருந்தனர். அதில் குறிப்பாக மூன்று வகையான போர்ச்சேவகர்கள் இயேசுவின் மகா உபத்திரவத்திற்க்குக் காரணமாக இருந்தனர்.

1) மத் 27:27 — தேசாதிபதியின் போர்ச்சேவகர்கள்
2) லூக் 23:11 — ஏரோதின் போர்ச்சேவகர்கள்
3) யோவா 18:3 — பிரதான ஆசாரியர்களின் போர்ச்சேவகர்கள்

இவர்களை தவிர ஆயிரம் போர்ச்சேவகருக்கு தலைவன் என்று ஒருவன் இருந்தான் (யோவா 18:12). இவனைக் குறித்து இந்த ஒரு இடத்தில் மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது.

இயேசுவை கெத்சமெனே தோட்டத்தில் பிடித்தது முதல் கல்லறையில் வைத்து காவல் காத்தது வரை ஏறத்தால ஆயிரம் போர்ச்சேவகர்களாவது ஈடுபட்டிருப்பார்கள் என்று ஒரு ஆய்வு சொல்கிறது (மத் 27:27). ஏனென்றால், "போர்ச்சேவகரின் கூட்டம் முழுவதையும் அவரிடத்தில் கூடி வரச் செய்து" (மத் 27:27) என்று வசனம் சரியாய் கணக்கிட்டு சொல்கிறது.

இந்த போர்ச்சேவகர்கள் இயேசுவுக்கு என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை வேத வசனத்தின் விளக்கத்துடன் வரிசையாக காணலாம்.

1. யோவா 18:12 — கெத்சமெனே தோட்டத்தில் போய் இயேசுவை பிடித்ததும் இவர்கள்தான். இறுக்கி கட்டினவர்களும் இவர்கள் தான்.
2. யோவா 19:2 — இயேசுவின் தலையில் முள்முடியை சூட்டினதும் இவர்கள் தான்.
3. யோவா 19:2 — இயேசுவுக்கு சிவப்பான அங்கியை உடுத்தி விட்டதும் இவர்கள்தான்.
4. யோவா 19:23 — இயேசுவை துடிக்க துடிக்க சிலுவையில் அறைந்ததும் இவர்கள்தான்.
5. லூக் 23:36 — சிலுவையில் இயேசுவுக்கு குடிக்க காடியை கொடுத்தவர்களும் இவர்கள்தான்.

6. யோவா 19:23,24 — சிலுவைக்கு அருகே உட்கார்ந்து சீட்டு குழுக்கி போட்டதும் இயேசுவின் வஸ்திரங்களை பங்கு போட்டுக் கொண்டவர்களும் இவர்கள்தான்.

7. யோவா 19:34 — சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவின் விலாவில் ஈட்டியினால் குத்தினவர்களும் இவர்களே.

8. யோவா 19:32 — கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல், கள்ளர்கள் இருவரின் கால் எழும்புகளை முறித்தவர்களும் இவர்களே.

"மூடன் வாயில் அகப்பட்ட பழமொழி வெறியன் கையில் அகப்பட்ட முள்ளு" (நீதி 26:9) என்ற சொல்லுக்கு ஏற்ப, போர்ச்சேவகர்களின் கையில் அகப்பட்ட இயேசுவும் படாத பாடுகளையெல்லாம் பட்டார். அருமையானவர்களே, சிலுவை பாடுகளை வழக்கம்போலவும், எப்போதும் போலவும் சிந்திக்காமல் அணுஅணுவாய் ஆராய்ந்து பார்த்து சிந்தியுங்கள். அப்படி சிந்தித்து பார்த்தால் நீங்கள் சாகின்றவரைக்கும் பாவமே செய்ய மாட்டீர்கள். இது உண்மை.

b. ஊழியக்காரர்கள்:—

இயேசுவின் உயிருள்ள சரீரத்தை தொட்டவர்களில் ஊழியக்காரர்களும் அடங்குவர். ஆனால் இவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் கிடையாது. மெய் தெய்வமாகிய இயேசுவை உயிருள்ளவராய் நேரில் கண்டிருந்தும், இயேசுவுக்காக வாழாமல், அதிகாரிகள் என்னும் அந்நியர்களுக்கு ஊழியம் [வேலை] செய்கிற ஊழியக்காரர்கள்.

இவர்களில் நான்கு வகையிலான ஊழியக்காரர்கள் அந்நாட்களில் எருசலேமில் இருந்தனர்.

1. யோவா 18:3 — பிரதான ஆசாரியரின் ஊழியக்காரர்கள்.
2. யோவா 18:3 — பரிசேயரின் ஊழியக்காரர்கள்.
3. யோவா 18:12 — யூதருடைய ஊழியக்காரர்கள்.
4. யோவா 18:18 — இவை தவிர அங்கிருந்த சேவகர்களின் சொல்லை கேட்கும் [வேலைக்காரர்கள்] ஊழியக்காரர்களும் இருந்தனர்.

இயேசு ஒரு முறை தன்னுடைய வாயினால் "பிரயோஜனமற்ற ஊழியக்காரனாகிய இவனை" (மத் 25:30) என்று சொன்னார். ஆம், மேற்கண்டவர்களின் பெயரில் ஊழியக்காரர்கள் என்கிற உச்சரிப்பு இருந்தாலும், இவர்கள் வேலைக்காரர்கள்தானே தவிர, ஊழியக்காரர்கள் கிடையாது. கர்த்தராகிய இயேசுவின் பார்வையில் இவர்கள் அனைவரும் பிரயோஜனமற்ற ஊழியக்காரர்கள்.

இயேசுவை பிடித்து, அன்னா, காய்பா, பிலாத்து மற்றும் ஏரோது போன்ற பிரதானமானவர்களிடம் அழைத்துச் சென்று குற்றவாளிக் கூண்டில் நிற்பதைப் போல நிற்க வைத்ததும் இந்த ஊழியக்காரர்களே.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் ஊழியக்காரர்களே, ஊழியக்காரிகளே மேலே கண்ட நான்கு விதமான ஊழியர்களைப் போல் அல்லாமல், அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைப் போல "இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன். என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக் கொள்ளும் (பிலே 11,12) என்ற உண்மையுள்ள, அன்புள்ள ஊழியர்களாய் மாறுங்கள். "உள்ளம் போலிருக்கிற அவனை" என்ற வார்த்தைக்கு ஏற்றபடி, கிறிஸ்து இயேசுவின் உள்ளத்தைப் போல நீங்கள் மாறினால் உங்களையும் ஒரு ஒநேசிமுவாக மாற்றுவார். அப்போஸ்தலனாகிய பவுல் போன்ற பெரிய மனிதர்களின் தயவும் கிடைக்கச் செய்வார்.

C. பிரதான ஆசாரியர்:–

ஆசாரியர்கள் என்ற பெயரைச் சொன்னாலே அவர்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகா பரிசுத்தமான ஊழியத்தைச் செய்கின்றவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், இயேசுவின் சிலுவை பாடுகளின் போது சொல்லப்பட்டுள்ள ஆசாரியர்களோ அல்லது பிரதான ஆசாரியர்களோ அப்படியல்ல, இவர்களின், நடை, உடை, குணம், சுபாவம், செய்கை அனைத்துமே வேதாகமத்திற்கு எதிரானதாக இருக்கும்.

நியாய பிரமாணத்தை கற்று, சத்திய பிரமாணத்தைப் பேசுவார்கள். சடங்காச்சாரங்களையும், ஆச்சாரங்களையும் தவறாமல் கடைபிடிப்பார்கள். மனிதர்கள் மீது சற்றும் இரக்கம் பாராட்டாதவர்கள். பதவியையும், அதிகாரத்தையும் அதிகமாய் விரும்பி எதிர்பார்ப்பவர்கள்.

இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றும், என்னவெல்லாம் செய்தார்கள் என்றும் வேதாகமம் சில ஆதாரங்களை நமக்குத் தந்துள்ளது. அவைகளை வேதவசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

1. மத் 21:25 — கேள்வி கேட்பதில் கில்லாடிகள்
2. மத் 26:3,4 — தந்திரமாய் செயல்படுகிறவர்கள்
3. மத் 27:20 — ஜனங்களை ஏவிவிடும் சுபாவமுள்ளவர்கள்
4. மத் 28:12 — லஞ்சம் கொடுக்கும் பழக்கமுள்ளவர்கள்
5. மத் 21:15 — கோபப்படுவதில் கை தேர்ந்தவர்கள்
6. லூக் 23:10 — பிடிவாத குணத்தால் நிறைந்தவர்கள்
7. யோவா 19:15 — ஆண்டவரை தள்ளிவிட்டு, இராயனை ராஜாவாக நினைப்பவர்கள்
8. மாற் 8:31 — இயேசுவை ஆகாதவன் என்று சொன்னவர்கள் இவர்களே
9. மத் 27:63 — பரிசுத்தமான இயேசுவை எத்தன் என்ற வார்த்தையால் ஏசினவர்கள்
10. மத் 27:41,42 — இயேசுவை திராணியில்லாதவன் என்று எள்ளி நகையாடினவர்கள்
11. மத் 20:18 — இயேசுவுக்கு மரண தண்டனைதான் தர வேண்டும் என்று தீர்ப்பு செய்தவர்கள் இவர்களே
12. மத் 16:21 — இயேசுவின் பாடுகளுக்கும், கொலைக்கும் காரணகர்த்தாக்களாக விளங்கினவர்கள்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

பிரதான ஆசாரியர்கள் என்று பலர் இருந்தாலும், இவர்களுக் கெல்லாம் மேற்பட்ட அந்த வருஷத்து பிரதான ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் காய்பா (மத் 26:57). இவனுக்கென்று ஓர் பெரிய அரண்மனையும் உண்டு.

ஆசாரியர்கள் என்று பெயர் பெற்றும், ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்றாமல் இருப்பதை விட, ஊழியக்காரன் என்ற வேலைக்காரனாய் இருந்து விடுவது நல்லது. இயேசுவும் ஆசாரியர்தான். ஆனால், மகா பிரதானமான தெய்வீக ஆசாரியர். பிரதான ஆசாரியர்களை மறப்போம். மகா பிரதான ஆசாரியராகிய இயேசுவை பின்பற்றுவோம்.

d. மூப்பர்கள்:–

இயேசுவைத் தொட்டவர்களில் மூப்பர்களுக்கும் தொடர்புண்டு. ஏனென்றால் சேவகர்கள், ஆசாரியர்கள் ஊழியர்கள் ஆகியோரோடு இவர்களும் கூட்டாகவே இருந்தனர். மூப்பர் என்றால் முதன்மையானவர்கள் என்று பொருளாகும். சபையிலும் சங்கத்திலும் உள்ள உறுப்பினர்களில் முதன்மையான இடம் பிடித்தவர்கள் இந்த மூப்பர்கள்தான்.

மூப்பர்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதை தெரிந்து கொண்டு விட்டால், மூப்பர்கள் எப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

- மந்தையை மேய்க்கணும்.
- யாரையும் கட்டாயப்படுத்தக் கூடாது.
- எதையும் மனப்பூர்வமாய் செய்ய வேண்டும்.
- அவலட்சணமாய் காணப்படக் கூடாது.
- ஆதாயத்தைத் தேடக் கூடாது.
- உற்சாகமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
- இறுமாப்பு காணப்படக் கூடாது.
- எப்போதும் முன்மாதிரியாய் இருக்க வேண்டும்.
- அனைத்தையும், அனைவரையும் கண்காணிக்க வேண்டும் (Iபேது 5:1,2,3,4).

மேற்கண்ட நியமங்களின்படிதான் மூப்பர்கள் இருக்க வேண்டும். ஆனால், இயேசுவின் பாடுகளில் சம்மந்தப்பட்ட மூப்பர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. அதற்கு மாறாக அவர்களின் சுபாவமும், செய்கைகளும் முற்றிலும் எதிர்மறையாய் இருந்தது. விடியற்காலத்திலேயே இயேசுவை பிடித்துக் கொண்டு வந்து நிறுத்தி கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டனர் (லூக் 22:66).

இயேசுவை அவமதிக்கும் வண்ணமாக அவன், இவன் என்று அவலட்சணமான முறையிலும் பேசினார்கள் (லூக் 22:71). "நாங்கள் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க கொண்டு போய் விட்டார்கள் என்று சொல்லுங்கள் (மத் 28:12,13) என்று ஜனங்களை பொய் சொல்லவும் வைத்தார்கள். இயேசுவின் பாடுகளின் சமயத்தில் மட்டும் மூப்பர்கள் என்றவார்த்தை ஏறத்தால இருபத்தி நான்கு முறைவருகிறது. அந்த இருபத்தி நான்கு முறையும் அவர்கள் செய்ததான தவறுகளைத்தான் பார்க்க முடியும்.

மூப்பர்கள் செய்யக் கூடாததையெல்லாம் செய்து, நடப்பிக்கக் கூடாததையெல்லாம் நடப்பித்தபடியினால் "ஆனாலும், மூப்பரிடத்திலே ஆலோசனையும் இராமல் ஒழிந்து போகும்" (எசே 7:26) என்ற தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனமும் நிறைவேறி முடிந்தது.

அன்பானவர்களே, பரிசுத்த மூப்பர்களே, இந்த கடைசி காலத்தில் வேதத்தை வாசியுங்கள், தியானியுங்கள். அதிகமாய் ஜெபியுங்கள். எப்போதும் தேவனை ஸ்தோத்தரியுங்கள். முன்மாதிரியுள்ள ஊழியம் செய்ய அர்ப்பணியுங்கள். அப்போது கர்த்தர் உங்களில் மகிமைப்படுவார். மேலே நாம் கண்ட மூப்பர்கள் இயேசுவின் சரீரத்தைத் தொட்டனர். ஆனால் பாவிகளாகவே வாழ்ந்தனர். ஆதலால், நீங்கள் இயேசுவைத் தொட வேண்டாம். ஆண்டவர் இயேசு உங்களையும் உங்கள் உள்ளத்தையும் தொடுகிறார்.

e. வேதபாரகர்:-

வேதபாரகர் என்றால், தீர்க்கதரிசன புஸ்தகத்தையும் நியாயாதிபதி புஸ்தகத்தையும் விளக்குபவர்கள். பிரதான ஆசாரியர்கள், சதுசேயர்கள், பரிசேயர்கள் சொல்வதை எழுதுபவர்கள் நியாயபிரமாணத்தையும், வேதாகம வார்த்தைகளையும் எழுதுகிறவர்கள். இப்படியெல்லாம் வேதமும், வேதத்தை சார்ந்தவர்களாயும் இருந்திருக்க வேண்டியவர்கள். ஆனால், அப்படியிராமல் முற்றிலும் மாறுபாடு உள்ளவர்களாகவும், மாறுபட்டவர்களாகவும் வாழ்ந்துள்ளனர். இயேசுவின் பாடுகளின் நாட்களில் வாழ்ந்த வேதபாரகர்களைக் குறித்து வேதம் மூன்றாக பிரித்துக் காண்பிப்பதை உணரலாம்.

i. சுபாவம்:-

நீதி, இரக்கம், விசுவாசம் என்னும் மிக முக்கியமான மூன்றையும் விட்டு விட்டவர்கள் (மத் 23:23). சிறு பிள்ளைகளின் செய்கைகளைக் கூட பொறுத்துக் கொள்ளாமல், மிகவும் கோபப்படுகிறவர்களாக இருந்தனர். தங்கள் கண்களுக்கு முன்பாக நின்றுக் கொண்டும், நன்மைகளை செய்துக் கொண்டுமிருந்த இயேசுவை அவர்கள் நம்பாமல் மீண்டும் எலியா வர வேண்டும் என்று, இல்லாத தீர்க்கதரிசியை தேடிக் கொண்டிருந்தனர் (மத் 17:10). இப்படிப்பட்டவைகள் தான் அவர்களின் சுபாவமாய் இருந்தது. "உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்" (ரோம 1:31) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதினதைப் போலவே இவர்களின் வாழ்க்கையும் மாறிப் போனது.

ii. கிரியைகள்:-

நற்கிரியைகளை செய்ய வேண்டியவர்களாகிய இவர்கள் பாரம்பரியத்தை கடைபிடிக்கிறவர்களாய் காணப்பட்டனர். கணவன் இல்லாத ஸ்திரீகளாகிய விதவைகளையும், விதவைகளின் வீடுகளையும் பட்சிக்கிறவர்களாகவும் இருந்தனர் (மத் 23:14). இதையெல்லாம் தங்களின் கிரியைகளாய் செய்ததுமல்லாமல் அடையாளத்தை விரும்புகிறவர்களாகவும் இருந்துள்ளனர். பயங்கரமும், படுபயங்கரமுமான கிரியைகளை செய்தவர்களாகிய இவர்களைக் குறித்து ஆண்டவர் இயேசுவே ஒரு குற்றச்சாட்டையும் வைக்கிறார். "மாயக்காரராகிய வேதபாரகரே! உங்களுக்கு ஐயோ. மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை (மத்23:13). வேத பிரமாணங்களையும் வேத வசனங்களையும் எடுத்துச் சொல்லி, அநேகரை பரலோகத்திற்குள் அனுப்ப வேண்டியவர்களாகிய இவர்கள் பரலோகத்தை பூட்டிப்போடுமளவுக்கு துராக்கிருதம் பண்ணுகிறவர்களாயிருந்துள்ளனர். ஆனபடியினால்தான் இயேசு இவர்களைப் பார்த்து உங்களுக்கு ஐயோ என்றார்.

iii. வார்த்தைகள்:–

வேதபாரகர்களாகிய இவர்கள் வேதத்தைப் பேசுவதை விட வார்த்தை ஜாலத்தை காண்பிக்கின்றவர்களாகத்தான் இருந்துள்–ளனர். இவர்கள் நீண்ட ஜெபம் செய்வார்கள். ஆனால், உண்மை–யாய் அப்படி செய்யாமல் பார்வைக்கு நீண்ட ஜெபம் செய்கிறவர்க–ளாக இருந்தனர் (மாற் 12:40). அதினால் அதிக ஆக்கினையை–யும் அனுபவித்தார்கள். ஆகாத காரியத்தைக் குறித்து அவசிய–மேயில்லாதவைகளுக்காக தர்க்கம் பண்ணி நேரத்தை செலவ–ழிப்பார்கள் (மாற் 9:14,16). இப்படி தர்க்கம் பண்ணினதினால் –அவர்கள் எந்தவொரு பயனையும் பெற்றதும் இல்லை.

இயேசு திமிர்வாதகாரனைப் பார்த்து, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொன்னபோது "இவன் தேவ தூஷணம் சொல்லுகிறான்" (மத் 9:3) என்று தங்கள் மனதினால் இயேசு–வை தூஷித்தவர்களும் இந்த வேதபாரகர்தான். பிசாசுகளின் தலைவன் இயேசு என்று சொல்லியும் இயேசுவை இகழ்ந்தனர். நான்கு சுவிசேஷங்களையும் படித்து பார்த்தால் வேதபாரகராகிய இவர்கள் நல்ல வார்த்தைகளை நிறைய பேசினதாக எங்கும் சொல்லப்படவில்லை.

விளைவு:–

சுபாவத்திலும், வார்த்தையிலும், கிரியைகளிலும் மாறுபட்டவர்–களாய் இவர்கள் காணப்பட்டபடியினால் இயேசு இவர்களைப் பார்த்து வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே என்று சொன்னார். அப்படியானால் என்ன அர்த்தம்! கல்லறைக்குள் இருப்பவர்கள் எப்படி செத்து போனவர்களோ, அதேபோல வேதபாரகராகிய இவர்–களும் உயிரோடே செத்தவர்களைப் போலதான் வாழ்கின்றனர் என்று அர்த்தம்.

ஐயோ என்னும் சாப வார்த்தைக்கு உள்ளாகும் அளவுக்கு இவர்களின் செயல்கள் இருந்தது. வேதபாரகர்களைப் பார்த்து ஏறத்தால பத்து முறைஉங்களுக்கு ஐயோ, உங்களுக்கு ஐயோ என்று இயேசு கூறியுள்ளார். அதிலும் விசேஷமாக மத்தேயு சுவி–சேஷம் இருபத்தி மூன்றாம் அதிகாரத்தில் மட்டும் எட்டு முறை ஐயோ என்றவார்த்தையினால் சபித்துள்ளார்.

அன்பானவர்களே, நாம் வேதபாரகர்களைப் போல் இராமல், வேதத்துக்கு நாமக்காரராகிய இயேசு கிறிஸ்துவைப் போல் மாறு–வோம், வாழுவோம்.

XXXIV. வேலைக்காரனாகிய மல்குஸ்:–

"அந்தபடியே அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதறவெட்டினான். அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு, அவனை சொஸ்தப்படுத்தினார்" (லூக் 22:50,51).

கை நீட்டி இயேசு தொட்ட மனித உடல் உறுப்புக்களில் மல்குஸ்ஸின் காது முக்கியமானதாகும். இவனைக் குறித்து நான்கு சுவிசேஷங்களிலும் ஏறத்தால ஐந்து முறை சொல்லப்பட்டுள்ளது. அதிலும் அவனுடைய பெயர் யோவான் சுவிசேஷத்தில் மட்டும் ஒரே ஒரு முறைமட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. முதலாவது இவனுடைய பெயரின் உச்சரிப்பை நன்கு தெரிந்து கொள்வது நல்லது. இவனைக் குறித்து சொல்லும் போது எல்லோரும் மல்கூஸ் என்றுதான் சொல்கிறார்கள், பேசுகிறார்கள், உச்சரிக்கிறார்கள். அது தவறு. அவன் பெயர் மல்கூஸ் அல்ல மல்குஸ். மல்குஸ் என்றால் இராஜா என்று அர்த்தமாகும்.

ஆனாலும் இவன் இராஜா கிடையாது, வேலைக்காரன்தான். வேலைக்காரனாக இருந்தாலும் இராஜா என்று அர்த்தம் உடைய பெயரை கொண்டவனாக இருந்துள்ளான். இந்த மல்குஸ்ஸை குறித்து தியானிக்க ஐந்து காரணங்கள் உள்ளதை வேதத்தில் காணலாம். அவைகளை பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு ஒவ்வொன்றாக தியானிக்கலாம்.

a. சீமோன் பேதுரு:–

மல்குஸ்ஸின் காதை வெட்டினவன் சீமோன் பேதுருதான் [யோவா18:10]. காரணம்! அப்போது அவன் சீமோன் பேதுருவாக இருந்தான். சீமோன் என்றால் மீன் பிடிக்கிறவன் என்றும், பேதுரு என்றால் கழனமானவன் அல்லது உறுதியானவன் என்றும் அர்த்தம். சீமோனாகவும் இல்லாமல் பேதுருவாகவும் இல்லாமல் சீமோன் பேதுருவாக இரட்டை வேஷம் உள்ளவனாய் இருந்தபடியினால்தான் அவசரத்தில் அடுத்தவனை போய் வெட்டுகிறவனாய் மாறி விட்டான். இரட்டை வாழ்க்கை வாழ்கிறயாரானாலும் சரி அவர்கள் இப்படித்தான் அவசர முடிவை எடுப்பார்கள். ஆனால், அது நன்மையில் போய் முடியாது.

சீமோன் பேதுரு தன்னிடத்தில் பட்டயம் வைத்திருந்தான் என்று வேதம் திட்டமும் தெளிவுமாகக் கூறுகின்றது. இவன் கையில் எதற்கு பட்டயம் ஒரு பக்கம் அவன் மீனவனாய் இருந்தான். மீனை பிடிக்கிறதற்கும் பட்டயத்திற்கும் சம்மந்தமே இல்லை. மற்றொருபுறம் அவன் சீஷன், சீஷன் என்றால் எல்லாவற்றையும் விட்டவன் என்று அர்த்தம். "சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல" [மத் 10:24] என்று இயேசுவே சொன்னார்.

தன் போதகரும், தன் எஜமானனுமாகிய இயேசுவே பட்டயத்தை எடுக்கவில்லை. அவர் பட்டயத்தை வைத்திருக்கவும் இல்லை. அப்படியானால் சீஷனாகவும், வேலைக்காரன் போலும் இருக்கிறபேதுரு பட்டயத்தை எடுத்திருக்கலாமா என்பதை யோசித்துப் பாருங்கள். பேதுருவின் அழைப்புக்கும், தகுதிக்கும் மிஞ்சின தவறான ஒரு பொருள் [பட்டயம்] அவனிடம் இருந்தபடியினால் அவன் இரத்தம் சிந்துகிறவனாக மாறினான்.

அருமையானவர்களே, நீங்கள் யார் என்றும், உங்களைக் குறித்த இயேசுவின் அழைப்பும், தெரிந்து கொள்ளுதலும் என்ன என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். கர்த்தருக்கு பிரியமில்லாத தவறான பொருட்களோ, பழக்க வழக்கங்களோ இருந்தால் அவைகளைத் தூக்கி எறியுங்கள். அப்போது தேவன் உங்களைக் காத்துக் கொள்ளுவார்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

பேதுரு மல்குஸ்ஸின் காதை வெட்டின போது இயேசு சொன்ன வார்த்தையை கவனியுங்கள். "அப்பொழுது இயேசு: இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி (லூக்22:51). அன்று சொன்ன இயேசு, உங்களைப் பார்த்து இன்றும் சொல்கிறார் நிறுத்துங்கள். ஆகாததையும், தவறானதையும், பாவமுமான பட்டயத்துக்கு ஒப்பானவைகளை இன்றோடு, இப்போதே நிறுத்துங்கள். இனிமேலும் சீமோனாகவோ, பேதுருவாகவோ, இராதீர்கள். அதற்கு பதிலாக அப்போஸ்தலர்களாக மாறுங்கள். அப்போது பிதாவாகிய தேவன் உங்களில் பிரியப்படுவார்.

b. பட்டயங்கள்:-

"அதற்கு அவர்கள்: ஆண்டவரே, இதோ, இங்கே இரண்டு பட்டயம் இருக்கிறது என்றார்கள். அவர்: போதும் என்றார்" (லூக்22:38).

இயேசுகிறிஸ்துவின் முப்பத்தி மூன்று ஆண்டு வாழ்க்கையில் கடைசி நாட்கள் அவருக்கு கொடுமை நிறைந்த நாட்களாகவே இருந்தது. அதில் ஒன்று தான் பட்டயம் எதிர் கொண்ட நாட்களாகும்.

இயேசுவை காட்டி கொடுக்க யூதாஸ்காரியோத்து ஒரு கூட்டமாக வந்தான். அப்போது அதில் யாரோ ஒருவன் மட்டும் பட்டயத்தை வைத்திருக்கவில்லை. பலர் கைமிலும் பட்டயங்கள் இருந்தது. இதை லூக் 22:52-ல் இயேசுவே சொல்லியுள்ளார்.

பட்டயம் என்றால் கொடுமையின் கருவி (ஆதி 49:5) என்று அர்த்தமாகும். இயேசுவை பிடிக்க வந்தவர்களின் கையில் இருந்த ஆயுதங்கள் மட்டும் கொடுமையாயிருக்கவில்லை. அவர்களுமே கொடுமையானவர்களாகவே காணப்பட்டனர். "அவர்கள் பட்டயங்களுக்கும், உருவின கட்கத்துக்கும், நாணேற்றின வில்லுக்கும், யுத்தத்தின் கொடுமைக்கும் தப்பி ஓடுகிறார்கள்" (ஏசா21:15) என்ற வேத வசனத்தின்படி பட்டயங்களைக் கண்டதும் சீஷர்களும் கூட இயேசுவை விட்டு விட்டு ஓடி விட்டனர். ஆனால், இயேசு மட்டும் தைரியமாகவும், தேவ கிருபையோடும் அந்த சூழ்நிலையை எதிர் கொண்டார்.

இந்த சம்பவங்கள் ஏன் நடந்தது என்று நினைக்கத் தோன்றும். "அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள்" (எசே38:4) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்க்காகவே இவைகள் அனைத்தும் நடந்தது.

இயேசுவை பிடிக்க வந்த இடம் தோட்டமாய் இருந்தது. அந்த தோட்டம் உலகத்தையும், பிடிக்க வந்த ஜனங்கள் இரட்சிக்கப்படாதவர்களையும், பட்டயம் என்பது கொடுமையையும், சீஷர்கள் என்றால் மனந்திரும்பினவர்களையும் காண்பிக்கின்றது.

இந்த உலகமே உங்களுக்கு விரோதமாக மாறலாம். சுற்றிலும் இருக்கின்ற ஜனங்கள் எதிரிகளாக மாறலாம். உங்களில் சொந்த பட்டயமே உங்களுக்கு விரோதமாய் எழும்பி கொடுமையாய் கிரியை செய்யலாம். உங்களுக்காக ஜெபிக்கின்றேன் என்று சொன்ன சீஷர்களுக்கு ஒப்பான விசுவாசிகள் கூட உங்களை தனிமையில் விட்டு விட்டு ஓடிப் போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட நீங்கள் இயேசுவை போல துணிந்து நின்று சத்தியத்திற்காக சாட்சியாக மாறனும்.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

அப்போதுதான் இந்த உலகமும், உலகத்தில் உள்ளவைகளும் உங்களைக் கண்டு பயப்படும். எந்த பட்டயமும் உங்களை சேதப்ப-டுத்த மாட்டாது. பரலோக ராஜ்யத்திலுள்ள தூதர்களும் கூட உங்-களைக் கண்டு ஆனந்தம் அடைவார்கள். இந்த சூழ்நிலைக்கு மத்தியில் இருக்கும் இயேசுவை சற்று நோக்கிப் பாருங்கள். அநேக பட்டயங்கள் இயேசுவுக்கு மிக அருகிலும், இயேசுவை சுற்றிலும் வந்தும் கூட ஒரு பட்டயமும் இயேசுவை சேதப்படுத்த முடியவில்லை. இதே போலத்தான், உங்களை சுற்றிலும் வரும் எப்படிப்பட்ட பட்டயம் போன்ற சோதனைகளும் உங்களை சேதப்படுத்-தாமல் பிதாவாகிய தேவன் உங்களைக் காத்துக் கொள்ளுவார்.

இயேசுவின் பாடுகளின் போது உவமையாய் சொல்லப்பட்டுள்ள பட்டயங்கள்:—

1. மத் 26:47 பட்டயங்கள்
2. மத் 26:51 உருவின பட்டயம்
3. மத் 26:52 உறையில் போடாத பட்டயம்
4. மத் 26:55 தடிகளோடு கூடிய பட்டயம்
5. லூக் 2:35 உருவிப் போகும் பட்டயம்
6. லூக் 22:38 இயேசுவிடம் இருந்த இரண்டு பட்டயங்கள்
7. லூக் 22:36 வாங்கப்பட்ட பட்டயம்
8. லூக் 22:49 வெட்டும் பட்டயம்
9. யோவா 18:10 வெட்டின பட்டயம்

பட்டயம் என்றால் பிரிக்கக் கூடியது. பிரிவினை உண்டாக்கக் கூடியது என்று அர்த்தம். இந்த பிரிவை பற்றிதான் பவுல் இவ்வி-தமாய் எழுதுகின்றார். "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்? நாசமோசமோ பட்டயமோ" (ரோம8:36) ஆம், பட்டயம் என்றாலே பிரிவுதான். பட்டயத்தால் வெட்டியதும் உடலில் ஒட்டியிருந்த காது பிரிந்து வந்து விட்டது. சங்44:6 சொல்கின்ற-படி பேதுருவின் பட்டயம் அவனை இரட்சிக்கவில்லை. அவன் வெட்டினது வீணாகி விட்டது. ஆனபடியினால்தான் இயேசு சொன்-னார் "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு, பட்ட-யத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்துப் போவார்கள்" (மத்26:52). இயேசு சொன்னது எவ்வளவு பொருத்தமாய் உள்ளது பாருங்கள்.

மல்குஸ் ஒரு புறஜாதியான், அந்நியன், பிரதான ஆசாரியனு-டைய வேலைக்காரன். அரண்மனையில் வேலைச் செய்கிறவன். இத்தனைத் தகுதிகள் இருந்தும் அவன் கையில் பட்டயம் இல்லை. அத்துடன், பேதுரு பட்டயத்தினால் வலது காதறவெட்டின போது மல்குஸ் திருப்பிக் கொண்டு தாக்கினதாகவோ, அலறி ஓலமிட்டு கத்தினதாகவோ, சொல்லப்படவில்லை. அப்படியானால், மல்குஸ் நீடிய பொறுமைசாலி என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த மல்குஸ்ஸிற்கு உறவினனும் இருந்தான். மல்குஸ்ஸை வெட்டின போது அவனும் இவன் கூட கெத்சமேனே தோட்டத்தில்தான் இருந்தான் (யோவா18:26). ஆனாலும் அவன் கூட சத்தமிடவும் இல்லை, சண்டையிடவும் இல்லை. இதனால், மல்குஸ்ஸின் குடும்பமே அமைதியான நல்ல பொறுமையான குடும்பம் என்று தெரிகின்றது.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைப் போல "நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள். அது விசுவாசத்தி-னாலாகும் நீதியே" (ரோம9:30) என்ற வசனத்தின்படி தன் பொறுமையினால் மல்குஸ் நீதியை சுதந்தரித்துக் கொண்டான்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

எனக்கு அன்பானவர்களே, யாரையும், அந்நியன் என்றோ, புறஜாதியான் என்றோ, வேலைக்காரன் என்றோ நினைக்காதீர்-கள். சில நேரம் தேவன் அவர்களின் கிரியைகளை நீதியின் பட்டியலில் இணைத்து, விசுவாசத்தையும் கற்றுத் தருகிறார். பட்டயத்தை கீழே போடுவோம். பொறுமையாய் இருப்போம்.

c. வலது காது:—

மல்குஸ்ஸின் இரண்டு காதுகளில் வலது காதுதான் வெட்டப்-பட்டது. வலது காது என்பதை குறித்து தனி உபதேசமும், பிரமா-ணமும் வேதத்தில் உண்டு. தேவனால் உண்டாக்கப்பட்ட மனித-னின் உடல் உறுப்புகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணமும், அர்த்-தமும் உண்டு. அர்த்தம் பொருத்தம் இல்லாமல் தேவன் எதையும் செய்வது கிடையாது. அர்த்தம் என்றாலே சத்தியம் என்றுதான் பொருள் (தானி2:45). ஆண்டவராகிய இயேசுவையும் அர்த்தமுள்ள மலைக்கு கொண்டு போய்தான் சிலுவையில் அறைந்தனர் (மாற்15:22). அப்படியானால் வலது காது என்றால் என்ன என்-பதை புரிந்து கொள்வது நல்லது.

மல்குஸ்ஸின் காது வெட்டப்பட்டதற்கான சில காரணங்களை வேத வசனத்திலிருந்து நம்மால் காண முடியும்.

“வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான்” (நீதி26:17). இந்த வசனத்தின்படிதான் மல்குஸ்ஸின் அனுபவமும் இருந்துள்ளது. அதாவது, இயேசுவை பிடிக்க இவன் அங்கு வந்-திருக்க வேண்டிய அவசியமே இல்லை. ஒரு வேளை அவன் பிர-தான ஆசாரியனால் அனுப்பப்பட்டு வந்திருந்தால் நிச்சயம் கை-யில் பட்டயமோ அல்லது ஆயதமோ எடுத்து வந்திருப்பான். ஆனால், இவன் கையில் பட்டயமோ, ஆயுதமோ இருந்ததாக சொல்லப்படவில்லை. அப்படியிருந்திருந்தால் பேதுரு இவனை வெட்ட வரும் போதே, இவன் தடுத்திருந்திருக்கலாம். ஏனென்றால், பேதுருவுக்கு மீன் வலையை பிடித்துதான் பழக்கம், பட்டயம் பிடித்து பழக்கமில்லை. முன்பின் பட்டயம் பிடித்து பழக்கமில்லாத-வன், மல்குஸ்ஸை வெட்டும் வரை அவன் விட்டு விட்டு சும்மாயி-ருந்துள்ளான் என்றால், மல்குஸ்ஸின் கையில் பட்டயம் இல்லை என்றும், தனக்கடாத விஷயத்தில் தலையிடும்படி போர்ச்சேவகர்க-ளுடன் இணைந்து இயேசுவை பிடிக்க வந்துள்ளான் என்பதும் தெளிவாக தெரிகின்றது.

இதை வாசிப்போரே, உங்களுக்கு என்று கொடுக்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள் செயல்படுங்கள். நீங்கள் யாரானாலும் சரி தனக்காடாத காரியத்தில் மித மிஞ்சி. மல்குஸ்ஸை போல எல்லா இடத்திற்கும் அவசரப்பட்டு போகாதீர்கள்.

இயேசுவை பிடிக்கப் போனவர்கள் ஏறத்தால 500 பேர் என்று சரித்திரம் சொல்கிறது. ஐந்நூறு பேரில் என்னை யார் கண்டு கொள்ளப் போகிறார்கள் என்று நினைத்த மல்குஸ்ஸின் எண்ணம் தவறாய் போய் விட்டது. சும்மா போயிருந்த அவன், வெறுமையாய் போயிருந்த அவன் வெட்டப்பட்டான். அவனுடைய காது துண்டிக்கப்-பட்டு இரத்தம் சொட்ட சொட்ட கீழே விழுந்தது. இந்த சத்தியத்தின் மூலமாக தேவன் உங்களுடன் பேசி கொண்டிருக்கும் சத்தத்திற்கு இணங்குங்கள். நல் ஆலோசனைகளுக்கு மட்டும் இடங் கொடுங்கள்.

பாம்பாட்டிகள் விநோதமாய் ஊதினாலும் அவர்கள் ஊதும் சத்தத்திற்குச் செவி கொடாதபடிக்குத் தன் காதை அடைக்கிற செவிட்டு விரியனைப் போல் இருக்கிறார்கள் (சங்58:5). ஆம், சத்தத்திற்கு செவி கொடாதபடி காதை அடைக்கிறசெவிட்டு விரியனைப் போல் என்று வசனம் எச்சரிக்கிறதைப் போல் இந்த மல்குஸ் யாருடைய சத்தத்திற்கும் செவி கொடுக்கவே இல்லை.

அதாவது: a) யூதாசே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்க போகிறாய் என்றார். b) சூழ நின்றவர்கள், ஆண்டவரே பட்டயத்தினால் வெட்டுவோமா என்றார்கள்.

c) இம்மட்டில் நிறுத்துங்கள் என்று இயேசு சொன்னார்.

d) ஒரு கள்ளனை பிடிக்கிறது போலவா என்னை பிடிக்க வந்தீர்கள் என்றார் (லூக்22:48,53). இத்தனை பேரின், இத்தனை சத்தங்களைக் கேட்டதும் அவன் அங்கிருந்து ஓடியிருக்க வேண்டும். ஆனால் அவன் அப்படி செய்யாமல் எல்லாருடைய எல்லாவித சத்தத்திற்கும் ஒரு செவிட்டு விரியன் பாம்பைப் போல காதை அடைத்துக் கொண்டிருந்தான். மல்குஸின் காது வெட்டப்பட இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

"உங்களை அசட்டை பண்ணுகிறவன் என்னை அசட்டை பண்ணுகிறான். என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான் என்றார்" (லூக்10:16). ஆதியில் ஏதேன் தோட்டத்தில் வைத்து கர்த்தர் சொன்ன வார்த்தையை ஆதாமும் ஏவாளும் அசட்டை செய்தனர். அதனால் பாவம் உள்ளே நுழைந்தது. ஒரு மிருகம் அடிக்கப்பட்டு தோல் உரிக்கப்பட்டது. இங்கு, கெத்சமெனே தோட்டத்தில் மல்குஸ் இயேசுவின் சத்தத்தை அசட்டை பண்ணினான். அதனால் அவன் காது வெட்டப்பட்டு தோட்டத்திற்குள் இரத்தம் சிந்தப்பட்டது.

விசுவாசிகளே, ஊழியக்காரர்களே, தேவ ஜனமே தேவனுடைய சத்தத்தை தயவு செய்து அசட்டைப் பண்ணாதீர்கள். கவனமாயிருந்து, கீழ்படிந்து, தகாத இடத்தை விட்டு விலகுங்கள் அல்லது ஓடுங்கள். அப்பொழுது நீங்கள் பிழைப்பீர்கள்.

d. என்ன செய்ய வேண்டும்? :-

மல்குஸ்க்கு வந்ததைப் போல பட்டயமும், இரத்தமும் உங்களைச் சந்திக்க கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டு காலத்தில் சுத்திகரிக்கப்பட வேண்டியவனுடைய வலது காதில் இரத்தத்தையும், எண்ணெயையும் பூசுவார்கள் (லேவி14:14,17). அதிலும் குறிப்பாக முதலாவது இரத்தத்தைப் பூசுவார்கள். பின்பு, எண்ணெயைப் பூசுவார்கள். இரத்தம் என்பது இயேசுவின் கல்வாரி இரத்தத்தையும், எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் குறிக்கின்றது.

யார் ஒருவர் தன் பாவங்கள் போக இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படுகின்றார்களோ, அவர்களை எண்ணெய்க்கு ஒப்பான பரிசுத்த ஆவியானவர் நிரப்புவார். பழி வாங்கும் பட்டயமும், காயமுண்டாக்கும் இரத்தமும் உங்களைத் தொடக் கூடாது என்றால், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படுங்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் நிரப்பப்படுங்கள். அப்பொழுது மல்குஸ்ஸிற்கு வந்தது போன்ற போராட்டம் உங்களுக்கு வராது.

e. இரண்டு பலன்கள்:—

மல்குஸ் தனக்கடாத காரியத்தில் தலையிடுகிறவனாகவும், தேவ சத்தத்திற்கு செவி கொடாதவனாகவும் இருந்தாலும், தேவன் அவனுக்கு இரண்டு நன்மையைச் செய்தார் என்று வேதம் சொல் –கின்றது.

ஒன்று: அவனுடைய காதைத் தொட்டு, அவனை சொஸ்தப்படுத் –தினார் (லூக்22:51). தேவன் இரக்கமுள்ளவராய் இருந்தபடியி –னால், சொஸ்தமாக்குகிறவராயும் இருந்தார். இங்கு முக்கியமான ஒரு இரகசியத்தை கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். எல் –லாரையும் தேவன் சொஸ்தமாக்க மாட்டார். "சொஸ்தமடைய வேண்டுமென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார்" (லூக்9:11). அப்படியானால், மல்குஸ் இயேசு தன்னை தொட்டு சுகமாக்க வேண்டும் என்று தன் மனதில் வேண்டுதல் செய்திருப்பான். அவன் மனதின் வேண்டுதலை ஆவியில் உணர்ந்த இயேசு அவனை தம்முடைய கிருபையுள்ள, வல்லமையுள்ள கையினால் தொட்டு சொஸ்தப்படுத்தினார். இது தேவன் அவனுக்கு செய்த முதல் நன்மையாகும்.

இந்நாட்களில், நீங்கள் வியாதியாலும், பெலவீனத்தினாலும், அல்லது பிசாசின் போராட்டத்தினாலும் வேதனைபடுகின்றீர்களா? அல்லது, மல்குஸ்ஸை போல இரத்தம் சிந்தும் அளவுக்கு காயப் –பட்டுள்ளீர்களா? கவலைப்பட வேண்டாம். மல்குஸை தொட்டு சொஸ்தமாக்கினவர் உங்களையும் தமது வல்லமையால் தொட்டு சொஸ்தமாக்குவார்.

இரண்டு:– "இந்த சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிர –சங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை (இவனை) நினைப்பதற் –காக இவள் (இவன்) செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யா –கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்14:9). மரி –யாள் என்ற ஸ்திரீ நளதம் என்னும் தைலத்தை இயேசுவின் சிர –சின் மேல் ஊற்றினாள். அவளை வாழ்த்தும் வண்ணமாக மேற்கண்ட வார்த்தைகளை இயேசு சொன்னார்.

அதுபோலதான், மல்குஸ்ஸின் காது வெட்டப்பட்டதாலும் அவ –னுடைய இரத்தம் கெத்சமெனே தோட்டத்தில் சிந்தப்பட்டதாலும் இப்போது அவனுடைய பெயர் உலகம் முழுவதும் பேசப்படுகின்றது. தீமையை நன்மையாக மாற்றுகின்றவர் மல்குஸின் தீமையையும் நன்மையாக மாற்றினார். வருடத்தின் அனைத்து நாட்களிலும், இவனைக் குறித்துப் பேசாவிட்டாலும், வருடம்தோறும் லெந்து காலத்திலும், இயேசுவை சிலுவையில் அறைந்த பெரிய வெள்ளி அன்றும் மல்குஸை பற்றி பேசாத, சொல்லாத ஊழியக்காரர்களே இல்லை என்று சொல்லலாம்.

அன்பானவர்களே, உங்களுக்கு வந்த போராட்டங்களையும் பாடுகளையும் பார்த்து, பார்த்து மனம் கலங்கி போய் எனக்கு ஏன்தான் இந்த போராட்டத்தை ஆண்டவர் அனுமதித்தார் என்று தெரியவில்லையே என்று கலங்கலாம். உங்கள் கண்களுக்கு போராட்டம் தான் பெரியதாகத் தெரியும். அதற்கு உள்ளே மறைந் –திருக்கும் நன்மை வெளியே தெரியாது. ஆனால், பொறுமையாய் இருங்கள். காத்திருங்கள். இயேசு வருவார், பிசாசை பார்த்து நிறுத்து என்று சொல்லுவார். தம்முடைய அன்பான கையை நீட்டி உங்களைத் தொடுவார். உங்களுக்கு வந்த போராட்டத்தையும், தீமையையும் நன்மையாக மாற்றுவார். நீங்கள் அறியாத இடங்க ளிலும் உங்கள் பெயரை பிரபல்யப்படுத்துவார். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

மல்குஸ் எதிரிகளின் கூட்டத்தோடு, கெத்சமெனே தோட்டத்திற்கு போனான். ஆனால், தனிமையாக வீட்டுக்கு திரும்பி வந்தான். பழைய மனுஷனாக இருந்து கொண்டு இயேசுவை பிடிக்கும்படி போனான். ஆனால், இயேசுவால் பிடிபட்டவனாக திரும்பி வந்தான். அவன் பல ஆண்டுகளாய் வேலை செய்த பிரதான ஆசாரியனு -டைய ஆளுகை அவன் உள்ளத்தை தொட முடியவில்லை. ஆனால், இயேசுவின் கை மல்குஸைத் தொட்டது. இயேசுவை பிடிக்க வந்த மற்ற 499 போர் வீரர்கள், பிரதான ஆசாரியர்களின் பெயர்கள் தெரியாதது போல, பெயர் தெரியாமல் போக வேண்டியவன் இப்போது, எல்லோருக்கும் பெயர் தெரிந்தவனாக மாறி விட்டான்.

கெத்சமெனே தோட்டத்தில் இயேசுவைத் தவிர மற்றமூன்று பேர்களின் பெயர் மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. யூதாஸ், பேதுரு, மல்குஸ். இவர்களில் யூதாஸ் காட்டி கொடுத்து செத்து போனான். பேதுரு மறுதலித்து இயேசுவை விட்டு ஓடிப்போனான் (மாற்14:50). ஆனால் மல்குஸ் மட்டும் இயேசுவால் தொடப்பட்டு தன் வீட்டுக்குப் போனான்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே நீங்கள் யாராக இருக்கப் போகின்றீர்கள்? அல்லது யாரைப் போல மாறப் போகின்றீர்கள்?. யூதாசைப் போல உங்களை நடத்தினவர்களையும், இரட்சித்தவர்க -ளையும் காட்டி கொடுக்கப் போகின்றீர்களா?. பேதுருவைப் போல, இந்த போராட்டமான கிறிஸ்தவ ஜீவியம் வேண்டாம் என்று மறு -தலித்து இயேசுவை விட்டு ஓடிப் போகப் போகின்றீர்களா? அல் -லது மல்குஸைப் போல இயேசு தொடும் வரைக்கும் காத்திருந்து, தொடப்பட்டு, மல்குஸைப் போல மறைவான ஜீவியம் ஜீவித்து கிறிஸ்து இயேசுவுக்காக நிலைத்து நிற்கப் போகின்றீர்களா?

XXXXV. யூதாஸ் என்னும் காரியோத் :-

"அவரைக் காட்டிக் கொடுக்கிறவன்: நான் எவனை முத்தஞ் செய்வேனோ அவன் தான். அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டு போங்கள் என்று அவர்களுக்குக் குறிப்பு சொல்லியி -ருந்தான். அவன் வந்தவுடனே அவரண்டடைமில் சேர்ந்து: ரபீ, ரபீ என்று சொல்லி அவரை முத்தஞ் செய்தான்" (மாற் 14:44,45).

யூதாஸ் என்ற பெயர் முழு உலகில் பெரும்பாலானவர்கள் நன் -றாக அறிந்த பெயர். யூதாஸ் என்பவன் யார் என்று கேட்டாலோ, என்ன செய்தான் என்றுக் கேட்டாலோ, இயேசுவைக் காட்டிக் கொடுத்தவன் என்று அனைவரும் சொல்லுவார்கள். இயேசுவின் நான்கு சுவிசேஷங்களில் முக்கிய இடம் பிடித்த மூன்று பேரில் யூதாஸ் என்பவன் மூன்றாவதாக வருகின்றான். மற்ற இருவரில் ஒருவர் இயேசு கிறிஸ்து, மற்றொருவன் பிசாசு.

இயேசுவைத் தொட்டவர்களில் பெண்களும் உண்டு, ஆண்க -ளும் உண்டு, மிருகங்களும் உண்டு. இவைகள் அனைத்தையும் விட இயேசுவைத் தொட்டவர்களில் யூதாஸ்காரியோத்தின் தொடு -தல் என்பது முற்றிலும் வித்தியாசமானது, மாறுபட்டது. அன்பின் சீஷனாகிய யோவான் இயேசுவின் மார்பை தொட்டான். பெரும்பா -டுள்ள ஸ்திரீ இயேசுவின் வஸ்திரத்தை தொட்டாள், மறி என்றக -ழுதைக் குட்டி இயேசு உட்காரும் பகுதியைத் தொட்டது. இவைகள் இப்படியிருக்க யூதாஸோ இயேசுவின் கன்னத்தைத் தொட்டான். அதுவும் கையினால் மட்டுமல்ல, கையினாலும், தன் உதட்டினா -லும் தொட்டான். அப்படியானால் அவனுடைய தொடுதல் என்பது முற்றிலும் வித்தியாசமானதுதானே.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

முத்தம் என்ற வார்த்தை பரிசுத்த வேதாகமத்தில் முதன் முதலாக ஆதி 27:26 ஆரம்பித்து, கடைசியாக 1பேது 5:14–ல் முடிகிறது. யாக்கோபு அன்பினால் ஈசாக்குக்கு கொடுத்த முத்தத்தில் ஆரம்பித்து கடைசி முத்தமும் அன்பின் முத்தத்துடன்தான் முடிகின்றது. இப்படியாக ஏறத்தால நாற்பத்தி ஐந்திற்கும் அதிகமான முத்தங்களை குறித்து வேதாகமம் விவரிக்கின்றது.

a. ஊரும் பெயரும்:–

இவனுடைய பெயர் சரித்திரத்தில் இரண்டாக பிரிக்கப்படுகின்றது. யூதாஸ் என்றால் மூன்று அர்த்தங்கள் உண்டு. i) கொண்டாடப்படுகிற ii) ஆராதனை, iii)துதி என்பதாகும். காரியோத் என்றால் கேரியோத் ஊரானுடைய துதி என்றும் அர்த்தமாகிறது. யூதாவின் தெற்கிலுள்ள "கீரியோத்" என்பது இவனுடைய ஊராகும். இவனுடைய ஊரின் பெயரான கீரியோத் என்றவார்த்தைதான் பின் நாட்களில் அவனை காரியோத் என்று மாற்றினது.

இயேசு பேசினது அராமிய மொழியாகும். இந்த மொழியில் காரியோத் என்றால் சிகப்புக் கலர் என்பது பொருளாகும். இந்த பெயருக்குரிய விளக்கத்தின்படியே இயேசுவின் சிவப்பான இரத்தம் பூமியில் பல விதங்களில் சிந்த காரணமாகி விட்டான். இவனுடைய அப்பா பெயர் சீமோன் காரியோத்து (யோவா 6:71). காரியோத்து என்பது அவனுடைய குடும்ப தலைமுறையினரின் வம்ச பெயராகும். காரியோத்து என்பது கொலைகாரர்களை குறிக்கும் அர்த்தமுடையதாக அந்நாட்களில் விளங்கினது.

காரியோத் என்பது இவனுடைய பிறப்புக்கு முன்பு ஒரு மார்க்கமாக செயல்பட்டது. அதனால் அதை ஸ்காரியோத் மார்க்கம் என்று அழைத்தனர். யூதேயாவில் உள்ள இரண்டு முக்கிய பட்டணங்களின் பெயர் காரியோத் ஆகும். காரியோத் என்றால் பொய்யன் அல்லது தவறானவன் என்றவிளக்கமும் ஜனங்கள் மத்தியில் நிலவியது. ஜனங்கள் இப்படி நினைக்கக் காரணம், யூதாஸ் இரட்ச்சிக்கப்படுவதற்கு முன்பு புரட்சிப்படையில் ஒருவனாகவும் இருந்துள்ளான். ஆனபடியினால்தான் இவனுடைய நடவடிக்கைகளும் புரட்சியாகவே இருந்துள்ளதைக் கவனிக்க முடியும். அதன்பின்பு யோவான்ஸ்நானகனுடைய பிரசங்கத்தினால் தொடப்பட்டு, இயேசுவைப் பின்பற்றத் தொடங்கினான்.

இயேசுவால் தெரிந்தெடுக்கப்பட்ட இவன் மட்டும் தான் கீரியோத் பட்டணத்தைச் சேர்ந்தவன். மற்றபதினொருவரும் கலிலேயாவைச் சேர்ந்தவர்கள். ஆனால், யூதாஸ்காரியோத்ததோ கலிலேயாவைச் சேர்ந்தவனல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவனோடிருந்த மற்ற பதினொரு சீஷர்களும் அற்புத அடையாளங்களை ஆரம்ப நாட்களில் செய்து வந்ததைப் போல இவனும் செய்துள்ளான். இவைகளைப் பார்க்கும்போது யூதாஸின் துவக்க ஊழியமும் நன்றாகத்தான் இருந்துள்ளது. பண்டிகைக்கு வேண்டியவைகளையும், தரித்திரர்களுக்கு ஏதாவது கொடுத்து உதவி செய்யுகிறதுமான இரண்டு முக்கிய பொறுப்புகளை இயேசு இவனிடம்தான் கொடுத்திருந்தார் (யோவா 13:29) என்பதை வாசிக்கும் போது, இவன் மேல் இயேசு எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் என்பது விளங்குகின்றது.

சீஷர்களின் பெயர் பட்டியலில் முதலாவதாக பேதுருவின் பெயரும், கடைசியாக இவனுடைய பெயரும் சொல்லப்பட்டுள்ளது. இவனுடைய பெயரோடு கூட துரோகி என்ற அதிபயங்கரமான வார்த்தையையும் ஆவியானவர் எழுதி வைத்துள்ளார் (லூக் 6:16). துரோகி என்றால் தனக்கு கொடுக்கப்பட்ட வசனத்தைக் காத்துக் கொள்ளாதவன் என்பதாகும். ஆம், இயேசு ஊழியம் செய்த மூன்றறை ஆண்டு காலத்தில் எத்தனையோ வசனங்களையும், வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருப்பார். ஆனால், அவைகளை இவன் காத்துக் கொள்ளவில்லை (சங் 119:158). வசனத்தைக் காத்துக் கொள்ளாதவர்கள் தேவனுடைய பார்வையில் அருவருப்பானவர்கள்தான்.

அன்பானவர்களே, உங்கள் உயிரை நீங்கள் எப்படி காத்துக் கொள்கின்றீர்களோ, அதைப்போலவே ஆண்டவர் உங்களுக்குக் கொடுத்த வசனங்களையும் காத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் யூதாஸைப் போல அருவருப்பானவர்களாக மாறிப் போவீர்கள்.

பலரும் பல நேரங்களில் இயேசுவைத் தொட்டதினால் புனிதர்களானார்கள், சுத்தமானார்கள், சுகமானார்கள், விடுதலையுமானார்கள். ஆனால், யூதாஸ்காரியோத் மாத்திரம் இயேசுவைத் தொட்டதினால் துரோகியாய் மாறிப் போனான். என்ன ஒரு தண்டனையென்று பாருங்கள். தொடுதல் என்பது ஒருவித சுகத்தைக் கொடுக்கணும், இன்பத்தைத்தர வேண்டும். ஆனால், யூதாஸ்கோ துன்பத்தையும், அவமானத்தையும், கடைசியாக மரணத்தையும் தந்தது.

b. 30 வெள்ளிக்காசு:-

முப்பது:-

முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவையே காட்டிக் கொடுத்தான் என்பது நமக்குத் தெரியும். முப்பது வெள்ளிக்காசு என்பது அந்நாட்களில் விற்க்கப்பட்ட சாதாரண ஒரு அடிமையின் விலையாகும் (யாத் 21:32). சர்வலோகத்தின் அதிபதியாகிய இயேசுவை அடிமையாக்கப் பார்த்துள்ளான் யூதாஸ். அவர் பிறக்கும் போதே அடிமையின் கோலமெடுத்துதான் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். இந்த சாதாரண வெளிப்பாடு கூட இல்லாமல் அவரை மீண்டும் அடிமையாக்கப் பார்த்துள்ளான். அருமையானவர்களே, அடிமைகளை தூக்கி விடுங்கள். ஆதரவு கொடுங்கள். அவர்களை ஆற்றித் தேற்றுங்கள். ஆனால், யாரையும் ஒருபோதும் அடிமையாக்க நினைக்காதீர்கள்.

வெள்ளி:-

யூதாஸக்கு கொடுக்கப்பட்ட காசு வெள்ளியினால் செய்யப்பட்டதாகும். வெள்ளி என்பது தீய நெஞ்சத்துக்கு இணையானது ஆகும் (நீதி 26:23). காரணம், அந்தக் காசில் வெள்ளிப் பூச்சு பூசப்பட்டிருந்தது. வெள்ளிப் பூச்சு என்பது வாழ்க்கையில் உண்டாகும் தேவையில்லாத ஒட்டடையைக் காண்பிக்கின்றது.

ஆம், வெள்ளிக்காசு என்றவுடன் அவன் அதை பெரிதாக நினைத்தான். ஆனால், அதுவே அவனுடைய வாழ்க்கையில் துரோகி, காட்டிக் கொடுக்கிறவன், கேட்டின் மகன் என்னும் ஒட்டைகளை உண்டாக்கி விட்டது. இந்த சம்பவம் எதைக் குறிக்கி –றது? மின்னுகிற மினு மினுப்பை ஒரு போதும் நம்பக் கூடாது. மினுமினுப்பை நம்பினால் ஓட்டை தான் மிஞ்சும்.

இயேசு சொல்லி வெள்ளியைத் தேடிப்போன பேதுருவுக்கு வெள்ளிப்பணம் கிடைத்தது. இயேசு சொல்லாமல் வெள்ளியைத் தேடி போன யூதாஸுக்கு வெள்ளிக் காசுதான் கிடைத்தது. இதை வாசிக்கும் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? வெள் –ளிக்காசுகளாக மினுமினுக்கப் போகின்றீர்களா? வெள்ளிப் பணத் –தைப் போல மறைந்தே வாழப் போகின்றீர்களா? நீங்கள் யார்? பேதுருவா, யோனாவா?

மதிப்பு:–

பிரதான ஆசாரியர்கள் யூதாஸுக்கு கொடுத்த ஒரு வெள்ளிக் –காசின் எடை என்னத் தெரியுமா? வெறும் பதினான்கு கிராம் மட்டுமே. அப்படியானால் முப்பது வெள்ளிக்காசின் மொத்த எடை வெறும் நானூற்று இருபது கிராம் மட்டும் தான். முப்பது வெள்ளிக் காசின் மதிப்பு டாலர் கணக்கின்படி 225 டாலர்களாகும்.

இப்படியெல்லாம் ஆசைப்பட்டும், அவசரப்பட்டும் சம்பாதித்த அந்த காசுகள் அவனுக்கு பயன்படாமலேயே போனது. அவன் வாங்கினது முப்பது வெள்ளிக் காசை திருப்பி கொடுத்து விட்டு இயேசுவை மீட்டு விடலாம் என்று நினைத்தான். ஆனால், அது அவனால் இயலாமல போய்விட்டது. அதனால், அந்தக் காசுகளை தேவால –யத்தில் எறிந்து விட்டான். இதை கவனித்த பிரதான ஆசாரியர் –கள் அதை காணிக்கைப் பெட்டியில் போடக் கூடாது என்ற பிரமா –ணத்தின் நிமித்தம் அந்த காசுகளை வைத்து ஒரு நிலத்தை வாங்கினார்கள். ஆனால் அதுவும் இரத்த நிலம் என்று மாறிப் போனது.

சாவு:–

அவன் நான்று கொண்டு செத்தான் என்று மத்27:5–ல் சொல்லப்பட்டுள்ளதால் அவன் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டான் என்று பலரும் பிரசங்கிக்கின்றனர். ஆனால், அது உண்மையில்லை. மேடான ஒரு பகுதியின் மேலேயிருந்து தலை கீழாக விழுந்ததினால், அவனுடைய வயிறு வெடித்து, குடல்க –ளெல்லாம் சரிந்து செத்துப் போனான். யூதாஸ்காரியோத்தின் மரணம் கூட நிம்மதியாக இல்லாமல், அகால மரணமாக மாறிப் போனது. அன்பானவர்களே, நாம் எப்படி பிறக்கிறோம் என்பது முக்கியமல்ல. மரிக்கும்போது எப்படிப்பட்டவர்களாக மரிக்கிறோம் என்பதுதான் முக்கியம். பிறப்பு ஒரு சம்பவமாக இருந்தாலும், இறப்பு ஒரு சாதனையாக இருக்கட்டும்.

அறிக்கைகள்:—

தன்னோடிருந்த பன்னிரெண்டு சீஷர்களை குறித்தும் இயேசு சொன்ன வார்த்தைகளும் கருத்துக்களும் வேதாகமத்தில் குவிந்து கிடக்கின்றன. அதில் யூதாஸ்காரியோத்தைக் குறித்து இயேசு சொன்ன பத்து வார்த்தைகளை கவனத்துடனும் ஜெபத்துடனும் கவனிப்போம்.

1. மத் 26:25 — நீ சொன்னபடிதான் என்றார்.
2. மத் 26:46 — என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் இதோ வந்துவிட்டான்.
3. மத் 26:50 — சிநேகிதனே என்னத்திற்க்காக வந்திருக்கிறாய் என்றார்.
4. மாற் 14:18 — என்னுடனே புசிக்கிற உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்
5. மாற் 14:20 — என்னுடனே கூட தாலத்தில் கையிடுகிறவனாகிய பன்னிருவரிலொருவனே.
6. லூக் 22:21 — இதோ என்னைக் காட்டிக் கொடுக்கிறவனுடைய கை என்னுடனேக் கூட பந்தியிலிருக்கிறது.
7. லூக் 22:22 — ஆனாலும், அவரைக் காட்டிக் கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார்.
8. லூக் 22:48 — யூதாஸே முத்தத்தினாலேயா மனுஷகுமாரனை காட்டிக் கொடுக்கிறாய் என்றார்.
9. யோவா 13:27 — நீ செய்கிறதைச் சீக்கிரமாய் செய்.
10. யோவா 17:12 — கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல் அவர்களில் ஒருவனும் கெட்டுப் போகவில்லை.

முப்பது என்ற எண் யூதாஸ்காரியோத்துக்கு சோதனையின் எண்ணாகவே மாறிப் போய் விட்டது. ஆனால், அதே முப்பது என்ற எண்ணை சிலர் வெற்றியாகவும் மாற்றினர்.

முப்பதாவது வயதில் யோசேப்பு பார்வோனுக்கு முன்பாக நிற்கும் தகுதியை அடைந்தான். தன்னுடைய முப்பதாவது வயதில் தாவீது இராஜாவானான் (IIசாமு5:4). முப்பது பேரைக் கொண்டு எபெத்மெலேக் என்பவன் தீர்க்கதரிசியாகிய எரேமியாவைக் காப்பாற்றினான். முப்பதாவது வயதில் இயேசு ஊழியத்தை ஆரம்பித்தார். இவர்களெல்லாம் இப்படி சாதனை செய்திருக்க, யூதாஸோ முப்பது காசுக்காக தன் ஜீவனையே இழந்து போனான்.

அருமையானவர்களே, யோசேப்பைப் போல பரிசுத்தமும், தாவீதைப் போல துதியும், எரேமியாவைப் போல தீர்க்கதரிசனமும், இயேசுவைப் போல உண்மையான ஊழியமும் உங்களில் காணப்பட்டால், உங்களை யாராலும் யூதாஸாக மாற்றமுடியாது. நீங்களும் யூதாஸ்காரியோத் போல ஆக மாட்டீர்கள். யூதாஸ் செய்த அத்தனைத் தவறுகளையும் இயேசு நீடிய பொறுமையோடு சகித்ததைப் போல, உங்களுக்கும் அந்தப் பொறுமையைத் தருவார்.

XXXXVI. கள்ளர்கள் (பாகம் 2) :-

"அதற்கு இயேசு: என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன்; ஆதலால் ஒருவர் என்னைத் தொட்டதுண்டு என்றார்" (லூக்8:46).

பூமியின் குடிகளாகிய மக்களில் அநேகர் இயேசுவைத் தொடவும், தொட்டு ரசித்து பார்க்கவும் ஆசைப்பட்டனர். அதன்படி பலர் இயேசுவை நேரடியாக தொட்டும் பார்த்தனர். அதுபோலவே இயேசுவும் பூமியில் இருக்கும்போது அநேகரை தொட்டார். தொட்டு அற்புதங்களையும் செய்தார்.

ஆனால், இயேசுவின் இருதயத்தை தொடுவது என்பது அவ்வளவு எளிமையான காரியமல்ல. இயேசுவின் இருதயத்தை தொட வேண்டும், அவருடைய இருதயத்தில் இடம் பிடிக்க வேண்டும் என்று அநேகர் பிரயாசப்பட்டனர். பலவித முயற்சியும் செய்தனர். அவர்களில் மிக சிலரே வெற்றி பெற்றனர். அந்த சிலரில் ஒருவனாகிய வலதுபுறத்து கள்ளனைக் குறித்துப் பார்க்க போகின்றோம். இயேசுவின் முப்பத்து மூன்றரை ஆண்டு ஊழிய வாழ்க்கையில், அவருடைய கடைசி நாளும் கடைசி நேரமுமான சமயத்தில்தான் அவன் இயேசுவை சந்தித்தான். ஆனாலும், அவன் மூலம் முழு பூமிக்கும் ஒரு உபதேசம் கிடைத்தது. அப்படிப்பட்டவனை குறித்து சிந்திப்பதும் வாசிப்பதும் தேவன் நமக்கு அருளின கிருபையே காரணம்.

வலதுபுறத்து கள்ளன் இடதுபுறத்து கள்ளன் என்று இரண்டு கள்ளர்கள் உண்டு. அந்த இரண்டு கள்ளர்களில் வலது புறத்து கள்ளனை குறித்து மிகத் தெளிவாக அறிந்து கொள்ளும் முன்பாக இடதுபுறத்து கள்ளனைக் குறித்து கொஞ்சமாவது தெரிந்து கொள்வது நல்லதாகும். அதே சமயம், கள்ளர்கள் என்றால் யார்? அவர்களை குறித்து வேதம் சொல்லும் ஆதாரங்கள் என்ன என்று பொதுவான குறிப்புகள் சிலவற்றையும் ஆராய்வோம், தியானிப்போம், தெரிந்து கொள்வோம்.

A. கள்ளர்கள் என்றால் யார்?

கள்ளர்கள் என்றால் திருடர்கள் என்று பொதுவாக நினைத்துவிடும் எண்ணம் பலருக்கும் உண்டு. திருட்டு தொழில் செய்கிறவர்கள் மட்டும் கள்ளர்கள் அல்ல. துர்குணமுள்ளவர்கள், தாறுமாறாய் பேசுகின்றவர்கள், ஏமாற்றுகின்றவர்கள் என்று அவர்களை குறித்து அடுக்கி கொண்டே போகலாம். ஆனால், கள்ளர்களுக்குரிய சில அடையாளங்கள் அழகாயும், அருமையாயும் வேதத்தில் வரையப்பட்டுள்ளது. அவைகளை நன்கு அறிந்து கொண்டால், இந்த பொல்லாப்பு நிறைந்த கடைசி காலத்தில் நாம் வெகு ஜாக்கிரதையாக வாழ முடியும்.

கள்ளர்களுக்குரிய சில பெயர்கள்:-

துராகிருதன், திருடன், வஞ்சகன், ஏமாற்றுகிறவன், லோபி (ஏசா32:7), பொய்யன், சண்டாளன் போன்றபலவிதமான புனை பெயர்களும் உண்டு. ஆனாலும், சிலுவையில் தொங்கின இருவரை குறித்து கள்ளன் என்று சுருக்கமான பெயரோடு வேதம் நிறுத்திக் கொள்கின்றது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

வாய்:-

கள்ளர்களின் வாய் கபடு நிறைந்தது தான் (சங் 109:2). கபடு நிறைந்த வாய் காணப்பட்டால் அவர்களை துன்மார்க்கர் என்று வேதம் எச்சரிக்கின்றது. துன்மார்க்கம் ஒழிய வேண்டுமானால் கபடு இருக்கவே கூடாது. அப்போதுதான் கள்ள சொல்லுக்கு ஆளாகாதிருப்போம்.

நாவு:-

கள்ளர்களின் நாவு கிலேசபட்டவர்களை பகைகுமாம் (நீதி 26:28). அதாவது மனதளவில் பாதிக்கப்பட்டவர்களை கண்டால் ஒரு ஆறு-தலான வார்த்தைகள் கூட சொல்லாமல், அதற்கு பதிலாக அப்ப-டிப்பட்டவர்களை பகைக்கும். இதுதான் கள்ளர்களின் நாவுக்குரிய அடையாளம்.

பேச்சு:-

கள்ளர்களைப்போல ஜீவிக்கிறவர்களின் பேச்சு கொடூரமாகவும், கலகத்தை உண்டுபண்ணுவது போலவும் இருக்கும் (ஏசா 59:13). இயேசுவோடு கூடவே இருந்த பேதுரு ஒரு நாள் வேறு யாரும் பார்த்து விடக் கூடாது என்பதற்க்காக கள்ளத்தனமாக சேவகர்கள் நடுவில் போய் உட்கார்ந்தான். ஆனால், அங்கு அவனை பார்த்து விட்ட ஒரு பெண் நீயும் அவர்களில் ஒருவன்தான். உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்று ஆதாரபூர்வமாக குற்றம் சாட்-டினாள். ஆனபடியினால்தான் நம்முடைய பேச்சு ஒருவருக்கும் சந்தேகத்தை வர வைக்காத பேச்சாக காணப்பட வேண்டும்.

கைகள்:-

கள்ளர்களின் கைகள் மாயைக்கு ஒப்பானது என்று பரிசுத்த வேதாகமம் சுட்டிக் காண்பிக்கின்றது (சங் 144:8). மாயை என்-றால், கைக்கு வந்து கிடைக்கின்ற எதுவுமே அவர்களிடம் தங்-காது. நிறைய வரும், ஆனால் எங்கு போகிறது என்று கண்டு-பிடிக்க முடியாது. பெரிய ஏமாற்றமாக இருக்கும். இதற்கு பெயர்-தான் மாயை.

சரீரம்:-

உடல் என்கிற சரீரம் எப்போதும் விபச்சாரத்தையும், அருவருப்பான இச்சைகளைத்தான் தேடிக் கொண்டிருக்கும் (ஓசி 7:4). அடுப்பு எப்படி சூடாக இருக்குமோ அவர்களும், அவர்களின் உடலும் கூட எப்போதும் சூடாகத்தான் இருக்கும். ஆனபடியினால்தான் பரிசுத்த வேதாகமம் அவர்களை விபச்சார கள்ளர்கள் என்று பகிரங்கமாக எச்சரிக்கின்றது. இதை வாசிக்கும் நீங்களோ அல்லது உங்களை சார்ந்தவர்களோ இப்படி இராதபடிக்கு காத்துக் கொள்ளுங்கள்.

சாப்பாடு:-

பணக்கார கள்ளர்களின் போஜனம் ருசியாகத்தான் இருக்கும் (நீதி 23:3). ருசி இருக்கும், பதார்த்தங்கள் இருக்கும். அதோடு-கூட அந்த போஜனத்தில் இச்சையும் இருக்கும். அதாவது உணர்ச்சிகளை தூண்டி விடக் கூடிய ஐட்டங்களாகக் காணப்படும். இப்படிப்பட்ட போஜனத்தை தேவனுடைய பிள்ளைகள் யாரும் விரும்ப மாட்டார்கள். ஆசைப்படவும் கூடாது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

இருப்பிடம்:-

வெளியரங்கமான, வெளிப்படையான இடங்களில் கள்ளர்கள் தங்கமாட்டார்கள். அதற்கு பதிலாக குகை போன்ற வளைவுகளிலும், மறைவுகளிலும், வெகு தூரமான இடங்களிலும்தான் தங்குவார்கள். ஆனபடியினால்தான் இயேசுவும் நீங்களோ அதை கள்ளர் குகையாக்கினீர்கள் என்று ஆசாரியர்களை கடிந்து கொண்டார் (மாற்11:17).

குணம் (சுபாவம்):-

ஒவ்வொரு மனுஷனுக்கும் குணம் என்கிற சுபாவம் இருக்கும். அதுபோல கள்ளர்களின் சுபாவமோ யாரையும், எப்படிப்பட்டவர்களையும் உளவு பார்க்க சொல்லும். தன்னுடன் இருக்கும் ஒருவரையும் சுயாதீனமாக இருக்க விட மாட்டார்கள் (கலா 2:4). அடிமைகளாக இருக்க சொல்லி கட்டாயப்படுத்துவார்கள். எங்கும் எதற்கும் நேர் வழியாய் போக விரும்ப மாட்டார்கள். பக்க வாசல் வழியாய் நுழைவதைதான் அதிகமாக விரும்புவார்கள்.

மேற்கண்ட மகா பயங்கரமான செயல்கள் அவர்களிடம் காணப்படுவதினால்தான், அவர்களை யூத மக்கள் கள்ளர்கள் என்று அழைத்தனர். காரணம் அவர்கள் தேவாதி தேவனையும் கோபப்படுத்தக் கூடியவர்கள். பழைய ஏற்பாட்டு காலத்தில் கள்ளர்களை கண்டால் துரத்தி விடுவார்கள் (யோபு 30:5). அதுபோல நாமும், நமக்குள் காணப்படுகின்ற சின்ன மோசமான சுபாவங்களை அப்புறப்படுத்தினால், நம்மை கள்ளர்களாய் பார்க்காமல் நல்லவர்களாய் தேவன் பார்ப்பார்.

B. இடது புறத்து கள்ளன்:-

"இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத் 25:41).

இயேசுவின் இரண்டு பக்கமும் தொங்கின கள்ளர்களைக் குறித்து பார்க்க வேண்டுமானால், அவர்கள் யார் எந்த திசையில் தொங்கி கொண்டிருந்தனர் எனபதையும் பார்க்க வேண்டும். காரணம், அந்த அந்த திசைக்கு ஏற்றபடிதான் அவர்கள் அறையப்பட்டனர். தண்டனையும் அனுபவித்தனர். தீர்க்கதரிசியாகிய சகரியா பார்த்த தரிசனத்தில் ஒரு குத்துவிளக்கின் வலது புறத்திலும் இடது புறத்திலும் இரண்டு ஒலிவ மரங்கள் இருப்பதாக கண்டான் (சகரி 4:3). அதைப் போலத்தான் குத்து விளக்காய் பிரகாசித்த இயேசுவுக்கு இரண்டு பக்கங்களிலும் கள்ளர்கள் தொங்கி கொண்டிருந்தனர். சகரியா பார்த்தது இரண்டு ஒலிவ மரங்கள், இங்கு தொங்குவதோ இரண்டு கள்ளர்கள். ஒலிவ மரமாய் வாழ்ந்திருக்க வேண்டியவர்கள் கள்ளர்களாய் மாறி விட்டனர். இதை வாசிக்கும் அன்பான தேவ ஜனமே நீங்கள் ஒலிவ மரமா? அல்லது கள்ளர்களா என்பதை சிந்தித்து பாருங்கள்.

கொல்கொதா மலை மீது மூன்று சிலுவையில் மூன்று பேர் தொங்க வைக்கப்பட்டதில் நடுவாக தொங்கினவர் இயேசு. மற்ற இருவரைக் குறித்து மத்தேயுவும், மாற்கும் கள்ளர்கள் என்று கூறியுள்ளனர். யோவான் நூலின் ஆசிரியரோ அவர்களுக்கு எந்த பெயரையும் குறிப்பிடாமல் மற்ற இரண்டு பேரையும் என்று குறிப்பிட்டுள்ளான் (யோவா 19:18). இந்த மூன்று ஆசிரியர்களை விட லூக்கா புத்தகத்தின் ஆசிரியரோ அந்த இருவரையும் குற்றவாளி என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் (லூக் 23:33). லூக்கா அந்த இருவரையும் குற்றவாளிகள் என்று எழுத முக்கிய காரணம் உண்டு. ஆம், இயேசுவையுமே அவர்கள் "இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக் கொடுக்க மாட்டோம்" (யோவா 18:30) என்று மக்கள் சொன்னர்கள். அதே போல அவரும் குற்றவாளியாய் தீர்க்கப்பட்டார்.

தான் சிலுவையில் அறையப்படும் போது இரண்டு பேரை இரண்டு பக்கங்களில் அறைவார்கள். நாம் மரிக்கும் முன்பாக அந்த இரண்டு பேரின் குற்றங்களையும் சிலுவையில் சுமந்து தீர்த்து விட வேண்டும். அப்படியானால், இப்போதே நாமும் அந்த குற்றவாளி என்ற பட்டத்தை சுமக்க வேண்டும் என்று முன் கூட்டியே அறிந்து இரண்டு கள்ளர்களுக்காக, இயேசு குற்றவாளி என்ற பட்டப் பெயரை தன் மீது ஏற்றுக் கொண்டார். மற்றவர்களின் குற்றச்சாட்டுகளையும், பழி சொற்களையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையும், பொறுமையும் இருந்தபடியினால்தான், யூதர்கள் அவரை குற்றவாளி என்று கத்தும் போது பொறுமையாக இருந்தார். அன்பானவர்களே, இது போன்று ஏற்றுக் கொள்ளும், சகித்து கொள்ளும் நல்ல மனப்பான்மை உங்களிடமும் உள்ளதா என்று சிந்தித்து பாருங்கள். இல்லாவிட்டால் அந்த கிருபையை கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அந்த இரண்டு பேரில் ஒருவனாகிய குற்றவாளி என்றும் கள்ளன் என்றும் சொல்லப்பட்டவன் இடது பக்கத்தில் அறையப்படவும், அவன் நியாயம் தீர்க்கப்பட்டதற்கும் மிக முக்கியமான ஆறு காரணங்கள் உண்டு. அவைகளை பொறுமையாகவும், கவனமாகவும் வாசித்து நன்றாக அறிந்து கொள்வது மிகவும் நல்லது.

காரணம்:1 இயேசுவை நீ என்று ஒற்றைச் சொல்லினால் குத்திக் காண்பித்தான் (லூக் 23:39). இது எதைக் குறிக்கின்றது தெரியமா? இயேசுவை தன்னுடைய அடிமையைப் போல எண்ணினான் என்பதாகும். பிரதான ஆசாரியனாகிய காய்பாவும் இயேசுவை நீ என்று தான் பேசினான் (மத் 26:62). அதனால் அவன் பிரதான ஆசாரியனாயிருந்தும் ஆசாரியன் என்னும் பட்டத்தை இழந்து தந்திரவாதி என்று அழைக்கப்பட்டான் (மத்26:3,4). அன்பானவர்களே நீங்களும் கூட யாரையும் நீ என்றோ அற்பமாகவோ பேசாதீர்கள். அதனால் வரும் தண்டனையை அனுபவிக்காதீர்கள். இடது புறத்து கள்ளனின் நிலைமையை புரிந்து கொள்ளுங்கள்.

காரணம் 2:- கிறிஸ்துவானால் என்று அழுத்தம் திருத்தமாக கூறி-னான் (லூக் 23:39). கிறிஸ்து என்றோ, கிறிஸ்துவே என்றோ அவன் சொல்லாமல் கிறிஸ்துவானால் என்று தான் சொன்னான். இது, அவனுக்குள் இருந்த அவிசுவாசம் என்னும் சந்தேகத்தைக் காண்பிக்கின்றதாக உள்ளது. எவ்வளவாகிலும் சந்தேகப்படக் கூடாது (யாக் 1:6) என்பது ஆண்டவர் இயேசுவின் உபதேசமாகும். இவன் தேவ இராஜ்யத்தை இழந்து போக சந்தேகமும், சந்தேகப்-படும்படியாக கேள்வி கேட்டதும் ஒரு காரணமாகும். அருமையான-வர்களே, நீங்கள் யாராயிருந்தாலும் சரி, எவ்வளவு பெரிதான மேன்மையில் இருந்தாலும் சரி, நீங்கள் விசுவாசத்தை இழந்தும், சந்தேகப்படுகிறவர்களுமாய் காணப்படுவீர்களானால், இந்த கள்ள-னைப் போல கடைசி நேரத்தில் உங்களுக்குரிய பரலோக இராஜ்-யத்தை இழந்து போவீர்கள். கவனமாயிருங்கள்.

காரணம் 3:- இயேசுவைப் பார்த்து உன்னையும் என்று சத்தமிட்-டுச் சொன்னான் (லூக் 23:39). உன்னையும் என்ற வார்த்தை ஒருவரை அவமரியாதை செய்வதற்கு சமமாகும். அதாவது அற்ப-மாய் நினைப்பதாகும். இவன் சிலுவையில் தொங்கிக் கொண்டி-ருந்தாலும் அந்த சமயத்தில் கூட உபயோகமில்லாதவைகளைத்-தான் அதிகமாய்ப் பேசினான். "பிரயோஜனமில்லாத வார்த்தைக-ளாலும், உபயோகமில்லாத வசனங்களாலும் தர்க்கிக்கலாமோ?" (யோபு 15:3). ஆம், நாம் பேசுகின்ற, நம்முடைய வாயிலிருந்து பிறக்கின்ற ஒவ்வொரு சொற்களும் கவனமுள்ளதாக இருக்க வேண்டும். இந்த கள்ளனைப் போல அவமரியாதையான வார்த்-தைகளை பேசி விடக் கூடாது. அதனால் கிருபைகளை இழந்து விடக் கூடாது.

காரணம் 4:- கள்ளன் சொன்னதான முக்கியமான வார்த்தை இரட்சித்துக் கொள் என்ற வார்த்தை (லூக் 23:39). இரட்சித்துக் கொள்ளும் என்று அன்பாகவோ, அல்லது இரட்ச்சிக்கமாட்டீரா என்று மன்றாடவோ இல்லை. அதற்கு பதிலாக இரட்சித்துக்-கொள் என்று விகற்பமாய் பேசினான். இந்த பேச்சு தூஷணத்-துக்கு ஒப்பானது என்று வேதம் எச்சரிக்கின்றது. தேவதூதர்கள் கூட தேவனுக்கு முன்பாக தூஷணமாய் பேசமாட்டார்கள் என்று எச்சரிக்கின்றது (IIபேது 2:11). அருமையானவர்களே, இரட்சிப்பு என்ற வார்த்தையை அவன் பயன்படுத்தினதின் மூலம், இரட்சிப்-பின் மேன்மையை அவன் அறிந்துள்ளான் என்று தெரிகின்றது. ஆனாலும், அவன் அதை இழந்து போகக் காரணம், அவனிடம் காணப்பட்ட தூஷணம்தான். ஒன்றைமாத்திரம் நன்றாய் தெரிந்து கொள்ளுங்கள். தூஷணம் எப்போதும் வெளியே தெரியாது. அது உள்ளத்திற்குள் மறைந்துதான் காணப்படும். திடீரென்று பாம்பை போல படமெடுத்து ஆடி சாட்சியை கெடுத்து விடும். ஆனபடியி-னால் இந்த இடதுபுறத்து கள்ளனைப் போல தயவு செய்து தூஷணத்துக்கு இடம் கொடுத்து விடாதீர்கள்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

காரணம் 5:- இகழ்ந்தான் . ஆம், இதுதான் இடதுபுறத்து கள்ளனுக்கு தண்டனையைக் கொண்டு வர பெரும் காணரமாக அமைந்தது. இயேசு அற்புதங்களையும், நன்மைகளையும் செய்து தகாதது ஒன்றையும் நடப்பிக்காதவர் என்று தெரிந்திருந்தும் அவ -ரை இகழ்ந்தான் என்று வேதம் தெளிவாக சொல்கின்றது (லூக் 23:39). இகழந்தான் என்றால் திட்டினான் என்று அர்த்த -மாகும். மரண நேரத்திலும் சாவு நெருங்கும் போதும் பரிதவிப் -பார்கள், அல்லது ஏதாவது சொல்லி கெஞ்சுவார்கள். ஆனால் இவனோ அப்படியல்ல தன் கடைசி நேரமான மரண நேரத்திலும் இகழ்வதிலும், திட்டுவதிலும்தான் கவனமாக இருந்தான்.

"பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார் -கள்" (தானி 12:2) என்று தானியேல் தீர்க்கதரிசியை கொண்டு கர்த்தர் சொன்னதைப் போல இந்த இடதுபுறத்து கள்ளன் நித்திய நித்திமான நிந்தை நிறைந்த அக்கினியுள்ள நரகத்தில்தான் தள் -ளப்படுவான்.

இதை வாசிக்கும் தேவ ஜனமே, உங்கள் வாழ்க்கையின் கடைசி நாட்களில் கவனமாக இருங்கள். நிதானமாய் செயல்படுங் கள். யாரையும், எந்த சூழ்நிலையிலும் அவசரப்பட்டு இகழ்ச்சியாக பேசி விடாதீர்கள். வலதுபுறத்து கள்ளனை விட இடதுபுறத்து கள் -ளன் உங்களுக்கும் எனக்கும் கூட ஒரு எச்ச்ரிப்பின் மணியாகவே இருக்கிறான்.

காரணம் 6:- அக்கிரமக்காரனாயிருந்தான் (மாற் 15:28). மேற் -கண்ட பல அவதூறுகளும், குற்றச்சாட்டுகளும் இவன் மேல் உண்டாகவும், இடதுபுறத்தில் அறையப்படவும் அவனிடம் காணப்பட்ட அக்கிரமமே காரணமாகும். சரி, அப்படியானால் வலதுபுறத்து கள் -ளனும் அக்கிரமக்காரன் என்றுதானே வேதம் சொல்கிறது என்று நீங்கள் நினைப்பீர்கள். அது உண்மைதான். ஆனாலும் வலதுபு -றத்து கள்ளனுடைய அக்கிரமத்தை விட, இடதுபுறத்து கள்ளனு -டைய அக்கிரமம் பெரியதாகும்.

வலதுபுறத்து கள்ளன் சிலுவையில் அறையப்பட்ட பின்பு தகா -ததை ஒன்றும் பேசவில்லை. யாரையும் இகழவில்லை. இயேசு -வுக்கு முன்பாக தன்னை முரடனாகவோ, மேட்டிமையாகவோ காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், இடதுபுறத்து கள்ளன் இவை எல்லாவற்றிலும் நேர் எதிராக இருந்தான். அமைதி அன்பையும், அலறுதலோ பாதிப்பையும் கொண்டு வரும். "அக்கிரமக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்" (சங்6:8) என்று வசனம் சொல்வதைப் போல, இவனும் அகற்றப்பட்டான். பரதீசு என்னும் மேலானதை இழந்தான். பரலோகத்துக்கு பதிலாக நரகத்துக்கு பங்காளியானான்.

பாதாளம்:-

இப்படியெல்லாம் மனம் போல பேசியும், இயேசுவை எதிர்த்தும் செயல்பட்ட இடதுபுறத்து கள்ளன் அவனுடைய மரணத்துக்கு பின்பு அவனுடைய ஆத்துமா போய் சேர்ந்த இடத்தை குறித்து அறிந்து கொள்வது, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஓர் எச்சரிப்பாய் இருக்கும்.

மரணத்துக்கு பின்பு மனிதர்கள் போக கூடிய முக்கியமான இரண்டு இடங்கள் உண்டு. ஒன்று: நரகம் மற்றொன்று: பரலோகம். இந்த நரகத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. அதாவது நித்திய நரகத்துக்கு போகும் முன்பாக சில காலம் பாதாளத்தில் இருக்க வேண்டும். அந்த பாதாளத்தில் மூன்று பகுதிகள் உண்டு. 1) வேதனையுள்ள இடம் 2) புறம்பான இருள் 3) அதாள பாதாளம். இதில் முதலாம் இடமான வேதனையுள்ள இடத்துக்குதான் இடது-புறத்து கள்ளன் போனான்.

இந்த பாதாளம் பூமியின் கீழே இருக்கின்றது. இங்கு யார் யார் போவார்கள் தெரியுமா? இரட்சிக்கப்படாதவர்கள், மனம் திரும்ப விரும்பாதவர்கள், சத்தியத்தை மறுதலித்தவர்கள், பின்-வாங்கிபோனவர்களை போன்றோர் போவார்கள். இதில், இடதுபுறத்து கள்ளன் மனம் திரும்ப விரும்பாதவன். ஆனபடியி-னால் நிச்சயமாக அவனும் அங்குதான் போயிருப்பான்.

இந்த பாதாளத்தில் என்னவெல்லாம் இருக்கும் எப்போதுமே அணைந்து போகாத அக்கினி இருக்கும். நெளிந்து கொண்டே இருக்கக் கூடிய உயிருள்ள புழுக்கள் இருக்கும். நெளிந்தும், ஊர்ந்தும் செல்லக்கூடிய ஏராளமான பூச்சிகள் இருக்கும். ஒருபுறம் இருளின் ஆவிகள், மற்றொருபுறம் கட்டி வைக்கப்பட்டிருக்கும் அவைகளின் சத்தமும் ஓசையும் மிகவும் கொடியதாக இருக்கும். இவைகள் எல்லாவற்றையும் விட உச்சக் கட்டமாக ஏறத்தால நான்காயிரம் டிகிரி அளவுக்கு சூடு (உஷ்ணம்) இருக்கும். "புழுக்-களே உன் படுக்கை, பூச்சிகளே உன் போர்வை" (ஏசா 14:11) என்ற வார்த்தையின்படி படுக்கிற இடமெல்லாம் புழுவாயும், நடக்கிற இடமெல்லாம் பூச்சியாயும் இருக்கும். புலம்பலும் அழுகையும் எப்-போதும் கேட்டுக் கொண்டே இருக்கும். அமைதல் என்பதே இருக்-காது, ஓய்வும் தூக்கமும் இல்லாமல் போகும். யார் விரும்பினா-லும், எவ்வளவுதான் முயற்சித்தாலும் அங்கிருந்து மீண்டும் வெளியே வரவே முடியாது. அது ஒரு மகா பயங்கரமான இடம்.

எனக்கன்பானவர்களே, தன் வாழ்க்கையின் கடைசி நேரத்தில் இயேசுவை எதிர்த்த, மறுதலித்த கள்ளன் போன இடத்தைக் குறித்தும், அவன் இப்போது அநுபவித்துக் கொண்டிருக்கும் வேத-னையை குறித்தும் வாசித்தீர்கள். இபபோதே உங்கள் ஆத்து-மாவையும், உங்களின் உள்ளான அந்தரங்க ஜீவியத்தையும் கவ-னித்து பாருங்கள். இடதுபுறத்து கள்ளனைப் போல நீங்களும் பாதாளத்துக்குப் போக கூடாது என்பதற்காகத்தான் இந்த சத்தி-யத்தை இயேசு உங்களுக்கு வெளிப்படுத்தி, உங்களோடு இந்த புஸ்தகத்தின் மூலமாக பேசிக் கொண்டிருக்கிறார்.

C. வலதுபுறத்து கள்ளன்:—

"அப்பொழுது ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" (மத் 25:34).

உலகம் முழுவதும் உள்ள அநேக கிறிஸ்தவர்கள் மற்றும் தேவ ஊழியர்களின் கேள்விக்குரியவனாக இருப்பவன் இந்த வலதுபுறத்து கள்ளன்தான். ஞானஸ்நானம், அந்நியபாஷை குறித்து விவாதங்கள் எழும்பும் இடங்களில் இந்த வலதுபுறத்து கள்ளன் நுழையாமல் இருந்ததே இல்லை. ஒருவகையில் சொல்லப்போனால் பூமியில் உண்டாகும் மனந்திரும்புதலையும் பரலோகம் போக தேவையான இரட்சிப்பையும் இணைக்கிறவனாகவும் இவன் காணப்படுகின்றான்.

இவனை வலதுபுறத்து கள்ளன் என்று ஏன் சொல்லுகின்றார்கள்? அப்படியானால் வலதுபுறத்தில் என்ன இருக்கின்றது? வலதுபுறம் என்பது ஆசீர்வாதமானது. அதேபோல, வலதுபுறத்தில் நிற்பவர்களும் ஆசீர்வாதமானவர்கள்தான் (மத் 25:34).

வலதுபுறம் நிற்பவர்களை பார்த்து இயேசு 5 முக்கியமான காரியங்களை சொன்னார்:

i) வாருங்கள்

ii) ஆசீர்வதிக்கப்பட்டவர்களே

iii) ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது

iv) இராஜ்யத்தை தருவேன்

v) சுதந்தரிதுக் கொள்ளுங்கள் (மத் 25:34).

எவ்வளவு பெரிய சிலாக்கியம் பாருங்கள்.

இயேசுவின் உயிர்த்தெழுந்த கல்லறையில் இருந்த தேவதூதன் வலதுபக்கத்தில்தான் உட்கார்ந்து இருந்தான் (மாற் 16:5). யோவானின் தகப்பன் சகரியா ஆசாரிய ஊழியம் செய்து கொண்டிருக்கும் போது பலிபீடத்தண்டையில் தோன்றின தேவதூதனும் வலதுபுறத்தில்தான் நின்று கொண்டிருந்தான் (லூக் 1:11).

இப்படி வலதுபுறம் என்பது தேவனாலும், தேவனுடைய மனிதர்களாலும், தேவ தூதர்களாலும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பக்கமாகும். இப்படிப்பட்ட வலதுபுறத்தைதான் தேவன் குறிப்பிட்ட இந்த கள்ளனுக்கு கொடுத்தார். இந்த வாய்ப்பு தேவனால் அவனுக்கு அருளப்பட்ட சிலாக்கியம் என்றுதான் நான் கருதுகிறேன். இதேபோல வலதுபுறத்து ஆசீர்வாதங்களினால் என் தேவனாகிய கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிப்பார்.

வலதுபுறத்து கள்ளன் மீது ஆண்டவராகிய இயேசு இரக்கம் பாராட்டி, அவன் கேள்விகளுக்கு பதில் கொடுத்து, பரதீசையும் பரிசாக வழங்கியதற்கு மிக முக்கியமான காரணங்கள் உண்டு. அவைகளை பொறுமையாகவும், தேவ சிந்தையோடும் வாசித்து தெரிந்து கொள்வோம்.

காரணம் 1:- இந்த வலதுபுறத்து கள்ளனின் பெயர்: திஸ்மாஸ் என்பதாகும். இவன் குற்றத்துக்கு தக்க ஆக்கினை உண்டாகும் என்பதை நன்றாக அறிந்தும் உணர்ந்தும் இருந்தான் (லூக் 23:40). ஆக்கினை என்றால் தண்டனை என்று அர்த்தமா-கும். செய்த குற்றத்துக்கு தண்டனை உண்டு என்று யார் உண்-மையாக உணருகின்றார்களோ அப்போதே அவர்கள் திருந்த ஆரம்பித்து விட்டார்கள் என்று அர்த்தமாகும். "கர்த்தர் உன் ஆக்-கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ர-வேலின் இராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனி தீங்கை காணாதிருப்பாய்" (செப் 3:15) என்ற வசனத்தின்படி, அவ-னுடைய ஆக்கினையாகிய தண்டனை மன்னிக்கப்பட்டது. தீங்கை காணாமல் பரதீசுக்கு சென்றான்.

காரணம் 2:- தேவனுக்கு பயப்படுகிறதில்லையா? என்றான் (லூக் 23:40). அப்படியானால் தேவனுக்கு பயப்படுகிறபயம் அதிக-மாகவே இருந்துள்ளது. தேவனுக்கு பயப்படுதல் என்றால் கபட-மில்லாத ஜீவியம் என்று அர்த்தமாகும் (கொலோ3:22). வெளித்-தோற்றத்தில் அவன் கள்ளனாக காணப்பட்டாலும் உள்ளத்திலோ கபடற்ற புறாவைப்போல இருந்துள்ளான். அன்பான விசவாச ஜனமே, நீங்களும் கபடற்றவர்களாய் வாழ்ந்து ஜீவித்து பாருங்கள் தேவனுக்கு பயப்படுகிறபயம் உங்களுக்குள் தானாகவே நீரூற்றைப் போல பெருக்கெடுத்து ஓடும்.

காரணம் 3:- நியாயத்தை உணர்ந்தவனாகவும், நியாயத்தையே பேசுகிறவனாகவும் காணப்பட்டான் (லூகக் 23:41). நியாயத்தை பேசுவதற்கு இந்நாட்களில் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், நியாயத்தை நியாயமானபடி எடுத்து சொல்லத்தான் அதிகமான ஆட்கள் இல்லை. ஆனால், இந்த வலதுபுறத்து கள்ளன் சரியாக செய்தான். "தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கி-றமனுஷன் பாக்கியவான்" (சங் 112:5) என்று சொல்லப்பட்டுள்ள அற்புதமான வசனத்தின்படி, இந்த வலதுபுறத்து கள்ளனும் சிலு-வையிலேயே பாக்கியவானாக மாறிவிட்டான்.

நீங்களும் எப்போதும், எல்லாரிடமும் எல்லா இடத்திலும் நியா-யமானதை மட்டும் பேசுங்கள். அப்பொழுது உங்களையும் தேவ-னாகிய கிறிஸ்து இயேசு பாக்கியவானாக, பாக்கியவதியாக மாற்றி, தம்முடைய பாக்கியங்களையும் உங்களுக்கு தந்தருள்வார்.

காரணம் 4:– "இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே" (லூக் 23:41) என்று இயேசுவை குறித்து அருமையான சாட்சி கொடுத்தான். நீங்களே என் சாட்சிகள் (ஏசா 44:8) என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட வசனத்தை நிறைவேற்றும் பாத்திரமாக இந்த வலதுபுறத்து கள்ளன் மாறினான். இயேசுவை சிலுவையில் அறைந்ததைப் போலதான் இந்த கள்ளனும் சிலுவையில் அறையப்பட்டான் (லூக் 23:33). அப்படியானால் இவன் வேதனையினால் கத்தியிருக்க வேண்டும், துடித்திருக்க வேண்டும், புலம்பி தவித்திருக்க வேண்டும். ஆனால், அப்படியெல்லாம் தன்னை வெளிப்படுத்தாமல் தன்னுடைய மிகுந்த வேதனைக்கு மத்தியிலும் இயேசுவை உயர்த்தி காண்பித்து சாட்சி சொன்னான் அல்லவா, இந்த செயல்தான் அவனுக்கு இரக்கமும் பரதீசும் கிடைக்க செய்தது. துன்பங்களுக்கு மத்தியில் சத்தியத்தையும், இயேசுவையும் மறுதலிக்காமல் வாழ்பவனே உண்மையான கிறிஸ்தவன் என்பதை இந்த வலதுபுறத்து கள்ளன் நிரூபித்து விட்டான்.

காரணம்: 5 "என்று அவனைக் கடிந்து கொண்டு" (லூக் 23:41) வலதுபுறத்து கள்ளன் இடதுபுறத்து கள்ளனை கடிந்து கொண்டபடியினால் தான் இடதுபுறத்து கள்ளனும் அமைதலானான். கடிந்து கொள்ளுதல் என்றால் பாவத்தை கண்டித்து எச்சரித்து உணர்த்துவதாகும். அவனை கடிந்து கொள்ளுகிறவர்கள் மேல் பிரியமுண்டாகும். அவர்களுக்கு உத்தம ஆசீர்வாதம் கிடைக்கும் (நீதி 24:25) என்ற தேவ வசனத்தின்படி வலதுபுறத்து கள்ளன் தேவனுக்கு பிரியமானவனாக மாறினான். அதனால் அவன் உத்தம ஆசீர்வாதத்தையும் சுதந்தரித்துக் கொண்டான்.

இந்த கடைசி காலத்தில் வாழ்த்தி பேசவும், போற்றி புகழவும் பல ஆயிரம் பேர் இருக்கின்றார்கள். ஆனால் நேருக்கு நேராக உண்மையை சொல்லி கடிந்து கொண்டு எச்சரிக்கும் ஆட்கள் தான் இல்லவே இல்லை. இதை வாசிக்கும் நீங்கள் இந்த அழைப்புக்கு கீழ்படியுங்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் உங்களுக்கும் உத்தம ஆசீர்வாதங்களை கட்டளையிடுவார். உங்களையும் உத்தமர்களாக மாற்றுவார்.

காரணம்: 6 "ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்" (லூக் 23:42). அதாவது பரலோக இராஜ்யத்தில் இடம் கிடைக்க வேண்டும் என்று ஜெபித்தான். "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிறஎன் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத் 10:32) என்ற வசனத்தின்படி, இடதுபுறகள்ளனுக்கு முன்பாகவும், மற்றும் சிலுவைக்கு அருகில் இருந்தவர்களுக்கு முன்பாகவும் இந்த வலதுபுறத்து கள்ளன் இயேசுவை அறிக்கை செய்தான். அதனால் அவனுக்கு இராஜ்யத்தில் இடம் கிடைத்தது.

ஆனால், அவன் ராஜ்யத்தின் எந்த பகுதிக்கு போனான் என்றும், அங்கு யாரெல்லாம் போவார்கள் என்றும் சற்று விரிவாகவும், விளக்கமாகவும் பார்ப்போம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

பரதீசு:-

பரதீசு என்றால் பூந்தோட்டம் அல்லது அடைத்து பாதுகாக்கப்பட்ட தோட்டம் என்ற அர்த்தங்கள் உண்டு. லூக்கா 16-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள ஆபிரகாமின் மடியையும் பரதீசு என்று தான் பரிசுத்தவான்கள் சொல்கின்றனர். பரதீசு என்பது பரிசுத்தவான்களின் ஆத்துமாக்கள் இளைப்பாறும் இடமாகும்.

பரதீசு என்பது இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்பு வரையிலும், பூமியின் கீழுள்ள பாதாளத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட ஒரு தனி இடத்திலும் இருந்தது. ஏழையாய் இருந்து மரித்த லாசருவும், வலதுபுறத்து கள்ளன் ஆகியோரும் கூட இந்த பதரீசுக்குதான் சென்றனர். ஆனால் அந்த பரதீசு இப்போது அங்கு பாதாளத்தில் இல்லை. “நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்” (வெளி 1:18) என்ற வசனத்தின் நிறைவேறுதலுக்கு ஏற்ப, இயேசு மரித்து உயிர்த்த போது, அடியில் பாதாளத்தில் இருந்த பரதீசு உயரே வானத்துக்கு மேலே எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்பு கீழே இருந்த பரதீசு இப்போது வானத்துக்கு மேலே இருக்கிறது. வலதுபுறத்து கள்ளனும் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டான்.

இந்த பரதீசை மூன்றாக பிரித்து பார்க்கலாம்:

1 ம் வானம், 2 ம் வானம், 3 ம் வானம்

1 ம் வானத்தில்: இரட்சிக்கப்பட்ட, மனம்திரும்பின புதிய அனுபவத்தில் உள்ளவர்கள் இருப்பார்கள்.

2 ம் வானத்தில்: பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள். மாபெரும் தேவமனிதர்கள், தீர்க்கதரிசிகள் காணப்படுவர்.

3 ம் வானத்தில்: கிருபையின் காலத்தில் மரிக்கும் பரிசுத்தவான்கள், ஆத்துமாக்கள் இருப்பார்கள். வலதுபுறத்து கள்ளனும் இங்குதான் இருப்பான். ஏனென்றால் அவன் மனம் மாறின காலம் கிருபையின் காலம்.

பூமியில் எந்த மனுஷனும் பேசாத ஒரு வித்தியாசமான புதிய பாஷை அங்கு பேசப்படும் (IIகொரி 12:3). அந்த பாஷையின் சத்தத்தை அங்குள்ளவர்கள் தங்கள் காதுகளால் கேட்க முடியும். காரணம்: அங்கு இருப்போர் சுய நினைவோடும், நல்ல மகிழ்ச்சியோடும் இருப்பார்கள்.

இந்த பரதீசுக்கு மத்தியில் ஓர் விசேஷ இடம் உண்டு. அந்த இடத்தில் ஜீவ விருட்சம் என்கிற உயிருள்ள மரம் உண்டு. (வெளி 2:7). அதனால் அங்கு ஜீவ கனியும் உண்டு. தேவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து, பரிசுத்த ஜீவியம் ஜீவித்து, கடைசி வரை கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தவர்கள் மரிக்கும் போது இந்த பரதீசு அவர்களுக்காக திறக்கப்படும். இந்த பரதீசுக்குள் எடுத்துக் கொள்ளப்படுகிறவர்கள், இயேசுவின் ஆயிரம் வருட அரசாட்சி முடிந்து உயிர்த்தெழுதல் நடக்கும் வரை இங்கு இளைப்பாறுவார்கள்.

அன்பானவர்களே, சாதாரண கள்ளன் மனம் திரும்பினபடியால் அவனுக்கே இவ்வளவு சிறப்பான, அழகான மகிமை நிறைந்த பர–தீசை கொடுப்பாரானால் உங்களுக்கு ஏன் தரமாட்டார்? சிந்தித்து பாருங்கள். மனம் திரும்புங்கள், கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவுக்–காக உறுதியாய் இருங்கள். பரதீசை சுதந்தரியுங்கள்.

"அவன் அப்னேரைப் பின் தொடர்ந்து, வலது புறத்திலாகிலும், இடது புறத்திலாகிலும், அவனை விட்டு விலகாமல் துரத்திக் கொண்டு போனான்" (IIசாமு 2:19) என்பதைப் போல இயேசு–வையும் இரண்டு பக்கத்திலும் இரண்டு கள்ளர்கள் தொங்கிக் கொண்டு இயேசுவை வலது இடதுபுறம் திரும்ப கூட விடாமல் மாறி மாறி பேசினார்கள். அப்னேரை விடாமல் துரத்தினதைப் போல இயேசுவையும் ஒரு பக்கம் கள்ளர்கள் பேச்சினால் துரத்தி–னார்கள். மற்றொருபுறம் யூதர்கள் உபத்திரவத்தினால் துரத்தி–னார்கள். ஆனாலும் இவைகளுக்கு மத்தியில் ஜெயித்தார். வெற்றியாய் ஓட்டத்தை முடித்தார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். இதை வாசிக்கும் நீங்களும் இயேசுவை போல வெற்றி–யுள்ள ஓட்டம் ஓடுங்கள். வலதுபுறத்து கள்ளனை போல இராஜ்–யத்தை சுதந்தரியுங்கள்.

XXXXVII. அரிமத்தியா யோசேப்பு :–

"அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவி–லிருந்து வந்தவனும், தேவனுடைய இராஜ்யத்திற்குக் காத்திருந்–தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்–மதியாதவனுமாயிருந்தான்" (லூக் 23:51).

வேறு யாரும் செய்ய முன் வராத இந்த வேலைக்கு இதோ நான் வருகிறேன் என்று சொல்லி, யாரும் செய்ய விரும்பாத அந்த வேலையை முழு மனத் திருப்தியோடு செய்து முடித்தவன் தான் இவன். இவனின் பெயர் யோசேப்பு. இவன் செய்த வேலை, இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணினது.

ஆம், இயேசு உயிரோடு இருக்கும் போது அவருக்கு உதவி செய்ய பலரும் பல விதங்களில் முன் வந்தனர். ஒருவன் மீனைக் கொடுத்தான், மற்றொருவன் அப்பத்தை கொடுத்தான், ஒரு பெண் விலையேறப் பெற்றதைலத்தை கொடுத்தாள். சீஷர்கள் இயேசு–வுக்கு தங்கள் படகை கொடுத்தனர். இப்படியாக அவர் உயிரோடு கூட இருக்கும் போது உதவி செய்தவர்கள் பலர், பலர். ஆனால், அவர் இறந்த போதோ அவருடைய சரீரத்தை அடக்கம் பண்–ணவோ, முறைமைகளை நிறைவேற்றவோ யாருமே முன் வர–வில்லை. அப்போதுதான் யாருமே அழைக்காமல் தானாகவே மனமுவந்து முன் வந்து இயேசுவின் சரீரத்தை சகல முறைமை–களின்படியும் அடக்கம் பண்ணினான். இந்த யோசேப்பு "ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது" (பிர 7:8) என்றவசனத்தின்படி, யோசேப்பு இயேசுவுக்குச் செய்த செயல் நல்லதாக முடிந்தது, அவனுடைய பெயரும் வேதத்தில் இடம் பிடித்து, இப்போது உலகம் முழுவதும் பேசப்படுகிறது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

a. பெயரும் — ஊரும்

யோசேப்பு என்கிற பெயர் கிறிஸ்தவர்களுக்கும், ஜோசப் என்கிற ஆங்கில பெயர் மற்றவர்களுக்கும் நன்றாக பரிச்சயமான பெயராகும். அதிலும் விசேஷமாக பலருக்கும் இரண்டே இரண்டு யோசேப்புகளைத்தான் தெரியும். ஒன்று முற்பிதாக்களில் ஒருவ–னாகிய யாக்கோபின் குமாரனாகிய யோசேப்பு, மற்றொருவன் கன்னிமரியாளின் புருஷனாகிய யோசேப்பு. இவர்கள் மட்டுமல்லா–மல் பரிசுத்த வேதாகமத்தில் ஏறத்தால பதினொரு யோசேப்புகள் உண்டு.

1. யாக்கோபின் மகனாகிய யோசேப்பு (ஆதி 30:24)
2. யோசேப்பின் சந்ததியாரைக் குறிப்பிடும் (உவமை) வார்த்தை (உபா 33:13)
3. கானானை சுற்றிப் பார்க்க அனுப்பப்பட்ட இசக்கார் கோத்திரத்துப் பிரபுவாகிய ஈகாலின் தகப்பன் (எண் 13:7)
4. ஆசாப்பின் வசத்திலிருந்த ஒருவன். முதல் சீட்டைப் பெற்றவன் (1நாளா 25:9)
5. யொயகீமின் நாட்களில் பிதா வம்சத் தலைவனாயிருந்த ஆசாரியன் (நெகே 12:14)
6. இயேசுவின் தாயாகிய மரியாளின் புருஷன் (மத் 1:16)
7. இயேசுவின் வம்ச அட்டவணையில் இடம் பிடித்த மத்தத்தி–யாவின் குமாரன் (லூக் 3:25)
8. இயேசுவின் வம்ச அட்டவணையில் யூதாவின் குமாரன் (லூக் 3:26)
9. இயேசுவின் வம்ச அட்டவணையில் யோனானின் குமாரன் (லூக் 3:30)
10. யூதாஸ்காரியோத்துக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட சீட்டு போடப்பட்ட இருவரில் ஒருவன். இவனுடைய மறுபெயர் "பர்சபா" (அப்1:23)
11. இயேசுவின் சரீரத்தைக் கேட்டு வாங்கின இவன் ஐசுவரிய–வானும், இயேசுவின் அந்தரங்க சீஷனுமாயிருந்த அரி–மத்தியா ஊரான் (மத் 27:57)

மேற்கண்டவர்களில் பதினொறாவது இடம் பிடித்த யோசேப்பு–தான். புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களின் கடைசிப் பக்க கதாநாயகன் ஆவான். இந்த யோசேப்பைக் குறித்து சொல்–லாமல், அல்லது பேசாமல் இயேசுவின் மரணம் முழுமைப் பெறாது. ஊழியர்களின் பிரசங்கமும் நிறைவு பெறாது.

இவனுடைய முழுமையான பெயர் அரிமத்தியா யோசேப்பு என்–பதாகும். அரிமத்தியா என்பது அவனுடைய ஊர் பெயராகும். அரிமத்தியா என்றால் உயர்ந்த என்ற அர்த்தத்தையுடையதாகும். அர்த்தத்தின்படியே அந்த ஊர் ஓர் உயர்வான ஊராகும். அதாவது, சாமுவேல் தீர்க்கதரிசியின் ஊராகிய ராமாவின் மறு பெயர்தான் அரிமத்தியா. அரிமத்தியா என்கின்ற ராமாவை தற்காலத்தில் "ராமே" என்று அழைக்கின்றனர். தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் ஊரிலிருந்து யோசேப்பு வந்தபடியினால், நிச்சயமாக சாமுவேலைப் போலவே வைராக்கியமுள்ளவனாகத்தான் யோசேப்பு இருந்திருப்–பான். சாமுவேலை போல தீர்க்கதரிசனமும், யோசேப்பைப் போல வைராக்கியமும் அரிமத்தியாவைப் போல உயர்ந்த, மற்றும் உயர்வா–னவர்களும் இந்நாட்களில் தேவை. அப்போதுதான் நாம் வாழும் பட்டணங்களும் அரிமத்தியாவாக மாறும்.

அரிமத்தியா ஊர்க்காரன் என்றால் துணிவுள்ளவன் என்று அர்த்தம் (மாற் 15:43). யோசேப்பு பிலாத்துவினிடத்தில் துணிந்து போய் இயேசுவின் சரீரத்தைக் கேட்டுள்ளான். அரிமத்தியனாகிய யோசேப்பின் துணிவை நேரில் கண்டபடியினால்தான் பிலாத்து எந்த பதிலும் சொல்லாமல் அனுமதியைக் கொடுத்துள்ளான். இயேசுவின் பிள்ளைககள் என்றால் கோழைகள் கிடையாது, துணிவுள்ளவர்கள் என்பதைத்தான் இந்த சம்பவம் நிரூபிக்கிறது.

அரிமத்தியா ஊர்க்காரன் என்றால் ஆலோசனைக்காரன் என்றும் பொருள்படும். ஏனென்றால், இவனுக்கு ஆலோசனைக்காரன் என்கிற விஷேச பெயரும் உண்டு (லூக் 23:50). அதே சமயம், இவனுடைய ஆலோசனைகள் அனைத்தும் நீதி நிறைந்ததாக இருந்தது. ஆனபடியினால்தான் அரிமத்தியா ஊரில் வாழ்ந்தவர்களில் இவன்தான் நீதிமான் என்ற பெயரைப் பெற்றான்.

அரிமத்தியா ஊர்க்காரன் என்றால், தேவனுடைய ராஜ்யம் வருவதற்கு காத்திருக்கும் பொறுமைசாலி என்னும் பழமொழியையே இவன் உருவாக்கி விட்டான். இயேசு என்பவர் வருவார், அவர் மரிப்பார், பின்பு ஒரு நாள் தேவனுடைய இராஜ்யம் முழுவதும் இந்த பூமிக்கு இறங்கி வரும் என்ற மேலான தரிசனமுள்ளவனாக இருந்துள்ள்ளான். "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத் 6:33) என்ற வசனத்துக்கு சொந்தக்காரனாகவும் மாறி விட்டான். இப்படியாக, அரிமத்தியா என்ற ஊரால் யோசேப்புக்கும், யோசேப்பால் அரிமத்தியா என்கிற ஊருக்கும் புகழ்ச்சியும் கனமும் உண்டானது.

b. அடையாளங்கள்:—

இயேசுவின் சரீரத்தை தன் கைகளினால் தொட்ட யோசேப்புக்கு பல அடையாளங்கள் உண்டு என்று வேதம் சொல்கின்றது. "அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா" (மத் 16:3) என்று இயேசு கேட்டார். அப்படியானால் யோசேப்பு போன்றசில நல்ல மனிதர்களின் வாழ்க்கையை குறித்த அடையாளங்களை கவனித்துப் பார்ப்பது தவறல்ல. இயேசுவே தன்னுடைய ஊழியத்தையும், வசனங்களையும் அடையாளத்தினாலேதான் உறுதிபடுத்தினார்.

1) இயேசுவுக்குச் சீஷன்	மத் 27:57
2) ஐசுவரியவான்	மத் 27:57
3) கனம்பொருந்தியவன்	மாற் 15:43
4) ஆலோசனைக்காரன்	லூக் 23:50
5) உத்தமன்	லூக் 23:50,51
6) நீதிமான்	லூக் 23:50
7) இயேசுவை கொலை செய்ய சம்மதிக்காதவன்	லூக் 23:51
8) அரிமத்தியா ஊரான்	யோவா 19:38
9) இயேசுவின் அந்தரங்க சீஷன்	யோவா 19:38

இப்படியாக பலவிதமான அடையாளங்கள் எழுதப்பட்டிருந்தாலும், ஒரே வசனத்தில் ஐந்து அடையாளங்கள் அவனைக் குறித்து எழுதப்பட்டுள்ளதையும் காண முடியும் (மாற் 15:43). 1) கனம் பொருந்தியவன் 2) ஆலோசனைக்காரன் 3) அரிமத்தியா ஊரான் 4) தேவனுடைய இராஜ்யம் வரக் காத்திருந்தவன் 5) துணிவுள்ளவன். இதே போல ஒரே வசனத்தில் இயேசுவுக்கும் ஐந்து நாமங்கள் கொடுக்கப்பட்டுள்ளது (ஏசா9:6) 1) அதிசயமானவர் 2) ஆலோசனைகர்த்தா 3) வல்லமையுள்ள தேவன் 4) நித்திய பிதா 5) சமாதான பிரபு. இந்த வசனங்களை கவனிக்கும் போது இயேசுவுக்கு நிழலாட்டமாய் இருந்துள்ளது. ஆனபடியினால், குமாரனாகிய இயேசுவின் பரிசுத்த சரீரத்தை அடக்கம் பண்ணவும் தொட்டுத் தூக்கவும், பிதாவாகிய தேவன் யோசேப்பை தெரிந்தெடுத்துள்ளார்.

எந்த ஒரு காரியத்தையும் தனிமையில் செய்யும்படி யாரையும் கட்டாயப்படுத்தாதவர் நம் தேவன். ஆனபடியினால்தான் மரித்த இயேசுவின் சரீரத்தை தூக்கவும், அடக்கமுறைமைகளை நிறைவேற்றவும் யோசேப்பால் மட்டும் முடியாது என்று அறிந்த தேவன் நிக்கொதேமு என்னும் சீஷனையும் துணைக்கு அனுப்பினார். இந்த நிக்கொதேமு யூதன் கிடையாது, பரிசேயன். ஆனால், இஸ்ரவேலில் போதகனாய் இருந்தவன் (யோவா 3:1,4,9). இவன் வாழ்க்கையைக் குறித்து மூன்று காரியங்களை கவனிக்கலாம்.

முதலாவது:- இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து சந்தேகங்களை கேட்டு, விளக்கத்தை தெரிந்து கொள்கிறவனாக இருந்தான். இராக்காலம் என்றால் இரவு நேரத்தை குறிக்கின்றது. இயேசு உயிரோடு இருக்கும்போது இராக்காலத்தில் வந்ததைப் போலவே அவருடைய மரித்த சரீரத்தை அடக்கம் பண்ணவும் இராக்காலம் துவங்குகிறநேரத்தில்தான் வந்தான். ஆனபடியினால் இராக்காலம் என்பது இவனுக்கு பழகிப் போன ஒன்று.

இரண்டாவது:- வாசனை திரவியத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். இவன் கொண்டு வந்த திரவியமானது வெள்ளைப்போளம் மற்றும் கரியபோளம் கலந்ததாக இருந்தது. பொதுவாக இப்படிப்பட்ட வாசனை திரவியத்தை பயன்படுத்தினால், மண்ணிலிருந்தும், கல்லிலிருந்தும் உருவாகக் கூடிய கறையான்கள் உருவாகாமல் அழிந்து போகும். அப்படியானால், கல்லறைக்குள் வைக்கப்படுகிற இயேசுவின் சரீரத்தை எந்த கிருமிகளும் தொடக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தோடு கூட நூறு இராத்தல் அதாவது 32 கிலோ திரவியங்களை இயேசுவுக்காகப் பயனபடுத்தியுள்ளான். இதன் மூலம், இயேசுவை அவன் எவ்வளவாய் நேசித்தான் என்பது தெரிகின்றது.

இப்படியாக யோசேப்பின் தனிமையை போக்க நல்ல சீஷனாகிய நிக்கொதேமுவை தேவன் அவனுடன் இணைத்தார். ஆனபடியினால்தான் இயேசுவின் சரீரத்தை சீலைகளில் சுற்றிக் கட்டினான் என்று எழுதப்படாமல் கட்டினார்கள் என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது (யோவா 19:40). வாசிக்கின்ற உங்களையும் தேவன் ஒரு அரிமத்தியனாகிய யோசேப்பை போலவும், இஸ்ரவேலின் போதகனாகிய நிக்கொதேமுவாயும் மாற்ற விரும்புகிறார்.

யோசேப்புக்கும், நிக்கொதேமுவுக்கும் இடையே இந்த விஷயத்தில் நிறைய ஒற்றுமைகள் இருக்கிதைக் காணலாம். யோசேப்பு மெல்லிய துப்பட்டியும், சீலையும் கொண்டு வந்தான். நிக்கொதேமு வெள்ளைப்போளமும் கரியபோளமும் கொண்டு வந்தான். இயேசுவைக் கொலை செய்ய இருவருமே சம்மதிக்கவில்லை. யோசேப்பு சங்கத்தின் ஆலோசகனாக இருந்தான். நிக்கொதேமு இஸ்ரவேலின் போதகனாயிருந்தான். இயேசுவின் மரித்த சரீரத்தை இருவரும் சேர்ந்துதான் கட்டினார்கள். யோசேப்பு வாங்கி வந்த துப்பட்டி இயேசுவை சுற்றிலும் மூடினது. நிக்கொதேமு கொண்டு வந்த வாசனை திரவியங்கள் கல்லறைக்குள்ளும், கல்லறைக்கு வெளியேயும் வாசனையால் நிறைத்தது. யோசேப்பின் சீலைகள் இயேசுவின் தோலையும், சதையையும் பாதுகாத்தது. நிக்கொதேமுவின் திரவியங்கள் கல்லறையை பாதுகாத்தது. மரணத்திலிருந்து உயிரோடு எழுந்த இயேசுவை யோசேப்பும் காணவில்லை, நிக்கொதேமுவும் காணவிலலை. இருவருமே பார்த்ததாக வேதத்தில் சொல்லப்படவில்லை. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

அருமையானவர்களே, உங்களுடன் கூட புதியதாக யாரையோ கர்த்தர் கொண்டு வந்து இணைக்கிறார் என்றால் அதில் ஒரு நன்மையிருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். யோசேப்பை தேடி நிக்கொதேமுவை தேடி அலைய விடவில்லை. அதே போலத்தான் அரிம்திய ஊரானாகிய யோசேப்பை போல அர்ப்பணித்துள்ள உங்களைத் தேடி சிலர் வரும்படி கர்த்தர் செய்வார். நீங்கள் அங்கலாய்க்க வேண்டாம். யோசேப்பின் மெல்லிய வஸ்திரமும், நிக்கொதேமுவின் கரியபோளமும் ஒன்று சேர்ந்தது போல நீங்களும் ஒன்று சேர்வீர்கள்.

c. கனம்:—

கிறிஸ்து இயேசுவுக்காக யார் எதை செய்தாலும் அதற்கு ஏற்றகனத்தை ஆண்டவர் தராமல் விடவே மாட்டார். இது, இயேசுவினிடத்தில் காணப்பட்ட நல்ல குணாதிசயங்களில் இதுவும் ஒன்றாகும். "ராஜா கனம்பண்ண விரும்புகிறமனுஷனுக்கு இப்படியே செய்யப்படும்" (எஸ்தர் 6:11) என்ற வேத வசனத்தின்படி யோசேப்புக்கும் சில கனம் உண்டானது.

- யோசேப்பின் வீட்டுக்கு அருகிலேயே இயேசு அடக்கம் பண்ணப்பட்டார்.
- அவனுடைய தோட்டமும், அந்த தோட்டத்தில் இருந்ததுமான கல்லறையும் பிதாவாகிய தேவன் தெரிந்தெடுத்தார்.
- இயேசு உயிரோடிருந்த நாட்களில் இந்த யோசேப்பு இயேசுவை போய் தனியே பார்த்தது கிடையாது.
- இயேசு உயிரோடிருந்த நாட்களில் ஒரு முறைகூட யோசேப்பின் கல்லறையை போய் இயேசு பார்த்தது கிடையாது.
- இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும் உலகம் முழுவதும் பேசப்படுகின்றது. அதே போல, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பையும், அவன் கொடுத்த கல்லறையை குறித்தும் உலகம் முழுவதும் பேசப்படுகிறது.
- உயிர்த்தெழுந்த இயேசு உலகத்துக்கு அடையாளம். உயிரோடு எழுந்த இயேசுவின் கல்லறை கிறிஸ்தவர்களுக்கு அடையாளம்.
- பிதாவின் திட்டங்கள் இயேசுவில் நிறைவேறினது. இயேசுவின் திட்டங்கள் யோசேப்பின் மூலம் நிறைவேறி முடிந்தது.

இப்படியாக ஆவிக்குரிய பிரகாரமாகவும், வேத வசனத்தின்படியும் யோசேப்புக்கு கனம் உண்டானது. இவை தவிர, ரோமன் கத்தோலிக்க சபையைச் சார்ந்தவர்கள் மிகப் பெரிய பட்டமாகிய புனிதர் பட்டத்தை வழங்கி ஓர் புனிதராகவே கருதுகின்றனர்.

ரோமர்களின் காலண்டரில் சொல்லப்பட்டுள்ளதைப் போல ஆண்டுதோறும் மார்ச் மாதம் பதினேழாம் (17) தேதியை யோசேப்பின் புனித நாளாகவும், ஆகஸ்ட் மாதம் பதினேழாம் தேதியை யோசேப்பு மற்றும் நிக்கொதேமு இருவரின் புனித நாளாகவும் கருதி கனம் பண்ணுகின்றனர். அருமையானவர்களே, ஒரு மெய்யான கிறிஸ்தவன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கும், கிறிஸ்துவுக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதற்கும் அரிமத்தியா யோசேப்பு ஒரு எடுத்துக்காட்டாக திகழுகின்றான்.

நான்கு சுவிஷேச நூல்களையும் நன்றாக வாசித்துப் பார்த்தால், ஒன்றிரண்டு வார்த்தைகளைத் தவிர, யோசேப்பு அதிகம் பேசினதாக வேதத்தில் ஆதாரமே கிடையாது. ஆம், இது உண்மை. தேவனுக்காக ஏதோ செய்ய விரும்புகிறவர்கள், அதிகமாய் வெளியே தெரியவும் மாட்டார்கள். அதிகமாய் பேசவும் மாட்டார்கள். ஆனால், தேவ திட்டத்தில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

அரிமத்தியா யோசேப்பைப்போல மாறுங்கள், தேவ திட்டத்தை நிறைவேற்றுங்கள், உங்களுக்குள்ளதையும், உங்கள் இடத்தையும், தோட்டத்தையும் இயேசுவுக்காய் அர்ப்பணியுங்கள். அப்பொழுது ஜீவ புஸ்தகத்தில் உங்கள் பெயர் பதியப்படும். பரலோக இராஜ்யத்திலும், பங்கு பெற்று கோடா கோடி ஆண்டுகள் நிலைத்திருப்பீர்கள். காரணம் இயேசுவுக்காக செய்தவைகள் மட்டுமே நிலைத்து நிற்கும், மற்ற அனைத்தும் அழிந்து போகும்.

d. I) இயேசுவின் கல்லறைஎப்படிப்பட்டது?

மத் 27:60புத்தம் புதிய கல்லறை.

II) இயேசுவின் கல்லறைஎங்கேயிருந்தது?

யோவா 19:41,42 சிலுவைக்கு அருகிலேயே கல்லறை இருந்தது.

III) கல்லறைக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள்:-

லூக் 23:51,53	1) அரிமத்தியனாகிய யோசேப்பு
லூக் 24:12	2) பேதுரு
மாற்கு 16:1,5	3) மகதலேனா மரியாள்
	4) யாக்கோபின் தாயாகிய மரியாள்
	5) சலோமே என்கிறஸ்திரீ
யோவா 20:5,8	6) மற்றொரு சீஷன்

IV) இயேசுவின் கல்லறைக்கு உள்ளே இருந்தவைகள்:-

மாற்கு 15:46	1) மெல்லிய துப்பட்டி
யோவா 19:39	2) வெள்ளைப்போளம்
	3) கரியப்போளம்
யோவா 19:40	4) சுகந்தவர்க்கம்
	5) சீலை
யோவா 20:7	6) தலையில் சுற்றியிருந்த சீலை

XXXVIII. தேன்கூட்டுத் துணிக்கையும் மீன்களும் :—

"அப்பொழுது பொரித்த மீன் கண்டத்தையும் தேன்கூட்டுத் துணிக்கையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் புசித்து" (லூக் 24:42,43)

இயேசு இந்த பூமிக்கு மனுஷகுமாரனாக வந்தார் என்றும் மனுஷர்களுக்காகவே வந்தார். ஏறத்தால மனிதர்களைப் போல–வே வாழ்ந்தார் என்பதற்கும் இந்த தேன் கூட்டுத் துணிக்கையும் ஓர் ஆதாரம் ஆகும். மனிதர்கள் எப்படி புசித்தனரோ அப்படியே மனுஷகுமாரனான இயேசுவும் புசித்தார். அப்பம், மீன், திராட்–சைரசம், விருந்து ஆகியவைகளையும் தன் கையால் தொட்டு வாங்கி புசித்தார். அதுவும், புசிக்கிறதற்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்று அவர்களிடத்தில் கேட்டு வாங்கி புசித்தார்.

தேன்கூட்டுத் துணிக்கை என்பதற்கு பல விளக்கங்கள் உண்டு. ஆனால், அதில் உள்ள தேன்தான் முக்கியமானது ஆகும். பரிசுத்த வேதாகமத்தில் தேனுக்கு மிக முக்கியமான இடம் உண்டு. தேனை ஒப்பிட்டும், தேனுக்கு இணையாகவும் ஏறத்தால 20 அடையாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவைக–ளைக் குறித்த பட்டியலை பின்னால் காண்பீர்கள். இயேசுவின் உணவு பட்டியலில் தேனும் ஒன்றாயிருந்தது (ஏசா 7:15). இதை ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக ஆவியானவரே எழுதி வைத்துள்–ளார்.

தேனைக் குறித்து வேதம் கொடுக்கும் அழகு குறிப்பு, பட்டிய–லும் ஏராளம் ஏராளம். ஒன்று இரண்டை மட்டும் உதாரணமாக நாம் இங்கு பார்ப்போம். தேன் உடலுக்கு நல்லது (நீதி 24:13). தேன், வெண்ணை, பால்கட்டி மூன்றையும் இஸ்ரவேலர் இணைத்து சாப்பிடுவார்கள் (IIசாமு 17:29) மெல்லிய மாவு, தேன், நெய் மூன்றையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நல்ல அழகு கிடைக்கும் (எசே 16:13). தேனை உற்பத்தி செய்வதற்கா–கவே மின்னீத், பன்னாக் என்கிற இரண்டு ஊர்கள் இருந்தது (எசே 27:17). இந்த ஊரின் முக்கிய தொழிலே தேனீக்கள் மூலம், தேன் தயாரிப்பதுதான். தேனை விட்டு பிரிக்க முடியாத இரண்டு பொருட்களுண்டு. ஒன்று பால், மற்றொன்று வெண்ணெய் (ஏசா7:22). பாலும் தேனும், தேனும் வெண்ணெயும் என்ற வார்த்தைகளை வேதாகமத்தில் எங்கும் காணலாம்.

a. தேன்கூட்டுத் துணிக்கை:—

மரித்த இயேசு உயிர்த்தெழுந்த நாட்களில் பதினொரு சீஷர்க–ளும் ஒரே இடத்தில் கூடியிருந்த போது, இயேசு அங்கே தோன்றி புசிக்க ஏதாகிலும் வேண்டும் என்று கேட்ட போது அவர்கள் இயே–சுவுக்கு முதலாவது கொடுத்தது பொரித்த மீன் கண்டம். பொ–ரித்த மீன் என்றால் பரிசுத்தமாக்கப்பட்டது என்று அர்த்தமாகும் (IIநாளா 35:13). ஆம், நாமும் நம்முடைய தேவனுக்கு கொடுப்பது எதுவானாலும் அது பரிசுத்தமானதாகத்தான் இருக்க வேண்டும். அசுத்தமானதும், நசல் கொண்டதும் தேவனுக்கு அருவருப்பான–தாகும். தேவன் பரிசுத்தமானவர் ஆனபடியால் நாம் தேவனுக்–காக கொடுப்பதும், செய்வதும் பரிசுத்தமானதாகத்தான் இருக்க வேண்டும்.

சீஷர்கள் இயேசுவுக்கு பொரித்த மீனை மட்டும் கொடுக்காமல், மீன் கண்டத்தையும் கொடுத்தார்கள் என்று பார்க்கிறோம் (லூக் 24:42). கண்டம் என்பது மகா பரிசுத்தத்தை காண்பிக்கின்றது. பொரித்தது என்றால் பரிசுத்தத்தையும், மீன் கண்டம் என்றால் மகா பரிசுத்தத்தையும் விளங்கப் பண்ணுகின்றது. அதே சமயம் பரிசுத்தம் என்பது விசுவாசிகளையும், மகா பரிசுத்தம் என்பது தேவ ஊழியக்காரர்களையும் காட்டுகின்றது.

பலிபீடத்தில் வைக்கப்பட்ட மார்க்ககண்டத்தை ஆசாரிய ஊழிய சம்பந்தப்பட்டவர்கள் மட்டும்தான் புசிக்க முடியும். புசிக்க வேண்டும் (லேவி 10:12,13,14). இதன் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது என்னத் தெரியுமமா? சாதாரண கிறிஸ்தவர்கள் பரிசுத்தமானவர்களாக மாறனும், பரிசுத்த மாணவர்கள் மகா பரிசுத்தமானவர்களாக மாறவேண்டும். வாழ் நாள் முழுவதும் பரிசுத்தம் என்ற பெயரில், பொரித்த மீனைப் போல விசுவாசியாகவே வாழ்ந்தால் போதாது. சீக்கிரத்தில் மீன்கண்டத்தைப் போல ஊழியக்காரர்களாக மாறவேண்டும். இயேசு உயிரோடு இருக்கும் வரைக்கும் சீஷர்கள் சீஷர்களாகவே வாழ்ந்தனர். ஆனால் அவர் உயிர்த்தெழுந்து போன பின்பு பரிசுத்த அப்போஸ்தலர்களாக உலகம் எங்கும் புறப்பட்டுப் போனார்கள்.

இந்த கிருபையுள்ள செய்தியை வாசிக்கின்ற நீங்கள் பரிசுத்தமாயும், மகா பரிசுத்தமாயும் மாற ஆயத்தமா? சாதாரணமான நீங்கள் கிறிஸ்துவுக்காக அசாதாரணமாக மாற ஆயத்தமா? விசுவாசி என்ற வேஷத்தைக் கலைந்து விட்டு ஊழியக்காரர் என்கிற மேன்மையை அடைய ஆயத்தமா இல்லையா என்பதை நிதானித்துப் பாருங்கள்.

சீஷர்கள் இயேசுவுக்கு தேன்கூட்டுத் துணிக்கையையும் கொடுத்தார்கள். இது, கூட்டுத்தேன் அல்லது தேன்கூடு என்பதைக் குறிக்கும். தேன் என்பது இரண்டு அர்த்தங்களை உடையது. ஒன்று: கர்த்தருக்கு பயப்படும் பயத்தைக் குறிக்கும் (சங்19:9,10) இரண்டாவதாக: தேவ வார்த்தை என்ற வசனத்தைக் குறிக்கும் (சங் 119:103). அன்பானவர்களே, கர்த்தருடைய பயம் நம் இருதயத்திலே இருந்தால் வேதம் வாசிக்க வேண்டும், தியானிக்க வேண்டும் என்ற பாரமும் தானாகவே வந்து விடும். அதற்கு நாம் தேனைப் போல மாறவேண்டும். தேனைப்போல மாறுவது சற்று கடினம்தான். ஆனால், மாறிவிட்டால் தேனை விட இனிமையாய் நம் வாழ்க்கை மாறி விடும்.

சீஷர்கள் இயேசுவுக்கு கொடுத்தது கூட்டுத்தேன். அப்படியானால் கூடு என்றால் என்ன என்று கவனிப்பது நலமாக இருக்கும். தேன் கூடு என்பது திருப்தியைக் குறிக்கின்றது. திருப்தியடைந்தவன் தேன் கூட்டையும் மிதிப்பான் (நீதி 27:7). ஆம், தேன் கூட்டை சாப்பிடும் போது இயேசுவுக்கே ஓர் திருப்தி வந்திருக்கும் என்று விசுவாசிக்கின்றேன். பிதா எனக்கு கொடுத்த உக்கிராணத்துவத்தையும், ஊழியத்தையும் சரியாய் செய்து முடித்தேன் என்கிற திருப்தி இயேசுவுக்கு உண்டாகியிருக்க வேண்டும்.

ஆனால், அநேகருடைய வாழ்க்கையில் திருப்தி இல்லாமலேயே வாழ்கின்றார்கள். ஆகார விஷயத்தில் திருப்தியில்லை, உடை உடுத்துவதில் திருப்தியில்லை. கணவன் மனைவி உறவில் திருப்தியில்லை. பண விஷயத்தில் திருப்தியில்லை என்று எப்போதும்,

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

திருப்தியற்றநிலைமையிலேயே வாழ்கின்றனர். தேவ பிள்ளை என்றால் அவர்கள் செய்கிற எதிலும் ஓர் திருப்தி இருக்கணும். அப்போது தான் மகிழ்ச்சியைக் காண முடியும். இயேசுவை நோக்கிப் பாருங்கள். அவரைப் போல திருப்தியாகுங்கள். மத்தேயு, மாற்கு, லூக்கா யோவான் என்னும் நான்கு சுவிசேஷங்களில் மட்டும் ஏறத்தால பதினைந்து முறை திருப்தி என்ற வார்த்தை வருகின்றது. நீங்கள் உங்கள் திருப்தியற்ற தன்மையிலிருந்து மாறி, திருப்தி என்னும் கூட்டுக்குள் நுழைந்து, மகிழ்ச்சியை அனுபவிக்க கர்த்தர் உங்களுக்குக் கிருபை செய்வாராக.

இயேசுவுக்கு கொடுத்த தேனில் கடைசியாக துணிக்கையும் இணைந்திருந்தது. துணிக்கை என்றால் அமரிக்கை என்று பொருளாகும். அமரிக்கை என்றால் என்னவென்றுத் தெரியுமா? சமாதானம் ஆகும் (Iநாளா22:9). துணிக்கை என்றாலே மீதம் என்று தான் நினைப்பார்கள். அதுவும் உண்மைதான், இயேசு வந்து ஊழியம் செய்து முடித்து திருப்தியாய் போகும் போது அவர் மீதம் வைத்து விட்டுப் போனது சமாதானத்தைதான் (யோவா14:27). இதை வாசிக்கும் உங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் சமாதானம் அமரிக்கையாய் ஆளுகை செய்வதாக.

முன்னொரு நாட்களில் தேவன் பூமியின் மீது கல் மழையை துணிக்கையைப் போல பெய்யப் பண்ணினார் (சங்147:17). ஆனால், இப்போதோ இது கிருபையின் காலம், அதனால் உங்கள் மீது அமரிக்கையும், சமாதானத்தையும் துணிக்கைகளைப் போல பெய்ய பண்ணி கிருபையினால் மூடுவார்.

"கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்" (சங்81:16) என்ற வேத வசனம் நிறைவேறத்தக்கதாக, மிக சிறந்த தேனான கன்மலையின் தேனினால் உங்களை திருப்தி என்னும் கிருபைக்குள் நடத்தி, பரிசுத்தம் என்னும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குள் நிறைத்து துணிக்கை என்னும் சமாதானத்தினாலும், அமரிக்கையினாலும் நிறைத்து, உயிருள்ள சாட்சியாக உங்களை மாற்றுவாராக.

தேனோடு ஒப்பிட்டு சொல்லப்பட்டுள்ள சில அடையாளங்கள்			
1.	ஆதி 43:11	தேன்	உச்சிதமான வஸ்து
2.	யாத் 16:31	தேன்	மன்னா,பணியாரம், ருசி
3.	யாத் 3:8,17	தேன்	பால்
4.	உபா 8:8	தேன்	எண்ணெய்
5.	உபா 32:13	தேன்	கன்மலை
6.	நியா 14:9	தேன்	சிங்கம்
7.	நியா 14:18	தேன்	மதுரம்
8.	IIசாமு 7:29	தேன்	வெண்ணெய்
9.	Iஇரா 14:3	தேன்	கலசம்
10.	IIஇரா 18:31	தேன்	சீமை
11.	யோபு 20:17	தேன்	நெய்
12.	சங் 119:103	தேன்	இனிமை
13.	நீதி 5:3	தேன்	உதடு
14.	நீதி 16:24	தேன்	ஆத்துமா
15.	நீதி 25:27	தேன்	தற்புகழ்
16.	எரே 41:8	தேன்	புதையல்
17.	எசே 3:3	தேன்	தித்திப்பு
18.	எசே 16:13	தேன்	மெல்லிய மாவு
19.	வெளி 10:9	தேன்	சிறு புஸ்தகம்
20.	லூக் 24:42	தேன்	மீன் கண்டம்

b. மீன்கள்:—

"அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்" (யோவா 21:13).

மீன் என்பது பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகின்ற உயிரினங்களில் முக்கியமான ஒன்றாகும். ஆடு, மாடு, கழுதை இவைகளுக்கு அடுத்தபடியாக முக்கிய இடத்தையும் பிடித்துள்ளது. பழைய ஏற்பாட்டின் இரண்டாம் புஸ்தகமான யாத்திராகமம் முதல் புதிய ஏற்பாட்டின் ஐந்தாம் புஸ்தகமான அப்போஸ்தலர் நடபடிகள் வரையும் மீன்களை குறித்து நிறைய பார்க்கலாம்.

பழைய ஏற்பாட்டு அப்போஸ்தலனாகிய மோசேயின் வாழ்க்கையில் ஆரம்பிக்கிற மீன்களின் பயணம் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையோடு முடிகிறது. மோசேயின் நாட்களில் நதியில் செத்து மிதந்த மீன்களை எடுத்து வெளியே எறிந்ததும் எகிப்தை விட்டு துர்நாற்றம் விலகினது. பவுலின் வாழ்க்கையில் அவன் கண்களில் காணப்பட்ட மீன் செதில் கீழே விழுந்ததும் அவனின் வாழ்க்கை வாசனையாக மாறினது.

மீன்கள் நாறிப்போனதால் பார்வோனின் இருதயம் கரைந்தது. மீன் செதில்கள் விழுந்ததால் பவுலின் மனம் மாற்றமடைந்தது. மோசேயின் நாட்களில் பார்வோனுக்கு முன்பாக முதலாவது கோல் சர்ப்பமானது. இரண்டாவது, நதியின் தண்ணீர் இரத்தமானது. மூன்றவதாக மீன்கள் செத்து போனது (யாத் 7:10,17,18). அனனியாவுக்கு முன்பாக பவுல் முதலாவது பார்வையடைந்தான். இரண்டாவது பரிசுத்த ஆவியினால் நிரம்பினான். மூன்றாவதாக கண்களில் இருந்த மீன் செதில்கள் விழுந்தது (அப் 9:17,18). இவ்விதமாக பழைய ஏற்பாட்டிலிலும், புதிய ஏற்பாட்டிலும் மீன்களை குறித்த ஒற்றுமையை நிறைய காணலாம்.

பழைய ஏற்பாட்டு மீன்களுக்கு கதாநாயகன் யார் என்று கேட்டால், யோனா என்று தைரியமாக சொல்லலாம். அதுபோல புதிய ஏற்பாட்டு மீன்களுக்கு யார் கதாநாயகர் என்று கேட்டால் அவர்தான் இயேசு கிறிஸ்துவாகும். காரணம்! இவர்கள் இருவரையும் குறித்து வசனம் இவ்விதமாக சொல்கின்றது. "யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்" (மத் 12:40). எவ்வளவு ஒரு ஒற்றுமை பாருங்கள்.

யோனாவுக்கு கிடைத்தது மீனின் வயிறு. ஆனால் இயேசுவுக்கு கிடைத்ததோ பூமியின் இருதயம். வயிற்றுக்கு உணவு இல்லாமல் ஒருவரால் வாழ முடியும். ஆனால், இருதயத் துடிப்பு இல்லாமல் ஒருவராலும் வாழ முடியாது. ஆனபடியினால்தான் இயேசு இன்றும் கூட அநேகருக்கு இருதய துடிப்பாக இருக்கிறார். இதை வாசிக்கும் உங்கள் வயிறு, இருதயம், வாழ்க்கையும் கூட இயேசுவின் துடிப்பாக மாறட்டும்.

இயேசு ஊழியம் செய்த நாட்களிலும், மரித்து உயிர்த்தெழுந்த பின்பும் அவர் தன்னுடைய கையினால் தொட்ட உணவு வகைகளில் மீன்கள் மிக முக்கியமானதாகும். ஆசீர்வதிப்பதற்க்காக தொட்டார், ஜெபிப்பதற்க்காக தொட்டார், நெருப்பில் சுடுவதற்க்காக தொட்டார், புசிப்பதற்க்காகவும் தொட்டார். இப்படி பல காரணங்களுக்காக இயேசு மீன்களை தொட்டிருந்தாலும், அவர் இரண்டு விசை மீன்களை தொட்டது கவனிக்கப்பட வேண்டியவைகளாகும். அப்படி அவர் தொட்ட இரண்டு விசையில் ஒரு முறை 5000 பேரும், மற்றொரு முறை 4000 பேரும் மீன் சாப்பிட்டனர். அந்த இரண்டு சந்தர்ப்பங்களில் 5000 என்று வரும் ஒரு சம்பவத்தை மட்டும் ஜெபத்துடனும், கவனத்துடனும் தியானிப்தோடபாம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

C. 5000 மீன்கள்:—

இதை உன் கண் காணும்படி செய்தேன் (உபா 34:4) என்று சொல்லப்பட்டுள்ள வாக்குத்தத்த வார்த்தையின்படியே ஏறத்தால ஐந்தாயிரத்திற்கும் அதிகமான ஆண்கள் கூடியிருந்த இடத்தில் ஓர் மிகப் பெரிய அதிசயத்தை கர்த்தராகிய இயேசு செய்தார். அதாவது, வெறும் இரண்டு மீன்களை ஐந்தாயிரம் மீன்களாக மாற்றினார். இதற்கு காரணம் இயேசுவின் அற்புதமான தொடுத –லாகும். இந்த செய்தியை படிக்கின்ற உங்களையும் கூட இயேசு தொடுவார். நீங்கள் தொடப்படுவீர்கள்.

திபேரியா மற்றும் கலிலேயா கடலுக்கு அக்கரையிலிருந்த பெத்சாயிதா என்ற பட்டணத்தின் அப்புறத்தில் காணப்பட்ட ஒரு சிறிய மலை மீது ஏறி தமது சீஷர்களோடு உட்கார்ந்தார். திபேரி –யா என்பது கலிலேயா கடலின் மேற்கரையில் அமைந்துள்ளது. இங்கு இயற்கையாகவே தோன்றின வெண்ணீறூற்றுகள் பல இருந்தது. அதே சமயம் கலிலேயாவில் ஏறத்தால இருநூற்று நாற்பது பட்டணங்களும், கிராமங்களும் உண்டு. இப்படிப்பட்ட அற் –புதமான சூழ்நிலைகள் நிறைந்த வனாந்தரமான பகுதியில் இயேசு உபதேசிக்கவும், வியாதியஸ்தர்களை சுகமாக்கவும் துவங் –கினார். அவருடைய உபதேசத்தையும், சத்தியத்தையும் ஜனங்கள் தொடர்ந்து மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தபடியினால், சாயங் –காலமும், வெகு நேரமுமானதை கூட ஜனங்கள் மறந்து போனார் –கள் (மத் 14:15; மாற்6:35). இந்நாட்களில் இவ்விதமாய் பிரசங் –கிப்போரை காண முடியாது, பொறுமையாய் கேட்கிற ஜனங்க –ளையும் காண முடியாது. ஆனால், பாரத்தோடு பிரசங்கிக்கிற –சத்தியவான்களும் தேவை. பொறுமையாய் கவனிக்கிற விசுவாச வீரர்களும் தேவை.

பன்னிரெண்டு சீஷர்களும் ஒருமித்து சேர்ந்து வந்து, ஜனங் –களை சீக்கிரம் அனுப்பி விட வேண்டும் காரணம் அவர்கள் அனைவருக்குமான உணவு இல்லை என்றார்கள் (லூக் 9:12). இப்படி சீஷர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வந்தது அவர் –களிடம் காணப்பட்ட ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் காண்பிக் –கின்றது. இந்த கடைசி நாட்களில் சபைகள், ஊழியங்கள், குடும்பங்கள் என அனைத்திலும் ஐக்கியம் தேவையாயிருக்கிறது.

சீஷர்கள் அனைவரும் அங்கு இருந்தாலும் அந்த பன்னி –ரெண்டு பேரில் ஒருவனாகிய பிலிப்புவைப் பார்த்து, ஐந்தாயிரம் பேருக்கான அப்பங்களையும் மீன்களையும் எங்கு வாங்கலாம் என்று குறிப்பாய் கேட்டார். இப்படி அவனிடம் குறிப்பாய் கேட்க –இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று: இயேசுவும் ஜனங்களும் கூடியிருக்கிற அந்த பட்டணமாகிய பெத்சாயிதா பட்டணத்தை சேர்ந்தவன்தான் இந்த பிலிப்பு. ஆனப –டியினால் உள்ளூர்காரனுக்கு தெரிந்திருக்கும் என்ற நோக்கத்தில் அவனிடம் கேட்டார்.

இரண்டு: மற்றொரு சீஷனாகிய நாத்தான்வேலை முதன்முதலில் இயேசுவிடம் அழைத்து வந்தவனும் இவன்தான். இப்படி சில நல்ல தகுதிகள் பிலிப்புவிடம் காணப்பட்டாலும், இயேசு கேட்ட மீனையும் அப்பத்தையும் கொண்டு வர அவனால் இயலாமல் போய் விட்டது. இதை கவனமாய் வாசிக்கின்ற எனக்கு அன்பான தேவபிள்ளையே, உங்களுக்குள்ளும் பல திறமைகளும், தகுதிக –ளும் காணப்பட்டும், ஏற்றசமயத்தில் அவைகள் உதவாமல் போக –லாம். கவலைப்படாதீர்கள். பிலிப்புவை புறம்பே தள்ளாத இயேசு உங்களையும் தள்ளிவிடாமல் தன் மார்போடு அணைக்க ஆயத்த –மாய் உள்ளார்.

பிலிப்புவினால் முடியாமல் போகவும் அந்திரேயா என்னும் சீஷன் ஒரு சிறு பையனின் கையில் இருந்த இரண்டு மீன்களை குறித்து சொன்னான். இங்கு சொல்லப்பட்டுள்ள சின்ன பைய-னை குறித்து சாதாரணமாக எடை போட்டு விட வேண்டாம். ஏறத்தால ஐந்தாயிரம் பேருக்கு ருசியுள்ள மீன் சாப்பாடு கொடுக்க இவன்தான் காரணமானான். சிறு பையன் என்றால் நடத்துதல் என்று ஆவிக்குரிய அர்த்தமாகும் (ஏசா11:6). ஆம், மற்றவர்களின் பார்வைக்கு சிறு பையனைப் போல காணப்படு-கின்ற உங்களுக்குள் மீனுக்கு ஒப்பான ருசியான தாலந்துகளை வைத்துள்ளார் என்பதை மறந்து போகாதீர்கள். ஒரு நாள் உங்க-ளையும் பயன்படுத்துவார்.

சிறு பையனின் கையில் இருந்தது இரண்டே இரண்டு மீன்-கள் தான். அந்த இரண்டு மீன்கள் என்பது ஒன்று பழைய ஏற்-பாட்டையும், மற்றொன்று புதிய ஏற்பாட்டையும் காண்பிக்கின்றது. யூதர்கள் பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை விசுவாசிக்கின்றவர்கள். ஆனால் இயேசுவோ புதிய ஏற்பாட்டு கால கிருபையின் பிரமா-ணத்தை விசுவாசிக்கின்றவர். அப்படியானால் இரண்டு பிரமா-ணங்களையும் இணைக்கிறபாலமாக அந்த சிறு பையன் காணப்பட்டான்.

அந்த இரண்டு மீன்கள் என்பது பரிசுத்தத்தையும் பாவத்தை-யும் காண்பிக்கின்றது. அதாவது, உபதேசம் பண்ணி கொண்டி-ருக்கிற இயேசு பரிசுத்தமானவர். உபதேசத்தை கேட்டு கொண்டிரு-க்கிற ஜனங்கள் பாவிகள். இவர்கள் இருவரையும் அந்த சிறு பையன் கொடுத்த மீன்தான் ஒன்றாக இணைத்தது. பாவிகள் பரி-சுத்தமாயினர். பரிசுத்தரோ பாவிகளின் தேவனானார்.

அந்த இரண்டு மீன்கள் என்பது மாம்சத்தையும் ஆவியையும் காண்பிக்கின்றது. அதாவது, ஜனங்கள் பசியோடு இருந்தனர். அது மாம்சமாகும். மீன்களை வாங்கினதும் இயேசு ஸ்தோத்திரம் பண்ணினார் (யோவா6:11). இது ஆவியாகும். இப்படியாக மாம்சத்-தையும், ஆவியையும் சேர்த்து அப்பம் என்னும் ஆத்துமா உருவாக அந்த சின்ன பையன்தான் காரணமானான்.

அந்த இரண்டு மீன்கள் என்பது ஒன்று ஒழுங்கற்ற நிலைமை-யையும், மற்றொன்றோ ஒழுங்கையும் சுட்டி காண்பிக்கின்றது. அதாவது, ஸ்தோத்திரம் பண்ணின மீன்களை கொடுப்பதற்கு முன்-பாக ஜனங்கள் அனைவரையும் ஐம்பது ஐம்பது பேராகவும், வரிசை வரிசையாகவும் உட்கார சொன்னார் (மாற்6:40). அப்படி-யானால் என்ன அர்த்தம், அதுவரையிலும் ஜனங்கள் எந்த ஒரு ஒழுங்கும் இல்லாதவர்களாக உட்கார்ந்திருந்தனர். இப்போது மீன்-களை கொடுக்கும் போது அவர்களுக்குள் சரியான ஒழுங்கும், சீரான வரிசையும் உண்டாகி விட்டது. இந்த நற்செயலுக்கு கார-ணமாக இருந்தவன் அந்த சின்ன பையன்தான்.

உயிருள்ள சின்ன பையனும், செத்துப்போன இரண்டு மீன்க-ளும் இயேசுவினிடம் வந்ததும், பலவிதங்களில் பலருக்கும் ஆசீர்வாதமாக மாறினார்கள். இவைகளை ஆச்சரியமாய் வாசித்து கொண்டிருக்கும் நீங்கள் இயேசுவுக்குள் வந்து எவ்வளவு நாட்க-ளும், காலங்களும் ஆகிவிட்டது? ஆனால், நீங்கள் யாருடைய வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டு வந்தீர்கள்? உங்களால் பசி ஆறினவர்களும், திருப்தியானவர்களும் எத்தனை பேர்? நீங்-கள் ஆவியிலும், சத்தியத்திலும் உயிரோடுதான் இருக்கின்றீர்க-ளா? அல்லது செத்துபோன நிலைமையில் இருக்கின்றீர்களா என்பதை சிந்தித்து பாருங்கள். யோசித்து பாருங்கள். இனியும் காலத்தை கடத்தாதீர்கள்.

சிறுபையன் தன்னிடத்தில் இருந்ததைத்தான் இயேசுவுக்கு கொடுத்தான். ஆனால், மீனோ தன்னையே இயேசுவுக்கு கொ

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

கொடுத்தது. எலிசா தீர்க்கதரிசி எப்படி தான் செத்த பின்பும் ஒருவனை உயிரோடு எழுப்பினானோ (IIஇரா13:21) அதுபோல இந்த மீன்களும் தான் செத்த நிலைமையில் இருந்தாலும், அதற்கு மத்தியிலும் ஏறத்தால ஐந்தாயிரம் பேரின் பசியை போக்கி அவர்களின் வாழ்க்கையில் திருப்தியை கொண்டு வந்தன (மாற் 6:42). இது கதையுமல்ல, உதாரணமுமல்ல, உங்களுக்கு விடப்படுகின்ற சவால். எழும்புங்கள், தீவிரமாய் செயல்படுங்கள். ஏழைகளின் பசியைப் போக்குங்கள். ஊழியர்களின் தாகத்தை தீருங்கள். இயேசுவின் தரிசனத்தை நிறைவேற்றுங்கள். நீங்கள் எழும்புவதற்கும், கிரியை செய்வதற்கும் இதுவே காலம், இதுவே நேரம். இனியும் தாமதம் வேண்டவே வேண்டாம்.

இயேசு அந்த இரண்டு மீன்களை எடுத்து ஜெபித்த பின்பு அவைகள் ஐந்தாயிரமாக மாறினது. ஐந்தாயிரம் என்றால் உணர்வு என்று பொருளாகும் (மத் 16:9). இயேசு சீஷர்களைப் பார்த்து நீங்கள் இன்னும் உணரவில்லையா என்று கடிந்து கொண்டு கேட்டார். இரண்டு மீன்களை ஐந்தாயிரம் பேருக்கு சாப்பிட கொடுத்த போது அதில் கொஞ்சத்தை பேதுருவும் சாப்பிட்டிருப்பான். ஆனபடியினால்தான், பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு பிரசங்கம் பண்ணின போது ஏறத்தால ஐந்தாயிரம் பேர் உணர்வடைந்து இரட்சிக்கப்பட்டனர் (அப் 4:4).

பேதுரு முழுமையான ஊழியத்திற்கு வருவதற்கு முன் சாப்பிட்ட உணர்வுள்ள மீன், அவன் முழுமையாக ஊழியத்திற்கு வந்த பின்பு பலன் கொடுக்க ஆரம்பித்தது. இயேசு கொடுத்த மீனை சாப்பிட்டவர்கள் திருப்தியடைந்து தங்கள் வீடுகளுக்குப் போனார்கள். ஆனால், பேதுரு கொடுத்த பிரசங்கத்தை கேட்டவர்களோ சபைகளுக்கு வந்தார்கள். இதற்கு பெயர்தான் உணர்வுள்ள ஆவி என்பது. உங்கள் ஆவி உணர்வுள்ளதாக உள்ளதா? அநேரை கிறிஸ்துவுக்குள்ளும், சபைக்குள்ளும் நடத்துகின்றதா என்பதை கவனியுங்கள்.

d. வரிசை வரிசையாய்:–

இயேசு! ஆண்டவராய் இருந்தாலும், அவர் செய்வது ஊழியமாய் இருந்தாலும் அதிலும் அவர் ஒழுங்குமுறையை எதிர்பார்த்தார். ஸ்தோத்திரம் பண்ணின மீன்களை கொடுப்பதற்கு முன்பாக ஜனங்களை மூன்று காரியங்களை செய்யச் சொன்னார்.

i. வரிசை வரிசையாக உட்காரச் சொன்னார்.

ii. நூறு நூறு பேராக உட்காரச் சொன்னார்.

iii. ஐம்பது ஐம்பது பேராக உட்காரச் சொன்னார் (மாற் 6:40).

இப்போது இந்த வரிசை முறையை உங்கள் கண்களுக்கு முன்பாக கற்பனையாக கொண்டு வந்து பாருங்கள். முதலில் வரிசை வரிசையாக, இது மிக நீண்ட வரிசையாக இருக்கும். அடுத்தது நூறு நூறு பேராக இது முந்தின வரிசையை விட சற்று சிறிய வரிசையாக இருக்கும், அதன்பின்பு ஐம்பது ஐம்பது பேரான வரிசை முந்தின இரண்டை விட இன்னும் சற்று சிறிய வரிசை தூரத்திலிருந்து பார்க்கும் போது கண் கொள்ளா காட்சியாக இருந்திருக்கும்.

வரிசை என்பது பலியை குறிக்கும் (லேவி 6:12). பலிபீடத்தில் தகன பலிகளை வரிசையாகத்தான் வைப்பார்கள். அப்படியானால் இந்த வரிசை என்ற பலிகள் புதிய ஆத்துமாக்களை காண்பிக்கின்றது. நூறு நூறு என்றால் கீழ்படிதலை காண்பிக்கின்றது. தாவீதின் நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் அவன் சொல்வதை கேட்டு கொண்டு நூறு நூறு பேராக கலைந்து சென்றார்கள் (IIசாமு 18:4). அப்படியானால் இந்த கீழ்படிதல் என்பது விசுவாசிகளை காண்பிக்கின்றது. ஐம்பது ஐம்பது என்பது தேவனுக்காக உழைக்கும் ஊழியக்காரர்களை காண்பிக்கின்றது (Iஇரா18:4). ஒபதியா என்ற தேவ மனுஷன் இரண்டு கெபிகளில் ஐம்பது ஐம்பது ஊழியக்காரர்களை ஒளித்து வைத்தான்.

அதாவது நாம் நம்மை வரிசை என்னும் ஒழுங்கின்படி தகன –பலியாக ஒப்புக் கொடுத்தால், தேவன் நம்மை நூறு சதவீதம் உண்மையுள்ள விசுவாசியாக மாற்றி விடுவார். நூறு சதவீதம் உண்மை வந்து விட்டால் ஊழியக்காரன், ஊழியக்காரி என்னும் பட்டமும், அபிஷேகமும் தானாகவே கிடைத்து விடும். இதுதான் இயேசுவின் நாட்களிலும் நடந்தது. யூதர்கள் இயேசுவிடம் வரும் –போது பலி ஆடு போல வந்தார்கள், வந்த அவர்கள் உபதேசத் –தால் விசுவாசிகளாய் மாறினார்கள், விசுவாசியானவுடன் இயேசு கொடுத்த பொரித்ததும் ஸ்தோத்தரித்ததுமான மீன்களை சாப்பிட்டதும் தேவ ஊழியர்களாக, ஊழியக்காரிகளாக புறப்பட்டுப் போனார்கள்.

பந்தி பரிமாறும் போது அப்பத்தை இயேசு சீஷர்களிடம் கொடுத்து, அந்த அப்பங்களை பிட்டு கொடுக்கும்படியாக சொன் –னார் (மாற் 6:41). ஆனால், மீன்களை பிட்டு கொடுக்கவில்லை. அப்படியேதான் கொடுத்தார்கள். இது எதை குறிக்கின்றது தெரி –யுமா? ஒருவன் பச்சை மீனைப் போல பாவியாக இல்லாமல், பொரித்த மீனைப் போல பூரண இரட்சிப்புக்குள் அர்ப்பணிக்கும் போது தேவன் அவனை முழு வல்லமையோடும், முழு கிருபை –யோடும் பயன்படுத்துவார் என்பதையே காண்பிக்கின்றது.

இருந்த வரைக்கும்தான் அப்பங்களை கொடுத்தார்கள் என்று வேதம் சொல்கின்றது. அதனால்தான் அப்பங்களை பிட்டு கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், மீன்களையோ அப்படியல்ல, வேண்டிய மட்டும் கொடுத்தார்கள் (யோவா 6:10). அதாவது, சாப்பிட்டுவிட்டு திரும்பவும் வந்து கேட்டால் இல்லை என்று சொல்லாமல் அவர்களுக்கு மீன்கள் தாராளமாய் கொடுக் –கப்பட்டது. அப்படியானால், அப்பங்களை விட மீன்கள் ஏராள –மாய் பெருகினது என்று அர்த்தமாகும்.

இரண்டு மீன்கள் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மொத்தம் ஏழு விசை சொல்லப்பட்டுள்ளது. ஏழு என்றால் நிறைவு அல்லது பூரணம் என்று அர்த்தமாகும். இயேசு தொட்ட மீன்களான இந்த செய்தியை கவனமாகவும், உண்மையாகவும் வாசிக்கிற உங்கள் வாழ்க்கையில் நிறைவான, பூரண நன்மைகளை ஏராளமாய் பெருக பண்ணுவார். இயேசுவிடம் வந்த ஜனங்கள் திருப்தியாக கடந்து சென்றதைப் போல உங்களுக்கும், உங்களை சார்ந்த யாவருக்கும், உங்கள் வீட்டாருக்கும் ஆண்டவர் அனைத்திலும் திருப்தியைக் கட்டளையிடுவார்.

உ. மீன்கள்:–

மாற்கு 6:41 அவர் அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து ஆசீர்வதித்து.

முக்கியமான – வித்தியாசமான மூன்று மீன்களை காணலாம்.

I.பாம்பு மீன்:–

மத் 7:10 மீனைக் கேட்டால் பாம்பைக் கொடுப்பானோ?

விளக்கம்

மத் 7:11 பொல்லாத சுபாவத்தைக் காண்பிக்கின்றது.

யோபு 35:12 பெருமைக்காரர்கள்தான் பொல்லாதவர்கள்.

II. சுட்ட மீன்:–

யோவா 21:9 கரிநெருப்பின் மேல் மீன் இருந்தது.

யோவா 18:18 கரிநெருப்பு (எல்) குளிர்ந்துபோன அனுபவம்.

மாற் 14:67 பேதுரு குளிர்காய்ந்தான்.

III. பொரித்த மீன்:-

லூக் 24:42,43 பொரித்த மீனை அவர் புசித்தார்.

2நாளா 35:13 பொரித்தமீன் (எல்) பரிசுத்தமாக்கப்படுதல்.

எபி 10:10 இயேசுவின் சரீரம் பரிசுத்தமாக்கப்பட்டது.

(மு.வ) யோவா 6:11 அப்படியே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தார்.

f. பலவித மீன்களும் விளக்கங்களும்:-

1. செத்த மீன்கள் என்றால் – நாரிப்போன (பழைய) ஜீவியம் (யாத் 7:18,21)
2. மீன் வாசல் என்றால் – உயரமாய் கட்டப்படுதல் (IIநாளா 33:14)
3. பொரித்த மீன் என்றால் – பரிசுத்தம்/சந்தோஷம் (லூக் 24:41,42; IIநாளா 35:13)
4. பெரிய மச்சங்கள் (மீன்கள்) என்றால் – ஏராளமான பெருக்கம் (எசே 47:10)
5. பெரிய மீன் என்றால் – கட்டளைக்குக் கீழ்ப்படிதல் (யோனா 1:17)
6. மச்சங்கள் என்றால் – துன்மார்க்கர் (செப் 1:3)
7. பாம்பு மீன் என்றால் – ஏமாற்றுதல் (மத் 7:10)
8. பரலோக மீன் என்றால் – ஐக்கியம் (மத் 13:47)
9. சிறு மீன்கள் என்றால் – ஆசீர்வாதம் (மாற்க8:7)
10. திரளான மீன்கள் என்றால் – பிரமிப்பு (லூக் 5:9)
11. இரண்டு மீன்கள் என்றால் – இரண்டு சீசர்கள்
    1) பிலிப்பு
    2) அந்திரேயா
    (யோவா 6:7,8)
12. வலதுபுறத்து மீன் என்றால் – கீழ்படிதல் (யோவா21:6)
13. நெருப்பு மீன் என்றால் – ஆயத்தம் / சுத்திகரிப்பு (யோவா 21:9)
14. மீன் செதில்கள் என்றால் – ஆவியின் பார்வை (அப் 9:18)

XXXXIX. ஊர்வலத்தில் கழுதை :–

"அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சை செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சை செடியிலும் கட்டுவான். திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சைப் பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான்" (ஆதி 49:11).

கழுதை! கழுதை!! இந்த வார்த்தையை இன்றும் கூட சில கிராமங்களில் பெற்றோர் தன் பிள்ளைகளைப் பார்த்து சொல்வ–தைக் காணலாம். கழுதை என்றாலே ஒன்றுக்கும் உதவாதது என்கிற நினைப்பு பலருக்கும் உண்டு. கழுதை சுமப்பதைப் போல நான் சுமந்து கஷ்டப்படுகிறேன் என்று தன்னைத் தானே சலித்துக் கொள்கிறவர்களும் உண்டு. காட்டுக் கழுதையைப் போல நான் இங்கு கத்துகிறேன் நீ அங்கே என்ன செய்து கொண்டிருக்கி–றாய் என்று, கழுதையைப் போலவே கத்துகிறவர்களும் உண்டு. இது எல்லாமே ஜனங்கள் கழுதையைக் குறித்து சொல்லும் வார்த்தைகள். இப்படி அவர்கள் கழுதை என்று சொல்லும் ஒவ்–வொரு வார்த்தைகளும் கழுதையை குறித்து பெருமையாய் பேசு–கிறார்கள் என்று அர்த்தம். இன்னொன்றையும் கவனிக்க வேண்டும், ஜனங்கள் எவ்வளவுதான் கழுதை கழுதை என்று கழு–தையாகக் கத்தினாலும் அது எந்த கழுதைக்கும் கேட்கப்படப் போவது இல்லை. காரணம், அது காட்டில் வாழ்கிறது. ஜனங்கள் வீட்டில் வாழ்கிறார்கள்.

பரிசுத்த வேதாகமத்தில் கழுதையின் பயணம் என்பது ஆதியா–கமம் 12–ல் ஆரம்பித்து யோவான் 12–ல் முடிகின்றது. வேதத்–தில் முக்கியமானவைகள் 12 என்ற எண்ணில் போய் முடிகின்ற–தைக் காணலாம். உதாரணமாக: 12 மணியக்காரர்கள், 12 லேகியோன்–கள், 12 நட்சத்திரங்கள், 12 ரிஷபங்கள், 12 சிங்–கங்கள், 12 காளைகள், 12 நீரூற்றுகள் இப்படியாக சொல்லிக் கொண்டே போகலாம். இந்த வருகையில் 12 விதமான கழுதை–களை குறித்து வேதம் சொல்கின்றது. அவைகளை பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலோடும், வேத வசனத்தின் வெளிச்சத்–திலும் தெரிந்து கொள்வது நல்லது.

1.	ஆதி 12:16	கோளிகைக் கழுதை
2.	எண் 22:28	பேசும் கழுதை
3.	நியா 5:10	வெள்ளைக் கழுதை
4.	IIசாமு 16:1	பொதி சுமக்கும் கழுதை
5.	Iஇரா 13:24,28	கழுதை (அல்லது) துணிச்சலான கழுதை
6.	யோபு 6:5	காட்டுக் கழுதை
7.	சங் 32:9	கோவேறுக் கழுதை
8.	ஏசா 30:6	மறி (அல்லது) கழுதை மறி
9.	எரே 2:24	மதவெறிக் கழுதை
10.	மாற் 11:2	கழுதைக் குட்டி
11.	லூக் 19:30	ஒருவரும் ஏறியிராத கழுதைக்குட்டி
12.	சங் 32:9	புத்தியில்லாத கழுதை

இத்தனை வகை கழுதையை வேதம் சொன்னாலும் ஒவ்வொரு வகை கழுதைகளுக்கும் உணவு பட்டியலும் மாறுபடுகின்றது. காட்டுக் கழுதையைப் பாருங்கள் அது காற்றைதான் முக்கியமான உணவாக உட்கொள்கின்றது (எரே 14:6). நல்ல முறையில் வளர்க்கப்படும் கழுதையோவென்றால் "முறத்தினாலும், தூற்றுக் கூடையினாலும் தூற்றப்பட்ட ருசியுள்ள கப்பிகளைத் தின்னும்" (ஏசா 30:24). அதாவது சல்லடையினால் சலித்து எடுக்கப்பட்ட நல்ல ருசியானவைகளைத்தான் தின்னுமாம். இந்த செய்கை பிரித்தெடுக்கப்பட்ட அனுபவத்தைக் காண்பிக்கின்றது.

ஆதி காலத்திலும், பழைய ஏற்பாட்டு நாட்களிலும், கழுதைகளை வளர்ப்பதும் மேய்ப்பதும் முக்கியமான தொழிலாக இருந்தது. கழுதை என்பது வேதம் சொல்லும் மிருக ஜீவன்களில் மூன்றாவது வகையில் வருகின்றது. ஆடு, மாடு, கழுதை என்று எழுதப்பட்டுள்ளது. ஆடுகள் உள்ளவன் அந்தஸ்து மிக்கவனாகவும், மாடுகளை உடையவன் செல்வந்தனாகவும், கழுதைகளை உடையவன் பெரிய வியாபாரியாகவும் கருதப்பட்டான். ஏனென்றால் வியாபார பொருட்களை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது இந்த கழுதைகள் தான். இராஜாக்களே பல நேரங்களில் குதிரையில் ஏறுவதை விட, கழுதையின் மேல் ஏறுவதை பெருமையாக நினைத்தனர். ராஜாவின் கழுதைகள் என்றே தனியாகவும் வளர்த்தார்கள் (Iஇரா 1:38). இவைத் தவிர பெரிய பெரிய யுத்தத்தில் கலந்துக் கொண்ட கழுதைகளும் உண்டு.

முழு வேதாகமத்திலும் மிக அதிகமான கழுதைகள் யாரிடம் இருந்தது என்று தெரிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். நம் அனைவருக்கும் பரிட்சயமான தேவமனுஷனான மோசேயிடம் ஏறத்தாழ 61000 கழுதைள் இருந்துள்ளது (எண் 31:34). கர்த்தர் சொன்னபடி யுத்தம் செய்தபோது மீதியானியரை ஜெயித்ததினால் கிடைத்த கழுதைகளாகும். கர்த்தர் சொல்லி யுத்தம் செய்தால் வெற்றி மட்டுமல்ல, கழுதைகளும் கிடைக்கும் என்பதை இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். இதை வாசிக்கும் உங்களுக்கும் கழுதைகள் வேண்டுமா, வேண்டாமா என்பதை சிந்தியுங்கள்.

கழுதைகள் 12 விதங்களாக இருந்தாலும் இயேசு ஏறின கழுதைதான் அனைவருக்கும் தெரிந்த கழுதை. இயேசு ஏறின கழுதை ஆவிக்குரிய ஜீவியத்தையும் நன்மையானதையும் குறிக்கும். அதற்கு முன்பாக, கழுதை என்றால் என்ன என்பதையும் அதனிடம் காணப்படும் ஆறு விதமான மாம்சீகத்தின் கிரியைகளையும் தெரிந்துக் கொண்டால், நாம் நம்மை மாற்றிக் கொள்ளவும், கிருபையாக நம்மை காத்துக் கொள்ளவும் ஏதுவாக இருக்கும்.

a. காட்டுக் கழுதை:-

"காட்டுக் கழுதைகள் மேடுகளில் நின்று, வலுசர்ப்பங்களைப் போல் காற்றை உட்கொள்ளுகிறது; புல் இல்லாததினால் அவைகளுடையக் கண்கள் பூத்துப்போகிறது என்றார்" (எரே 14:6).

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

கழுதை என்பதற்கு பலரும் பல விதங்களில் பலவிதமான விளக்கங்களை தன் மனம் போல் சொல்வதுண்டு. ஆனால், கழுதை என்றால் என்ன என்பதற்கு வேதம் தருகின்ற விளக்கம் என்னத் தெரியுமா? "கழுதை மாம்சமான மாம்சமும்" (எசே 23:20). ஆம் கழுதை என்றால் மாம்சம் என்று அர்த்தமாகும். அப்படியா-னால் கழுதைக்குள் பலவிதமான மாம்சத்தின் கிரியைகள் இருக்-கின்றது என்பது உண்மை. வேதத்தில் காணப்படும் பல்வேறு கழு-தைகளில் காட்டுக் கழுதையிடம் மட்டும் காணப்படுகின்ற மாம்சீக-மான ஆறு கிரியைகள் என்ன என்ன என்பதை நாம் பார்க்கப் போகின்றோம்.

அதற்கு முன்பாக! காட்டுக் கழுதை என்பதின் சரியான விளக்-கம் என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் ஒருவர் வருவதற்கு முன்-புள்ள வாழ்க்கையை குறிக்கின்றது. அதாவது, பழைய ஜீவியத்தை சுட்டி காண்பிக்கின்றது.

1)தங்கும் இடங்கள் (ஏசா 32:14):

பாழான இடங்கள், வெறுமையான இடங்கள், மேடுகள், துருக்-கம் (இங்கு சொல்லப்பட்டுள்ள துருக்கம் மண்டை உடைந்து போகு-தலை காட்டுகின்றது), மற்றும் கெபிகள் போன்ற இடங்களில் தங்-கக் கூடியது. இவைகள் எதுவுமே மனிதர்கள் வாசம் பண்ணுவ-தற்கு ஏற்ற இடம் கிடையாது. ஆனால், இந்நாட்களில் பலருடைய வீடுகள் பாழடைந்த கட்டடம் போலவும், கெபி என்கிற குகை போல-வும், வெறுமையாகவும் இருக்கின்றது. அப்படி இருந்தால் அங்கு கிறிஸ்து இயேசு இல்லை என்று அர்த்தம். இந்த நிலைமை மாற-னும். அதற்கு நீங்கள் ஆண்டவர் இயேசுவிடம் கெஞ்சனும்.

2)தன்னிச்சையானது (யோபு 39:5):

தன் இஷ்டப்படி வாழ்கிற வாழ்க்கைக்கு பெயர்தான் தன்னிச்சை இந்த காட்டுக் கழுதை எப்படி தன்னிச்சையாய் வாழ விரும்பினது என்பதை ஆண்டவரே சொல்கிறார் பாருங்கள். "அது பட்டணத்தின் இரைச்சலை அலட்சியம் பண்ணி, ஒட்டுகிறவனுடைய கூக்குரலை மதிக்கிறதில்லை" (யோபு 39:6,7,8). ஆனபடியினால் அதனுடைய வீட்டை வனாந்தரமாக்கினார், அது வாழும் இடத்தை உவர் நில-மாக்கினார், மலையெல்லாம் அலைந்தது, பச்சை பூண்டுகளை தேடி தேடி திரியும்படியாக அதை எங்கும் அலைய விட்டார். இரட்-சிக்கப்பட்டேன், மனந்திரும்பினேன் என்று சொல்லி விட்டு, கனி-யும் கொடுக்காமல், முன் மாதிரியாகவும் வாழாமல் தன்னிச்சை-யாக வாழ்கின்ற சகோதரனே, சகோதரியே, ஊழியக்காரனே, ஊழியக்காரியே உங்கள் நிலைமையும் வனாந்தரமாய் மாறி, பூண்-டுக்கும், புல்லுக்கும் வழியில்லாமல் போவதற்கு முன்பாக உங்க-ளின் தன்னிச்சையான முரட்டு வழிகளை விட்டு மனம் திரும்புங்-கள். கர்த்தர் நியமித்த இடம் அல்லது மனிதர்களுக்கு கீழாக அடங்கி நடக்கப் பழகுங்கள். தன்னிச்சை என்கிற மாம்சம் ஒழியட்-டும், தாழ்மை என்கிற கனி உண்டாகட்டும்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

3. தனித்தே திரியும் (ஓசி 8:9):

மிருகங்கள் எப்போதுமே தன்னை சார்ந்த இனத்துடன் சேர்ந்தேதான் இருக்கும். ஆனால் காட்டு கழுதையின் சுபாவத்தைப் பாருங்கள். யாரோடும் சேராமல் எந்த மிருகங்களுடனும் ஐக்கியம் கொள்ளாமல் தனித்தே இருக்க விரும்புகிறது. தேவனுடைய பார்வையில் இதுவும் ஒரு வகையான மாம்சத்தின் கிரியைதான். "தனித்தும், சிறைபட்டும், நிலையற்றும் இருந்தேனே" (ஏசா 49:21) என்று சொல்வது போல யாரோடும் சேராமல் தனித்து இருந்தால் சிறைச்சாலையைப் போன்றும், நிலையற்றும் வேதனை பட வேண்டியது வரும். இயேசு ஜெப நேரம் தவிர, மற்ற எந்த நேரத்திலும் அவர் தனித்தே இருந்ததே இல்லை. காட்டு கழுதையைப் போல இராமல், இயேசுவைப் போல இருக்கப் பழகுங்கள். மாம்சம் ஒழியட்டும். ஐக்கியம் வளரட்டும்.

4. மதவெறி பிடித்தது (எரே 2:24):-

காட்டுக் கழுதையிடம் காணப்படும் மாம்சத்தின் கிரியைகளை ஆவியானவர் சொல்லும் போது மத வெறிக்கு இணையாக அதை விவரிக்கின்றார். மதத்துக்காக வெறி கொண்டதும் அதனால் தன் மேன்மையெல்லாம் இழந்து அழிந்து போனது யார் தெரியுமா? சாலமோன்தான் மதத்துக்காக வெறி கொண்டான்.

எருசலேமுக்கு மிக அருகிலும், எதிரிலுமாக ஒரு மலை இருந்தது. அந்த மலையில் தன்னுடைய மனையாட்டிகளுக்காகவும், மறுமனையாட்டிகளுக்காகவும், அஸ்தரோத், மில்கோம், காமோஸ், மோளேகு போன்ற விக்கிரகங்களின் பெயரில் ஏறத்தால ஆயிரம் மேடைகளை கட்டி அருவருப்பாக்கினான் (Iஇரா 11:4,8). அந்நிய மதத்துக்காகவும், விக்கிரகங்களுக்காகவும் காட்டு கழுதையை போல மதவெறி கொண்டு அலைந்தான். அதனால் அந்த மலை "நாசமலை" (IIஇரா 23:13) என்று பெயர் மாறிப் போனது. இந்த பெயர் வர சாலமோன்தான் காரணம்.

அன்பான கிறிஸ்தவர்களே, விசுவாசிகளே, கர்த்தருக்காக, இயேசுவுக்காக வைராக்கியம் கொள்ளுங்கள். ஆனால், வெறி கொள்ளாதீர்கள். பக்தி வைராக்கியம் நல்லது (IIஇரா10:16). ஆனால், மத வெறி ஆபத்தானது. அது உங்களை காட்டுக் கழுதையை போல மாற்றி விடும். சாலமோனைப் போல உங்கள் ஆஸ்தி முழுவதையும் அழித்து விடும். எச்சரிக்கையாயிருங்கள். மத வெறியா அல்லது பக்தி வைராக்கியமா என்று தீர்மானியுங்கள்.

5. அதிகாலையில் தின்னக் கூடியது (யோபு 24:5):-

காட்டுக் கழுதை மாம்சத்துக்கு ஒப்பானது என்பதற்கு இந்த வேத பகுதி மிக பொருத்தமானதாகும். அதாவது, சூரியன் உதிக்கும் முன்பே, அதிகாலையில் போய் தீவனத்தைத் தேடுமாம். எவ்வளவு பயங்கரம் பாருங்கள். விடிந்தவுடன் அதிகாலையிலேயே தின்பதோ, ஆகாரத்தில் உட்காருவதோ ஆசீர்வாதம் கிடையாது. காட்டில் வாழும் மிருகங்கள் "சூரியன் உதிக்கையில் அவைகள் ஒதுங்கி தங்கள் தாபரங்களில் படுத்துக் கொள்ளும்" (சங் 104:22) என்பதுதான் உண்மை. ஆனால் காட்டுக் கழுதை மட்டும் அப்படியில்லாமல் எப்போதும் தீவனத்தை தேடுகின்ற மாம்சீக குணமுள்ளதாக உள்ளது.

அருமையானவர்களே, அவசியமில்லாத நேரத்தில் சாப்பிடுவதும், அவசியமே இல்லாததையெல்லாம் சாப்பிடுவது ஒரு வகையில் பாவம்தான். நாவையும், வயிற்றையும் கர்த்தருடைய கிருபையைக் கொண்டு கட்டுப்படுத்த தெரிய வேண்டும். "ராஜா சிறு பிள்ளையுமாய், பிரபுக்கள் அதிகாலமே உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே உனக்கு ஐயோ!" (பிரச 10:16). உணவையும், உடலையும் கட்டுப்பாட்டுகுள் கொண்டு வாருங்கள். கட்டுப்பாடுகளோடு வாழ்ந்தால், கட்டுகளை தேவன் அவிழ்த்து விடுவார். உணவா? கட்டுப்பாடா எது முக்கியம்?

6) புத்தியில்லாதது (யோபு 11:12):-

பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் என்று ஒவ்வொன்றுக்கும் தேவன் புத்தியை கொடுத்துள்ளார். மிக சிறிய ஜீவராசியாகிய எறும்புக்கு கூட தேவன் புத்தியை தந்திருக்கும் போது காட்டு கழுதைக்கு கொடுக்காமலிருப்பாரா? அதற்கும் புத்தியை தேவன் கொடுத்தார் என்பதுதான் உண்மை. "புத்தியில்லாத மிருகங்களைப் போலச் சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களை கெடுத்துக் கொள்ளுகிறார்கள்" (யூதா 1:10) என்ற வேதவசனத்தின்படி காட்டுக்கழுதை தன்னையே கெடுத்துக் கொண்டது. அதனால் புத்தியில்லாத மிருகமாய் மாறினது.

அன்பான தேவபிள்ளையே, நீங்கள் அழகாய் இருக்கின்றீர்களா? அல்லது திறமையாய் இருக்கின்றீர்களா என்று ஆண்டவர் கேட்கவில்லை. தேவன் உங்களுக்கு கொடுத்த புத்தியில் நிலைத்திருக்கின்றீர்களா? அல்லது மனந்திரும்புவதற்கு முன்பு இருந்தது போலவே புத்தியற்ற காரியங்களைச் செய்கின்றீர்களா என்றுதான் கேட்கின்றார். நீங்கள் என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்.

b. இயேசுவின் கழுதை:-

"உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள், அதிலே பிரவேசிக்கும்போது மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்" (மாற் 11:2).

இயேசு ஏறின கழுதைக்குட்டியை குறித்து அறிந்துக் கொள்வதற்கு முன்பு அதைச் சுற்றிலும் உள்ள பல சம்பவங்களை அறிந்து கொள்வது நல்லது. இந்த கழுதைக் குட்டியைக் குறித்து சொல்லப்பட்டுள்ள பகுதியின் துவக்கத்திலேயே நான்கு பெயர்கள் சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம் (மாற் 11:1-10). அவை எருசலேம், ஒலிவமலை, பெத்பகே, பெத்தானியா ஆகியவைகள்.

பெத்தானியா என்ற ஊரின் மிக அருகில் இருந்த பெத்பகே என்ற கிராமத்திலிருந்து ஒலிவமலையின் வழியாக எருசலேமுக்கு போவதற்க்காகத்தான் இயேசு கழுதைக் குட்டியை பிடித்து வரச் சொன்னார். இளம் அத்திபழத்தின் வீடு என்று அர்த்தமுள்ள பெத்பகே என்ற கிராமம், எரிகோவிலிருந்து எருசலேமுக்கு போகும் வழியில் உள்ளது. பெத்தானியா என்ற ஊரோ எருசலேமுக்கும் எரிகோவிற்கும் சரிசம தூர அளவில் நடுவிலிருக்கும் ஊர். அதாவது பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்கு இரண்டு மைல் தூரம். அதே போல எரிகோவிற்கும் இரண்டு மைல் தூரமாகும்.

ஒலிவமலையென்னும் மலையடிவாரத்தில்தான் பெத்தானியா இருக்கின்றது. இந்த ஊருக்கு முன்பு அத்திபழ வீடு என்னும் அர்த்-தம்தான் இருந்தது. தற்சமயம் "நீர்பந்த வீடு" என்ற அர்த்தத்தில் அழைக்கப்படுகின்றது. வேதாகம காலத்தில் பெத்தானியா என்று சொல்லப்பட்டிருந்தாலும், தற்காலத்தில் "லாசரியா" என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. லாசரியா என்ற சொல் "லாசரு" என்ற பெயரி-லிருந்து வந்ததாகும். சாதாரண கழுதை என்று நாம் நினைக்கி-றோம். ஆனால் அந்த கழுதை நுழையும ஊருக்கு எவ்வளவு பெரிய விளக்கமும், சிறப்பும் உள்ளது என்றும் பாருங்கள்.

இயேசு ஏறிச் சென்றகழுதை ஒலிவமலையின் வழியாகத்தான் எருசலேமுக்குச் சென்றது. ஒலிவமலை என்றால் பிரகாசம் அல்-லது தேவ வெளிச்சம் என்று அர்த்தமாகும். இந்த மலை ஏறத்-தால மூன்று மைல் சுற்றளவு கொண்டதாகும். இந்த மலையில் இயேசு ஏறின பகுதி என்பது எருசலேமிலிருந்து ஒரு மைல் தூரத்-தில் உள்ளது. அப்படியானால் கழுதைக்குட்டி மிகவும் கஷ்டப்பட்டு நீண்ட தூரம் போக வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிகின்-றது. அழகு நிறைந்த நான்கு சிகரங்களுள்ள ஒலிவ மலையில் சுமந்து கொண்டு போவது இந்த கழுதைக் குட்டிக்கு கிடைத்த மிகப் பெரிய பாக்கியமாகும்.

கழுதையின் பெயர்:-

இயேசு கழுதையின் மீது ஏறவில்லை. அதற்கு பதிலாக கழுதை குட்டியின் மீது தான் ஏறினார் என்று வேதம் ஆணித்தரமாக கூறு-கின்றது (யோவா 12:15). காரணம் கழுதையின் மீது ஏறினால வேதவசனம் சொல்வதைப் போல கழிவாளம் பயன்படுத்தவேண்டியது வரும் (நீதி 26:3). கடிவாளம் என்றால் மூடத்தனம் அல்லது முட்டாள் என்று பொருள். இயேசு ஏறின கழுதை குட்டி மூடத்தன-மானது அல்ல, கவனமானது. ஆனபடியினால்தான் மரக் கிளை-களின்மேல் நடந்த போதும், அது தடுமாறவே இல்லை. இயேசு-வை தள்ளி விடவில்லை. இந்த கழுதைக் குட்டி மிகவும் பொறு-மையானது. ஆனபடியினால்தான் ஏராளமான ஜனங்கள் ஒன்றாக இணைந்து ஓசன்னா, ஓசன்னா என்று கத்தின போதும் இந்த கழுதைக்குட்டி மிகுந்த பொறுமையோடு இருந்துள்ளது. இந்த கழு-தைக் குட்டியைப் போல இடறி போகாத ஜீவியமும், பொறுமை-யான குணமும் நமக்குத் தேவை.

கழுதைக் குட்டியின் மீது ஏறும் போது இயேசு, நீதியுள்ளவர், இரட்சிக்கிறவர், தாழ்மையுள்ளவர் (சகரி 9:9) என்னும் மூன்று தன்மைகளையுடையவராக காணப்பட்டார். இப்படிப்பட்ட நல்ல குணங்களெல்லாம் அவரிடம் இருந்தும், அவர் விலையுயர்ந்த குதிரை மீதோ, ஒட்டகத்தின் மீதோ ஏறாமல், கழுதைக் குட்டியின் மீது ஏறினார் பாருங்கள். அது அவருடைய தாழ்மையாகும்.

சிலர் தன்னை தாழ்த்துவது போல தாழ்த்தி, ஆண்டவரே நான் உம்மை சுமக்கும் கழுதையாக மாறவிரும்புகிறேன் என்று சொல்வார்கள். ஆனால் கோபமும், ஆக்ரோஷமும் நிறைந்தவர்க-ளாய் இருப்பார்கள். யார் சொல்லையும் கேட்க மாட்டார்கள். அப்-படிப்பட்டவர்கள் இயேசுவின் கழுதை குட்டியாக எப்போதுமே மாற-முடியாது. நீங்கள் கிறிஸ்தவர்கள் என்பது உண்மையானால் சாந்த குணம் இருக்க வேண்டும்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

வேதத்தில் பலவிதமான கழுதைகளைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் இயேசு எந்த வகையான கழுதைக் குட்டியின் மீது ஏறினார்? நியாயமான கேள்வி மனதில் வருவதுண்டு. அதாவது கோவேறு என்னும் கழுதை இனத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவன் "ஆனாகு" என்பவன்தான் (ஆதி 36:24). அது முதல் கோவேறு கழுதை என்பது தனித்துவமாக மாறினது. ஆனாகு என்பவன் எப்படி தனித்துவம் வாய்ந்த கழுதையை கண்டுபிடித்தானோ அதே போலத்தான் இயேசு கிறிஸ்து ஏறின கழுதைக்குட்டிக்கும் ஒரு தனித்துவம் உண்டு. கழுதைக்குட்டியாகிய மறி என்று பெயர் சொல்லப்பட்டுள்ளது. இந்த மறி என்ற பெயரை வேதத்தில் நான்கு இடங்களில் காணலாம்.(ஏசா 30:6,24; சக9:9; மத்21:4). நான்கு என்பது ஒரு விஷேசமான எண்ணாகும். இயேசுவின் சகோதரர்கள் நான்கு பேர் (மத் 13:55). மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் சுவிசேஷ புத்தகங்கள் நான்கு. மரித்துப் போன லாசரு உயிரோடு வந்தது நான்காவது நாள். மறி என்னும் கழுதைக் குட்டி போன இடங்கள் எருசலேம், ஒலிவமலை, பெத்பகே, பெத்தானியா என்னும் நான்காகும் (மாற் 11:1). இப்படியாய், நன்கு பொருத்தமான, அர்த்தம் பொருத்தமுள்ள பெயர்தான் இந்த கழுதைக் குட்டிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

C. மூன்று அடையாளங்கள்:—

I. வஸ்திரங்கள்:—

கழுதைக் குட்டியின் மீதும், வழியிலும் வஸ்திரங்களை விரித்தார்கள் (மாற் 11:7,8,). வஸ்திரம் என்பது இரண்டு அர்த்தங்களை உடையது. நீதிசரிகட்டுதல், மற்றும் வைராக்கியம் என்பவைகளாகும் (ஏசா 59:17). பிரதான ஆசாரியர்களுக்கும், பரிசேயர்களுக்கும் அவர் நீதியை சரிகட்டினார். வைராக்கியத்துக்கு ஒப்பான வஸ்திரங்களை அவர்கள் வழிகளில் விரித்ததும், பாடுகளைக் குறித்தும், உபவத்திரங்களை குறித்தும் இனிமேல் கவலையே படக்கூடாது என்று வைராக்கியமாய் தீர்மானித்து விட்டார்.

கழுதைக்குட்டியின் மேலும், வழியிலும் ஜனங்கள் விரித்த வஸ்திரங்கள், தீர்க்கதரிசியாகிய ஏசாயா சொல்வதைப் போல சிகப்பு வஸ்திரங்களாகத்தான் இருந்திருக்க வேண்டும் (ஏசா 63:2). ஏனென்றால் நியாயாதிபதியின் அரண்மனையில் வைத்து இயேசுவை சிட்சிக்கும் போது அவருக்கு சிவப்பு அங்கியைதான் உடுத்தினார்கள் (மத் 27:28). இது எல்லாமே தீர்க்கதரிசனத்தின்படிதான் நடந்தது. இயேசுவுக்கும், ஏசாயா தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசனங்களுக்கும் அதிக தொடர்பு உண்டு.

II. மரக்கிளைகள்:—

மறி என்னும் கழுதை குட்டியின் மீது ஏறி இயேசு பவனியாக சென்ற போது சிலர் மரக்கிளைகளையும் தரித்து வழியில் போட்டார்கள். மரக்கிளைகள் என்பது நம்பிக்கையை காட்டுவதாக உள்ளது. இதை குறித்து யோபு மிக அழகாகவும் தெளிவாகவும் தீர்க்கதரிசனமாக சொல்லியுள்ளார் (யோபு 14:7). வெட்டி போடப்பட்டாலும் என்ற வார்த்தை இயேசுவின் மரணத்தை குறிக்கின்றது. திரும்பவும் தழைக்கும் என்ற வார்த்தை இயேசு மறுபடியும் உயிரோடு கூட வருவார் என்பதையும் காட்டுகின்றது.

யோபு தீர்க்கதரிசனமாக சொன்னது போலவே, வெட்டப்பட்டது போல இயேசு மரித்தார். மூன்றாவது நாள் மீண்டும் உயிரோடு எழுந்தார். "இளமரம் போல கிளை விடும்" (யோபு 14:9) என்ற வார்த்தையின்படி கிறிஸ்தவம் என்னும் ஒரே மரத்தில் ஊழியங்கள் என்னும் கிளைகள் மூலமாக துளிர் என்னும் விசுவாசிகள் முளைத்துக் கொண்டே உள்ளனர். இந்த தரிசனத்தோடுதான் இயேசுவின் பவனிக்கு முன்பாக மரக்கிளைகளை தரித்துப் போட்டனர்.

அதே சமயம் கண்ட கண்ட மரக்கிளைகளையும் அவர்கள் போடவில்லை. அதற்கு பதிலாக ஒலிவகிளை, மிருது செடிகளின் கிளை, பேரிச்ச மரக்கிளை மற்றும் அடர்ந்த மரக்கிளை என்னும் நான்கு வகையான கிளைகளை போட்டனர் (நெகே 8:15). ஒலிவக்கிளை என்பது நற்செய்தியையும். மிருது செடி நித்திய அடையாளத்தையும், பேரீச்சக மரக்கிளை பன்னிரெண்டையும், அதாவது பன்னிரெண்டு கோத்திரங்களையும், அடர்ந்த மரக்கிளை என்பது ஐக்கியத்தையும் விளக்குவதாக உள்ளது.

இத்தனை வகையான பசுமையான இலைகளையும், கிளைகளையும் போட்டும் மறி என்ற கழுதைக் குட்டி ஒன்றையும் தின்னதாக வேதம் சொல்லவில்லை. அப்படியானால், வாய்க் கட்டுப்பாடுள்ள கழுதை குட்டியாகும். உங்கள் வாயும் கட்டுப்பாடோடு உள்ளதா அல்லது கழுதையை போல கால் கால் எனக் கத்திக் கொண்டு இருக்கின்றீர்களா என்று சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்தவர்களுக்கு வாய் கட்டுப்பாடு மிக மிக முக்கியமாகும்.

III. ஓசன்னா!!

"முன் நடப்பாரும், பின் நடப்பாரும்: ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்; கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்" (மாற் 11:9,10). ஓசன்னா என்றால் காப்பாற்றுங்கள் அல்லது இரட்சியும் என்பது விளக்கமாகும்.

இயேசு எருசலேம் தேவாலயத்துக்கு பவனி போகையில், ஜனங்கள் உன்னதத்தில் ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள். கூடார பண்டிகை நாட்களில் யூதர் இந்த வார்த்தையை சங் 118:25,26-லிருந்து எடுத்து சொல்வது வழக்கமாகும். கர்த்தரே இரட்சியும் என்பது இதன் அர்த்தமாகும். தொடக்க நாட்களில் ஒரு விண்ணப்பம் போல சொல்லப்பட்டது. பின் நாட்களில் இது மகிழ்ச்சியான வாழ்த்துதலாக மாறிப் போனது.

ஓசன்னா என்ற வார்த்தை மத்தேயு, மாற்கு, யோவான் என்னும் மூன்று புஸ்தகங்களில் ஆறு முறை சொல்லப்பட்டுள்ளது. மூன்று என்பது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் திரித்துவத்தையும், ஆறு என்பது ஆறாம் நாள் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனையும் குறிக்கின்றதாக உள்ளது. அதாவது, ஆறாவது நாள் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் திரியேக தேவனை ஓசன்னா, ஓசன்னா என்று எப்போதும் துதிக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய மகா பெரிய பரிசுத்த திட்டமாகும்.

அன்பானவர்களே, சீஷர்கள் மறி என்னும் கழுதை குட்டியை கொண்டு வந்து கீழ்படிதலை நிரூபித்தனர். கழுதைகுட்டி இயேசு -வை சுமந்து சென்று அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினது, வஸ்தி -ரங்களும், கிளைகளும் தரையில் கிடந்து கொண்டு தங்களை தரை மட்டும் தாழ்த்தினது, ஓசன்னா என்று சொல்லி ஜனங்கள் தேவனுக்குரிய மகிமையை செலுத்தினார்கள். இயேசுவோ பவனி -யாய் சென்று பிதாவின் சித்தத்தையும், தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றினார்.

இப்படியாக, அவரவர், அவரவர் கடமையை சரியாயும், உண் -மையாயும் செய்து முடித்தனர். இவைகளை வாசிக்கிற நீங்கள் உங்கள் கடமையில், தேவ திட்டத்தை நிறைவேற்றுவதில் சரியாய் உள்ளீர்களா? உண்மையாய் இருக்கின்றீர்களா என்பதை நன்கு உய்ந்து ஆய்ந்து சோதித்துப் பாருங்கள். ஒரு வேளை தேவன் உங்களுக்கு கொடுத்த உக்கிராணத்துவத்தில் நீங்கள் சரியில்லா -மல் போனால் கழுதையின் தலையை முறித்துப் போடுவதை போல உங்கள் கழுத்தையும் தேவன் முறித்து போடுவார் (யாத் 13:13). கழுதையை போல நடிப்பதை விட, கழுதைக்குட்டி -யாக மாறி விடுவதே நல்லது.

d. இயேசு தொட்ட கழுதைக்குட்டி:—

கழுதை மற்றும் கழுதைக்குட்டி என்பது இயேசுவின் வாழ்க் -கையை விட்டுப் பிரிக்க முடியாத ஒன்றாகும். இயேசு தன்னுடைய ஊழிய நாட்களில் மூன்று முறை கழுதையை மேற்கோள் காட்டியுள் -ளார். (1)கழுதைக்கு தண்ணீர் காட்டுகிறதில்லையா? (லூக் 13:15). (2)கழுதை துரவில் விழுந்தால் தூக்கிவிட மாட்டீர் -களோ? (லூக் 14:5). (3)கழுதையை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்று கேட்டால், அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங் -கள் (லூக் 19:31). கழுதைக்குட்டியைக் கண்டு இயேசு ஏறிப்போ -னார் என்று வேதம் சொல்கிறபடியினால், கழுதைக்குட்டி வந்து இயேசுவைத் தொடவில்லை என்றும் இயேசுதான் கழுதையை தொட்டார் என்றும் விளங்குகின்றது. அதுமுதல் இயேசுவின் பாடு -களும் ஆரம்பம் ஆயின.

e. கழுதைக் குட்டியும் வேதமும்:—

1. ஆதி 32:15 கழுதைக்குட்டி (எ) பிரித்தெடுக்கப்படுதல்
   வி.ம் ரோம 1:1 அப்போஸ்தலனாகிய பவுலும் சுவிசேஷத்திற்க் -காகப் பிரித்தெடுக்கப்பட்டான்
2. மத் 21:4 கழுதைக்குட்டி (எ) சாந்தகுணம்
   வி.ம் எரே 51:60 நேரியாவின் குமாரனான செராயா சாந்தகு -ணமுள்ளவனாய் விளங்கினான்
3. சக 9:9 கழுதைக்குட்டி மரியாளுக்கு இணையானது
   வி.ம் லூக் 1:38 கழுதைக்குட்டி இயேசுவுக்கு அடிமை ஆன -தைப்போல, மரியாளும் அடிமையைப் போல தன்னைத் தாழ்த்தினாள்
4. யோவா 12:14 கழுதைக்குட்டி ராஜா ஏறக்கூடியது
   வி.ம் எஸ்த 6:8,9 ராஜா ஏறுகிறகழுதைக்குட்டி (குதிரை) நகர வீதிகளில் உலா வரும்

5. சகரி 9:9 கழுதைக்குட்டியின் மீது ஏறினதால், இயேசுவுக்குள் -ளிருந்து நீதி, இரட்சிப்பு, தாழ்மை என்ற மூன்றும் வெளிப்பட்டது

வி.ம் பிலி 2:8 மனுஷரூபமாய் இருந்து தம்மைத் தாழ்த்தினார்

6. சக 9:9-ல் சொல்லப்பட்ட கழுதைக்குட்டியைக் குறித்த தீர்க்க -தரிசனம் மத் 21:4,5-ல் நிறைவேறினது

வி.ம் அப் 3:21 பாடுகளின் மூலம் இயேசுவை ஏற்றுக் கொள் -ளும்படி இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறினது

7. மாற் 11:2 ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டி என்பது இயேசுவின் கல்லறையைக் குறித்த தீர்க் -கதரிசன வார்த்தைகளாகும்

வி.ம் யோவா 19:41 இயேசுவின் கல்லறையும் கூட ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராதக் கல்லறை -யாக இருந்தது

f. கழுதை பற்றிய குறிப்புகள்:-

1. கழுதை பாலூட்டி இனத்தைச் சார்ந்தது
2. 2008-ம் ஆண்டு கணக்குப்படி இந்த உலகில் 5488 வகை -யான பாலூட்டி இனங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் கழுதை இனம்
3. வீடுகளில் வளர்க்கப்படும் கழுதையானது 19 முதல் 142 செ.மீ உயரம் வரை வளரக்கூடியது.
4. இலை, தழை, புற்கள் போன்ற தாவர உணவு வகையைச் சார்ந்தது கழுதை
5. முகத்தின் மூக்கின் முன்புறம் உள்ள வெள்ளி நிறமானது கழுதையின் அடையாளங்களில் ஒன்று
6. குதிரை மற்றும் வரிக்குதிரையைப் போல கால்களில் ஒற்றைக் குழம்பு உடையது
7. கழுதையின் வயிறு எளிதில் செறிமானம் ஆகக் கூடியது
8. மிகுந்த சத்தமான ஒலி எழுப்பும் குணம் கொண்டது
9. கழுதை என்பது, சகிப்புத் தன்மைக்கு பெயர் பெற்ற விலங்காகும்

g. புதிய ஏற்பாட்டில் சில கழுதைகள்:-

1. யோவா 12:15 இயேசு ஏறிப்போன கழுதைக்குட்டி
2. மாற் 11:2 ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டி
3. மத் 21:7 வஸ்திரங்கள் போடப்பட்ட கழுதை
4. லூக் 14:5 துரவில் விழுந்த கழுதை
5. யோவா 12:14 ராஜா ஏறின கழுதைக்குட்டி
6. மத் 21:2 கழுதையும், குட்டியும்
7. லூக் 19:30 கட்டியிருந்த கழுதைக்குட்டி
8. மத் 21:4 மறியாகியக் கழுதை
9. லூக் 13:15 தொழுவத்திலிருந்த கழுதை
10. லூக் 19:33 அவிழ்க்கப்பட்டக் கழுதைக்குட்டி

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

யோவா 12:15 இயேசு கழுதைக்குட்டியைக் கண்டு அதின் மேல் ஏறிப்போனார்.

இயேசு ஏன் கழுதையை தெரிந்தெடுத்தார்?

சக 9:9 அவர் தாழ்மையுள்ளவர்.

இயேசு ஏன் கழுதையின் குட்டியை தெரிந்தெடுத்தார்?

சக 9:9 சகரியாவை கொண்டு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காக.

கழுதைகுட்டியின் மேல் ஏறினதினால் என்ன நடந்தது?

யோவா 12:13,16 i) ஓசன்னா என்கிற கோஷம் உண்டானது.
ii) கர்த்தருடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்பட்டது.
iii) இஸ்ரவேலின் ராஜா என்கிறபட்டம் கிடைத்தது
iv) இயேசு மகிமையடைந்தார்

(மு.வ) இதோ, உன் ராஜா சாந்த குணமுள்ளவராய் கழுதைக்குட்டியாகியமரியின் மேலும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறார்.

XXXXX. இயேசுவின் கட்டுகளும் கை, கால்களும்:-

"அவரைக் கட்டி கொண்டு போய், தேசாதிபதியாகிய பொந்தியுபிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள்" (மத் 27:2).

கட்டுகள் என்ற வார்த்தை கிறிஸ்தவர்களின் மத்தியில் மிகவும் பரிச்சயமான வார்த்தையாகும். ஜெபத்திலே போய் உட்கார்ந்தால் தேவனைத் துதிப்பதை விட கட்டுகளை உடைப்பதும், அவிழ்ப்பதும் தான் இன்றைய கிறிஸ்தவர்களின் ஜெப நேரமாக உள்ளது. இதை நான் தவறாக சொல்லவில்லை. அந்த அளவுக்கு ஜனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இயேசுவின் பாடுகளின் நேரத்தில் அவரையும் ஐந்து விதமான கட்டுகள் தொட்டு சென்றுள்ளது. இது அநேகருக்கு ஆச்சரியமாய் இருக்கலாம். ஆனால் இதுதான் உண்மை. அந்த ஐந்து விதமான கட்டுகள் என்னென்ன என்றும், அதன் விளக்கங்களையும் ஒவ்வொன்றாக ஜெபத்துடனும், பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுடனும் கவனிப்போம்.

a. மரணாக்கினை என்றகட்டு:-

"அவரைக் கட்டி கொண்டு போய், மரணாக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்டதைக் கண்டு" (மத் 27:2,3).

இயேசுவுக்கு உண்டான முதல் கட்டு, மரணாக்கினை என்ற கட்டு ஆகும். மரணாக்கினை என்றால் என்னத் தெரியுமா? "காரிருள், மரண அந்தகாரம், இருண்ட ஸ்தலம், ஒளியையும் இருளாக்கும் நிலைமை, போனால் திரும்பி வர முடியாத தேசம்" (யோபு 10:21). இப்படிப்பட்ட மகா பயங்கரமான நிலைமைக்கு பெயர் தான் மரணாக்கினை.

இதை வாசிக்கும் நீங்களோ அல்லது உங்களைச் சார்ந்த யாரோ இப்படிப்பட்ட மரண தண்டனைக்குள்ளாக போய்விட கூடாது என்ற ஒரே காரணத்துக்காக, இயேசு மரணாக்கினை என்னும் மரண தண்டனையின் கட்டை தன் மீது ஏற்றுக் கொண்டார்.

இயேசுவுக்கு உண்டான முதல் கட்டாகிய மரணாக்கினை கட்டு விடியற்காலத்தில் வழங்கப்பட்டது (மத் 27:1,3). விடியற்காலை என்றால் "இருள் அடைந்த நீர் விடியற்காலத்தைப் போலிருப்பீர்" (யோபு 11:17) என்ற வேத வசனத்தின்படி அவர் வாழ்க்கையில் இருள் அடைந்த நேரமாக அவருடைய நேரம் காணப்பட்டது.

எனக்கன்பானவர்களே, எப்பேர்பட்டதான இருள் உங்களை சூழ்ந்து இருந்தாலும், இயேசு ஏற்றுக் கொண்ட மரணாக்கினை என்ற கட்டினிமித்தம் உங்களுக்கு மாபெரும் விடுதலை உண்டா-கின்றது. இருளில் இருக்கிற நீங்கள் இனிமேல் பெரிய வெளிச்-சத்தைக் காண்பீர்கள்.

b. குற்றச்சாட்டு என்றகட்டு:-

"இயேசுவைக் கட்டிக் கொண்டு போய், பிரதான ஆசாரியர்கள் அவர் மேல் அநேகங் குற்றங்களைச் சாட்டினார்கள். அவரோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை" (மாற் 15:3).

இந்த கடைசிகாலத்தில் குற்றஞ்சாட்டப்படாதவர்களே இல்லை என்று சொல்லுமளவுக்கு ஏதாவது ஓர் குற்றச்சாட்டு அனைவர் மீதும் வரத்தான் செய்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குற்றஞ்சாட்டுதல் அதிகமாக இருந்துள்ளது. அதுவும் குற்-றஞ்சாட்டுவதற்க்காகவே இயேசுவை கட்டி கொண்டு போயுள்ள-னர். ஒன்றோ இரண்டோ குற்றத்தை அவர் மீது சுமத்தாமல் அநேகங் குற்றங்களை அவர்மேல் சுமத்தினர்.

குற்றஞ்சாட்ட நோக்கமாயிருந்தார்கள், அவருடைய வாய் மொழியில் பிழை கண்டுபிடிக்க வகை தேடினர். பிடிவாதமாய் அவர்மேல் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தனர் என்று மாற்3:2, லூக்11:53; 23:10 ஆகிய வசனங்கள் சொல்லுகின்றது. இத்தனை-யும் அவருக்கு உண்டான கட்டுகள் என்பதையே காண்பிக்கின்றது.

இரண்டாவது கட்டு என்ற குற்றச்சாட்டுகளை மேற்கொள்ள இயேசு என்ன செய்தார் தெரியுமா? "அவரோ ஒரு உத்தரவும் சொல்லாமல் பேசாதிருந்தார். இயேசுவோ அப்பொழுதும் உத்தரவு ஒன்றும் சொல்லவில்லை. அதினால் பிலாத்து ஆச்சரியப்பட்டான்" (மாற் 14:61; 15:5). நல்ல மருந்து, சிறந்த மருந்து உண்டென்றால் அது மௌனம் என்கிறதான மருந்துதான். இந்த மௌனம் பல பெரிய பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வுகளைக் கொண்டு வந்து விடும்.

உங்கள் ஜீவியத்தில் பழிச்சொல், இழிச்சொல், நிந்தையான வார்த்தைகள் போன்ற கட்டுகள் உங்களை சூழ்ந்துக் கொள்ளும் போது நீங்கள் செய்ய வேண்டியது, இயேசுவைப் போல மௌன-மாகவே இருந்து விடுங்கள். அவசரப்பட்டு எந்த பதில் உத்தரவும் சொல்லிவிடாதீர்கள். பதிலைக் கொடுத்து விடாதீர்கள். நிச்சயம் நீங்கள் மகிமைபடுத்தப்படுவீர்கள். உங்கள் கட்டுகளும் உங்களை விட்டு முற்றிலுமாக மாறும் மறையும்.

c. சாவு என்ற கட்டு:-

"யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி, ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்கு-மென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே" (யோவா 18:12,14).

சாவு என்பது ஓர் மிகப் பெரிய பொல்லாத கட்டாகும். சாவும், மரணமும் ஒன்றா அல்லது வேறு வேறா என்கிறசந்தேகம் பலருக்கும் உண்டு. மரணம் என்றால் தண்டனை. இது ஒருவர் மற்றொருவருக்கு வழங்கும் தீர்ப்பாகும். சாவு என்பது அப்படியல்ல, அது விஷம் போன்றது. உணவு மூலம் உண்டாகும், தண்ணீர் மூலம் உண்டாகும் [IIஇரா4:40]. ஆனபடியினால்தான் இயேசுவுக்கு கசப்பு கலந்த காடியை கொடுத்தார்கள், திராட்சை இரசத்தில் கலந்த காடியைக் கொடுத்தார்கள், கடற்காளானில் தோய்த்தும் கொடுத்தார்கள். ஆனாலும் அதை அவர் பருகவில்லை.

மரணமோ அல்லது சாவோ எது வந்தாலும் அவைகளிலிருந்து முற்றிலுமாய் உங்களை பாதுகாக்க கிறிஸ்து இயேசு வல்லவராய் இருக்கிறார்.

யூதர்கள் பல உபாய தந்திரங்களை கையாண்டு இயேசுவை சாகடிக்க எவ்வளவோ முயற்ச்சித்தனர். கடைசியில் சிலுவையில் அறைந்தும் கொடுமைபடுத்தி பார்த்தனர். ஆனாலும், அவர்களின் ஸ்தம்பன வித்தைகள் பழிக்காமல் போனது. பிதாவின் சித்தமும், பரலோக நேரமும் வரும் வரை அவர் சிலுவையில் உயிரோடுதான் இருந்தார்.

ஏற்ற நேரம் வந்த பிறகு அவர் தாமாகவே பிதாவின் கையில் தனது ஜீவனை ஒப்புக் கொடுத்தார். அதன் பின்புதான் அவரின் ஜீவன் பிரிந்தது. யூதர்கள் சாகடித்தபடியினால் இயேசு சாகவில்லை. அவரை சாகடிக்க அவர்களால் முடியவும் இல்லை. அவர் தமது ஜீவனை பிதாவின் கைகளில் ஒப்புக் கொடுத்தார் இது தான் உண்மை.

சாவின் கட்டை அறுத்து, சிலுவையை ஜெயித்தார். உலக சரித்திரத்தையும் ஜெயித்தார். சகலத்தையும் ஜெயித்த இயேசு உங்களையும் ஜெயிக்க செய்வார்.

d. தூஷணம் என்ற கட்டு:—

"அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து அநேக தூஷண வார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்" [லூக் 22:64,65].

தேவனுடைய ரூபத்திலே இயேசு வந்திருந்தாலும், அவர் மனுஷ சாயலானபடியால் அவரும் தூஷணத்துக்கு ஆளானார். தூஷணம் என்பது, ஒருவர் செய்த நல்ல காரியத்தை தீமை என்று சொல்வதுதான் தூஷணம். "அன்றியும், மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும், வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இது முதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" [மத் 26:64]. தரிசனத்தைக் குறித்து சொன்ன இந்த வார்த்தையை உடனே தேவதூஷணம் என்று சொன்னார்கள். காரியத்தின் அர்த்தத்தை புரிந்து கொள்ளாமல் குற்றம் சாட்டுவதுதான் தூஷணம்.

உங்கள் வாழ்க்கையில் எந்த சூழ்நிலையிலும், யாரையும் பார்த்து தூஷணமாய் பேசாதிருங்கள். அதை கர்த்தர் முழுதுமாய் வெறுக்கிறார். ஒரு மனுஷனோ அல்லது மனுஷியோ தூஷணமுள்ளவர்களா இல்லையா என்பதை எப்படி தெரிந்து கொள்வது என்று பார்ப்போம்.

தூஷணம் என்றால் என்ன?

1) பொல்லாத சிந்தனைகள் 2) கொலைபாதகங்கள் 3) விபச்சாரங்கள் 4) வேசித்தனங்கள் 5) களவுகள் 6) பொய்சாட்சிகள் (மத் 15:19) ஆகிய ஆறு துர்க்கிரியைகள் உள்ள மனுஷன் தூஷணம் பண்ணுகிறவனாக காணப்படுகின்றான்.

மற்றொரு வகையினரும் தூஷணகாரர்களாய் இருப்பார்கள். அதாவது, இயேசுவின் மேல் தூஷணம் சொன்னவர்கள் யார் தெரியுமா? பிரதான ஆசாரியன், வேதபாரகர், பரிசேயர், யூதர்கள், இவர்கள் எல்லாம் முக்கியஸ்தர்கள், பதவிகளில் இருப்பவர்கள், ஜனங்களால் மதிக்கப்படுவார்கள். ஆனால், பாருங்கள் இவர்களும் தூஷணக்காரர்கள் என்கிற பட்டத்தையுடையவர்களாக மாறிப் போனார்கள். இவர்கள் தான் இயேசுவை சிலுவையிலிருந்து இறங்கி வா என்றார்கள். உன்னை நீயே இரட்சித்துக் கொள் என்றார்கள். இந்நாட்களிலும் நன்கு படித்த, பதவியில் இருக்கின்ற சிலரும் இப்படிதான் இருக்கின்றார்கள். அவர்களிடம் ஜாக்கிரதையாகவும், கவனமாகவும் இருங்கள்.

அவருக்கு எதிராக சொல்லப்பட்ட ஒவ்வொரு தூஷணத்தின் போதும் இயேசு வசனங்களையும், வல்லமையுள்ள வார்த்தைகளையும் சொல்லி மேற்கொண்டார். ஆனால், அவர்களின் தூஷணத்துக்கு எதிரான தூஷண வார்த்தைகளை அவர் ஒரு போதும் பயன்படுத்தினதே இல்லை. நாமும் இயேசுவைப் போலவே தேவ வசனங்களைக் கொண்டு, அனைத்துவித தூஷணத்தையும் மேற்கொள்வோம்.

மன்னிப்பு

இந்த செய்தியை வாசிக்கின்ற நீங்கள் கடந்த காலத்தில் பலரையும் தூஷிக்கின்றவர்களாய் இருந்திருக்கலாம். நீங்கள் அதை அறியாமல் செய்திருந்தால் தேவனுடைய இரக்கம் நிச்சயம் உங்களுக்கு உண்டு. “முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன். அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்” (1தீமோ1:13) என்கிற இந்த வசனத்தை விசுவாசத்தோடு அறிக்கையிடுங்கள். அப்போது தூஷணம் என்கிற கட்டு உங்களை விட்டு மாறிப் போகும்.

“மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்த தூஷணங்களும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்” (மாற் 3:28) என்ற வல்லமையுள்ள வசனத்தின்படியே நீங்களும், உங்களை சார்ந்தவர்களும் கிறிஸ்துவின் மன்னிப்பை பெற்று, எந்தவொரு கட்டுகளும் இல்லாத பாக்கியமுள்ள வாழ்க்கையை உங்களுக்குத் தந்தருள்வாராக.

e. கைகளும் – கால்களும்:–

“அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்” (அப் 2:23).

பூமியில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் கைகள் என்பது மிக

முக்கியமானது ஆகும். அதுபோலவே, இயேசுவுக்கும் கைகள் மிகவும் முக்கிமாகக் காணப்பட்டது. கைகள் என்றால் பிரயாசம் என்று அர்த்தம் (ஆதி 5:29). உங்களுடைய என்னுடைய கைக –ளின் பிரயாசத்தை (முயற்சியை) ஆசீர்வதிப்பதே தேவனுக்கும் பிரியமானது.

இயேசவும் தன் கைகளைக் கொண்டு ஏராளமான நன்மைக –ளைச் செய்தார், அற்புதங்களைச் செய்தார், அடையாளங்க –ளைச் செய்து காட்டினார். பேய்களையும் பிசாசுகளையும் துரத் –தினார். அவருடைய கைகளினால் விடுதலையாக்கப்பட்டவர்க –ளும், நன்மைகளை பெற்றுக் கொண்டவர்களும் ஏராளம், ஏராளம்.

அப்படிப்பட்ட இயேசுவின் கைகளில்தான் யூதர்கள் அன்றைக்கு ஆணிகளை அறைந்து, சிலுவையில் அவரை கொலை செய்த –னர். அப்படிப்பட்டதான கொடூரமான கொலைக்கு கூட தன் கை –களை அவர் விலக்கவில்லை.

எனக்கு அன்பான தேவ ஜனமே உங்கள் கைகளின் பிரயா –சத்தை ஆசீர்வதிப்பதற்க்காக தன் கைகளில் ஆணிகளை ஏற்றுக் கொண்ட ஆண்டவர் இன்று முதல் நன்மையான கைக –ளாக உங்கள் கரங்களை மாற்றப் போகின்றார். இது வரையி –லும் எந்த ஒரு சுபிட்ஷத்தையும் காணாத உங்கள் கைகள் இனிமேல் ஏராளமான அற்புதங்களை காணும்படி பண்ணுகிறதை நீங்களும் காண்பீர்கள். உங்களைச் சுற்றிலும் இருக்கின்றவர்க –ளும் காணப் போகின்றார்கள்.

யோவான் 18:12 சொல்கிறது, போர்ச்சேவன் ஆயிரம் பேருக்குத் தலைவன், யூதர்களின் ஊழியக்காரன் ஆகிய மூன்று பேரும் இயேசுவைப் பிடித்தார்கள். அதினால் அவர்களின் கைகள் இயே –சுவைத் தொட்டது. இதுபோல பாடுகளின் போது இயேசுவைத் தொட்ட ஆறு சம்பவங்களையும், இயேசு தம்முடைய கைகளினால் தொட்ட ஆறு சம்பவங்களையும் கீழே காணலாம்.

I. இயேசுவை தொட்ட கைகளின் சம்பவம்:–

1. மத் 26:67 : கன்னத்தில் அறையும் போது
2. மத் 27:2 : அவரைக் கட்டினவர்களின் கைகள்
3. மாற் 14:65 : வேலைக்காரரின் கைகள்
4. லூக் 22:64 : கண்களைக் கட்டியவர்களின் கைகள்
5. யோவா 18:22 : சேவகனின் கைகள்
6. யோவா 19:3 : கையினால் இயேசுவை அடித்தவர்களின் கைகள்

II. உன்ன 5:14 பழுகப்பச்சை:–

தானி 10:6இயேசுவின் முழு சரீரமும் பழுகப்பச்சைதான்.
எசே 1:16பழுகப்பச்சை (எல்) தேவனுடைய மகிமை.
ஆப 3:4அவர் கரத்தினில் பராக்கிரமம் மறைந்திருக்கும்.

இயேசுவின் கரங்களினால் நமக்குக் கிடைக்கும் நான்கு நன்மைகள்:–
ஏசா 66:14 முழுவதும் வாசிக்கவும்.

1) இருதயம் மகிழும்.
2) எலும்புகள் செழிக்கும்.
3) கர்த்தருடைய ஊழியக்காரர்களை வேறு பிரித்துக் காட்டும்.
4) சத்துருக்கள் தேவகோபத்திற்கு ஆளாவார்கள்.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

உன்ன 5:14 பொன்வளையல்கள்:-

பொன் வளையல்கள் என்றால் என்ன?

யாத் 25:12 பொன்னினால் செய்த வளையங்களைக் குறிக்கும்.

வளையங்கள் (எல்) என்ன?

யாத் 28:28 வளையங்களைக் ஒன்றுடன் ஒன்றைக் கட்ட வேண்டும்.

யாத் 36:29 வளையங்கள் என்றால் இணைக்கக் கூடியது.

வா.ம்: மாற் 10:7,8 இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனை-யும் தாயையும் விட்டுத் தன் மனைவியோயேடே இசைந்தி-ருப்பான், அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயி-ருக்கிறார்கள்.

புல 2:3 பின்னாகத் திரும்பின வலதுகரம்:-

பின்னாகத் திரும்பினது (எல்) என்ன?

சங் 74:11 வலது கரத்தை முடக்கிக் கொண்டார்.

என்ன நடக்கும்?

சங் 74:10,13 நிந்திக்கிறசத்துருக்களின் தலையையும், பகைக்-கிறபகைவர்களின் தலையையும் உடைப்பார்.

உ.ம்:- நியா 5:26 எதிரியாகிய சிசெராவின் மண்டை உடைந்தது.

வா.ம்:- சங் 17:7 உமது வலது கரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே.

சங் 8:3 உமது விரல்களின் கிரியை:-

யோவா 8:6 விரலினால் தரையிலே எழுதினார்.

1) ஆண்டவரும் புத்தகம் எழுதியுள்ளார் என்று உங்களுக்குத் தெரியுமா?

யாத் 32:32 நீர் எழுதின உம்முடைய புத்தகத்திலிருந்து

2) கர்த்தரே பாடலையும் பாடியுள்ளார் என்று உங்களுக்குத் தெரியுமா?

உபா 31:14-21 கர்த்தரே பாடலையும் பாடியுள்ளார்.

3) தேவன் தமது விரல்களினால் எழுதினவைகள் என்னென்ன?

யாத் 24:12 நியாயப்பிரமாணத்தை எழுதினார்.

யாத் 24:12 கற்பனைகளை எழுதினார்.

உபா 9:10 கற்பலகைகளில் (உடன்படிக்கை) எழுதினார்.

யாத் 32:32 புஸ்தகத்தில் எழுதினார் (பெயர்கள்).

வா.ம்:- யாத் 31:18 விரலினால் அவனிடத்தில் கொடுத்தார்.

சங் 8:3 உமது விரல்களின் கிரியை:-

லூக் 11:20 நான் தேவனுடைய விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறேன்.

மூன்று விதங்களில் பிசாசுகளைத் துரத்தினார்:-

1) மத் 17:15-18 ஒரே ஒரு பிசாசைத் துரத்தினார்.

2) மாற் 16:10 ஏழு பிசாசுகளைத் துரத்தினார்.

3) மாற் 5:1-15 1000, 1000-ஆன பிசாசுகளைத் துரத்தினார்.

பலன்: லூக் 11:20 தேவனுடைய ராஜ்ஜியம் இறங்கி வரும்.

வா.ம்: சங் 144:1 என் விரல்களைப் யுத்தத்திற்கு பழிப்பிக்கிறகர்த்-தருக்கு ஸ்தோத்திரம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

சங் 8:3 உமது விரல்களின் கிரியை:-

மாற் 7:33 விரல்களினால் காதுகளையும் நாவையும் சுகமாக்கினார்.

a. காது என்றால் என்ன?

மத் 13:16காது (எல்) பாக்கியம்.

பாக்கியம் என்றால் என்ன?

லூக் 6:21 1) பசி இல்லாத வாழ்க்கை.
2) திருப்தியான ஜீவியம்.
3) அழுகை இல்லாத நாட்கள்.
4) நகைப்பு நிறைந்த ஜீவியம்.

b. நாவு என்றால் என்ன?

ஏசா 50:4 1) இளைப்பை மாற்றக்கூடியது.
2) சமயத்திற்கு ஏற்றவார்த்தை வரும்.
3) கல்விமானாய் மாற்றக்கூடியது.
4) கற்றுக்கொள்ள வைக்கிறது.

வா.ம்: நீதி 21:23தன் வாயையும், தன் நாவையும் காக்கின்றான்.

II. இயேசு தொட்ட கைகளின் சம்பவம்:-

1. மத் 27:29 : கோலை தொட்டது
2. மாற் 14:35 : தரையிலே விழுந்தார் (தரையை தொட்டார்)
3. லூக் 22:51 : மல்கூசின் காதைத் தொட்டார்
4. யோவா 13:4 : வஸ்திரங்களை தொட்டு கழற்றினார்
5. யோவா 13:5 : சீஷர்களின் கால்களைத் தொட்டு கழுவினார்
6. யோவா 21:13 : மீனையும்/அப்பத்தையும் தொட்டார்

f. கால்கள்:-

"நான் தான் என்று அறியும்படி, என் கால்களையும் பாருங்கள், என்னைத் தொட்டுப் பாருங்கள்" (லூக்24:39).

தேவனால் உண்டாக்கப்பட்ட மனித சிருஷ்டிப்பில், பெரிய அவயவம் அல்லது உறுப்பு என்றால் அது கால்கள்தான். ஒருவர் நிற்க வேண்டுமானால் முதலாவது கால்கள் இருந்தால்தான் அவர்களால் நிற்க முடியும்.

கால்களை குறித்து வேதாகமம் அழகாக விளக்கம் கொடுக்கின்றதைப் பாருங்கள். "அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி, என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்" (சங்18:33). கால்களை மகிமைப்படுத்துவதற்காகவே ஆவியானவர் எழுதி வைத்துள்ள வசனம் இது என்று நான் விசுவாசிக்கிறேன்.

இயேசுவின் கால்களும் கூட மலைகள் மேல் ஏறினது, படகில் ஏறினது, கடலின் மேல் நடந்தது, ஏழைகள் மற்றும் பணக்காரர்களின் வீடுகளில் நுழைந்தது. மரித்துப் போனவர்களின் சரீரங்களைத் தேடி அவருடைய கால்கள் சென்றது. அநேகர் வந்து வணங்கும்படியான மரியாதைக்குரியதாகவும் அவருடைய கால்கள் விளங்கினது.

உங்கள் கால்களையும் கூட ஆசீர்வதித்து விலையேறப் பெற்ற மகிமை பொருந்திய கால்களாக அவர் மாற்றுவார். "நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைத் சந்தித்திருக்கிறது" (லூக்1:79) என்றவாக்குத்தத்த வசனத்தின்படி உங்கள் கால்களை சமாதானத்தின் கால்களாக மாற்றப் போகின்றார்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

இயேசுவின் பாடுகளில் அவருடைய கால்களும் பலவிதமான பாடுகளை சந்தித்தது. பாடுகளும் உபத்திரவங்ககளும் நிறைந்த நேரத்தில் அவர் தன்னுடைய கால்களில் பாதரட்சையை அணிந்திருந்ததாக சொல்லப்படவில்லை. அப்படியானால் கால்களில் செருப்புக் கூட இல்லாமல் தான் நியாய விசாரணை மண்டபத்திற்கு சென்றார், அரண்மனைக்குள் கொண்டு போகப்பட்டார். பிலர்ததுவின் மாளிகையிலிருந்து மண்டை ஓடு என்று சொல்லப்படும் கொல்கொதா மலை வரைக்கும் வெறும் கால்களாலேயே நடந்து சென்றுள்ளார்.

ஆனபடியினால், ஸ்தோத்திரம் என்னும் பலிகளை செலுத்தி இயேசுவின் பாதங்களை முத்தம் செய்யுங்கள் அப்போது "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார்" (ரோம 16:20) என்ற வல்லமையான வசனம் உங்கள் வாழ்வில் நிறைவேறுவதைக் காண்பீர்கள்.

நீங்களும், உங்கள் கால்களை கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷத்தை சொல்வதற்காகவும் ஆயத்தப்படுத்துங்கள். கிறிஸ்துவின் நாம மகிமைக்காக ஆயத்தமாய் இருக்கும் கால்கள் மட்டும் தான் பரலோகத்தையும், சீயோன் பிரதேசத்தையும் அடைய முடியும்.

இயேசுவின் பாடுகளுக்கு இணையாகச் சொல்லப்பட்டுள்ள உவமையான கால்களும்/ பாதங்களும்:-

1. மத் 14:25 : கடலில் நடந்த கால்கள்
2. மாற்10:32 : முன்னே நடக்கும் இயேசுவின் கால்கள்
3. லூக் 5:8 : பாவத்தை வெளிப்படுத்தின பாதம்
4. லூக் 7:38 : கண்ணீரால் நனைந்த பாதம்
5. லூக்24:15 : ஆவியில் நடந்த கால்கள்
6. லூக்24:39 : தொட்டு பார்க்க சொன்ன கால்கள்
7. யோவா 1:36 : ஆட்டுக்குட்டி போன்றகால்கள்
8. வெளி 1:15 : பிரகாசம் போன்ற கால்கள்

XXXXXI. அறையும் – குட்டுதலும்:-

"இப்படி அவர் சொன்ன பொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன் பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்கிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான்" (யோவா 18:22).

எத்தனையோ பொருட்களும் சூழ்நிலைகளும், இயற்கையும் இயேசுவைத் தொட்டுச் சென்றது. அதில் பல கண்ணுக்கு தெரியகூடியது. சில கண்ணுக்கே தெரியாதது. அதுபோலதான் இயேசுவுக்கு விழுந்த அறையும்.

அறைதலில் பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் நிறைய வேறுபாடு உண்டு. Iஇராஜா 22:24 IIநாளா 18:23; யோபு16:10; மீகா 5:1 ஆகியவைகளை வாசித்துப் பார்த்தால் கன்னத்தில் அடித்தார்கள் என்றுதான் உள்ளது. இது பழைய ஏற்பாட்டு மக்களின் பழக்கமாயிருந்தது. அறைவதற்கும் கன்னத்தில் அடிப்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷர்களுடைய கால் -களை கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவா13:5)."

இயேசுவின் பாடுகளில் பங்கு வகிப்பதில் பாத்திரமும் ஒன்றாகும். பாத்திரம் என்ற வார்த்தை பல அர்த்தங்களை குறிக்கும். ஆனால் இயேசு பயன்படுத்தின பாத்திரத்திற்கு புதிய உடன்படிக்கை (லூக் 22:20, I கொரி11:25) என்று அர்த்தமாகும். ஆம் இயேசு பாத்திரத்தை ஓர் உடன்படிக்கையாகவே கருதினார்.

இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவருமே இயேசுவோடு கூட உடன்படிக்கை பண்ண வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். உடன் -படிக்கை பண்ணுகிறவர்கள் யாரானாலும் அவர்கள் இயேசுவோடு கூடவே இருப்பார்கள். இயேசுவுக்காகவே இருப்பார்கள்.

இயேசு தொட்ட பாத்திரங்களில் இரண்டு பாத்திரங்கள் மிக முக்கியமானது ஆகும். ஒன்று சீஷர்களின் கால்களை கழுவ பயன்படுத்தினது. இரண்டாவது, இராப்போஜனத்தின் போது ரசத் -துக்காக பயன்படுத்தினது. முதல் பாத்திரம் சுத்திகரிப்பையும், இரண்டாவது பாத்திரம் அர்ப்பணிப்பு அல்லது ஒப்புக் கொடுத்தலை -யும் குறிக்கும்.

இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவின பின்பு அவர்களை நோக்கி "நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள் என்றார்". இதே போல நாமும் சுத்தமான பாத்திரங்களாக மாறவேண்டும் என்று ஆண்டவர் எதிர் பார்க்கின்றனர்.

"ஆகிலும் எல்லாரும் சுத்தமாகவில்லை" என்று ஆண்டவர் யூதாசை சுட்டிக் காண்பித்தார். இதை உணர்ந்த பேதுரு என் கைகளையும், என் தலையையும் கூட கழுவ வேண்டும் என்று வேண்டினான். எனக்கு அன்பானவர்களே, இதை வாசிக்கும் நீங்கள் எந்த அளவுக்கு சுத்தமான பாத்திரமாக இருக்கின்றீர்கள் என்பதை சோதித்துப் பாருங்கள். இல்லாவிட்டால் "தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக" Iதெச 5:23 என்ற வேத வசனத்தின் படி கர்த்தர் உங்களை பரிசுத்தமான விலை -யேறப்பெற்ற கனத்துக்குரிய பாத்திரமாக மாற்றி பரலோகத்தில் கொண்டு போய் சேர்ப்பாராக.

இப்படி பலவித பாத்திரங்களைக் குறித்து வேதம் முழுவதும் காணப்பட்டாலும், இயேசு தன்னுடைய மரணத்தைக் குறித்து சொல்லத் தொடங்கினது முதல், மரிக்கும் வரைக்கும் ஏறத்தால ஏழு விதமான பாத்திரங்களைக் குறித்து அவர் சொல்லியும், பயன்படுத்தியும், தொட்டும் உள்ளார். அப்படிப்பட்ட பாத்திரங்களை குறித்து விளக்கமாக தியானித்து, சிலுவையின் பாடுகளை சிந் -தையில் கொண்டு நாமும் அவருக்கு ஏற்ற பாத்திரமாக மாறுவோம்.

வா.பி - வாக்குத்தத்தம் / வி.பி - விளக்கம் / ஏ.ல் - என்றால் / அ.பி - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.பி - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

B. யோவா 13:5 சீஷர்களின் கால்களைக் கழுவின பாத்திரம்:—

வி.ம்: 1சாமு 25:41 கால்களைக் கழுவுதல் (எ) பணிவிடைக்காரருக்கு சமானமாய்த் தன்னைத் தாழ்த்துதல் ஆகும்

உ.ம்: சங் 40:2 குழியிலும் சேற்றிலுமிருந்து தூக்கியெடுத்து நம் கால்களை உறுதிபடுத்தி கொள்ளுதல்

யோவா 13:5, ஏசா 52:11 } தண்ணீர் நிறைந்த பாத்திரம் என்றால் கர்த்தருடைய பாத்திரம் என்றும், சுத்திகரிக்கப்பட்ட பாத்திரம் என்றும் பொருள்

மு.கு: யோவா 13:5,10 இயேசுவால் தண்ணீர் நிரப்பப்பட்ட பாத்திரம் சீஷர்கள் அனைவரையும் முழுவதுமாக சுத்தமாக்கினது

C. மத் 26:27,28 புது உடன்படிக்கையின் பாத்திரம்:—

வி.ம்: i) புது உடன்படிக்கை என்றால்....

2கொரி 3:6
a) நம்மை ஊழியக்காரராய் மாற்றுவது
b) நம்மை தகுதியுள்ளவர்களாக்குவது
c) நம்மை ஆவிக்குரியவர்களாக்குவது
d) ஆவியை உயிர்ப்பிப்பது

ii) இயேசுவின் இரத்தம் நம்மை....

வெளி 1:6
1) பாவங்களற நம்மைக் கழுவும்
2) பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை நிறுத்தும்
3) நம்மை ராஜாக்களாக மாற்றும்
4) நம்மை ஆசாரியர்களாக்கும்
5) இயேசுவின் மகிமையையும், வல்லமையையும் என்றென்றைக்கும் காணச் செய்யும்

iii) இயேசு எடுத்துக் கொடுத்த பாத்திரம்....

1) லூக் 22:17,18
i) அவர்களை ஸ்தோத்திரம் பண்ண வைத்தது
ii) ஒருவருக்கொருவர் பங்கிட்டுக் கொள்ள செய்தது
iii) தேவனுடைய இராஜ்யத்தை நினைவுகூறசெய்தது

2) மாற் 14:24 திராட்சைரசம் இயேசுவின் இரத்தமாக மாறினது
3) மாற் 14:26 ஸ்தோத்திரபாட்டு என்ற துதியின் பாடல் பாடப்பட்டது
4) லூக் 22:21 இயேசுவைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுடைய கையைக் குறித்த வெளிப்பாடு உண்டானது
5) லூக் 22:22 இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கு ஐயோ என்ற தீர்க்கதரிசனம் இயேசுவின் மூலம் வெளிப்பட்டது
6) யோவா 21:20 அன்பின் சீஷனாகிய யோவான் இயேசுவின் மார்பினில் சாய்ந்தான்
7) 1கொரி 11:26 இயேசுவின் மரணத்தை தெரிவிக்கும் பாக்கியம் அனைவருக்கும் கிடைத்தது
8) 1கொரி 11:27 அபாத்திரமானவர்கள் குற்றவாளிகளானார்கள்
9) 1கொரி 11:31 நம்மை நாமே நிதானித்து பார்க்கும் மிகப் பெரிய சிலாக்கியம் கிடைத்தது

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

முகத்தில் அறைதலை நான்கு காரியங்களோடு கூட அப்போஸ்தலனாகிய பவுல் ஒப்பிட்டு விவரிக்கின்றார்.

"ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் உங்களை கைவசப்படுத்தினாலும், ஒருவன் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே" (IIகொரி 11:20). இந்த நான்கு நோக்கத்தோடுதான் இயேசுவின் முகத்தில் அறைந்தனர். ஆனாலும், சகித்திருக்கிறீர்களே என்று பவுல் சொன்னதைப் போல இவை எல்லாவற்றையும் அவர் சகித்தார், தாங்கினார், ஏற்றுக் கொண்டார்.

இந்நாட்களில் வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் சகித்தல், தாங்குதல், ஏற்றுக் கொள்ளுதல் என்கிறமூன்று பொறுமையின் பேராயுதங்கள் கட்டாயம் தேவை. அப்படிப்பட்டவர்கள் மட்டும் தான், இயேசுவுக்குள், இயேசுவுக்காக, இயேசுவைப் போல வாழ முடியும். இதில் நீங்கள் எப்படி?

II. முகத்தை மூடி அறைந்தனர்:-

"அவருடைய முகத்தை மூடவும் தொடங்கினார்கள் வேலைக்காரரும் அவரைக் கன்னத்தில் அறைந்தனர்" (மாற் 14:65).

ஒருவனை மற்றொருவன் கோபத்துடன் அறையும் போது முகத்தை மூடிக்கொள் என்று சொல்லிவிட்டு, அறைய மாட்டான். ஆனால், இயேசுவின் முகத்தை மூடிவிட்டு அறைந்ததற்குக் காரணம் உண்டு.

ஒருவர் மற்றொருவரை பார்க்கும் போது பயந்தால் முகத்தை மூடுவார்கள் என்று யாத்3:6 சொல்கிறது. அப்படியானால் பலருடைய சித்தரவதையாலும் இயேசுவின் முகம் மிகவும் அந்தகேடு அடைந்திருக்கிறது. அதைப் பார்க்க அந்தக் கொடுமைகாரர்களுக்கே முடியவில்லை. அதனால், முகத்தை மூடிவிட்டு அறைந்துள்ளனர்.

தவறு செய்கிறவர்களின் முகத்தை உடனே மூடிப் போடுவார்கள் என்று எஸ்தர் 7:8 சொல்கின்றது. ஆனால், ஒரு தவறும் செய்யாத இயேசு குற்றவாளியைப் போல் கருதப்பட்டு, முகத்தை மூடப்பட்டார். முகம் என்றாலே கர்த்தரின் சாயல் (IIகொரி3:18) என்று அர்த்தமாகும். அந்த பிதாவின் சாயலை தரித்துக் கொள்ள இயேசுவின் முகம், சத்துருக்களால் மூடப்பட வேண்டியதாயிற்று.

அவருடைய பாடுகளைக் குறித்து சொல்லப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்களில் கீழ்காணும் தீர்க்கதரிசனமும் ஒன்று. "உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது. அதிலிருக்கிறநியாயாதிபதிகளின் முகத்தை மூடிப் போடுகிறார்கள்" (யோபு 9:24). உலகத்தில் நியாயாதிபதியாய் வந்த இயேசுவின் முகம் மூடப்பட்டது, அறையப்பட்டது.

இயேசுவின் பாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் எப்படி நிறைவேறினதோ, அதுபோலவே, உங்களைக் குறித்தும் சொல்லப்பட்டுள்ள நன்மையான தீர்க்கதரிசனங்கள் ஒன்றும தவறிப் போகாமல், ஏற்றக் காலத்தில் ஏற்றபடி ஆண்டவர் உங்களுக்காக நிறைவேற்றி முடிப்பார். கலங்காதீர்கள் விசுவாசத்தோடும், அதிக நம்பிக்கையோடும் காத்திருங்கள்.

III. முகம், தலை, கன்னம்:-

"அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார் -கள். சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து" (மத் 26:67).

ஒரே நேரத்தில் அவர் மூன்று விதத்தில் கொடுமைப்படுத்தப்பட் -டார். அதில் முதலாவது: முகத்தில் துப்பப்பட்டார். துப்பப்படுதல் என்றால் தீட்டு என்று பொருள். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் குஷ்டரோகம் அல்லது பெண்களின் மாதவிடாய் போன்றவைகள் உண்டாகும் போது, அதை மிகப் பெரிய தீட்டாக கருதினார்கள். அப்படிப்பட்டவர்கள் துப்பின எச்சில் யார் மீதாவது பட்டால் அவர்க -ளும் தீட்டுப்பட்டவராக கருதப்படுவார். இந்த நோக்கத்தோடுதான் இயேசுவையும் தீட்டுப்படுத்த வேண்டும் என்ற காரணத்துக்காகவே துப்பினார்கள்.

இரண்டாவது: தலையில் குட்டினார்கள். அடிப்பதற்கு சமம் என்று வேதம் சொல்கிறது. அந்நாட்களில் வாழ்ந்தவர்கள் மிகவும் முரட்டு தன்மையுள்ளவர்கள். அவர்களின் செயல்பாடும். மிகவும் முரட்டுத்தனமாகத்தான் இருந்தது. ஆதலால், இயேசுவை தலை -யில் குட்டினார்கள், ஒவ்வொரு குட்டும் அடி போலத்தான் அவரின் தலையில் இறங்கினது.

மூன்றாவதாக: கன்னத்தில் அறைந்தனர். முகத்தில் துப்பியும், தலையில் அடித்தும் காயப்படுத்தின பிறகு, பூ போன்ற கன்னத் -தில் ஓங்கி அறைந்தால் எப்படியிருக்கும் என்று சற்று கற்பனைப் பண்ணிப் பாருங்கள். முகத்தின் எலும்புகள், தாடை பகுதி ஆகிய -வைகள் நொறுங்கிப் போயிருக்கும். நன்மை செய்து பாடு அநுப -விக்கனும் என்ற வேத வசனம் நிறைவேறுவதற்க்காக அவர் ஒரே நேரத்தில் முகம், தலை, கன்னம் ஆகியவற்றில் வேதனை -யை அனுபவித்தார்.

இயேசுவை அறைதல் என்ற இந்தப் பகுதி உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என்று விசுவாசிக் -கிறேன். ஜெபத்தோடு கூட மற்றபகுதிகளையும் வாசிப்போம் தியா -னிப்போம்

C. பொதுவான சில அறைதல் :-

1. நீதி 23:35 — சுரணையில்லாத அறை
2. மத் 5:39 — வலது கன்னத்தில் அறைதல்
3. மத் 26:67 — சிலர் சேர்ந்து இயேசுவை அறைந்தனர்
4. மாற் 14:65 — இயேசுவை அறைந்த வேலைக்காரர்கள்
5. லூக் 22:64 — கண்களை கட்டி போட்டு அறைதல்
6. யோவா 18:22 — சேவகன் அறைந்த அறை .

குட்டினார்கள்

"அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரை குட்டினார் -கள்" (மத் 26:67).

பாடுபட வேண்டும் என்று பிதாவினால் தீர்மானிக்கப்பட்டபடியே அவர் அநேக பாடுகளை சகிக்க ஆரம்பித்தார். அதில் பல பாடுகள் பெரியவைகளாகவும், சில சிறியவைகளாகவும் காணப்பட்டது. அந்த சிறிய பாடுகளில் ஒன்று தான் தலையில் ஓங்கி குட்டப்பட்டது ஆகும். குட்டினார்கள் என்று தான் வேதம் சொல்கின்றது. ஆனால், ஒவ்வொரு குட்டும் மிகுந்த வழியையும், பெரிய வீக்கத் -தையும் கொடுத்திருக்கும் என்று நான் விசுவாசிக்கின்றேன். ஏனென்றால், நானும் குட்டு வாங்கியுள்ளேன்.

குட்டுதலில் நான்கு வகை உண்டு என்று வேதம் கூறுகின்றது. அவைகள்:

1) நீதிமானின் குட்டு
2) சாத்தானின் குட்டு
3) ஊழியத்தில் உண்டாகும் குட்டு
4) பாடுபடுவதற்க்காகவே வரும் குட்டு

D. நீதிமானின் குட்டு சங் 141:5 :-

நீதிமான் என்னும் தேவனுடைய பிள்ளைகள் குட்டும் போதும் ஒவ்வொரு குட்டிலும் நான்கு காரியங்கள் வெளிப்படும்.

ஒன்று: நீதிமானின் குட்டுதல் தயவு உள்ளதாக இருக்கும். தயவு என்றால் இரக்கம். நம்முடைய ஆண்டவரும், நீதிமான்தான். ஆனபடியினால்தான் அவர் இரக்கமுள்ளவராய் இருந்து, தயவாய் நம்மை குட்டி நடத்துகின்றார்.

இரண்டு:- எண்ணெயைப் போலிருக்கும். எண்ணெய் என்றால் புத்தி என்று அர்த்தமாகும். பத்து கன்னிகைகளில் ஐந்து கன் -னிகைகள் புத்தியுள்ளவர்களாய் இருந்தார்கள். காரணம். அவர் -களின் தீவட்டிகளில் எண்ணெய் இருந்தது. நீதிமான் குட்டும் போது, இப்படிதான் சில நேரம் நமக்கு அது அறிவைக் கொண்டு வரும். இந்த எண்ணெய் என்பது சில நேரம் நம்மு -டைய சாபத்திலிருந்தும் நம்மை விலக்கி காக்கும் (சங் 109:18). ஆனபடியினால் முதியோர் குட்டினால், இயேசு கிறிஸ்துவைப் போல பொறுமையாய் ஏற்றுக் கொள்ளுங்கள்.

மூன்று:- அல்லத்தட்ட முடியாது. நீதிமான் தயவோடும், எண் -ணெயைப் போல மெதுவாயும் அன்புடன் குட்டும் போது அதை யாரால்தான் அல்லத்தட்ட முடியும். நிச்சயம் முடியாது. இயேசுவை எத்தனையோ விதத்தில் பாடுகளுக்கு உட்படுத்தினார்கள். ஆனால், அவர் அதில் எதையுமே அல்லத் தட்டவில்லை. எல்லா -வற்றையும் நீடிய பொறுமையுடன் ஏற்றுக் கொண்டார். இந்த பொறுமையும், சகிப்புத் தன்மையும் உங்களுக்குள்ளும் வரவேண்டும்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

நான்கு:- ஜெபம் பண்ண வைக்கும். நீதிமான் போல இருக்கும் ஒரு தேவமனுஷன் குட்டும் போது, அது முறுமுறுப்பையோ, வருத்தத்தையோ, மனக்கசப்பையோ கொண்டு வராது. மாறாக அது உங்களை ஜெபம் பண்ண வைக்கும். முன்பை விட இன்னும் அதிகமாக ஜெபம் பண்ணத் தூண்டும்.

இந்த நான்கு அடையாளங்கள் இருந்தால், நிச்சயமாகவே அது நீதிமான் குட்டிய குட்டு என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், இயேசுவையோ, நீதிமான்கள் குட்டவில்லை. மாறாகப் பாவிகளும், புறஜாதியாரும், அரண்மனையின் வேலைக்காரர்களும் அவருடைய தலையில் பலமாய் குட்டினார்கள். அனைத்தையும் இயேசு சகித்தார். ஏற்றுக் கொண்டார்.

E. சாத்தானின் குட்டு (IIகொரி 12:7):-

ஒன்று: உயர்த்த விடாது. தேவனுடைய பிள்ளைகளோ, தேவனுடைய விசுவாசிகளோ, வாழ்க்கையில் உயரக் கூடாது என்பது தான் சாத்தானின் முதல் நோக்கம். அதில் அவன் கண்ணும் கருத்துமாய் இருப்பான். தானியேல் உயரக் கூடாது என்று திட்டமிட்டவன். அங்கு அரண்மனையில் கூட வேலை செய்கின்றவர்களையே எதிராக தூண்டி விட்டான். ஆனாலும் தானியேலை ஜெயிக்க முடியவில்லை.

இயேசுவோ, இசேுவின் ஊழியமோ, பிதாவின் சித்தமோ, பூமியில் உயர்ந்து விடக் கூடாது என்றபலத்த போராட்டத்துடன் தான் வேலைக்காரர்களைக் கொண்டும் தலையில் குட்டிப் பார்த்தான். ஆனாலும் அவனுடைய ஐம்பம் பலிக்காமல் போனது.

இரண்டு: முள் போலக் குத்தும். குட்டுதல் என்றால் தலையில் குட்டுவது மட்டும் குட்டுதல் கிடையாது. எப்போதும் மனசாட்சியை வருத்தி கொண்டே இருப்பதும் ஒரு விதமான குட்டுதல்தான். நெரிஞ்சில் முள் குத்தினால் எப்படி உள்ளுக்குள் வலி இருந்து கொண்டே இருக்குமோ, அதுபோல சாத்தானால் குட்டு வாங்கினவர்களின் மனசாட்சியும், மன நிலையும் வலித்து கொண்டேயிருக்கும். இதிலிருந்து முதலாவது விடுதலை தேவை.

மூன்று: ஜெபித்தாலும் போதாது. சாத்தானால் வருகின்ற குட்டு போன்ற வேதனை வரும் போது அது நீங்க வேண்டும் என்று எவ்வளவு தான் ஜெபித்தாலும் அது நீங்காது, போகாது. இருந்து கொண்டே இருக்கும். பவுலுக்கு கண் பாதிக்கப்பட்டதைப் போல சில நேரம், சரீரத்தில் சில அடையாளங்களை உண்டாக்கப் பார்க்கும்.

நான்கு: கிருபை கிருபை:-

சாத்தானாலும், அவனுடைய குட்டுதலால் உண்டான அடையாளத்திலிருந்தும் விடுவிக்கப்பட நமக்குத் தேவையானது, தேவனுடைய கிருபை மட்டுமே. கிருபையை தேவனிடமிருந்து, பெற்றுக் கொண்டு, தேவனுடைய கிருபையை சார்ந்துகொண்டுவிட்டோமானால், நிச்சயமாக சாத்தானின் கொட்டுதலிலிருந்து நூற்றுக்கு நூறு மடங்கு விடுதலையை பெற்று விடலாம்.

பிலாத்துவின் அரண்மனையில் வைத்து, பலரும் பல விதத்திலும் இயேசுவைக் குட்டினபோது, அவரோ கிருபையையே நோக்கியிருந்தார். அவருடைய வழிகள் அனைத்தையும், கிருபை தாங்கி கொண்டது. நீங்களும் கிருபையை மட்டும் கேளுங்கள். கிருபையின் மேல் சார்ந்து கொள்ளுங்கள். அப்போது, எந்த சாத்தானும் உங்களை ஒன்றும் பண்ண முடியாது.

F. ஊழியத்தில் உண்டாகும் குட்டு (Iகொரி 4:11):-

குட்டு என்பதற்கு அப்போஸ்தவனாகிய பவுல் தன்னுடைய அனுபவத்திலிருந்து ஒரு புது விளக்கத்தைக் கொடுக்கின்றார். ஆனால், இது அனுபவத்தினால் உண்டான உண்மையான விளக்கம்.

ஒன்று:- பசி என்கின்ற குட்டு. பசி என்பது சரீரத்தில் உண்டாகின்ற ஒரு வகையான வேதனையாகும். இந்த பசி என்கின்றவேதனையை சிலர் தாங்கிக் கொள்வார்கள். பலரால் அதைத் தாங்க முடியாது. பவுலுக்கும் பசி என்பது ஊழியத்தினால் உண்டான குட்டு போன்ற வேதனையாகும்.

"வருத்தத்திலும், பசியிலும், அநேக முறை உபவாசங்களிலும் இருந்தேன்" (IIகொரி 11:27) என்ற தன்னுடைய அனுபவத்தைக் கூறுகின்றார். இயேசுவின் வாழ்க்கையிலும் பசி என்பது பல முறை குறுக்கிட்டது. பசியாய் இருந்தபடியினால் அத்திமரத்தை சபித்தார். புசிக்க ஏதாவது உண்டா என்று வாய்விட்டு கேட்டார், சில சமயம் புசிக்கவும் நேரமில்லாதபடி ஊழியம் செய்தார். ஊழியத்தினிமித்தமாகவும், பிதாவின் சித்தம் நிறைவேறவும் இதையெல்லாம் தாங்கி கொண்டார்.

ஊழியத்தில் உண்டாகும் குட்டு போன்ற இந்த நிலைமைகள் வரும்போது பவுலைப் போல மாறுங்கள். இயேசுவைப் போல வாழ பழகுங்கள்.

இரண்டு:- தாகம் என்னும் குட்டு. தாகம் என்பது சாதாரணமானது அல்ல. தாகம் சில நேரம் உயிரைக் கூட பறிக்கும் (நியா 15:18). மனுஷகுமாரனாக பூமியில் இருக்கும்போது, ஊழியத்தின் போதும், மரணத்தின் போதும் இயேசு தாகத்தோடு இருப்பதை வெளிப்படையாய் சொன்னார்.

தாம் அநேக நேரங்களில் பலரையும் சோர்ந்து போகப் பண்ணிவிடும். அந்நாளிலே சௌந்தர்யமுள்ள கன்னிகைகளும், வாலிபரும், தாகத்தினால் சோர்ந்து போவார்கள் (ஆமோ 8:13). பார்வைக்கு சௌந்தர்யமாய்க் காணப்பட்ட இயேசுவுக்கே தாகம் எடுத்தது. அப்படியானால் சாதாரண மனிதர்களாகிய நமக்கும் தாகம் உண்டாவது சகஜம்தான்.

வேதவாக்கியம் நிறைவேறுவதற்க்காகவே சிலரை தாகத்தின் பாதையில் கர்த்தரே நடத்துவார் (யோவா 19:28). அப்படிப்பட்டவர்கள், இதை சாத்தான் குட்டினதாகவோ, அவன்தான் சோதிக்கிறான் என்றும் நினைக்க கூடாது.

உங்களுக்கு எப்படி? சிம்சோனைப் போன்றதாகமா? அல்லது, வேதவாக்கிய நிறைவேறுவதற்க்காக உண்டாகின்றதாகமா என்பதை சோதித்துப் பாருங்கள்.

மூன்று:- நிர்வாணம் என்னும் குட்டு. நிர்வாணம் என்பது அருவருப்பைக் குறிக்கும். ஊழியத்திற்கு என்று வரும்போது இது போன்ற அருவருப்புகள் வருவதுண்டு. இயேசுவை சுற்றிலும் நின்றிருந்த பலரும் அருவருப்பானவர்கள்தான். ஏறத்தால நிர்வாணிகள் போல்தான் காணப்பட்டார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் இயேசுவின் தலையில் குட்டவும் செய்தனர்.

இயேசு சிலுவையில் தொங்கும் போது, நாம் படத்தில் பார்ப்பது போல இடுப்பில் துணியை கட்டி தொங்க விடவில்லை. அவரை முழு நிர்வாணமாகத்தான் சிலுவையில் தொங்க விட்டனர்.

வா.பி - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

G. இயேசுவும் குட்டும் (மத் 26:67):-

இயேசுவை இரண்டு விதங்களில் குட்டினதாக வேதத்தில் பார்க்கலாம். இரண்டும் இரண்டு அர்த்தங்களையுடையது.

ஒன்று:- துப்புதல் குட்டுதல் (மத் 26:67) தேவக்குமாரனாகிய இயேசுவின் முகத்தில் துப்பியுள்ளனர். அதன் பின்பு குட்டியுள்ள -னர். இது ஏற்கனவே சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறை -வேறுதல் ஆகும் (மாற் 10:34). துப்புதல் என்பது வெட்கத்தைக் குறிக்கும். வெட்கமுண்டாகும்படி துப்பியும், வழியுண்டாகும்படி குட்டி -யும் உள்ளனர். துப்புதலும், குட்டுதலும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தா -லும், அவரோ மௌனமாகவே இருந்துள்ளார்.

இரண்டு:- முகத்தை மூடுதலும் குட்டுதலும் (மாற் 14:65) முகத்தை மூடின பின்பு குட்டினதாக இங்கு வாசிக்கின்றோம். யாராவது செத்தால்தான் உயிரோடு இருக்கின்றவர்கள் முகத்தை மூடுவார்கள் (IIசாமு 19:4). ஆனால், இயேசு இன்னும் சாகவே இல்லை. அதற்குள்ளாக அவருடைய முகத்தை மூடிப் போட்டனர்.

ஏன் தெரியுமா? அவரை சுற்றிலும் சேவகர்கள். பிரதான ஆசாரியர்கள், காவளாளிகள் போன்றபலரும் நின்றுக் கொண்டி -ருந்தனர். அவர்களில் பலரும் அவரை குட்டி விட்டு, யார் அறைந்தது என்று சொல்லச் சொல்லுவார்களாம். குட்டின நபரை சரியாக சொல்லாவிட்டால் மீண்டும் மீண்டும் குட்டுவார்களாம்.

இப்படியெல்லாம், கேலியும், கிண்டலும், நையாண்டிதனமும் பண்ணுவதற்க்காகவே அவருடைய முகத்தை மூடி போட்டு குட்டி -யுள்ளனர். அன்பான சகோதரர்களே, சகோதரிகளே இப்படியாய் இயேசு விதவிதமாய் அனுஅனுவாய் அனுபவித்த பாடுகளையும், வேதனைகளையும், சோதனைகளையும் நீங்கள் அனுபவித்தால் உங்கள் உள்ளம் பண்பட ஆரம்பிக்கும். ஆவி கிறிஸ்துவுக்குள் வைராக்கியம் கொள்ள வைக்கும்.

எந்த சோதனைகள் வந்தாலும் எதிர்த்து நிற்கவும், சாத்தா -னையும், சாத்தானின் மக்களை மேற்கொள்ளவும் தேவ கிருபை உங்களைப் பூரணமாக நிரப்பி விடும். இயேசு துப்பப்பட்டு, முகம் மூடப்பட்டு, உங்களுக்காக குட்டுகளையும் சகித்தபடியினால் நீங்கள் பாக்கியவான்களாகவும், பாக்கியவதிகளாகவும் இருப்பீர்கள்.

H. உதாரணமான சில குட்டுகள்:-

1. சங் 141:5 — நீதிமானின் குட்டு
2. மத் 26:67 — துப்பின பின்பு குட்டுதல்
3. மாற் 14:65 — முகத்தை மூடி குட்டுதல்
4. Iகொரி 4:11 — ஊழியத்தில் உண்டாகும் குட்டு
5. IIகொரி 12:7 — சாத்தானின் குட்டு

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXXXII. பாடுகளின் பாத்திரங்கள்:–

A. மாற் 14:23 பாத்திரங்கள்:–

பாத்திரம் என்ற வார்த்தை இயேசுவின் பாடு துக்கத்தோடு சம்–பந்தப்பட்ட பொருளாகும். வேதாகமத்தில் முதன்முதலாக யாக்–கோபு, நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல என்றுச் சொல்லி உவமையின் பாத்திரத்தை தூக்கி பிடிக்கிறதையும் (ஆதி 32:10), கலந்து கொடுக்கும் பாத்திரம் (வெளி 18:6) என்று கடைசி பாத்–திரத்தைக் குறித்து வேதம் சொல்லியுள்ளதையும் வாசிக்கலாம். பாத்திரத்தில் பலவிதங்கள் உண்டு. விளக்கை மூடி வைக்கும் பாத்திரம் (லூக் 8:16), கலந்து கொடுக்கும் பாத்திரம் (வெளி 18:6), பேய்களின் பாத்திரம் (1கொரி 10:21), உடைந்த பாத்திரம் (சங் 31:12), கிருபை நிறைந்த கிருபா பாத்திரம் (ரோம 9:23). பாத்திரங்களில் பெயர் எழுதும் (வெட்டும்) பழக்கமும் அந்த காலத்திலேயே இருந்துள்ளது (ஏசா 8:1) என்பதும் ஆச்சரியமே.

"பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷர்களுடைய கால்–களை கழுவவும், தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவா13:5)."

இயேசுவின் பாடுகளில் பங்கு வகிப்பதில் பாத்திரமும் ஒன்றாகும். பாத்திரம் என்ற வார்த்தை பல அர்த்தங்களை குறிக்கும். ஆனால் இயேசு பயன்படுத்தின பாத்திரத்திற்கு புதிய உடன்படிக்கை (லூக் 22:20, I கொரி11:25) என்று அர்த்தமாகும். ஆம் இயேசு பாத்திரத்தை ஓர் உடன்படிக்கையாகவே கருதினார்.

இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவருமே இயேசுவோடு கூட உடன்படிக்கை பண்ண வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். உடன்படிக்கை பண்ணுகிறவர்கள் யாரானாலும் அவர்கள் இயேசு–வோடு கூடவே இருப்பார்கள். இயேசுவுக்காகவே இருப்பார்கள்.

இயேசு தொட்ட பாத்திரங்களில் இரண்டு பாத்திரங்கள் மிக முக்கியமானது ஆகும். ஒன்று சீஷர்களின் கால்களை கழுவ பயன்படுத்தினது. இரண்டாவது, இராப்போஜனத்தின் போது ரசத்–துக்காக பயன்படுத்தினது. முதல் பாத்திரம் சுத்திகரிப்பையும், இரண்டாவது பாத்திரம் அர்ப்பணிப்பு அல்லது ஒப்புக் கொடுத்தலை–யும் குறிக்கும்.

இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவின பின்பு அவர்களை நோக்கி "நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள் என்றார்". இதே போல நாமும் சுத்தமான பாத்திரங்களாக மாறவேண்டும் என்று ஆண்டவர் எதிர் பார்க்கின்றனர்.

"ஆகிலும் எல்லாரும் சுத்தமாகவில்லை" என்று ஆண்டவர் யூதாசை சுட்டிக் காண்பித்தார். இதை உணர்ந்த பேதுரு என் கைகளையும், என் தலையையும் கூட கழுவ வேண்டும் என்று வேண்டினான். எனக்கு அன்பானவர்களே, இதை வாசிக்கும் நீங்கள் எந்த அளவுக்கு சுத்தமான பாத்திரமாக இருக்கின்றீர்கள் என்பதை சோதித்துப் பாருங்கள். இல்லாவிட்டால் "தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக" 1தெச 5:23 என்ற வேத வசனத்தின் படி கர்த்தர் உங்களை பரிசுத்தமான விலை–யேறப்பெற்ற கனத்துக்குரிய பாத்திரமாக மாற்றி பரலோகத்தில் கொண்டு போய் சேர்ப்பாராக.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

சிலுவையின் வரலாறு
History of Cross

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

இப்படி பலவித பாத்திரங்களைக் குறித்து வேதம் முழுவதும் காணப்பட்டாலும், இயேசு தன்னுடைய மரணத்தைக் குறித்து சொல்லத் தொடங்கினது முதல், மரிக்கும் வரைக்கும் ஏறத்தால ஏழு விதமான பாத்திரங்களைக் குறித்து அவர் சொல்லியும், பயன்படுத்தியும், தொட்டும் உள்ளார். அப்படிப்பட்ட பாத்திரங்களை குறித்து விளக்கமாக தியானித்து, சிலுவையின் பாடுகளை சிந்தையில் கொண்டு நாமும் அவருக்கு ஏற்ற பாத்திரமாக மாறுவோம்.

B. யோவா 13:5 சீஷர்களின் கால்களைக் கழுவின பாத்திரம்:—

வி.ம்: 1சாமு 25:41 கால்களைக் கழுவுதல் (எ) பணிவிடைக்காரருக்கு சமானமாய்த் தன்னைத் தாழ்த்துதல் ஆகும்

உ.ம்: சங் 40:2 குழியிலும் சேற்றிலுமிருந்து தூக்கியெடுத்து நம் கால்களை உறுதிபடுத்தி கொள்ளுதல்

யோவா 13:5
ஏசா 52:11 } தண்ணீர் நிறைந்த பாத்திரம் என்றால் கர்த்தருடைய பாத்திரம் என்றும், சுத்திகரிக்கப்பட்ட பாத்திரம் என்றும் பொருள்

மு.கு: யோவா 13:5,10 இயேசுவால் தண்ணீர் நிரப்பப்பட்ட பாத்திரம் சீஷர்கள் அனைவரையும் முழுவதுமாக சுத்தமாக்கினது

C. மத் 26:27,28 புது உடன்படிக்கையின் பாத்திரம்:—

வி.ம்: i) புது உடன்படிக்கை என்றால்....

2கொரி 3:6
a) நம்மை ஊழியக்காரராய் மாற்றுவது
b) நம்மை தகுதியுள்ளவர்களாக்குவது
c) நம்மை ஆவிக்குரியவர்களாக்குவது
d) ஆவியை உயிர்ப்பிப்பது

ii) இயேசுவின் இரத்தம் நம்மை....

வெளி 1:6
1) பாவங்களற நம்மைக் கழுவும்
2) பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை நிறுத்தும்
3) நம்மை ராஜாக்களாக மாற்றும்
4) நம்மை ஆசாரியர்களாக்கும்
5) இயேசுவின் மகிமையையும், வல்லமையையும் என்றென்றைக்கும் காணச் செய்யும்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

iii) இயேசு எடுத்துக் கொடுத்த பாத்திரம்....

1) லூக் 22:17,18 i) அவர்களை ஸ்தோத்திரம் பண்ண வைத்தது

ii) ஒருவருக்கொருவர் பங்கிட்டுக் கொள்ள செய்தது

iii) தேவனுடைய இராஜ்யத்தை நினைவு -கூறசெய்தது

2) மாற் 14:24 திராட்சைரசம் இயேசுவின் இரத்தமாக மாறினது

3) மாற் 14:26 ஸ்தோத்திரபாட்டு என்ற துதியின் பாடல் பாடப்பட்டது

4) லூக் 22:21 இயேசுவைக் காட்டிக் கொடுக்கப் போகிறவனுடைய கையைக் குறித்த வெளிப்பாடு உண்டானது

5) லூக் 22:22 இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறவனுக்கு ஐயோ என்ற தீர்க்கதரிசனம் இயேசுவின் மூலம் வெளிப்பட்டது

6) யோவா 21:20 அன்பின் சீஷனாகிய யோவான் இயேசுவின் மார்பினில் சாய்ந்தான்

7) 1கொரி 11:26 இயேசுவின் மரணத்தை தெரிவிக்கும் பாக்கியம் அனைவருக்கும் கிடைத்தது

8) 1கொரி 11:27 அபாத்திரமானவர்கள் குற்றவாளிகளா -னார்கள்

9) 1கொரி 11:31 நம்மை நாமே நிதானித்து பார்க்கும் மிகப் பெரிய சிலாக்கியம் கிடைத்தது

D. மத் 26:39 சரீரம் என்கிற பாத்திரம்:-

கேள்வி: மத் 26:39 இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும் என்று இயேசு ஏன் ஜெபித்தார்?

a) சங் 129:3 வயலில் ஏர் உழுவதைப்போல இயேசுவின் முதுகை உழுதுபோட எத்தனித்தார்கள்

b) 1பேது 2:24 அவருடைய சரீரத்தில் ஏராளமான தழும்பு -களை உண்டாக்கத் திட்டமிட்டனர்

c) ஏசா 53:2 அவரின் சரீர அழகை அலங்கோலமாக்கப் பார்த்தனர்

d) ஏசா 53:2 அவரின் சௌந்தரியத்தை சீரழிக்க யோசித்தனர்

e) ஏசா 53:4 அவருடைய சரீரமாகிய பாத்திரம் வாதிக்கப்பட்டது

f) ஏசா 53:5 அவருடைய சரீரத்தைப் பல விதங்களிலும் நொறுக்க திட்டமிட்டனர்.ஆனபடியினால்தான் இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கட்டும் என்று ஜெபித்தார்

உ.ம்: 1பேது 3:18 கிறிஸ்து ஒருதரம் பாடுபட்டார். பின்பு கொலை செய்யப்பட்டார்

பலன்: லூக் 18:33, 1பேது 3:22 } மரணத்திலிருந்து உயிரோடே எழுந்தார். பிதாவின் வலது பாரிசத்தில் போய் உட்கார்ந்தார். தேவதூதர்களும் அவருக்கு கீழ்படிந்தனர்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

E. யோவா 18:11 பிதா கொடுத்தப் பாத்திரம்:-

கேள்வி: இயேசுவுக்கு பிதா கொடுத்தப் பாத்திரம் என்றால் எது?

பதில்: யோவா 3:17 உலகத்தை இரட்சிக்கவே பிதா இயேசுவை உலகத்திற்க்குள் அனுப்பினார். அப்படியானால், இந்த உலகம்தான் பிதா கொடுத்த முதல் பாத்திரம்

லூக் 4:19 கர்த்தருடைய அநுக்கிரகத்தைக் கூறுவது பிதா இயேசுவுக்குக் கொடுத்த இரண்டாவது பாத்திரம்

யோவா 5:36 பிதா தனக்குக் கற்பித்ததை பூமியிலே செய் -வதுதான் இயேசுவுக்கு பிதா கொடுத்த மூன்றாவது பாத்திரம்

அப் 3:26 ஜனங்களெல்லாரையும் பொல்லாங்கிலிருந்து விடுவிக்கும்படி இட்ட கட்டளை தான் இயேசுவுக்கு பிதா கொடுத்த நான்காவது பாத்திரம்

எபி 5:8 கிறிஸ்துவானவர் பாடுபடுகிறதினாலே கீழ்படிதலைக் கற்றுக் கொள்ள வேண்டும். இதுவே பிதா இயேசு -வுக்குக் கொடுத்த ஐந்தாவது பாத்திரம்

விளைவு: 1தீமோ 1:15 பாவிகளை இரட்சிக்கும் கிறிஸ்து இயேசு -வாக வெளிப்பட்டு, எல்லா அங்கிகரிப்புக் -குமுரிய பாத்திரராக மாறினார்

பலன்: 1கொரி 10:16 அவருடைய இரத்தமும், சரீரமும் அநேகரை ஐக்கியப்படுத்துகிறதாக மாறினது

F. யோவா 19:29 காடி நிறைந்த பாத்திரம்:-

1. நான்கு விதங்களில் சொல்லப்பட்டுள்ள காடி

a. யோவா 19:29 ஈசோப்புத்தண்டில் மாட்டிக் கொடுக்கப்பட்ட காடி
வி.ம் சங் 51:7 ஈசோப்பு (எ) தேவனால் உண்டாகும் சுத்திகரிப்பு

b. மத் 27:48 கடற்க்காளானால் தோய்க்கப்பட்டப் பூண்டு
வி.ம் மாற் 15:36 கடற்க்காளான் (எ) உறிஞ்சும் சக்தியுடையது என்று அர்த்தமாகும்

c. லூக் 23:36,37 பரியாசம் பண்ணும்படி கொடுக்கப்பட்ட காடி
வி.ம் நீதி 17:5 பரியாசம் (எ) தன்னை படைத்தவரை நிந்திப்பது

d. மத் 27:34 கசப்புக் கலந்த காடி
வி.ம் சங் 69:21 கய்ப்புக் கலந்தது (எ) ஆகாரத்தில் கலந்த விஷம்

2. காடி செய்த கிரியைகள்:-

a. மாற் 15:37 இயேசுவை மகா சத்தமாய் சத்தம் போட வைத்தது

b. மாற் 15:37 அவருடைய ஜீவனை விட வைத்தது

c. மத் 27:34 அதைக் குடிக்க மனதில்லாதவராக இயேசு மாறினார்

பலன் லூக் 23:38 இயேசு யூதருடைய ராஜாவாக உயர்த்தப்பட்டார்

மாற் 15:18 யூதருடைய ராஜாவே, வாழ்க என்று வாழ்த்தப்பட்டார்

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
எ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

G. மத் 10:38 சிலுவையை பின்பற்றும் பாத்திரம்:-

a. வி.ம்: மத் 16:24 / லூக் 9:23 } சிலுவையை எடுத்துக்கொண்டு (எ) தன்னைத் தானே வெறுத்து விடுவது
தன்னைத்தான் வெறுத்து விடுவது (எ) சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு பின்பற்றுதல் ஆகும்

உ.ம்: எபி 11:24 மோசே தன்னைத்தானே வெறுத்தான்

பலன்: யாத் 11:3 மோசே மிகவும் பெரியவனானான்

b. வி.ம்: மத் 10:38 / 2இரா 23:3 } சிலுவையைப் பின்பற்றுதல் என்றால்

1. கர்த்தரைப் பின்பற்றுவது
2. அவருடைய கற்பனைகளைப் பின்பற்றுவது
3. அவருடைய சாட்சிகளைப் பின்பற்றுவது
4. அவருடைய கட்டளைகளைப் பின்பற்றுவது
5. முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் பின்பற்றுவது
6. அவருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பின்பற்றுவது

உ.ம்: எண் 32:11 காலேபும், யோசுவாவும் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினார்கள்

பலன்: எண் 14:30 காலேபும், யோசுவாவும் கானானுக்குள் பிரவேசித்தனர்

H. மத் 26:66; மாற் 14:64 இயேசுவின் மரணப் பாத்திரம்:-

மரணப் பாத்திரம் என்றால் என்ன?

a. மத் 20:18 ஆக்கினைத்தீர்ப்படைவது மரணத்தின் முதல் அடையாளம்

b. மத் 26:38 ஆத்துமாவில் உண்டாகும் மகா துக்கம் மரணத்தின் இரண்டாம் அடையாளம்

c. யோவா 19:1 இயேசுவைப் பிடித்து வாரினால் அடித்தது என்பது உயிரோடு மரிக்கச் செய்வதற்க்கு அடையாளம். இது மூன்றாம் அடையாளம்

d. லூக் 22:44 வேர்வையானது இரத்தமாய் மாறும் பொழுது, அது மகா கொடிய மரணத்தின் நான்காவது அடையாளமாக மாறும்

e. மத் 27:60 மரித்து அடக்கம் பண்ணப்பட்டது. அவருடைய மரணத்தின் கடைசியும், ஐந்தாவதுமான அடையாளமாகும்.

விளைவு: லூக் 23:15 மரண தண்டனைக்குரிய பாத்திரம் என்றும் சொல்லும் அளவுக்கு அவர் ஒரு தவறும் செய்யவில்லை

பலன்: வெளி 1:18 / லூக் 24:6 } மரணத்தின், பாதாளத்தின் திறவுகோலுக்கு உரிமையாளரானார் இயேசு உயிர்த்தெழுந்தார்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

H. புதிய ஏற்பாட்டில் வரும் சில வித்தியாசமான பாத்திரங்கள்:-

1. வெளி 17:4 அசுத்தம் நிறைந்த பொற்பாத்திரம்
2. வெளி 14:10 கோபாக்கினையாகிய பாத்திரம்
3. எபி 9:4 மன்னா வைக்கும் பொற்பாத்திரம்
4. 2தீமோ 2:21 ஆயத்தமாக்கப்பட்டப் பாத்திரம்
5. 2தீமோ 2:20 பொன்னும் வெள்ளியுமான பாத்திரம்
   மண்ணும் மரமுமானப் பாத்திரம்
6. 1கொரி 11:28 சோதித்தரியும் பாத்திரம்
7. 1கொரி 10:21 { கர்த்தருடைய பாத்திரம் / பேய்களுடைய பாத்திரம் }
8. ரோம 9:21 { கனமான பாத்திரம் / கனவீனமான பாத்திரம் }
9. அப் 13:25 பாத்திரன் அல்லாத பாத்திரம்
10. யோவா 4:11 மொண்டுக் கொள்ளும் பாத்திரம்
11. லூக் 11:39 போஜனபான பாத்திரம்
12. மத் 25:4 புத்தியுள்ள எண்ணெய் பாத்திரம்

XXXXXIII. பொந்தியு பிலாத்து:-

"அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்" (யோவா 19:1).

இயேசுவைத் தொட்ட சிறப்பு வாய்ந்த மனிதர்களில் பிலாத்து -துவும் ஒருவன். இயேசுவை நியாயம் விசாரித்தவர்களில் இவனும் ஒருவன். யூதேயாவில் ஐந்தாவது தேசாதிபதியாக இருந்தான். இவனுடைய முழு பெயர் "பொந்தியு பிலாத்து" என் -பதாகும். பொந்தியு என்றால் நெறுக்கி அடைப்பவன் என்றும், பிலாத்து என்றால் உறுதியனாவன் என்றும் அர்த்தங்களாகும்.

பிலாத்துவுக்கு மனைவி இருந்ததாக வேதம் சொல்கின்றது. அதே சமயம் அவள் இயேசுவை குறித்து நன்கு அறிந்தும் தெரிந்தும் இருந்துள்ளாள் (மத் 27:19). அவள் தன் புருஷனா -கிய பிலாத்துவுக்கு வேலைக்காரன் மூலம் அனுப்பின தகவ -லில் மூன்று காரியங்களை சொல்லியுள்ளதை காணலாம்.

ஒன்று, அவர் நீதிமான் என்று அறிக்கைமிட்டாள். அதனால், இயேசுவின் பரிசுத்த ஜீவியத்தையும், ஒரு குற்றமும் செய்யாதவர் என்பதையும் அறிந்தவளாய் இருந்துள்ளாள். அவள் சொன்ன அதே வார்த்தையை பின்பு பிலாத்தும் சொல்லி, இயேசுவை நீதிமான் எனறு தீர்ப்பிடுகிறான் (மத் 27:24). அப்படியானால், கணவனும் மனைவியும் இயேசுவை நீதிமான் என்று அறிந்தி -ருந்துள்ளனர். பிலாத்துவோ இயேசுவை வாரினால் அடிப்ப -தற்காக தன் கையினால் தொட்டான். ஆனால், இயேசுவோ தன் நீதியின் வாழ்க்கையினால் அவர்கள் இருவரையும் தொட்டார்.

இரண்டாவது, "அவரை ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று சொல்லியனுப்பினாள். "யூதருக்கு நான் அநியாயம் ஒன்றும் செய்யவில்லை, அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்" (அப் 25:10) என்று பவுல் சொன்னதைப் போல, இயேசு யாருக்கும், எந்தவித அநியாயமும் செய்யவில்லை என்பதை இவள் அறிந்து வைத்துள்ளாள். எவ்வளவு பெரிய வெளிப்பாடு பாருங்கள். இப்படிப்பட்ட வெளிப்பாடு இருந்தபடியினால்தான் அவள் "அவரை ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று சொல்லியனுப்பியுள்ளாள்.

"அவருடைய நாமத்தின் மேல் புறஜாதியார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்பதே" (மத் 12:21) என்ற வாக்குத்தத்த வசனம் இவள் மூலம் இங்கு நிறைவேறுகின்றது. நம்முடைய நாட்களிலும் பெண்களுக்குள் இப்படிப்பட்ட வெளிப்பாடுகளும், நம்பிக்கையும் கட்டாயம் தேவையாயிருக்கிறது.

மூன்றாவதாக, "அவர் நிமித்தம்" என்ற வார்த்தையை அவள் சொல்வதை கவனியுங்கள். அவர் நிமித்தம் என்றவார்த்தையை பார்க்கவும், கேட்கவும் சாதாரணமாக தெரிந்தாலும், இது ஒரு தீர்க்கதரிசன நிறைவேறுதலுக்குரிய வார்த்தையாகும்.

அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள். ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள், கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்" (ஏசா 52:15) என்ற அற்புதமான வேத வசனத்தின்படி பிலாத்துவின் மனைவிக்கோ, பிலாத்துவுக்கோ இயேசுவை குறித்த சத்தியமோ, அவருடைய அற்புத செயல்களோ நேரடியாக போய் யாரும் அவர்களுக்கு அறிவிக்கவில்லை.

ஆனாலும், இயேசுவை நேருக்கு நேராக கண்களால் கண்டார்கள். எபிரெயு பாஷையிலே தளவரிசைப்படுத்தப்பட்ட மேடையென்று சொல்லப்படும் கபத்தா என்ற இடத்திலிருந்து கொண்டு, நியாயசனத்திற்கு முன்பாக இயேசு சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளையும் கேட்டார்கள் (யோவா 19:13). பிலாத்து, இவரை விடுதலை செய்ய விரும்புகிறேன் என்றவார்த்தையை ஏறத்தால பத்து முறையும், இவரிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்று ஏறத்தால பதினொரு முறையும், இவர் இராஜா என்றும், உங்கள் இராஜா என்றும் ஏறத்தால பதினைந்து முறையும் கூறியுள்ளான். பிலாத்துவினுடைய மனைவியின் வார்த்தைகள், பிலாத்துவின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

தீர்ப்பும் — முடிவும்:—

பிலாத்து என்று சொன்னால் ஈட்டியையுடையவன் என்கிற ஒரு விளக்கமும் உண்டு. இந்த பெயரின் விளக்கத்தின்படிதான் பிலாத்துவின் தீர்ப்பும் இருந்தது. அவனுடைய தீர்ப்பும் செய்கை—யும் பல விதங்களில் தவறாகத்தான் இருந்தது.

1. தன்னிடத்தில் குறை ஒன்றும் இல்லை என்று காண்பிக்கும் வண்ணமாக, எல்லோரும் காணும் அளவுக்கு அவன் தன் கை—களைக் கழுவினான் (மத் 27:24). ஆனால் குற்றமில்லாமை—யிலே அவன் தன்னுடைய கைகளைக் கழுவவில்லை. ஏற்கனவே யூதர்களின் பண்டிகையின் போது தன் சேவகர்களை அனுப்பி அவர்களை (கலிலேயர்களை) கொலை செய்தான் (லூக் 13:12). அதனால், பிலாத்து தேவனுடைய பார்வையிலும், யூதர்களின் பார்வையிலும் குற்றவாளிதான்

2. போர்ச்சேவகர்கள் அவருடைய வஸ்திரங்களைக் கழற்றவும்; அவரை பரியாசம் பண்ணவும் இடங்கொடுத்தான் (மத் 27:24—31). அவன் நினைத்திருந்தால் இந்த சம்பவத்தை தடுத்திருக்க முடியும். அந்த தகுதியும் வல்லமையும் அவனுக்கு இருந்தது.

3. பிலாத்து தன்னுடைய தீர்ப்பிலே மிக முக்கியமான மூன்று காரியத்தை சொன்னான். i) இவர் நீதிமான். ii) நான் குற்றமற்—றவன். iii) நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் (மத் 27:24). இந்த அறிக்கையின் மூலம் பிலாத்து தன்னைதானே குற்றமற்ற—வனாக வர்ணித்துக் கொண்டு, இயேசுவையோ குற்றவாளிக—ளுக்கு ஒப்பான மகா முரடர்களின் கையில் ஒப்புக் கொடுத்—தான். ஏற்கனவே அவன் பிரயத்தனம் பண்ணுகிறவன் என்று வேதம் சொல்கிறது. அந்த பிரயத்தனத்தை அவன் தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டான். பிலாத்து இயேசுவைக் குறித்து ஆச்சரியப்பட்டான் என்று மூன்று இடங்களில் சொல்லப்—பட்டுள்ளது.

i) மத் 27:13,14 எல்லோரும் எத்தனையோ குற்றங்களை அவர்மேல் சுமத்தியும், அவைகளை அவர் காது கொடுத்து கேளாதவர் போல இருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டான்.

ii) மாற்15:5 எல்லோரின் குற்றச்சாட்டுக்கும் அவர் தன் வாயினால் ஒரு உத்தரவும் சொல்லாததைக் கண்டு ஆச்சரியப்—பட்டான்.

iii) மாற் 15:44 இயேசுவின் மரணத்தின் நிச்சயத்தை அறிந்து, அவர் இழ்ற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டு ஆச்சரியப்பட்டான்.

"நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே" [நீதி 3:27] என்றவேத வசனத்தின்படி இவன் இயேசுவுக்கு பல நன்மைகளை செய்திருக்க வேண்டும். ஆனால், அப்படி ஒன்றுமே அவன் செய்யவில்லை. ஆனால், இயேசுவோ இந்த இடத்தில் இரண்டு வசனங்களை நிறைவேற்றினார். பிரபுக்களையும் இரட்சிக்கத் திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள் (சங் 146:3) என்ற வேதவாக்கியத்தின்படி இயேசு பிலாத்துவை எந்த வகையிலும் நம்பவில்லை. அவர் அவனை நம்பினதாக வேதத்தில் எங்கும் கூறப்படவும் இல்லை. சரீரத்தை மாத்திரம் கொலை செய்கிறவர்களுக்குப் பயப்படாதிருங்கள் (லூக் 12:4) என்று சொல்லப்பட்டுள்ளதைப் போல, பிலாத்து தன்னை கொலைக்குத்தான் ஒப்புக் கொடுக்கப் போகிறான் என்று தெரிந்திருந்தும் அவர் அவனுக்கு பயப்படாமல் இருந்தார்.

இயேசுவினுடைய வாழ்வின் கடைசி கட்டத்திலும், மரண நேரத்திலும், அவருக்குள் இருந்த உறுதியும், தைரியமும் இந்நாட்களில் வாழ்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்குள்ளும் வரணும். இப்படியாக அவன் ஆண்டவருக்கு செய்ய வேண்டிய கடமைகளையும், நன்மைகளையும் அவன் செய்யாதபடியினால் இந்த பிலாத்துவின் மரணமும் அகால மரணமாகத்தான் முடிந்தது.

அதாவது, இவனுக்கும் மேற்பட்டவனாய் இருந்த திபேரியுராயனால் ரோமாபுரிக்கு மீண்டும் அமைக்கப்பட்டான். அதன் பின்பு "காலிகுலா" என்பவனால் பிலாத்து பிரான்ஸ் தேசத்தின் தென்பகுதியிலுள்ள வியன்னாவுக்கு நாடு கடத்தப்பட்டான். அங்கு அவனுக்கு உண்டான மன உளைச்சல், தனிமை, விரக்தி போன்றவற்றுக்கு ஆளாகி, இறுதியில் தற்கொலை செய்து கொண்டு செத்துப் போனான் என்று சரித்திரம் ஆணித்தரமாக கூறுகின்றது.

ஜீவாதிபதியையே நியாயம் விசாரித்தவன் ஜீவனற்றவனானான். பரிசுத்தர்க்கு மரண தண்டனையை வழங்கியவன் மரணத்துக்கும் இரண்டாம் மரணத்துக்கும் பங்காளியாய் மாறிப் போனான் [வெளி21:8]. இயேசுவை கொலைக்கு நியமித்தவன் தற்கொலைக்கு ஆளானான். உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா [யோவா 19:10] என்று அதிகாரத் தோரணையோடு கேட்டவன், இப்போது, அதிகாரமே இல்லாதவனாக தற்கொலை செய்து கொண்டான்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

சிலுவையின் வரலாறு
History of Cross

அன்பானவர்களே, பொந்தியுபிலாத்து என்பவன் அனைவருக்கும் ஒரு எச்சரிப்பின் கருவி என்பதை மறந்து போகாதீர்கள். பிலாத்து ஒரு சாதாரண மனுஷன். இயேசுவை நியாயம் தீர்க்காமல் இருந்திருந்தால் அவன் பெயர் இந்நேரம் மறந்தே போயிருக்கும். பிலாத்து ஒரு தன்னலமுள்ளவன். தன்னையும் தன் பதவியையும் காத்துக் கொள்ள எதையும் செய்யக் கூடியவன். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் இப்படி இருக்க கூடாது என்பதற்கு இவன் ஒரு எச்சரிக்கை மணி. இந்த எச்சரிக்கை மணியை கவனிப்போம். வாழ்க்கையில் யாருக்கும், எப்போதும் தீங்கு செய்யாமல் கவனமாக இருப்போம்.

இயேசுவைக் குறித்து பொந்தியுபிலாத்து கொடுத்த அறிக்கைகள்:—

1. மத் 27:17 பொறாமையினாலே அவரை ஒப்புக் கொடுத்தீர்கள்.
2. மத் 27:24 இந்த நீதிமானுடைய இரத்த பழிக்கு நான் குற்றமற்றவன்.
3. மாற் 15:12 இயேசு: யூதருடைய ராஜா
4. லூக் 23:4 இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை.
5. யோவா 18:38 மறுபடியும் அவன்: நான் அவனிடத்தில் ஒரு குற்றமும காணேன்.
6. யோவா 19:19 நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா
7. மாற் 15:44 அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப் போனாரோ?
8. லூக் 23:14 நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை.
9. லூக் 23:22 மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றும் இவனிடத்தில் நான் காணவில்லையே.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXXXIV. முத்தமும் – எச்சிலும்:-

"உடனே அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி, அவரை முத்தஞ் செய்தான்" (மத் 26:49).

சிறு குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை ஆசைப்பட்டு கேட்பதும், கொடுத்தமும் ஆசையோடு பெற்றுக் கொள்வதும் முத்தம் ஆகும். முத்தம் என்பது உண்மையான அன்பின் வெளிப்பாடு ஆகும். ஆனால், "முத்தம் என்றால் அடையாளம்" (மத் 26:48) என்று வசனம் சொல்கின்றது.

இயேசுவோடு கூட இருந்த 12 சீஷர்களும் இயேசுவை போலவே ஒரே மாதிரியாக இருந்தனர். அதனால், இயேசு யார்? சீஷர்கள் யார் என்று போர்வீரர்களுக்கு தெரியாதபடியினால், யூதாஸ் கூட்டமான ஜனங்களோடு வந்து, (லூக் 22:47) இயேசுவுக்கு முத்தம் கொடுத்தான். இதை கவனமாய் பார்த்துக் கொண்டிருந்த போர்வீரர்கள் உடனே வந்து இயேசுவை பிடித்தனர்.

A. யூதாசின் வார்த்தைகள்:-

இயேசுவுக்கு முத்தம் கொடுக்க வருவதற்கு சற்று முன்பும், முத்தம் கொடுக்கும் போதும் யூதாஸ் பயன்படுத்தின வார்த்தைகளை வேதம் படம் பிடித்துக் காண்பிக்கின்றது.

1) மத் 26:48 இயேசுவை "அவன்தான்" என்று சொல்லி கணமீனம் பண்ணினான்.

2)மாற் 14:44 "எவனை முத்தஞ் செய்வேனோ" என்று அற்பமாய் பேசினான்.

3) மாற் 14:44 "பிடித்து பத்திரமாய் கொண்டு போங்கள்" என்று எதிரிகளுக்கு ஆலோசனை சொன்னான்.

4) மத் 26:49 இயேசுவை "வாழ்க" என்று கபட்டுத்தனமாக வாழ்த்தினான்.

5) மாற் 14:44 "ரபீ, ரபீ"என்று பொய்யான உதடுகளோடு திரும்ப திரும்ப அழைத்தான்.

இவ்வளவு கபட்டுதனத்தையும், வஞ்சகத்தையும் உள்ளம் நிறைய வைத்துக் கொண்டு, எதுவுமே அறியாதவன் போல் வந்து சூது நிறைந்த முத்தத்தை கொடுத்தபடியினால்தான் "இயேசு அவனை நோக்கி யூதாசே முத்தத்தினாலேயா மனுஷக்குமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய்" (லூக்22:48) என்று ஏக்கத்தோடும், பரிதாபத்தோடும் கேட்டார்.

அருமையான சகோதரர்களே, சகோதரிகளே, கபடும், வஞ்சகமும், சூதும், சூழ்ச்சியும், சூட்சுமமும், உங்கள் வாழ்க்கையில் காணப்படும் என்றால், அவைகளை சத்திய வசனத்தினாலும், இயேசுவின் இரத்தத்தினாலும் ஜெயித்து விடுங்கள். முற்றிலுமாய் அழித்து விடுங்கள். இல்லாவிட்டால் அவைகள் உங்களை அழித்து விடும்.

B. யூதாசின் முடிவு:-

முத்தத்தினால் காட்டிக் கொடுத்த யூதாஸ். அதனால் எதை எதையெல்லாம் இழந்தான் என்று வாசித்துப் பாருங்கள்.

1) மத் 27:3 "மனஸ்தாபப்பட்டு" நிம்மதியை இழந்தான்.

2) மத்27:4 "பாவம் செய்தேன்" பரிசுத்தத்தை இழந்தான்.

3) மத்27:5 "வெள்ளிக்காசை எறிந்து விட்டு" தான் ஆசைப்
-பட்ட 30 வெள்ளிக்காசை இழந்தான்.

4) அப் 1:17 "அவன் எங்களில் ஒருவனாக எண்ணப்பட்டு"
சீஷர்களின் ஐக்கியத்தை இழந்தான்.

5) அப் 1:17 "இந்த ஊழியத்தில் பங்குப் பெற்றவனாயிருந்தான்"
ஊழியத்தை இழந்தான்.

6) அப்1:18 "அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து" அஃறன்
வாங்கியிருந்த நிலத்தை இழந்தான்.

7) அப்1:18 "குடல்களெல்லாம் சரிந்து போயிற்று" வயிற்றில்
இருந்த குடல்களையும் இழந்தான்.

8) மத்27:5 "நான்று கொண்டு செத்தான்" தன்னுடைய
உயிரையும் இழந்தான்

முத்தத்தை அற்பமாய் எண்ணாதிருங்கள். அதற்கு உணர்ச்சி மட்டுமல்ல, சக்தி இருக்கிறது, வல்லமை இருக்கிறது, உயிர் இருக்கிறது. முத்தத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று பரிசுத்த முத்தம், மற்றொன்று பாவத்தின் முத்தம்..

லூக்கா 7-ம் அதிகாரத்தில் பாவியான ஒர் ஸ்திரீ கொடுத்த முத்தம் அவள் சாட்சியை உலகம் முழுதும் பரவ செய்தது. ஆனால், மத்26-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட யூதாஸின் முத்தம் அவனை தற்கொலைக்கு கொண்டு சென்றது.

இவர்கள் இருவரில் நீங்கள் யாரைப் போல இருக்கின்றீர்கள் என்பதை இன்றேசிந்தித்து முடிவு எடுங்கள். மற்றவர்களால் பாவி என்று அழைக்கப்பட்ட ஸ்திரீ இயேசுவுக்கு முன்பாக பாவம் மன்னிக்கப்பட்டவளானால் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனாக
-வும் பரிசுத்தனாகவும் காணப்பட்ட யூதாசின்
வாழ்க்கை அகோரமானது.

நியாயதீர்ப்பு நாளில் இந்த இரண்டு பேரில் யார் உங்களை சந்திப்பார்கள் யோசித்துப் பாருங்கள். உங்கள் உதடும், உள்ள
-மும், உண்மையுள்ளவைகளாய் மாறட்டும்.

C. மூன்று சுவிசேஷங்களில் வரும் முக்கிய முத்தங்கள் சில:-

1.	மத் 26:48	அடையாளம் என்ற முத்தம்
2.	மத் 26:49	வாழ்த்துதல் என்ற முத்தம்
3.	மாற் 14:44	காட்டிக் கொடுத்த முத்தம்
4.	மாற் 14:45	ரபீ, ரபீ என்ற முத்தம்
5.	லூக் 7:38	கண்ணீரின் முத்தம்
6.	லூக் 7:45	ஓயாமல் கொடுத்த முத்தம்
7.	லூக் 15:20	மனதுருக்கத்தின் முத்தம்
8.	லூக் 22:48	கேள்வி கேட்ட முத்தம்

எச்சில் என்பது சரீரத்தில் உள்ள இரத்தம் ஊறும் தன்மை என்று சொல்வார்கள். ஆனால், அதே எச்சில் உமிழ்நீர் என்றும் சொல்லப்பட்டு அது பல ஆழமான சத்தியத்தையும் உபதேசத்தையும் கொண்டதாக உள்ளது.

எச்சில் என்பது பல அர்த்தங்களை கொண்டதாக உள்ளது. வெட்கம், பரியாசம், அவமானம், நிந்தை மற்றும் அற்புதம் ஆகியவைகளைக் குறிக்கும்.

ஒரு முறைஅவர் மேல் துப்பினார்கள், அதாவது உடலின் பல இடத்தில் படும்படியாக. இன்னொரு முறை அவருடைய முகத்தில் துப்பினார்கள். உடலின் மீது துப்பின சம்பவம் பரியாசத்தைக் காண்பிக்கின்றது (மத் 27:30,31). அவருடைய முகத்தில் துப்பினது கிண்டல் மற்றும் கேலி பண்ணுதலைக் குறிக்கின்றது. இப்படி பல விதங்களில் யூதர்களால் இயேசு துப்பப்பட்டார்.

முதலில் ஒரு விசை ஒருவன் மட்டும் துப்பினான் என்றும் பின்பு சிலர் சேர்ந்து (மாற்14:68) அவர் மேல் துப்பினார்கள் என்றும் பார்க்கிறோம். இந்த சம்பவங்கள் எல்லாம் ஏற்கனவே ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்படியாக நடந்துள்ளது (ஏசா50:6). தீர்க்கதரிசனம் என்றால் நல்லது மட்டும் நடக்கும் என்று நினைக்கக் கூடாது. எச்சில் துப்பப்படுதல் போன்றநாம் எதிர்பார்க்காததையும் தீர்க்கதரிசனம் செய்யும். எந்த சூழ்நிலையையும் எதிர் கொள்ள நாம் தான் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இயேசு சொன்னார்:"உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" (ஏசா 50:6) என்றார். அப்படியானால் எவ்வளவு அர்ப்பணிப்பும், தாழ்மையும், சகிப்புத் தன்மையும் இயேசுவிடம் இருந்துள்ளது என்று பாருங்கள். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு இருந்தபடியினால்தான் அவர் பரலோகம் வரை உயர்த்தப்பட்டார். தாழ்மை, பொறுமை, உண்மை இம்மூன்றும் இருந்தால் இந்த உலகத்தையே நம்மால் ஆளுகை செய்ய முடியும்.

எச்சில் என்னும் உமிழ்நீரை அவமானத்துக்கும், வெட்கத்துக்கும் அடையாளமாக யூதர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால், இயேசுவை நோக்கிப் பாருங்கள். அதே எச்சிலை பயன்படுத்தி குருடனுடைய கண்களை ஆண்டவர் திறந்தார் (யோவா9:6,7). அதுவே அற்புதமாகவும் மாறினது.

இந்த சம்பவம் உங்களுக்கு ஓர் பாடம் என்பதை மறக்காதீர்கள். யூதர்களை போல அவமானத்தின் அடையாளமாக இருக்கப் போகின்றீர்களா? அல்லது இயேசு கிறிஸ்துவைப் போல அற்புதத் -தின் அடையாள சின்னமாக மாறப் போகின்றீர்களா?

எச்சில் என்னும் உமிழ்நீரை அற்பமாக எண்ணாதீர்கள். அந்த சாதாரண எச்சில்தான் பிறவி குருடனுக்கு பார்வையை கொண்டு வந்தது. மற்றவர்களின் கண்களுக்கு எச்சில் போல காணப்படுகி -றவர்களைக் கொண்டு தான் ஆண்டவர் சிலருக்கு பார்வையை -யும், சிலருக்கு வெளிச்சத்தையும், சிலருக்கு வாழ்க்கையையும் கொடுக்கப் போகின்றார்.

தரித்திருங்கள், பொறுத்திருங்கள், காத்திருங்கள் தேவ வல் -லமை மகிமையாய் செயல்படுவதைக் காண்பீர்கள்.

D. உதாரணமாய் காணக்கூடிய எச்சில்கள்:-

1) லேவி 15:8 : தீட்டு என்னும் எச்சில்
2) எண் 12:14 : வெட்கம் என்னும் எச்சில்
3) ஏசா 25:9 : அடையாளம் என்னும் எச்சில்
4) மத் 26:67 : முகத்தில் துப்பின எச்சில்
5) மத் 27:30 : சிரசில் அடித்த எச்சில்
6) மாற் 10:34 : பரியாசம் என்னும் எச்சில்
7) யோவா 9:6 : அற்புதம் செய்த எச்சில்

XXXXXV. திராட்சைரசமும் - காடியும்:-

"பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்க -ளுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண் -ணுங்கள், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயி -ருக்கிறது"(மத் 26:27,28).

திருவிருந்து, இராப்போஜனம், அப்பம் பிட்குதல், நற்கருணை, கர்த்தருடைய பந்தி போன்ற வார்த்தைகளை கேட்டாலோ அல்லது அதில் பங்கு பெற்றாலோ அதில் முக்கியம் வகிப்பது இயேசுவின் இரத்தமாகும். இந்த இரத்தத்திற்கு நிழலாட்டமாக இயேசு பயன் -படுத்தினது திராட்சரசம் ஆகும். இந்த திராட்சரசத்தை ஜூஸ் என்றும் ஒயின் என்றும் ஆங்கிலத்தில் ஸ்டைலாக சொல்லிக் கொள்ளுவார்கள்.

திராட்சரசத்தில் பல விதங்கள் உண்டு. முகக்களைக்காக பயன் -படுத்தும் திராட்சரசம், ஆடல் பாடல் மற்றும் கொண்டாட்ட நேரங் -களில் பயன்படுத்துவதற்க்காக அதற்கென்று தயாரிக்கப்பட்ட திராட்சரசம், காயம்பட்டோருக்காக குடிக்க கொடுக்கவும் காயம் -பட்ட இடங்களில் தடவவும் என்று தனிப்பட்ட திராட்சரசம், போதை பழக்கம் உள்ளவர்கள் போதை ஏறுவதற்கென்று குடிக் -கப் பயன்படுத்தும் மிகப் பழமையான, நாள்பட்ட திராட்சரசம், இப்படி பல விதமான திராட்சரசம் இருந்தாலும், இரத்தத்திற்கு இணையாக சொல்லப்பட்டதும் பயன்படுத்தபட்டதுமான பரிசுத்த -மான திராட்சரசமும் உண்டு.

கிறிஸ்தவத்தில் ஆசாரங்கள் என்பது மிக மிகக் குறைவு. மிக எளிதும் கூட. அந்த குறைவான ஆசாரங்களில் இரண்டு மிக முக்கியமானதாகும். ஒன்று ஞானஸ்நானம், இரண்டு கர்த்தருடைய பந்தி. ஞானஸ்நானம் ஒருவர் தனியாய் பெற்றுக் கொள்வது, கர்த்தருடைய பந்தியோ சபையாக அல்லது கூட்டமாக பெற்றுக் கொள்வதாகும். ஞானஸ்நானம் தேவனோடு இருக்கும் உடன்படிக்கையையும், ஐக்கியத்தையும் காண்பிக்கின்றது. கர்த்தருடையப் பந்தியோ ஐக்கியத்தைக் காண்பிக்கின்றது. உண்மையான எந்தவொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் இந்த இரண்டு ஐக்கியத்திலும் நிலைத்திருப்பார்கள்.

திராட்சை என்றவார்த்தையும், திராட்சை பழமும் அனைவரும் அறிந்ததுதான். ஆனால், அதே திராட்சை என்றவார்த்தையில் பல பகுதிகள் உண்டு. அவைகளைக் குறித்து வேதாகமம் முழுவதிலும் நம்மால் வாசிக்க முடியும். ஆனால், அந்தோ பரிதாபம், அநேகர் அந்த பகுதிகள் எது எது என்றோ, அவைகள் எழ்ற்க்காக சொல்லப்பட்டுள்ளது என்றோ கவனிப்பதும் கிடையாது. அறிந்து கொள்ள விரும்புவதும் கிடையாது.

ஒரு மருத்துவர் மருத்துவம் படித்து முடிக்கும் முன்பாக ஒரு மனுஷனின் உடல் உள் உறுப்புகள் எது, எது, எத்தனை என்று கற்று தேறிவிடுகின்றார். அதேபோலத்தான் ஒவ்வொரு கிறிஸ்தவரும் திராட்சையை குறித்த அனைத்து பகுதிகளையும் நன்றாக உய்ந்து, ஆராய்ந்து தெரிந்திருக்க வேண்டும். திராட்சையின் பகுதிகள் அனைத்தும் ஏறத்தால கீழே சொல்லப்பட்டுள்ளது. அதற்க்கான ஆவிக்குரிய அர்த்தங்களையோ நீங்கள் ஜெபித்து, வேதத்தை வாசிதக்து தெரிந்து கொள்ளுங்கள். காரணம், ஆவிக்குரிய அர்த்தங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதத்தில் வெளிப்படும்.

1. திராட்சை வேர்............... சங் 80:8,9
2. திராட்சை இலை............. ஏசா 34:4
3. திராட்சை செடி................. யோபு 15:33
4. திராட்சை கொடி.............. மல் 3:11
5. திராட்சைக் கிளை............ எசே 8:17
6. திராட்சைக்குலை............... Iசாமு 25:18
7. திராட்சைக்கொப்பு............ எசே 17:6
8. திராட்சைபூக்கள்................ ஆதி 40:9,10
9. திராட்சைக்காய்.................. எரே 31:29,30
10. திராட்சைப்பழம்.................. புலம் 1:15
11. திராட்சை ஆலை............... சக 14:10
12. திராட்சை வற்றல்................ எண் 6:3
13. திராட்சைரசம்....................... ஆமோ 2:12
14. திராட்சைத்தோட்டம்............... Iஇரா 21:18
15. திராட்சைத்தோட்டக்காரர்....... ஏரே 52:16
16. திராட்சை நிழல்..................... மல் 4:4
17. திராட்சையின் பலன்.......... ஏசா 32:10
18. திராட்சை விதை.................. எண் 6:4
19. திராட்சை தோல்.................. எண் 6:4
20. திராட்சைரத்தம்...................... ஆதி 49:11

திராட்சை என்றபெயரில் எப்படி இத்தனை வகைகள் இருக்கி-றதோ, அதே போலதான் இயேசு என்னும் மனுஷக்குமாரனுக்-குள்ளும் ஏராளமான தன்மைகளும், குணங்களும் உண்டு. இதை வாசிக்கும் நீங்கள் அதிக ஜெபத்தோடும், மிகுந்த பரிசுத்-தத்தோடும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால், ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு விதமான கிருபையை உணரலாம், அனுப-விக்கலாம்.

திராட்ச பழத்தை பழமாக பார்க்காதீர்கள், கனியாக பாருங்கள். திராட்சரசத்தை ரசமாக கருதாதீர்கள், இயேசுவின் இரத்தமாக நினையுங்கள். திராட்சரச பாத்திரத்தை பாத்திரமாக எண்ணாமல், பாத்திரத்தை உங்கள் சரீரமாக சிந்தியுங்கள். கர்த்தருடைய பந்-திக்கு சென்றவுடன் உங்களை நீங்களே மறந்து விடுங்கள். உங்-களின் எண்ணங்கள், யோசனைகள், உணர்வுகள் அனைத்தை-யும் நீங்களே தடை செய்யுங்கள். தேவனுடைய பிரசன்னத்தை உணருங்கள். தேவ கிருபையில் நுழையுங்கள். தேவ வார்த்தை-யாகிய வேத வசனத்தின் சிந்தையில் மூழ்குங்கள். அதிகமாய் ஸ்தோத்திரம் பண்ணுங்கள். வியாகுலத்தின் கண்ணீரால் நிரம்-புங்கள். அதன் பின்பு, திராட்சரசமாகிய இயேசுவின் இரத்தத்தை பானம் பண்ணுங்கள். அப்பொழுது, நீங்கள் புது பெலனை பெறு-வீர்கள், ஆரோக்கியத்தை அடைவீர்கள். கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக பிரகாசிப்பீர்கள்.

இயேசு கிறிஸ்து கடைசியாக பயன்படுத்தின திருவிருந்தின் திராட்சரச பாத்திரம் நான்கு விதமான பாத்திரமாக சொல்லப்பட்-டுள்ளதை காணலாம். அவைகளை ஜெபத்தோடும், ஸ்தோத்திரத்-தோடும் கவனிப்போம்.

A. ஸ்தோத்திர பாத்திரம்:- (மத் 26:27)

"பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி". திராட்சரசத்தின் பாத்திரத்தை எடுத்து அவர் ஸ்தோத்தரித்தினால், வெறுமையாய் இருந்த பாத்திரம் ஸ்தோத்திர பாத்திரமாய் மாறிப் போனது. ஸ்தோத்திரம் என்பது, எங்கும், எப்போதும், எல்லா நேரத்திலும் சொல்ல வேண்டிய வார்த்தை. இடைவிடாமல் மன-தார நூறு ஸ்தோத்திரங்களைச் சொன்னால் அதற்கேற்ற பலன் உண்டாகும். கண்களை மூடி மிகுந்த தியானத்துடன் ஐந்நூறு ஸ்தோத்திரங்களை சொல்லிப் பாருங்கள், மிகப் பெரிய பலன்களைக் காண்பீர்கள்.

இயேசு அப்பத்தையும், மீன்களையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணினார் (மாற் 8:6,7,8). கூடை என்ற பாத்திரம் அப்பங்க-ளாலும், மீன்களாலும் நிறைந்தது. இந்த சம்பவம் திருப்தியை குறிக்கின்றதாய் உள்ளது. கர்த்தருடைய பந்தியில் ஸ்தோத்திரத்-துடன் காணப்பட்டால், உங்களையும் ஆண்டவர் ஸ்தோத்திர பாத்திரமாய் மாற்றுவார். உங்கள் வாழ்க்கையும் ஜீவியமும் எப்-போதும் திருப்தியுள்ளதாக இருக்கும். இடைவிடாமல் ஸ்தோத்-தரிப்போம். திருப்தியை அனுபவிப்போம்.

B. பானம் பண்ணும் பாத்திரம் (மத் 26:27):-

"அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்" கர்த்தருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவது நமக்குக் கிடைத்த மிகப் பெரிய பாக்கியமும் சிலாக்கியமுமாகும். அதே சமயம், அபாத்திரமாய் பானம் பண்ணுவது மிகப் பெரிய குற்றமாகும். அபாத்திரம் என்றால் ஆக்கினை தீர்ப்பு என்றும் ஆக்கினை என்றால் தண்டனை என்றும் அர்த்தமாகும் (1கொரி 11:29).

தானியேல் தீர்க்கதரிசியின் நாட்களில் வாழ்ந்ததான பெல்சாத்சார் என்றராஜா தேவனுடைய ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட பரிசுத்த பாத்திரங்களில் மதுபானத்தை ஊற்றி, அவனும், பிரபுக்களும், அவர்களின் மனைவிகளும், வைப்பாட்டிகளும் குடித்தார்கள். இது கர்த்தருடைய பார்வையில் அபாத்திரமாய் காணப்பட்டது (தானி 5:2,4,30). அதனால் உண்டானத் தண்டனை என்ன தெரியுமா? அன்றைக்கு இரவே ராஜா கொலை செய்யப்பட்டான்.

பாத்திரமாய் இருங்கள், அபாத்திரமாய் போகாதீர்கள். பயம், நடுக்கம், பரிசுத்தம் இல்லாமல் திராட்சரசமாகிய இயேசுவின் இரத்தத்தை பானம் பண்ணாதீர்கள். பெல்ஷாத்சாரின் சம்பவம் தண்டனையை குறிப்பதாக உள்ளது.

C. பாவமன்னிப்பின் பாத்திரம் (மத் 2628):-

"இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற இரத்தமாயிருக்கிறது" பூமிலேயே சிறந்தது மன்னிப்பு என்பார்கள். கிறிஸ்தவத்தின் அடையாளங்களில் மன்னிப்பும் ஒன்றாகும். மன்னிக்கிறவன் மனிதன் என்றும், மன்னித்து மறக்கிறவன மாமனிதன் என்றும் சொல்வார்கள். ஆம், மன்னிப்பு என்பது அப்பழப்பட்ட ஓர் சிறந்த தன்மையாகும். இயேசு கிறிஸ்துவும் கூட சிலுவையில் சொன்ன ஒன்பது முக்கியமான வார்த்தைகளில் மன்னிப்பும் ஒன்றாகும்.

திராட்சரசம் என்னும் இயேசுவின் இரத்தம் உள்ள பாத்திரம் மன்னிப்பின் பாத்திரமாய் மாறினது. மனிதர்களாகிய நாமும் கூட எல்லா சூழ்நிலைகளிலும், எல்லாரையும் மன்னிப்புக்கு ஏற்ற ஒரு சம்பவத்தை வேதம் அழகாய் சொல்கின்றது.

மாய வித்தைக்காரனாகிய சீமோன் என்பவன் பிலிப்பு என்னும் ஊழியக்காரன் மூலம் இரட்சிக்கப்பட்டான், மனம் திரும்பினான், ஞானஸ்நானமும் எடுத்தான் (அப் 8:9ற்24). ஆனால், சில நாட்களுக்குப் பின்பு எருசலேமிலிருந்து ஊழியத்திற்காக சன்னாரியாவிற்கு வந்த பேதுரு சீமோனை பார்த்து கடிந்து கொண்டான். காரணம், சீமோனுக்குள் மகா கொடிய சுபாவங்கள் இன்னும் காணப்பட்டது.

- பணத்தினால் எதையும் சாதிக்க நினைத்தான்.
- நினைவுகள் சரியில்லாதவன்.
- நாசமாய் போக வேண்டியவன்.
- செம்மையான இருதயம் இல்லாதவன்.
- துர்க்குணம் நிறைந்தவன்.
- கசப்பானவன்.
- பாவம் என்னும் கட்டில் அகப்பட்டவன்.

இரட்சிக்கப்பட்டு, மனம் திரும்பி, ஞானஸ்நானம் எடுத்த சீமோ
-னுக்குள் மேற்கண்ட ஏழு பாவங்கள் காணப்பட்டது. ஆனாலும், பேதுரு அவனை சபிக்காமல்"உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்"என்று மன்னிப்புக்கான வழியைக் கற்றுக் கொடுத்தான். இதுதான் ஊழியத்தின் உச்ச கட்டம் என்று சொல்லலாம்.

பாவத்தை மன்னிக்க ஏற்கனவே இயேசு சீஷர்களுக்கு அதிகா
-ரம் கொடுத்திருந்தார் (யோவா 20:23). அந்த மன்னிப்பின் அதி
-காரத்தை பேதுரு சரியாய் பயன்படுத்தி மன்னித்தார்

அன்பானவர்களே, நீங்களும் கூட பாவத்தை மன்னிக்கும் பாத்
-திரமாக மாறுங்கள். உங்களை சுற்றியிருக்கிறவர்களை மன்னி
-யுங்கள். உங்கள் கண்களுக்கு தெரியாத தூரத்தில் இருக்கிற
-வர்களையும் மன்னியுங்கள். அப்படி செய்தால் உங்களுக்காக இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தின் பலன் ஒரு போதும் வீண் போகாது.

C. புது உடன்படிக்கையின் பாத்திரம் (மத் 26:28):-

"இது புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கி
-றது"என்று சொன்னார். உடன்படிக்கை என்றால் மத்தியஸ்தம் பண்ணுதலைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவும் கூட மத்தியஸ்த
-ராயிருந்தார் (எபி 9:15). அவரைக் குறித்த இந்த தீர்க்கதரிச
-னம் அவருடைய பாடுகளின் போதே நிறைவேறினது.

ஏரோது இராஜாவாகவும், பிலாத்து தேசாதிபதியாகவும் இருந்த
-னர். ஆனால், அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பகை
-யாளிகளாக இருந்தனர். பல காலங்கள் பகையாளிகளாக இருந்தவர்கள் இயேசுவை நியாயம் விசாரித்ததின் நிமித்தம் இருவரும் சிநேகிதர்களானார்கள் (லூக் 23:12). ஏரோது என்
-றால் கொலைகாரன் என்றும், பிலாத்து என்றால் கொடூரமா
-னவன் என்றும் அர்த்தமாகும். அப்படியானால், கொலைகார
-னாய் இருந்தவனையும், கொடூரமானவனாய் இருந்தவனையும் ஆண்டவர் சந்தித்ததினால், அவர்களின் பெயரும் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பிடித்தது.

பகைகவர்களாய் இருந்தவர்களை ஆண்டவர் தம்முடைய பாடு
-கள் என்னும் உடன்படிக்கையினால் ஒப்புரவாக்கினார், ஒன்றாக்
-கினார், ஐக்கியமாக்கினார். கிறிஸ்தவர்களுக்கும் இப்படிப்பட்ட மத்தியஸ்தம் பண்ணும் உடன்படிக்கையின் அபிஷேகம் கிரியை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் திராட்சரசமாகிய இயேசுவின் இரத்தம் நிறைந்த பாத்திரம் முழுமையடையும். கிறிஸ்துவின் பாடுகளும் வீண் போகாது.

கானவூர் கல்யாணத்தில் திராட்சரசம் குறைவுபட்டது அனை
-வரும் அறிந்ததே. ஆனால், அந்த கல்யாணத்தில் ஆறு கற்
-ஜாடிகளுக்கு இணையாக ஆறு வகையான திராட்சரசம் சொல்லப்பட்டுள்ளது.

1. யோவா 2:3 குறைவுபட்ட திராட்சரசம்
2. யோவா 2:3 இல்லாத திராட்சரசம்
3. யோவா 2:9 வந்த திராட்சரசம்
4. யோவா 2:9 மாறின திராட்சரசம்
5. யோவா 2:10 திருப்தியின் திராட்சரசம்
6. யோவா 2:10 நல்ல ரசம்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

II. காடி

"கசப்புக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார் -கள். அவர் அதை ருசி பார்த்து குடிக்க மனதில்லாதிருந்தார்" (மத்27:34).

இயேசு சிலுவையில் சொன்ன கிருபையுள்ள ஏழு வார்த்தைக -ளில் ஒன்றான தாகமாயிருக்கிறேன் என்ற தலைப்பில் பேசுகிற -யாரானாலும், காடியைக் குறித்து பேசாமல் பிரசங்கத்தை முடிப் -பதில்லை. அந்த அளவுக்கு காடி என்பது இயேசுவைத் தொட்ட பொருட்களில் முக்கியப் பொருளாக மாறிவிட்டது. பழைய ஏற்பாட்டி -லும், புதிய ஏற்பாட்டிலும் பாகுபாடு இல்லாமல் ஆண்களும், பெண்களும் காடியைப் பயன்படுத்தியள்ளனர். காடி என்றால் கசப்பு என்று அர்த்தம் (மத் 27:34).

காடி என்பது ஒரு வகையில் கசப்பையும் மரணத்தையும் குறிக் -கும். "மரணத்தின் கசப்பு அற்றுப்போனது நிச்சயம்" (Iசாமு 15:32) என்ற தீர்க்கதரிசனமான வார்த்தை உங்கள் வாழ் -வில் நிறைவேறும் படியாக சாவுக்கேதுவான மரண கட்டுகளிலி -ருந்து உங்களை விடுவித்து, உயிருள்ள சாட்சியாக நிலை நிறுத்தி, உங்கள் மூலம் அவருடைய நாமம் மகிமைபடத்தக்கதான சூழ்நிலைகளை உண்டாக்கப் போகின்றார். இதை விசுவாசியுங்கள். விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் அற்புதத்தை எதிர்பாருங்கள். காடியின் கசப்பு மாறும்.

காடி என்பது மிகப்பெரிய வேதபாடத்தை உள்ளடக்கியதாகும். ஆனாலும், இயேசுவுக்கு பயன்படுத்தக்பட்டக் காடியைக் குறித்த சில சத்தியங்களையம், புதிய காரியங்களையும் சத்திய வசன வெளிச்சத்தோடு கூட தியானித்து ஆராய்ச்சி செய்வோம்.

D. காடியில் முக்கியமாக ஆறு வகைகள் உண்டு:-

1. எண் 6:3 திராட்சை ரசம் கலந்த காடி
2. ரூத் 2:14 உணவுடன் சேர்த்து சாப்பிடும் காடி
3. மத் 27:34 கசப்பு கலந்த காடி
4. சங். 69:21 தாகத்துக்குக் குடிக்க கொடுக்கும் காடி
5. எண் 6:3 மதுபாணம் கலந்த காடி
6. நீதி 25:20 வெடித்த புண்ணுக்கு மேல் ஊற்றக்கூடிய காடி

E. கேள்வியும் – பதிலும்:-

a. காடியைக் குடித்தால் எப்படி இருக்கும்?
நீதி 10:26 பற்கள் மரமரத்துப் போகும் கண்களுக்கு புகை மூட்டம் போலக் காணப்படும்

b. இயேசுவுக்குக் காடி கொடுக்க காரணம் என்ன?
சங் 69:21 தீர்க்கதரிசனம் நிறைவேறவேண்டியிருந்தது இயே -சுவின் தாகத்தினிமித்தம் கொடுக்கப்பட்டது

c. மத் 27:34 சொல்வதுபோல இயேசு ஏன் காடியைக் குடிக்கவில்லை?
எண் 6:3,4 நசரேயனாய் இருக்க விரும்புகிறவர்கள் காடியை குடிக்க விரும்ப மாட்டார்கள்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

F. இயேசுவுக்கு மூன்றுமுறை காடி கொடுக்கப்பட்டதாக வேத வசனங்கள் தெளிவாக கூறுகின்றன:—

i. மாற் 15:23,24 – இயேசுவை சிலுவையில் அறைவதற்கு முன்பாக காடி கொடுக்கப்பட்டது.

a) திராட்சை ரசத்தில் வெள்ளைப்போளம் கலந்தது.

b) இது வலியை மறப்பதற்காக கொடுக்கப்பட்டது.

ii. லூக் 23:35,36 - இயேசுவை சிலுவையில் அறைந்த பின்பு, மத்தியான நேரத்திற்கு முன்பாக கொடுக்கப்பட்டது.

a) ஏழு வார்த்தைகளில் ஒன்றாவது வார்த்தைக்கும் இரண்–டாவது வார்த்தைக்கும் இடைப்பட்ட சமயத்தில் கொடுக்கப்பட்டது.

b) இதன் பின்புதான் பகல் 12 மணி முதல் 3 மணி வரை அந்தகாரம் உண்டானது.

iii. யோவா 19:28,29,30 ; மாற் 15:36 - ஐந்தாவது வார்த்தை சொல்லி முடித்ததும் கொடுக்கப்பட்ட காடி:-

a) இது கடற்காளானில் தோய்த்து, ஈசோப்பு என்னும் தண்டில் மாட்டி கொடுக்கப்பட்டதாகும்.

இந்த செய்தியை வாசிக்கும் எனக்கன்பான தேவ ஜனமே, உங்களுக்காகவும், எனக்காகவும் சிலுவையில் தொங்கி காடியை ருசி பார்த்த இயேசு உங்கள் வாழ்க்கையில் உண்டாகும் அனைத்து விதமான காடியைப் போன்ற கசப்பான சூழ்நிலைக–ளையும் மதுரமாக மாற்றுவார். "கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாயிருக்கும்" (நீதி27:7) என்ற அற்புதமான வாக்குத்தத்–தத்தை உங்களில் நிறைவேற்றுவார். நீங்கள் கலங்காதீர்கள்.

G. காடியோடு கூட சம்மந்தப்பட்டவர்கள்:—

எண் 6:3	a) விரதம் பண்ணிக் கொண்டவர்கள்
	b) நசரேய பொருத்தனை பண்ணினவர்கள்
சங் 69:20,21	c) இருதயம் பிளந்தவர்கள்
	d) தாகமெடுத்தவர்கள்
நீதி 25:20	e) மன துக்கமுள்ளவர்கள்
மத் 27:34	f) இயேசுகிறிஸ்து
லூக் 23:36	g) போர்ச்சேவகர்கள்
நீதி 10:26	h) சோம்பேறி
மத் 27:48	i) அவர்களில் ஒருவன்
ரூத் 2:14	j) போவாஸ்
ரூத் 2:14	k) ரூத்
மாற் 15:36	l) இயேசுவை எலியா என்று சொன்னவன்

H. புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள சில காடிகள்:—

a. மத் 27:34	கசப்புக் கலந்த காடி
b. மத் 27:48	கடற்காளானில் தோய்த்தெடுத்த காடி
c. லூக் 23:36	போர்ச்சேவகர்கள் கொடுத்த காடி
d. யோவா 19:29	பாத்திரம் நிறைந்த காடி
e. யோவா 19:30	இயேசு வாங்கின காடி
f. மாற் 15:36	கோலில் மாட்டின காடி

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXXXVI. அப்பம் தாலம் இராபோஜனம்:—

I. அப்பம்:—

"அவர்களோடே அவர் பந்தியிருக்கையில், அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்" (லூக் 24:30).

ஜீவனுள்ள தேவன் தம்முடைய கிருபையுள்ளக் கரத்தினால் நேரடியாகத் தொட்டவைகளில் அப்பமும் ஒன்றாகும். மற்ற எல்லா—வற்றையும் விட அப்பத்துக்கு விசேஷ இடம் வேதத்தில் உண்டு. அப்பம் என்றால் பழைய ஏற்பாட்டில் இருதயத்தைத் திடப்படுத்துதல் என்றும், புதிய ஏற்பாட்டில் ஜீவனையும் குறிக்கும் (ஆதி 18:5; யோவா6:51). இன்னொரு வகையில் அப்பம் என்றால் அது நேர—டியாக இயேசுவைக் குறிக்கும்.

புதிய ஏற்பாட்டில் அநேக விதமான அப்பங்களைக் குறித்து சொல்லப்பட்டிருந்தாலும், இயேசுவோடு தொடர்புடைய சில அப்பங்—களை குறித்து, தேவ கிருபையினால் கவனிக்க போகின்றோம். அதிலும் விசேஷமாக 1,5,7,12 என்ற குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள—வைகளை கவனிப்போம்.

A. ஒரு அப்பம்:—

"படவிலே அவர்களிடத்தில் ஒரு அப்பம் மாத்திரம் இருந்தது" (மாற் 8:14). தேவன் என்பவர் ஒருவர்தான். அதுபோல இங்கு நாம் பார்க்கும் அப்பமும் ஒன்றுதான். ஒரு அப்பம் என்றால் "அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெருகிறபடியினால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்" (Iகொரி 10:17)என்ற சத்திய வசனத்தின்படி ஒரே சரீரத்தை குறிக்—கின்ற தாய் உள்ளது. அநேகராய் இருப்பவர்களை ஒரே ஐக்கியத்—தில் கொண்டு வருவது தேவனுக்கு பிரியமானது ஆகும். ஆன—படியினால், ஒரு அப்பம் என்பது, ஒரே சரீரத்தையும் ஐக்கியத்—தையும் தெளிவாய் வெளிப்படுத்துகின்றது.

நீங்களும் ஒரே சரீரமான கிறிஸ்துவோடு கூட ஐக்கியப்படுங்—கள். பூமியில் பலராக இருந்தாலும் இயேசு என்கிற ஆண்டவர் எப்படி ஒருவரோ, அதே போல பரலோகமும் ஒன்று தான். அந்த ஒரே பரலோகத்திற்குள் போக முயற்சியுங்கள். ஐக்கியப்படுங்கள். அன்பின் அப்பமாக மாறுங்கள்.

B. ஐந்து அப்பங்கள்:—

"அதற்கு அவர்கள்: எங்களிடத்தில் ஐந்து அப்பங்களுண்டு என்றார்கள்" (லூக் 9:13). ஐந்து என்பது வேதம் முழுதும் நிறைந்து காணப்படும் எண்ணாகும். ஆனால், இயேசு தொட்ட அப்பங்களில் ஐந்து அப்பமும் ஒன்றாகும். ஐந்து அப்பம் என்றால் உணர்வு என்று அர்த்தமாகும் (மத்16:9). கிறிஸ்துவை சார்ந்த ஒவ்வொரு தேவ பிள்ளைக்குள்ளும் ஐந்து விதமான உணர்வுகள் கட்டாயம் காணப்பட வேண்டும். அவைகளை யோபுவின் புஸ்தகம் அழகாய் வரிசைப்படுத்திக் காண்பிக்கின்றது.

1) யோபு 13:23 பாவத்தைகக் குறித்த உணர்வு வேண்டும்.
2) யோபு 20:3 ஆவியிலே உணர்வு வேண்டும்.
3) யோபு 21:22 நியாயம் தீர்க்கின்றதேவனைக் குறித்த உணர்வு வேண்டும்.
4) யோபு 23:5 தேவன் சொல்வதைக் கேட்கும் உணர்வு வேண்டும்.
5) யோபு 34:16 வார்த்தைக்கு செவி கொடுக்கும் உணர்வு வேண்டும்.

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

உணர்வில்லாதவர்கள் கிறிஸ்தவர்களே கிடையாது. ஐந்து அப்பங்களுக்கும், மேற்கண்ட உணர்வுகளுக்கும் அநேக தொடர்பு உண்டு. நீங்கள் நான்கு சுவிசேஷங்களையும் நன்றாய் வாசித்து பார்த்தால், சீஷர்கள் பலரும் பல காரியத்தில் உணர்வற்றவர்களாகவே இருந்துள்ளனர்.

நீங்களும் சீஷர்களைப் போல் ஆகாமல், ஐந்து அப்பங்களாய் மாறுங்கள். உணர்வுள்ளவர்களாய் வாழுங்கள். இயேசுவின் ஐந்து பெரும் காயங்களால் உண்டாகும் சுகம், பெலன், ஆரோக்கியம், கிருபை, மகிமை ஆகிய ஐந்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

C. ஏழு அப்பங்கள்:—

"அந்த ஏழு அப்பங்களையும், எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்தில் கொடுத்தார்" (மத் 15:36). ஏழு அப்பங்களை எடுத்து அவருடையக் கைகளில் கொடுத்ததும் ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டார் என்று வேதம் விளக்கம் கொடுக்கின்றது. ஏழு அப்பம் என்றால் பிக்கப்படுகின்ற அனுபவம் என்பதை இது காண்பிக்கின்றது.

ஏழு என்றாலே நிறைவு, பூரணம், சம்பூரணம் என்று கேட்டு கேட்டு ஜனங்கள் அதிலேயே பழகிப் போய் விட்டனர். ஏழு அப்பத்தைப் போல நாம் என்றைக்கு பிட்கப்படுகின்றோமோ, அப்போது தான் நாம் மற்றவர்களுக்கும், மற்றவர்கள் நமக்கும் பிரயோஜனம் உள்ளவர்களாய் மாறமுடியும்.

ஏழு அப்பங்களை பிட்டபடியினால்தான் 4000 பேருக்குப் பங்கிட்டார்கள் என்று வசனம் அழகாய் விவரிக்கின்றது (மாற் 8:20). நமக்குள் தேவன் வைத்திருக்கிறகிருபை, அபிஷேகம், தாலந்து, வரம், வல்லமை, இவைகளை நாம் பங்கிட வேண்டும். அப்படி தனக்குள் இருக்கும் ஏழு அப்பங்களுக்கு ஒப்பானதை பங்கிடுகிற சீஷர்களைத்தான் தன்னோடு வைத்திருந்தார். எனக்கு வேண்டும், எங்களுக்கு மட்டும் தான் வேண்டும் என்கின்றவர்களை தேவன் முற்றிலுமாய் புறம்பே தள்ளிப் போடுவார்.

இயேசுவின் கைகளில் உள்ள ஸ்தோத்தரிக்கப்பட்ட ஏழு அப்பங்களாய் உங்களை ஒப்புக் கொடுக்கும் போது தேவன் உங்களை 4000—மிரமாக மாற்றி, IIநாளா 23:5—ல் சொல்லப்பட்டுள்ளதைப் போல கர்த்தரைத் துதிக்கின்றகூட்டத்தில் கொண்டு போய் வைத்து உங்களை மகிமைப்படுத்துவார், ஏழு அப்பங்களை தொட்ட ஆண்டவர் உங்களையும், உங்கள் வீட்டில் உங்கள யாவரையும் தொடுவார்.

D. 12 துண்டுகளான அப்பம்:—

"இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்" (மாற்14:22).

இராப்போஜன பந்தியிருக்கும் போது, இயேசுவும் 12 சீஷர்களும் மேல் அறையில் கூடியிருந்தனர். அது கம்பளம் முதலாய் விரிக்கப்பட்டிருந்த நேர்த்தியான அறையாகும். அவர்களுக்கு மத்தியில் இருந்தது ஒரே ஒரு அப்பம் தான். அதுவும் நினைவு கூறுதலுக்காக வைக்கப்பட்டிருந்தது (லூக் 22:19). அந்த ஒரு அப்பத்தை தான் இயேசு பிட்டார்.

சீஷர்களிடம் கொடுத்து 12 பேரையும் பிட்டு சாப்பிட சொன்னார். அப்படியானால் இது எதைக் குறிக்கின்றது? அகியா என்னும் தீர்க்கதரிசி புது சால்வையை 12 துண்டுளாக கிழித்துப் போட்டான் (Iநாளா 11:30). அகியாவும் ஓர் தீர்க்கதரிசி, இயேசு ஓர் தீர்க்கத–ரிசி. அகியா புது சால்வையை 12 துண்டுகளாக கிழித்த பின்பு சாலமோனின் இராஜ்ய பாரமும், அழுகையும் தேவனால் தள்ளப்–பட்டு, கிழிக்கப்பட்டதைப் போல மாறிற்று.

அதுபோல, இயேசு அப்பத்தை 12 துண்டுகளாக பிட்ட பின்பு இயேசுவும் சீஷர்களுமாய் இருந்த ஐக்கியம் கிழிக்கப்பட்டு போனது. சீஷர்கள் எங்கும் சிதறிப் போனார்கள் (அப்8:1). "அப்படியே கர்த்–தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப் போகப் பண்ணினார்" (ஆதி 11:8)என்றவசனம் நிறைவேறினது. அதனால் தான் தோமா என்றசீஷர் இந்தியாவுக்கு வந்தார்.

அகியா புது சால்வையைக் கிழித்து 10 துண்டுகளை யெரொ–பெயாம் என்பவனுக்கு கொடுத்து உன் மனவிருப்பத்தின்படி ஆண்டு கொண்டு என்று சொன்னான்(Iஇரா11:31,37). அதுபோலவே யூதர் கள் அவர்களின் மனவிருப்பத்தின்படியெல்லாம் இயேசுவுக்குச் செய்து, அவருடைய சரீரத்தில் 10 பகுதிகளை காயப்படுத்தினார்.

1) கண்கள் கட்டப்பட்டது.
2) கன்னத்தில் அறையப்பட்டது.
3) வாயில் காடி கொடுக்கப்பட்டது.
4) தாடை மயிர் பிடுங்கப்பட்டது.
5) முகம் துணியால் மூடப்பட்டது.
6) கைகளில் ஆணி அடிக்கப்பட்டது.
7) முதுகு காயப்பட்டது.
8) விலாவில் ஈட்டியால் குத்தப்பட்டது.
9) கால்களில் ஆணிகள் அடிக்கப்பட்டது.
10) உடல் சேலையால் கட்டப்பட்டது.

எனக்கன்பான சகோதரர்களே, சகோதரிகளே, இயேசு தொட்–டதான 1,5,7,12 என்கிறஅப்பங்களைக் குறித்து வித்தியாசமான முறையிலும், ஆழமான சத்தியத்திலும் ஆண்டவர் உங்களை கொண்டு போயிருப்பார் என்று விசுவாசிக்கிறேன்.

இப்படியெல்லாம் பல பாடுகளைபட்டு, தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதல்களுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தபடியினால் தான் இயேசு தைரியமாய் சொன்னார்: "இந்த அப்பத்தைப் புசிக்–கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" (யோவா6:58) என்–றார். ஆனபடியினால், இயேசு உங்களையும் அவருடைய ஜீவ அப்பமாக மாற்றி பிழைக்கச் செய்வார். நீங்கள் பூமியில் சத்திய வசனத்தினால் பிழைத்து, பின்பு பரலோகத்திலும் போய் இயேசு–வோடு சேர்ந்து பிழைக்க கர்த்தர் கிருபை செய்வார்.

E. உதாரணமாய் சொல்லப்பட்ட சில அப்பங்கள்:–

1)	சங் 37:25	நீதிமானின் அப்பம்
2)	சங் 78:25	தூதர்களின் அப்பம்
3)	நீதி 9:17	அந்தரங்கத்தில் புசிக்கும் அப்பம்
4)	யோவா 4:4	பிள்ளைகள் கேட்கும் அப்பம்
5)	மத் 26:26	இயேசு ஆசீர்வதித்த அப்பம்
6)	மாற் 14:22	சரீரமாகிய அப்பம்
7)	லூக் 22:19	நினைவு கூறுதலின் அப்பம்
8)	யோவா 6:31	புசிக்க கொடுத்த அப்பம்
9)	யோவா 6:33	ஜீவனைக் கொடுக்கிறஅப்பம்
10)	யோவா 21:9	சூடான அப்பம்

எக்ஸ்கியூட்டிவ் டைரி

F. இயேசு பயன்படுத்திய அப்பம்:

யோவா 6:11 இயேசு அந்த அப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி சீஷர்களிடம் கொடுத்தார்.

முக்கியமானவைகளும் அர்த்தங்களும் (யோவா 6:7-14):-

1. பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா
(என்றால்)
யோவா 1:40 இயேசுவுக்குப் பின் செல்பவன்.

2. அப்பம் கொண்டு வந்தபையன்
(என்றால்)
ஏசா. 11:6 ஒருமித்து வாழ்வதைக் குறிக்கின்றான்

3. வாற்கோதுமையினால் செய்த அப்பம்.
(என்றால்)
லேவி. 27:16 பரிசுத்தமான காணிக்கை

4. 5000 பேர் சாப்பிட்டார்கள்
(என்றால்)
யோசு. 8:12 பிரித்தெடுக்கப்பட்டவர்கள்

5. மீத துணிக்கைகள்
(என்றால்)
யோவா 6:12 திருப்தியைக் குறிக்கும்

6. 12 கூடைகள்.
(என்றால்)
உபா. 28:5 ஆசீர்வாதத்தைக் குறிக்கும்

மு.வ: யோவா 6:58 இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.

G. இயேசு என்கிற அப்பம் (யோவா 6:58):-

1. மத் 26:26 இயேசு ஆசீர்வதித்த அப்பம்:

லூக் 9:17 ஆசீர்வதித்த அப்பம் 12 கூடைகளை ஆக மாறினது.

உபா. 28:5 கூடை (எ) ஆசீர்வாதம்

உ.ம்: 2கொரி 11:33 பவுல் கூடையின் மூலம் தான் உயிர் தப்பினான்

2. மத் 26:26 இயேசுவின் சரீரமாகிய அப்பம்:

சரீரமாகிய அப்பம் என்றால் என்ன?

யோவா. 2:21 சரீரம் (எ) ஆலயம்

யோவா. 2:19 இயேசு என்னும் சரீரமாகிய ஆலயத்தில் மூன்று நாட்களாக பலவி-தமான பாடுகளினால் இடித்து (கொன்று) போட்டார்கள்.

விளைவு

எபி. 12:2 பிதாவின் சிங்காசனத்தின் வலது பக்கத்-தில் வீற்றிருக்கிறார்.

நமக்கு என்ன பலன்?

கொலோ. 3:1 நாமும் மேலான இடத்தினில் வீற்றிருப்போம்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

II. தாலம்:—

"அவர் பிரதியுத்தரமாக: என்னுடனே கூடத் தாலத்தில் கையிடுகிறவனாகிய பன்னிருவரிலொருவனே அவன்" (மாற் 14:20).

தன் கையை நீட்டி இயேசு எடுத்த பாத்திரங்களில் தாலம் என்ற பாத்திரமும் ஒன்று. தாலம் என்றால் கவிழ்த்துப் போடுதல் என்று அர்த்தமாகும் (IIஇராஜா21:13). இயேசுவின் ஊழிய சரித்திரமும் கல்வாரி என்னும் பாடுகளினால் கவிழ்த்து போடப்பட இந்த தாலம் என்ற பாத்திரமும் ஓர் அடையாளச் சின்னமாக மாறிவிட்டது.

இயேசு தம்முடைய கடைசி இராப்போஜன பந்தியில் இருக்கும் போது இந்த தாலம் என்ற பாத்திரம் அவருடைய கைகளில் தவழ்ந்தது. தாலம் என்ற பாத்திரம் அவருடைய கைகளில் தவழ்ந்தது. தாலத்தை எப்போது தன் கைகளில் எடுத்தாரோ அதன் பின்பு நடந்த சம்பவங்கள் வித்தியாசமானதாக அமைந்தது.

H. மத் 26:21–28

1) உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்று துக்க செய்தியை அறிவித்தார்.
2) அவர்கள் (சீஷர்கள்) துக்கமடைந்தனர்.
3) மனுஷகுமாரன் போகிறார் என்ற விரக்தியின் வார்த்தை இயேசுவால் உண்டானது.
4) காட்டிக் கொடுக்கப்படுகிறமனுஷனுக்கு ஐயோ என்ற சாபம் அங்கு கூறப்பட்டது.
5) காட்டிக் கொடுக்கிறவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும் என்று இயேசு ஏங்கினார்.
6) "நீ சொன்னபடிதான்" என்று சொல்லி யூதாஸ் குற்றவாளி என்பதை வெளிப்படுத்தினார்.

தாலம் என்ற பாத்திரம் யூதாசுக்காகவே உருவாக்கப்பட்டது போல சூழ்நிலை மாறிவிட்டது. அருமையானவர்களே நீங்கள் எந்தவிதமான பாத்திரமாய் இருக்கின்றீர்கள் என்று யோசித்துப் பாருங்கள். திராட்சை ரசம் இருந்த பாத்திரம் அனைவருக்கும் இரத்தம் என்ற உடன்படிக்கையைக் கொடுத்தது.

ஆனால், அப்பம் வைக்கப்பட்ட தாலமோ, யூதாசுக்கு சாபத்தையும், இயேசுவுக்கு சிலுவையையும் கொண்டு வந்தது. தாலம் என்ற பாத்திரத்தைக் குறித்து யாரும் அதிகமாக யோசிப்பதோ, தியானிப்பதோ கிடையாது. அதே சமயம் இந்த தாலம் மௌனமாக மறைந்திருந்தே தன் கிரியையை நிறைவேற்றி விட்டது. உங்களுக்குள்ளே மறைந்திருக்கும் சில சுபாவங்கள் தாலத்தை போல உங்களுக்கு சாபத்தை கொண்டு வந்து விடக் கூடாது. மிகவும் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருங்கள்.

இயேசு சொன்னார்! "என்னோடே கூடத் தாலத்தில் கையிடுகிறவனே"என்றார் (மத்26:23). ஆம், நீங்கள் கையிடுகிறதாலம், அதாவது நீங்கள் கையிட்டு செய்யும் வேலைகள், தலையிடும் காரியங்கள் எப்படிப்பட்டது என்று ஆராய்ந்து பார்த்து ஜாக்கிரதையாய் இருங்கள் யூதாஸ் தான் கையிட்ட தாலமே அவனை குற்றவாளி என்று காட்டி கொடுத்து விட்டது. இதைபோல் நீங்களும் சிக்கிக் கொள்ளக் கூடாது.

I. இரண்டுவித தாலங்கள்:—

வேதத்தில் பலவிதமான தாலங்களைக் குறித்து சொல்லப்பட்டிருந்தாலும் அவைகளை இரண்டாக பிரிக்கலாம். ஒன்று: பாவம் என்கிறதாலம். இரண்டு: காணிக்கை என்கின்றதாலம்.

பாவம் என்கிற தாலம் யோவான் ஸ்நானகனின் தலையை வாங்கினது. யூதாஸின் உயிரை பறித்தது. காணிக்கை என்ற தாலமோ, பலிபீடத்தை லங்கரித்தது. தேவனுக்கும், ஊழியத்திற்கும் பிரியமான காணிக்கைகளை கொண்டு வந்தது. தேவாலயத்தில் இருந்த பணிமுட்டுகளில் இதுவும் ஒன்றாக கருதப்பட்டது. அதனால் பரிசுத்தமும் அடைந்தது.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

J. உவமையாய் வர்ணிக்கப்பட்டுள்ள சில தாலங்கள்:—

1) எண் 7:13 நிறையுள்ள தாலம்
2) எண் 7:19 130 சேக்கலுள்ள தாலம்
3) எண் 7:84 பிரதிஷ்டை செய்யப்பட்ட தாலம்
4) எண் 7:85 பரிசுத்த ஸ்தலத்தின் தாலம்
5) 2இரா 21:13 துடைக்கப்பட்ட தாலம்
6) எஸ்றா 1:9 வெள்ளித் தாலம்
7) மத்14:11 யோவானின் தலையை வாங்கின தாலம்
8) மத் 26:23 யூதாசை காட்டிக் கொடுத்த தாலம்

III. இராபோஜனம்:—

இயேசுவின் பாடுகளின் அடையாளங்களில் போஜனமும் ஒன்று. சிலுவையில் அறையபடப் போகும் முன்பாக அவர் போஜனம் பண்ணும்படி உட்கார்ந்தார் என்று வேதம் விவரிக்கின்றது. இதை பந்தி என்றும், இராப்போஜனம் என்றும், இராவிருந்து என்றும், போஜனப்பந்தி என்றும வேதம் அழைக்கிறது. விசுவாச மக்கள் இதைத்தான் திருவிருந்து என்று சொல்கின்றனர். ஆனால், திருவிருந்து என்றவார்த்தை தமிழ் வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. போஜனம் என்றாலே தேவனுடைய கிரியையை முடிப்பது என்று அர்த்தம் (யோவா 4:34). இப்படி பல நுணுக்கங்களும், சத்தியம் நிறைந்ததும், இயேசு தொட்டதுமான போஜனத்தின் பல மறைபொருட்களைக் குறித்துக் காண்போம்.

K. இராப்போஜன பந்தியில் இருந்தவைகள்:—

1. மத் 26:26 அப்பம்
வி.ம் 1கொரி 11:24 அப்பம் (எல்) இயேசுவின் சரீரம்

2. மத் 26:29 திராட்சைப்பழரசம்
வி.ம்: மாற் 14:25 திராட்சைபழரசம் (எல்) நவமான ரசம்

3. மத் 26:23 தாலம் (அப்பத்தட்டு)
வி.ம்: 2இரா 21:13 தாலம் (எல்) துடைக்கப்படுதல் (அ) கவிழ்க்கப்படுதல்

4. மத் 26:27 பாத்திரம்
வி.ம்: லூக் 22:20 பாத்திரம் (எல்) புதிய உடன்படிக்கை

5. யோவா 13:26 துணிக்கை
வி.ம்: லூக் 9:17 துணிக்கை (எல்) சாப்பிட்ட திருப்தி

6. மாற் 14:15 கம்பளம்
வி.ம்: எசே 27:20 மேன்மையானதர்க்கு ஒப்பானது

7. லூக் 22:17 ஸ்தோத்திரம்
வி.ம்: எபே 1:16 ஸ்தோத்திரம் (எல்) ஜெபங்களில் நினைத்து

8. மத் 26:30 ஸ்தோத்திரப்பாட்டு
வி.ம்: நெகே 11:17 ஸ்தோத்திரப்பாட்டு (எல்) ஜெபத்தைத் துவங்குதல்

9. யோவா 13:5 தண்ணீர் பாத்திரம்
வி.ம்: யோவா 13:10 முழுவதும் சுத்தமாகுதல்

10. யோவா 13:4 சீலை
வி.ம்: யோவா 13:5 சீலை (எல்) துடைத்து விடுதல்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

L. இயேசுவும் சீஷர்களும் இராப்போஜன பந்தியிலிருக்கும் போது நடந்தவைகள்:—

1. மத் 26:21 காட்டிகொடுப்பான் என்று யூதாசை குறித்த தீர்க்கதரிசனம் உண்டானது

வி.ம்: யோவா 13:21 காட்டிக்கொடுத்தல் (எல்) ஆவியைக் கலங்கப்பண்ணுதல்

2. மத் 26:24 யூதாசுக்கு ஐயோ என்கிற சாபம் கூறப்பட்டது

வி.ம்: யூதா 1:11 ஐயோ (எல்) கெட்டுப்போகுதல்

3. யோவா 13:18 என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலை தூக்கினான் என்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் நினைவு கூறப்பட்டது

வி.ம்: சங் 41:9 குதிகாலை தூக்குதல் (எல்) நம்பினவனே துரோ–கம் பண்ணுதல்

4. யோவா 13:11 சீஷர்களில் சுத்தமில்லாத சீஷனும் ஒருவன் இருக்கிறான் என்கிற வெளிப்பாடு உண்டானது

வி.ம்: 2நாளா 30:17 சுத்தமில்லாதவன் (எல்) பரிசுத்தம் பண்ணிக் கொள்ளாதவன்

5. யோவா 13:27 யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்

வி.ம்: 1நாளா 21:1 சாத்தான் புகுதல் (எல்) விரோதமா எழும்புதல்

6. யோவா 13:27 நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்கிற கட்டளை யூதாசுக்கு இடப்பட்டது

வி.ம்: ரோம 9:28 சீக்கிரமாய்ச் செய் (எல்) விரைவாக காரியத்தை நிறைவேற்றுதல்

7. லூக் 22:24 சீஷர்களுக்குள் வாக்குவாதம் உண்டானது

வி.ம்: 1கொரி 3:3வாக்குவாதம் (எல்) மனுஷமார்க்கமாய் நடக்குதல்

8. லூக் 22:34 பேதுரு மூன்றுதரம் இயேசுவை மறுதலிப்–பான் என்று தீர்க்கதரிசனம் கூறப்பட்டது

வி.ம்: எபி 6:6 மறுதலித்தல் (எல்) தேவகுமாரனை அவமானப்–படுத்துதல்

9. யோவா 13:21 இயேசுவுக்கு ஆவியில் கலக்கம் உண்டானது

வி.ம்: யோவா 14:26 கலக்கம் (எல்) ஆவேசம்

10. மத் 26:22 சீஷர்களுக்கு மிகவும் துக்கம் உண்டானது

வி.ம்: ஏசா 53:3 துக்கம் (எல்) பாடு அநுபவித்தல்

11. யோவா 13:5 சீஷர்களின் கால்களை இயேசு கழுவினார்

வி.ம்: 1சாமு 25:41 கால்களைக் கழுவுதல் (எல்) பணிவிடை செய்தல்

12. லூக் 22:15 தன்னுடைய ஆசையை இயேசு வெளிப்படுத்தினார்

வி.ம்: சங் 63:2 மிகவும் ஆசை (என்பது) பரிசுத்த ஸ்தலத்தை குறித்த ஆசை

13. யோவா 21:20 அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் இயேசுவின் மார்பினில் சாய்ந்தான்

வி.ம்: எண் 11:12 மார்பினில் சாய்தல் (எல்) அணைத்துக் கொள்ளுதல்

14. மத் 26:26 அப்பம் ஆசீர்வதிக்கப்பட்டது

வி.ம்: யோவா 6:51 அப்பம் (எல்) உலகத்தின ஜீவனுக்கானது

15. மத் 26:27 ஸ்தோத்திரம பண்ணப்பட்டது

வி.ம்: 2கொரி 2:14 ஸ்தோத்திரம் (எ) வெற்றி சிறக்கப்பண்ணுதல்

16. யோவா 13:30 இராக்காலம் உண்டானது

வி.ம்: யோவா 9:4 இராக்காலம் (எல்) ஒரு கிரியையும் செய்யக் கூடாத நேரம்

17. யோவா 13:30 மனுஷகுமாரனும், தேவனும் (பிதாவும்) மகிமைப்பட்டனர்

வி.ம்: ஏசா 44:23 மகிமைப்படுதல் (எல்) பாடுதல், ஆர்பரித்தல், முழங்குதல், மகிமையடைதல்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

O. பழைய ஏற்பாட்டு போஜன வகைகள்:—

1. ஆகா 2:11 அப்பம், சாதம், திராட்சைரசம், எண்ணெய்

2. 1இரா 19:6 சுடப்பட்ட அடை
வி.ம்: 1சாமு 30:12 அடை (எல்) திரும்ப கிடைக்கும் உயிர்

3. 1சாமு 9:24 முன்னந்தொடை
வி.ம்: யாத் 29:27 முன்னந்தொடை (எல்) பரிசுத்தப்படுத்தப்பட்டது

4. யோபு 36:16 கொழுமையான பதார்த்தங்கள்
வி.ம்: ஆதி 27:7 பதார்த்தங்கள் (எல்) ருசியுள்ளது
(அ) சமைக்கப்பட்டது

5. 1இரா 19:6 பாத்திரத்தில் தண்ணீர்
வி.ம்: மாற் 9:41 தண்ணீர் (எல்) கிறிஸ்துவினால் கிடைக்கும் பலன்

P. புதிய ஏற்பாட்டு போஜன வகைகள்:—

1. லூக் 17:8 சாப்பாடு
வி.ம்: லூக் 15:17 பூர்த்தியான ஆகாரம்

2. யோவா 6:9 வாற்கோதுமை அப்பங்கள்
வி.ம்: ரூத் 3:17 வாற்கோதுமை (எல்) கர்த்தர் தெரிந்து கொண்டது

3. லூக் 24:42 பொரித்த மீன்கள்
வி.ம்: உபா 16:7 பொரித்தது (எல்) கர்த்தர் தெரிந்து கொண்டது

4. ரோம 14:20 பதார்த்தங்கள்
வி.ம் எரே 51:34 பதார்த்தம் (எல்) சுவையுள்ளவைகள்

5. கொலோ 2:16 பானம்
வி.ம்: யோவா 6:54 பானம் (எல்) நித்தியஜீவனுக்கு ஒப்பானது

6. லூக் 24:42 தேன்கூட்டுத் துணிக்கை
வி.ம்: சங் 19:10 தேன்கூட்டுத் துணிக்கை (எல்) மதுரமுள்ளது

7. மத் 26:7 பரிமளத்தைலம்
வி.ம்: யோவா 12:3 பரிமளம் (எல்) களங்கமில்லாதது

Q. இயேசுவோடு கூட பொதுவான போஜனம் பண்ணினவர்கள்:—

1. மத் 9:10 ஆயக்காரர், பாவிகள்
2. யோவா 21:15 யோனாவின் குமாரனாகிய சீமோன் என்ற பேதுரு
3. லூக் 7:36 பரிசேயரில் ஒருவன்
4. மத் 26:7 ஒரு ஸ்திரீ
5. மாற் 14:3 குஷ்டரோகியாயிருந்த சீமோன்
6. லூக் 14:15 பந்தியிருந்தவர்களில் ஒருவன்
7. வெளி 3:20 கதவைத் திறப்பவன்
8. மாற் 14:1 பரிசேயரின் தலைவன்
9. யோவா 21:20 அன்பாயிருந்த சீஷன்
10. மாற் 14:17,18 சீஷர்கள் 12 பேர்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

R. புதிய ஏற்பாட்டில் சில போஜனக் குறிப்புகள்:-

1. மத் 25:42 பசிக்கு கொடுக்காத போஜனம்
2. மத் 25:35 பசிக்கு கொடுத்த போஜனம்
3. 1கொரி 10:21 பேய்களின் போஜனப் பந்தி
4. அப் 11:3 வாக்குவாத போஜனம்
5. மாற்; 14:3 குஷ்டரோகியாயிருந்த வீட்டின் போஜனம்
6. 1கொரி 10:3 ஞான போஜனம்
7. மாற் 6:37 200 பணமுள்ள போஜனம்
8. அப் 2:46 கபடமில்லாத போஜனம்
9. லூக் 14:15 தேவனுடைய இராஜ்யத்தின் போஜனம்
10. லூக் 17:8 ஆயத்தம் பண்ணின சாப்பாடு
11. மத் 11:18 போஜனம் பண்ணாத யோவான்
12. மத் 11:19 போஜனம் பண்ணும் இயேசுகிறிஸ்து

XXXXXVII. பாடுகளின் திரவியங்கள்:-

I. பரிமளம்

A. பரிமளம் தயாரிப்பது எப்படி?

வெள்ளைப்போளம், சுகந்த கருவா பட்டை, சுகந்த வசம்பு, இலவங்க பட்டை, ஒலிவ எண்ணெய் ஆகியவைகளைக் கொண்டு, தைலக்காரன் என்று சொல்லப்படும், விஷேச மனுஷனால் உரு -வாக்கப்படுவதுதான் பரிமள தைலம் (யாத் 30:23,24,25) என்று பரிசுத்த வோதாகமம் தெளிவாக விளக்கியுள்ளது. பரிமள தைலம் என்றால் அபிஷேகம் என்று பொருள். இருதயத்தை களிப்பாக வைத்திருக்கும் விசேஷ குணம் இந்த பரிமளத்திற்கு உண்டு (நீதி 27:9). ஆம், யார் வாழ்வில் அபிஷேகம் ஏராளம், தாரளமாக உள்ளதோ அவர்களின் இருதயம் எப்போதும் களிப்புள்ளதாகத் தான் இருக்கும்.

ஞானத்துக்கும், கனத்துக்கும் ஒப்பிட்டு இந்த பரிமள தைலம் சொல்லப்பட்டுள்ளது. இந்த பரிமள தைலத்தை எங்கு வைத்திருந் -தாலும் சரி, அல்லது பயன்படுத்தினாலும் சரி அந்த சுற்று வட் -டாரம் எங்கும் அற்புதமான வாசனை வீசுவதை உணர முடியும் (உன்ன 1:3). அந்த வாசனை இன்பமான வாசனை என்று வேதம் வர்ணிக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாய், தேவனுக் -காய் வாழ்கின்றவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் இன்பமான வாசனை தைலமாகத்தான் இருப்பார்கள். காரணம், அபிஷேகம் என்னும் பரிமளம் அவர்களுக்குள் இருக்கின்றது.

இயேசுவின் சரீரத்தை தொட்ட பரிமள தைலத்தை குறித்து முழு வேதாகமமும் விவரித்துச் சொல்லப்பட்டாலும், எசேக்கியா இராஜா இன்னும் விபரமாய் காண்பிக்கிறதை பார்க்க முடியும் (ஏசா39:2). வெள்ளி, பொன், பொக்கிஷங்கள் போன்ற ஏழ வித -மான பொருட்களுக்கு நடுவில் கொண்டுபோய் இந்த பரிமள தைலத்தை பத்திரமாக வைத்திருந்தான்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

பாபிலோன் இராஜாவின் ஆட்கள் எசேக்கியா இராஜாவின் சுக-பெலனை விசாரிக்க வந்த போது இவன் தன்னுடைய பொக்கிஷ-சாலையைத் திறந்து அங்கு பாதுகாப்பாக வைத்திருந்த பரிமளத்-தைலத்தையும் அவர்களுக்கு காண்பித்து, சந்தோஷப்பட்டான். இராஜாக்களையும், இராஜ அரண்மனைகளையும் வாசனை வீசப் பண்ணினது பரிமள தைலம் ஆகும்.

B. உவமைக்கு ஒப்பான சில பரிமளங்கள்:-

1. யாத் 30:25 அபிஷேகம் என்னும் பரிமளம்
2. நீதி 27:9 இருதயத்தை களிப்பாக்கும் பரிமளம்
3. பிர 10:1 ஞானம் மற்றும் கனம் என்னும் பரிமளம்
4. உன்ன1:3 இன்பமும் – வாசனையுமுள்ள பரிமளம்
5. தானி 10:3 பூசிக் கொள்ளாத பரிமளம்
6. லூக் 7:46 இயேசுவின் பாதத்தை நனைத்த பரிமளம்
7. Iசாமு 8:13 பரிமளம் செய்யும் குமாரத்திகள்
8. Iநாளா 9:30 பரிமளம் இறக்கும் குமாரர்கள்
9. IIநாளா 16:14 கொழுத்தப்பட்ட பரிமளம்

C. பூசணம்

எந்த ஒரு பொருளையும் சில நாட்கள் பயனபடுத்தாமல் மண்-ணிலோ (அல்லது) தரையிலோ வைத்திருந்தால் அதை சுற்றிலும் பஞ்சு போன்றும், வெள்ளை நிறத்திலும் பூசணம் பூக்க ஆரம்பித்து விடும். பார்ப்பதற்கும் தொடுவதற்கும் பூசணம் அழகாக இருந்தாலும், அது தீங்கு செய்யக் கூடியது. பின் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது.

இயேசுவின் மரண சரீரத்தை சீலைகளில் சுற்றி பெட்டியில் வைக்காமல், கல்லறைக்குள் நேரடியாக தரையில் தான் வைத்-தனர். அங்கு ஈரம் இருந்திருக்கும். மண்ணும், பாறையுமாக அந்த கல்லறைகாணப்பட்டது. அப்படிப்பட்ட இடத்தில் இயேசுவின் மரண சரீரத்தை சுற்றிலும் பூசணம் பூத்து விடக் கூடாது என்று கவனமாக இருந்ததால்தான் நிக்கொதேமு கரியபோளத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

நாமும் கூட சில நாட்கள் வேதம் வாசிக்காமல், சில நாட்கள் ஜெபம் பண்ணாமல் இருந்து விட்டால் நம் வாழ்விலும் கூட பூஞ்-சைகள் என்று சொல்லப்படுகின்றபூசணம் பூத்து விடும். அப்படி ஆகி விடாமல், ஜெபத்தையும், வேத வாசிப்பையும் ஒழுங்காக காத்துக் கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாகும்.

பூசணம் என்றால் பொய் சொல்லுதல் அல்லது நடித்தல் என்று அர்த்தமாகும். யோசுவாவை சந்திக்க வந்த அந்நியராகிய சிலர் பூசணம் பூத்த உணவோடும், பழைய செருப்போடும் வந்து அவனுக்கு முன்பாக நடித்து, வேஷம் போட்டார்கள் (யோசு 9:5,12). அவர்களின் நடிப்பும், வேஷமும் மூன்றேநாளில் வெளிப்பட்டு பூஷ-ணம் பூத்ததைப் போல மாறிப் போனார்கள்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

அவர்களைப் பார்த்து யோசுவா சொன்னதை கவனியுங்கள். “இப்போதும் நீங்கள் சபிக்கபட்டவர்கள்; என் தேவனுடைய ஆலயத்–துக்கு விறகு வெட்டுகிறவர்களும் தண்ணீர் எடுக்கிறவர்களுமான பணிவிடைக்காரராயிருப்பீர்கள்; இந்த ஊழியம் உங்களை விட்டு நீங்–கமாட்டாது என்றான்” (யோசு9:23). கிறிஸ்துவை தெரிந்து கொண்ட யாரானாலும், பூசணம் பூக்கும் வாழ்க்கை வாழ்ந்தால் சாபம்தான் தொடரும். ஆனபடியினால் பூசணத்தை தடுக்க கூடிய கரியபோளமாக மாறுவோம். நம்மையும், நாம் இருக்கும் இடத்தை–யும் காத்துக் கொண்டு வாசனை வீசுவோம்.

D. நிக்கொதேமு–I:-

கரிய போளத்தை குறித்து பேசினால் கட்டாயம் நிக்கொதேமுவை குறித்தும் நாம் பேசியாக வேண்டும். காரணம், இயேசுவுக்காக கரி–யபோளத்தை கொண்டு வந்ததே இவன்தான். நிக்கொதேமுவுக்கு மூன்று அடையாளங்கள் உண்டு. 1) பரிசேயன் 2) யூதர்களின் அதிகாரி 3) இஸ்ரவேலருக்கு போதகன்.

இவனுடைய ஆரம்பம் யூதர்களின் மற்றஅதிகாரிகளோடும், பரி–சேயரோடும் இணக்கமாகக் காணப்பட்டாலும், இயேசுவின் திரு–வாய் மொழியை கேட்டது முதல் இயேசுவின் இரகசிய சீஷனாக மாறிவிட்டான் என்றுதான் செல்ல வேண்டும். பரிசேய தலைவர்க–ளிடம் இயேசுவுக்காக பரிந்து பேசினவன் இவன்தான் (யோவா 7:50ற்ர்53).சனகெரிப் என்னும் சங்கம் கூடி இயேசுவை கொலை செய்ய தீர்மானித்த சமயத்தில் அதற்கு நிக்கொதேமு எதிர்ப்பு தெரிவித்ததாக வரலாறு கூறுகின்றது.

முன்பு பாவியை போல் இருந்த நிக்கொதேமு பின் நாட்களில் நீதிமான் என்று சொல்லப்பட்ட யோசேப்போடு கூட நட்பு வைத்துக் கொண்டு, இயேசுவின் சரீர அடக்கத்துக்குத் தேவையான பல உதவிகளை செய்தான். அதனால், நிச்சயம் இவனும் நீதிமானாக மாறியிருப்பான். நீங்களும் கூட நம்முடைய பழைய பாவ வாழ்க்கை, பாவ சுபாவங்களை விட்டு விட்டு நிக்கொதேமுவை போல மாறினால், நீங்களும் நீதிமானாக மாறுவீர்கள் என்பது உண்மையிலும் உண்மையாகும்.

யூதர்கள் இயேசுவை கொலை செய்ததினால் அவர் மரித்து விட்டார் என்று தெரிந்ததும், இயேசுவின் உடலை சகல மரியாதை யோடும் அடக்கம் பண்ண வேண்டும் என்று நினைத்த நிக்கொதேமு ஏறத்தால 100 இராத்தல் கரியபோளமும், வெள்ளைப்போளமும் கலந்து கொண்டு வந்தான்.

ஒரு இராத்தல் என்றால் 320 கிராம் ஆகும். நூறு இராத்தல் என்றால் 32 கிலோ அளவுள்ள வாசனை திரவியங்களை கொண்டு வந்தான். கொடுப்பதில் நிக்கொதேமு முன் மாதிரியான–வன் என்பதை நிரூபித்து விட்டான்.

முதலாவது தன்னையே கிறிஸ்துவுக்கு கொடுத்தான். பின்பு வாசனை திரவியங்களை நூறு இராத்தல் அளவுக்கு கொடுத்து தன்னை ஒரு முன் மாதிரியாக்கி கொண்டான். நீங்களும் கிறிஸ்து இயேசுவுக்கு உங்களை கொடுங்கள், உங்களால் இயன்றவைகளை கொடுங்கள். கர்த்தர் உங்களையும் நீதிமானாக மாற்றுவார்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

நிக்கொதேமு—II:-

"ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான்" (யோவா19:39).

இயேசுவின் நான்கு சுவிசேஷங்களில் ஒரே ஒரு இடத்தில் மட்–டும் சொல்லப்பட்டுள்ளதுதான் இந்த கரியபோளம். ஆனாலும் இதை குறித்ததான ஆழ்ந்த சத்தியம் நமக்குண்டு.

கரியபோளம் என்றால், வாசனை பொருள்களில் ஒன்று. இது அந்நாட்களிலேயே விலையுயர்ந்த பொருளாக கருதப்பட்டது. கிறிஸ்–துவுக்காக வாழ்கின்றநாமும் கூட நாம் இருக்கின்றஇடங்களில் எல்–லாம் சத்தியம் என்னும் வாசனையை வீசுகின்றவர்களாக இருக்க வேண்டும்.

இதை தயாரிக்க பயன்படும் மரத்தின் பெயர் AQUILARIA TREE என்பதாகும். இந்த மரத்தின் தண்டு பகுதியின் நடு மையத்திலி–ருந்து வெட்டி, துண்டித்து எடுப்பார்கள். அந்த நடு மையப் பகுதி மிக கடினமாக இருக்கும். அதாவது, நம் ஊர்களில் காணப்படும் கருவேல முள் மரத்தின் நடு மையத்தில் அரக்கு நிறத்தில் இருப்ப–தைப் போலதான் கரியபோள மரத்திலும் காணப்படும். இது, கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்காக எவ்வளவு உறுதி–யாக இருக்க வேண்டும் என்பதை காண்பிக்கின்றது. இதை வாசிக்கும் நீங்களும், உங்களின் ஜீவியமும் உண்மையாகவே கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக உறுதியாக உள்ளீர்களா என்பதை தயவு செய்து கணித்துப் பார்த்து சீர்படுத்திக் கொள்ளுங்கள்.

கரியபோளம் என்பது பூசணம் பூப்பதையும், ஒட்டுண்ணி என்று சொல்லக்கூடிய கரையான்களையும் தடுக்க கூடியது. இயேசு–வின் மரண அடக்கத்துக்காக கரியபோளத்தைக் கொண்டு வந்த நிக்கொதேமுவை குறித்த சில உவமையான சில வசனங்கள்.

E. மூன்று அடையாளமுள்ளவன்:—

1. i. யோவா 3:1 — பரிசேயன்
   ii. யோவா 3:1 — யூதர்களுக்கு அதிகாரி
   iii. யோவா3:10 — இஸ்ரவேலின் போதகன்
2. யோவா 7:50 — இராத்திரியில் இயேசுவிடம் வந்தவன்
3. யோவா 3:2 — இயேசு பிதாவினால் அனுப்பப்பட்டவர் என்ற வெளிப்பாடு பெற்றிருந்தவன்
4. யோவா 3:2 — இயேசுவை ரபீ என்றும் போதகர் என்றும் மரியாதையோடு அழைத்தவன்
5. யோவா 3:4 — தன் சந்தேகங்களை இயேசுவிடம் கேட்டு தெரிந்து கொண்டவன்
6. யோவா 7:51,52 — சனகெரிப் சங்கத்தில் இயேசுவுக்காக பரிந்து பேசினவன் (or) வழக்காடினவன்.
7. யோவா 19:39 — 100 இராத்தல் கரியபோளம் கொண்டு வந்தவன் (320*100=32கிலோ)

II. கந்தவர்க்கங்கள்:–

“வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் –பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக் கொண்டு, வேறு சில ஸ்திரீகளோடுங் கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள்” (லூக். 24:1).

கந்தவர்க்கம் என்பது புதிதாய் கேள்விபடும் பெயர் போல் காணப்படலாம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் சமயத்தில் அவருக்கு பயனபடுத்தப்பட்டு, அவருடைய மரணத்திலும் இது அதிகமாய் உபயோகப்படுத்தப்பட் –டுள்ளது. கந்தவர்க்கம் என்றால் இயேசுவின் கன்னங்கள் என்று அர்த்தமாகும் (உன். 5:13). ஓர் வித்தியாசமானது தான் கந்த –வர்க்கம். இஸ்மவேலர் இந்த கந்தவர்க்கங்களை விரும்பி வாங் –குகிறவர்களாகவும், விற்பவர்களாகவும் இருந்துள்ளனர். எசேக் –கியா இராஜா பொக்கிஷசாலையில் மிக முக்கியமான பொக்கிஷங் –களை வைத்திருந்த இடத்தில் இதையும் வைத்திருந்தான் (IIஇராஜா. 20:13). அப்படியானால், இது எவ்வளவு விலையும், மதிப்பும் அதிகமானது என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

யாக்கோபு மற்றும் யோசேப்பின் நாட்களில் கந்தவர்க்த்தை காணிக்கையாகவும் கொடுத்துள்ளனர் (ஆதி. 43:11). காணிக்கை என்றால் பரிசுத்தமானது என்று அர்த்தமாகும். அப்படியானால், கந்தவர்க்கமும் பரிசுத்தமாக கருதப்பட்டது. அதே போல நீங்களும் உங்கள் வாழ்க்கையும் பரிசுத்தமான காணிக்கையாக மாற வேண்டும். சேபாவின் இராஜஸ்திரீ, சாலமோனுக்கு அதிகமான கந்த –வர்க்கங்களைத்தான் காணிக்கையாகக் கொண்டு போனாள் (Iஇராஜா 10:10). அதைப் போல இன்று வரையும் யாராலும் கந்த –வர்க்கத்தை காணிக்கையாக கொடுக்க முடியவில்லை. நீங்கள் கர்த்தருக்கு கொடுத்த, கொடுத்துக் கொண்டிருக்கிற காணிக்கை –கள் எப்படிபட்டதாக உள்ளது என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

A. கந்தவர்க்கம் என்றால் என்ன?

கந்தவர்க்கம் என்பது இரண்டு வகைப்படும். முதல் வகை கர்த்தருடைய ஆராதனைக்குரியது. இரண்டாவது வகை ஐசுவரிய –வான்கள், இராஜாக்கள், பிரபுக்கள் பயன்படுத்தக் கூடியது.

வெள்ளைப்போளம் என்றால் வாசனையையும், சாம்பிராணி என்றால் தூபம்/துதியையும், நளததைலம் என்றால் விலையேறப் பெற்றதையும், பரிமளத் தைலம் என்றால் அபிஷேகத்தையும், ஒலிவ எண்ணெய் என்றால் பிழியப்படும் அனுபவத்தையும், பிசின் தைலம் என்றால் காயம்/வைத்தியத்தையும், கரியபோளம் என்றால் மரணம்/அடக்கத்தையும் குறிக்கின்றவைகளாய் இருக்கின்றது.

இக்கண்ட ஏழு கந்தவர்க்கங்களில், வெள்ளைப்போளம், வெள்ளைகல்பரணி என்ற நளததைலம், பரிமளத்தைலம், கரிய –போளம், சுகந்தவர்க்கம் என்ற ஐந்து மட்டும்தான் இயேசுவின் பாடுகளின் சமயத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஐந்து என்றால் இயேசுவின் ஐந்து கொடிய காயங்களைக் குறிக்கும். பின்வரும் பகுதியில் ஒவ்வொன்றாக கவனிப்போம்.

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

உன்ன. 4:14

வ.எண்	வசனங்கள்	வசனங்கள்	வ. எண்	வசனங்கள்
1.	சங் 45:8	வெள்ளைப்போளம்	1.	நளதம்
2.	Iநாளா 9:29	சாம்பிராணி	2.	குங்குமம்
3.	யோவா 12:3	நளத தைலம்	3.	வசம்பு
4.	லூக் 23:56	பரிமளத் தைலம்	4.	லவங்கம்
5.	யாத் 30:24	ஒலிவ எண்ணெய்	5.	தூபவர்க்கம்
6.	ஏரே 8:22	பிசின் தைலம்	6.	வெள்ளைப்போள செடி
7.	யோவா 19:39	கரியபோளம்	7.	சந்தனம்

கைகளில் ஆணி, கால்களில் ஆணி, தலையிலே முள்முடி, முதுகிலே சாட்டை அடி, விலாவிலே ஈட்டியினால் குத்தப்படுதல் . என்னும் கொடிய ஐந்து காயங்களால் உண்டாகும் விலையேறப் –பெற்ற இரத்தத்தினால் உங்களை விடுவித்து, சுகமாக்கி, காருண்யம் என்னும் கேடகத்தினால் உங்களை சூழ்ந்து கொள் –ளுவார். நீங்களும் விலையேறப் பெற்றகந்தவர்க்கங்களாக மாறி கிறிஸ்து இயேசுவுக்காக மகிமையாக திகழ கர்த்தர் கிருபை செய்வார்.

B. கந்தவர்க்கத்தை எதற்காகப் பயன்படுத்துவார்கள்?

எரே. 34:5 சாவுக்காக பயன்படுத்துவார்கள்

யாருடைய சாவில் கந்தவர்க்கங்களைப் பயன்படுத்தினார்கள்?

2நாளா 16:24 ஆசா ராஜாவின் சாவில் வெகுதிரளான கந்த –வர்க்கங்களைக் கொளுத்தினார்கள்.

C. உவமையாய் வர்ணிக்கப்பட்டுள்ள சில கந்தவர்க்கங்கள்:–

1) ஆதி 43:11 காணிக்கையான கந்தவர்க்கங்கள்
2) II நாளா 16:14 கொழுத்தப்பட்ட கந்தவர்க்கங்கள்
3) உன்ன 3:6 வாசனை வீசும் பொடியாகிய கந்தவர்க்கங்கள்
4) உன்ன 5:13 கன்னங்கள் என்றகந்தவர்க்கங்கள்
5) எண்ணா. 8:2 குடிக்கக் கூடிய கந்தவர்க்கங்கள்
6) ஏசா 39:2 பொக்கிஷமாகிய கந்தவர்க்கங்கள்
7) லூக் 23:56 ஆயத்தும் என்னும் கந்தவர்க்கங்கள்

வ.கு: எரே 34:5 சமாதானத்தோடே சாவாய்; உனக்கு முன்னிருந்த ராஜாக்களாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோல உன்னிமித்தமும் கொளுத்தி, ஐயோ! ஆண்டவனே, என்று சொல்லி, உனக்காகப் புலம்புவார்கள்; இது நான் சொன்ன வார்த்தையென்று கர்த்தர் உரைத்தார் என்று சொல் என்றார்.

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

III. வெள்ளைக்கல் பரணி

A. வெள்ளைக்கல் பரணி என்றால் என்ன?

ஒரு ஸ்திரீ வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து அவர் சிரசின் மேல் ஊற்றினாள் (மத் 26:7).

இயேசுவின் சரீரங்களை தொட்டவைகளில் இந்த வெள்ளைக்கல் பரணிக்குள் இருந்த தைலத்திற்கும் முக்கிய இடம் உண்டு. காரணம், இந்த சம்பவம் உலகம் முழுவதும் பிரசங்கிக்கப்படும், உலகம் முழுவதும் சொல்லப்படும் (மத் 27:13) என்று இயேசுவே தீர்க்கதரிசனமாக சொல்லி விட்டார்.

வெள்ளைக்கல் என்பது வேதாகம நாட்களில் பயன்படுத்தப்பட்ட ஓர் விலையேறப்பெற்றக் கல்லாகும். இந்த கல் சுத்தமான தங்கம் போன்றபசும் பொன்னுக்கு ஒப்பானது (உன்ன5:15). பெரிய இராஜாக்கள், பிரபுக்கள் இவைகளினால்தான் அரண்மனையின் உள் பகுதியை அலங்கரிப்பார்கள்.

சூனேமித்தியாளின் அரண்மனையில் கூட இந்த கல்லினால் தான் பெரிய தூண்கள் செய்யப்பட்டிருந்தது. பின் நாட்களில் இந்த கல்லினாலான ஜாடிகள், குடுவைகள், நகை பெட்டிகள் செய்யப்பட்டன. விலையுயர்ந்த வாசனை திரவியங்களையும், தைலங்களையும் இவைகளில் அடைத்து பாதுகாப்பார்கள். அப்படிப்பட்ட தைலத்தை ஊற்றி வைத்த வெள்ளைக்கல்லாலான குடுவைதான் (மத் 26:7) பரணி என்று சொல்லப்பட்டுள்ளது. நாம் பயன்படுத்தும் சென்ட் பாட்டில்கள் அழகாகவும் மிக உறுதியாகவும் இருக்க காரணம், வேத வசனத்தின்படி வந்த மரபு ஆகும். வெள்ளைக் கல்லால் செய்யப்பட்ட பரணி எப்படி அழகாகவும் உறுதியாகவும் இருந்ததோ, அது போலவே நாமும் கூட நேர்த்தியாக, உறுதியனாவர்களாக காணப்பட வேண்டும். அப்போதுதான் நம்மால் கிறிஸ்து இயேசுவுக்காக வாசனை வீச முடியும்.

B. நளதம்:—

வெள்ளைக்கல் பரணிக்குள் இருந்த தைலம் நளதம் என்றும் உத்தமம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதில் முதலாவது நளதத்தைக் குறித்து பார்ப்போம்.

நளதம் என்பது ஒரு செடி. அது தனிமையில் வளராமல் எப்போதும் ஒரு கூட்டமாகவே வளரும். அதுபோல விசுவாச பிள்ளைகளும் தனித்து இருக்க கூடாது. மற்றவர்களுடன் சேர்ந்து ஒரு ஐக்கியமாகவே காணப்பட வேண்டும். நமக்கு என்று ஓர் பரிசுத்தமான ஐக்கியம் காணப்பட வேண்டும்.

நளத செடி இருந்த இடத்தில் குங்குமம், வசம்பு, லவங்கம், சந்தனம் ஆகிய மரங்களும் இருந்தன (உன்ன 4:14). மற்ற –தெல்லாம் பெரிய பெரிய மரங்களாக இருந்தாலும், நளதம் ஒரு செடியாகவே இருந்தது. அதே சமயம் நளத செடியைத் –தான் வெள்ளைக்கல் பரணிக்குள் வைக்கும் தைலமாக தேவன் தெரிந்து கொண்டார். அதேபோல, உங்களைச் சுற் –றிலும் பெரிய மனிதர்கள் செல்வாக்கும் அதிகாரமும் நிறைந் –தவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரு செடியைப் போல இருக்கும் உங்களைத்தான் வெள்ளைக் கல்லாகவுகம், பரணி –யாகவும், வாசனையுள்ள தைலமாகவும் மாற்றப் போகின்றார். உங்கள் கவலைகள் மறையும். கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

C. உத்தமம்:–

இயேசுவின் தலை மேல் ஊற்றப்பட்ட வெள்ளைக்கல் பர –ணியில் இருந்த தைலம் உத்தமமானது என்று வேதம் சொல்லுகின்றது (மாற்14:3). அப்படியானால் உத்தமம் என் –றால் என்ன என்று பார்ப்போம்

உத்தமமாய் வாழ்கிறவர்களுக்குள் ஏழு அடையாளங்கள் இருக்கும். IIகொரி 4:2–ல் அவைகளைக் காணலாம்.

1) வெட்கமானதை செய்ய மாட்டார்கள்.
2) அந்தரங்க பாவத்தை வெறுப்பார்கள்.
3) தந்திரமாய் நடக்க மாட்டார்கள்.
4) வசனத்தை புரட்ட மாட்டார்கள்.
5) சத்தியத்தை வெளிப்படுத்துவார்கள்.
6) தேவனுக்கு உண்மையாய் இருப்பார்கள்.
7) மனசாட்சியுடன் நடப்பார்கள்.

இயேசு கிறிஸ்துவுக்குள் இவைகள் அனைத்தும் காணப் –பட்டது. புதிய ஏற்பாட்டில் வாழ்ந்தவர்களில் யோவான்ஸ்நா –னகன் உத்தமனாய் இருந்தான் (லூக் 1:17). இதை வாசிக் –கும் உங்கள் வாழ்வில் உத்தமத்திற்கு தேவையான ஏழு தகு –திகள் உள்ளதா? இல்லையா? என்று சோதித்துப் பாருங்கள். அப்போதுதான் வெள்ளைக்கல் பரணிக்குள் வைக்கப்பட்ட கலங்கமில்லாத (யோவா 12:3) தைலமாக மாறமுடியும். இயேசுவின் தலையையும் குளிரப் பண்ண முடியும். இயேசு –வைப் போல, யோவான்ஸ்நானகனைப் போல மாறுவோம். சாட்சியாய் வாழுவோம். தைலமாய் வாசனை வீசுவோம்.

D. மத். 26:7:—

மாற் 14:3 பரணி (எல்) தைலம்

மத் 26:7 பந்தியில் இருபவர்களுக்கு தடனி விடுவது.

மாற் 14:3 தலையில் ஊற்றி தேய்யக்கக்கூடியது.

அர்த்தம்: மாற் 14:8 இயேசுவின் அடக்கத்தைக் குறிக்கிறது

பலன்: மத் 26:13 உலகமுழுவதுள்ள பரிசுத்தவான்கள் அந்த பெண்ணை நினைக்கிறார்கள், பேசுகிறார்கள்.

E. உவமையாய் சொல்லப்பட்டுள்ள சில வெள்ளைகள்:—

1. ஆதி 40:16 வெள்ளை கூடைகள்
2. நியா 5:10 வெள்ளை கழுதைகள்
3. யோபு6:6 முட்டையின் வெள்ளை கரு
4. உன்ன5:15 வெள்ளைக்கல் தூண்கள்
5. சக 6:3 வெள்ளைக் குதிரைகள்
6. வெளி 18:12 வெள்ளைக் கல்லுகள்
7. வெளி 19:14 வெள்ளை வஸ்திரங்கள்

VI. சுகந்தவர்க்கம்

“ஒய்வு நாளான பின்பு மகதலேனா மரியாளும், யாக்கோ–பின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் அவருக்கு சுகந்த வர்க்கமிடும்படி அவைகளை வாங்கிக் கொண்டு” (மாற்16:1).

இயேசுவின் சரீரத்தை தொட்ட வாசனை திரவியங்களில் மிக முக்கியமானது சுகந்தவர்க்கமாகும். சுகந்த வாசனை–யான காணிக்கையாக தேவனுக்கு செலுத்த வேண்டியவை–களில் இதுவும் ஒன்றாகும். “எனக்கு செலுத்தும்படி கவன–மாயிருக்க கடவீர்கள்” (எண்28:2) என்று ஆண்டவர் கட்ட–ளையும் இட்டிருக்கின்றார். பழைய ஏற்பாட்டு காலத்தில் அப்–படியே செலுத்தியும வந்தனர்.

A. சுகந்த வர்க்கத்தை முக்கியமான மூன்று காரியங்களுக்காக பயன்படுத்தியுள்ளனர்:—

1) யாத் 35:8, யாத் 40:27 } கர்த்தருக்கு தூபம் காட்ட

2) எஸ்தர் 2:12 ஸ்திரீகள் தன்னை அலங்கரித்துக் கொள்ள

3) ஆதி 50:2,3, மாற்16:1 } மரித்தோரை அடக்கம் பண்ண

B. சுகந்தவர்க்கத்தை இரண்டு விதங்களில் தயாரித்தனர்:—

1) II நாளா2:4 தூபம் காட்ட தூளாகவும் (பொடியாக)

2) I நாளா9:30 சிக் கொள்ள தைலமாகவும் செய்தனர்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

சுகந்தவர்க்கம், பரிமளம், நளதம் போன்றவைகளை பல-ரும் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், சுகந்தவர்க்கத்தை மட்டும் எல்லாரும் பயன்படுத்த மாட்டார்கள். காரணம், அது மிக விலையுயர்ந்தது. மிகவும் மதிப்புக்குரியதாகவும் காணப்-பட்டது. ஆனபடியினால்தான் மிகவும் முக்கியமானவர்களாக கருதப்பட்ட, யாக்கோபு, யோசேப்பு, எஸ்தர், இயேசு போன்-றோர்க்கு மட்டும் பயனபடுத்தபட்டுள்ளது. இவர்கள் அனைவ-ருமே ஏதாவது ஒரு வகையில் இராஜாக்களின் வழி மரபை சார்ந்தவர்களாக இருந்ததை காணலாம்.

சுகந்தவர்க்கத்தை குறித்து மேன்மையாக, மகிமையாக, சிறந்ததாக சொல்லப்பட்டிருந்தாலும், இதை முதன் முதலில் யாக்கோபுடைய மரணத்துக்குத்தான் பயன்படுத்தியுள்ளனர். ஒருவருக்கு முழுமையான முறையில் சுகந்தவர்க்கம் இட வேண்டுமானால், குறைந்த பட்சம் நாற்பது நாட்கள் ஆகும் (ஆதி50:3). அந்த அளவுக்கு அது நுட்பமானது. வித்தியாச-மான பொருட்களையும் உடையது. இப்படி பதப்படுத்தப்பட்ட உடல்கள் தான் பின் நாட்களில் "mummy" என்று அழைக்-கப்பட்டது. அவைகள் பிரமீடுகளாகவும் மாறினது.

யாக்கோபு-யோசேப்பு என்னும் இரண்டு பேரின் மரணத்-துக்கும் ஒரே அதிகாரத்தில் சுகந்த வர்க்கமிடுவதை ஆதி 50:3,26-ல் காணலாம். இதுவும் ஓர் விசேஷமான சம்பவம்தான்.

இந்த செய்தியை வாசிக்கின்ற தேவஜனமே, நீங்களும் உங்களின் வாழ்க்கையும் ஓர் அற்புதமான சுகந்தவர்க்கமாக மாறவேண்டும். சுகந்தவர்க்கத்தை போல மூன்று கட்டங்க-ளாக அதாவது, தூபம் என்னும் துதியும், அலங்காரம் என்-னும் சுத்திகரிப்பும், மரணம் நேரிடும் போது சாட்சியும் இருக்குமென்றால் கிறிஸ்துவின் வாசனை உங்கள் மூலமாக வெளிப்படுகின்றது என்று அர்த்தம்.

யாக்கோபு-யோசேப்பு இரண்டு பேரும் மரிக்கும் போது, எங்கள் எழும்புகள் கானானுக்கு கொண்டு போக வேண்டும் என்று சொல்லி விட்டுத் தான் மரித்தனர். அதே போல நாமும் பரம கானான் என்று சொல்லப்படுகின்ற பரம சீயோ-னை குறித்த சிந்தனையும், தரிசனமும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு நாளும் சுகந்தவர்க்-கமாக நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

C. i. சுகந்தவர்கத்தில் என்னவெல்லாம் சுகந்திருக்கும்? (யாத் 30:23):-

1. மத் 2:11 வெள்ளைப்போளம் – காணிக்கை
2. யாத் 30:22,23 கருவாப்ட்டை – மேன்மை
3. உன் 4:14 சுகந்த வசம்பு – சிங்கார வனம்
4. நீதி 7:17 இலவங்கபட்டை – வாசனை
5. யாத் 27:20 ஒலிவ எண்ணெய் – விளக்கு

ii. எதற்காக பயன்படுத்துவார்கள்?

நீதி. 7:17 படுக்கையிலும் படுக்கை விரிப்புகளிலும் போடக்கூடியது.

iii. யாருக்கெல்லாம் சுகந்தவர்க்கமிட்டனர்?

1. ஆதி 50:26 யோசேப்பின் மரணத்தில்
2. யோவா 19:40 இயேசுவின் மரணத்தில்

D. உவமையாய் விவரிக்கப்பட்டுள்ள சில சுகந்தவர்க்கங்கள்:-

1. யாத் 25:6 இஸ்ரவேலர் கொடுத்த சுகந்தவர்க்கம்
2. யாத் 30:23 மேன்மையான சுகந்தவர்க்கம்
3. யாத் 37:29 சுத்தமான சுகந்தவர்க்கம்
4. யாத் 31:11 அபிஷேகம் என்னும் தூபவர்க்கம்
5. ஏசா 3:24 துர்க்கந்தமான தூபவர்க்கம்
6. மாற் 16:1 வாங்கி கொண்டு வந்த தூபவர்க்கம்
7. யோவா 19:40 இயேசுவை சுற்றின தூபவர்க்கம்

V. வெள்ளைப்போளம்

"ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில் இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்பவன் வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டு வந்தான்." (யோவா19:39).

இயேசுவின் சரீரத்தில் பயன்படுத்தப்பட்ட வாசனை திரவியங்களில் மிக முக்கியமானது வெள்ளைப்போளம் ஆகும். இந்த வெள்ளைப்போளம் என்பது இஸ்ரவேல் நாட்டில் நெருக்கமாக புதர் போல் வளர கூடிய "COMMIPORA" என்கின்ற பெயரையுடைய செடியிலிருந்து தயாரிக்கக் கூடியது ஆகும்.

இதை, தூபம் காட்டுதல், வாசனை திரவியம் தயாரித்தல், மருத்துவம் ஆகிய மூன்று காரணங்களுக்காக இஸ்ரவேலர்களும், யூதர்களும் பயன்படுத்தினர். முக்கியஸ்தர்களை பார்க்க போகும் போது இதை ஒரு பொக்கிஷம் போல கொண்டு போய் கொடுப்பார்கள். இயேசு கிறிஸ்து பிறந்த போதும் சாஸ்திரிகள் இதைதான் கொண்டு வந்து மரியாளிடமும், யோசேப்பிடமும் கொடுத்தார்கள் (மத் 2:11). அந்த அளவுக்கு இது விலையேறப் பெற்றவெள்ளைப்போளமாகும்.

இயேசு சிலுவையில் வேதனையோடு தொங்கி கொண்டிருந்த போதும் இந்த வெள்ளைபோளத்தைத் தான் திராட்சைரசத்தில் கலந்து கொண்டு வந்து இயேசுவுக்கு கொடுத்தனர் (மாற்15:23). ஆனால், அவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம், அதிக வலி இல்லாமல் இருப்பதற்காக இப்படி கொடுப்பார்கள். இதை பருகி உடலில் வலி இல்லாமல் போனால், பிதாவின் சித்தம் நிறைவேறாது என்பதற்காகவும், நம்முடைய வேதனைகளை அவர் சிலுவையின் மீது சுமந்து தீர்ப்பதற்காகவும் அவர் அதை பருகவில்லை.

வெள்ளை போளத்தில் வாசனையுள்ளது, வாசனையில்லாதது என்று இரண்டு வகை உண்டு (உன்ன5:5). வாசனையில்லாததை கதவு ஜன்னல் போன்றபொருட்களுக்கும், வாசனையுள்ளதை உடலிலும் பூசிக் கொள்வார்கள்.

கானான் தேசத்தில் காணப்படும் ஆறு விதமான உச்சிதங்களில் வெள்ளைப்போளமும் ஒன்றாகும் (ஆதி43:11). யாக்கோபு இதைதான் யோசேப்புக்கு கொடுத்தனுப்பினான். முக்கியமாய் நாம் கவனிக்க வேண்டிய ஒன்றுண்டு, அதாவது கர்த்தர் இதற்கு "மேன்மையான வெள்ளைப்போளம்" என்று பெயர் வைத்தார் (யாத்30:23). ஆம், தேவனுடைய பார்வையில் கணம் பெற்றவர்கள் மேன்மையானவர்கள்தான் என்பதில் சந்தேகமேயில்லை.

இதை வாசிக்கும் அன்பான தேவ ஜனமே, சாதாரண செடியை இவ்விதமாய் விலையேறப் பெற்றதைலமாக, பொக்கிஷமாக, மேன்மையானதாக மாற்ற கர்த்தரால் ஆகும் என்றால், உங்களையும கூட தேவன் இப்படி மாற்ற வல்லவராய் இருக்கிறார்.

மற்றவர்களின் பார்வையில் நீங்கள் ஒரு சாதாரண செடியைப் போல காணப்படலாம். உங்களுக்குள்தான் தேவன் கிருபை, தாலந்து, பொக்கிஷங்களை வைத்துள்ளார்.

நிச்சயமாக நீங்களும் வாசனை திரவியமாக அற்புதமான வெள்ளைபோளமாக மாறப் போகின்றீர்கள். கர்த்தருடைய இந்த வார்த்தையும், பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையும் இப்படி செய்யும். விசுவாசியுங்கள், விசுவாச அறிக்கையிடுங்கள், தேவனை ஸ்தோத்தரியுங்கள், கர்த்தர் உங்களை கனம்பண்ணி, மேன்மைபடுத்தி வாசனை வீசப் பண்ணும் நேரம் வந்து விட்டது. இந்த வார்த்தைகள் நடக்கும், நிறைவேறும், சம்பவிக்கும் நீங்கள் காண்பீர்கள், கிறிஸ்துவுக்காக சாட்சியாக நிற்பீர்கள்.

A. உவமையாய் சொல்லப்பட்டுள்ள சில வெள்ளைப்போளங்கள்:—

1. ஆதி 37:25 கீலேயாத்தின் வெள்ளைப்போளம்
2. ஆதி 43:11 உச்சிதமான வெள்ளைப்போளம்
3. யாத் 30:23 மேன்மையான வெள்ளைப்போளம்
4. எஸ்த 2:12 சுத்திகரிப்புக்குரிய வெள்ளைப்போளம்
5. சங் 45:8 வஸ்திரங்களில் தடவும் வெள்ளைப்போளம்
6. உன் 3:6 வாசனை வீசும் வெள்ளைப்போளம்
7. உன் 5:13 உதடுகளுக்கு ஒப்பான வெள்ளைப்போளம்
8. மத் 2:11 பொக்கிஷம் போன்றவெள்ளைப்போளம்
9. யோவா 19:39,40 இயேசுவை அடக்கம் பண்ணின வெள்ளைப்போளம்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

JESUS POWER MINISTRIES

வா.ம் - வாக்குத்தத்தம் / வி.ம் - விளக்கம் / எ.ல் - என்றால் / அ.ம் - அர்த்தம்
ஏ.கா - எடுத்துக்காட்டு / உ.ம் - உதாரணம் / மு.கு - முக்கியக் குறிப்பு / அ - அல்லது

XXXXXVIII. எட்டுவித தைலங்கள்:—

1. மாற் 14:8 தைலம் சாதாரண தைலம்:—

யோபு 41:31 சாதாரண தைலம் பொங்கக் கூடியது

41:31 கலக்கத்தையும் உண்டாக்கும்

மாற் 14:8 மரணத்துக்கு ஒப்பானது

உ.ம்: 1இரா 1:39 சாலமோன் சாதாரணமாய் அபிஷேகிக்கப் பட்டான்

1இரா 11:7 பின்மாற்றம் அடைந்தான்

வா.ம்: யாத் 30:32 பரிசுத்தத் தைலம்

2. சங் 133:2 நல்ல தைலம்:—

ஆதி 30:20 நல்ல (எல்) ஈவு

யாக் 1:17 ஈவு (எல்) நன்மையானது

சங் 133:1 ஒருமனதைக் கொடுக்கும்

சங் 133:1 இன்பத்தைக் கொடுக்கும்

1நாளா 12:38 ஒருமனப்பட்டு அணி அணியாய் வருவார்கள்

3. எரே 8:22 பிசின் தைலம்:—

எரே 51:8 பிசின் தைலம் குணமாக்கக் கூடியது

எரே 8:22 பிசின் தைலம் வைத்தியனுக்கு சமமானது

ஆதி 43:11 பிசின் தைலம் உச்சிதங்களில் சிறந்தது

உன் 4:16 பிசின் தைலம் வாசனை வீசக்கூடியது

வா.ம்: எசே 27:17 எண்ணெயையும் பிசின் தைலத்தையும் கொண்டு வருவார்கள்

4. யோவா 12:3 கலங்கமில்லாதது:—

1பேது 2:3 கலங்கமில்லாதது (எல்) ஞானப்பால்

கொலோ 3:16 ஞானப்பால் (எல்) சங்கீதங்கள்

5. யோவா 12:3 விலையேறப்பெற்ற தைலம்:—

யோபு 28:16 எதற்க்கும் ஈடு இல்லாதது

நீதி 3:15 எதற்க்கும் நிகர் இல்லாதது

யோசு 2:14 ஈடு (எல்) ஜீவன்

6. உன் 1:12 நளத தைலம்:—

மாற் 14:3 நளதம் (எல்) உத்தமம்

யோபு 4:6 உத்தமம் (எல்) தேவ பக்தி (எல்) நம்பிக்கை (எல்) உறுதி

சங் 37:37 உத்தமனைப் பார்த்திரு

யோவா 1:48 நாத்தான்வேல் ஓர் உத்தமன்

யோவா 1:50 உத்தமன் பெரிதானவைகளைப் பா

யோவா 8:20 உத்தமனை வெறுக்கமாட்டா

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

7. யோவா 12:3 பரிமளத் தைலம்:-

யாத் 30:25 பரிமளம் (எல்) அபிஷேகம்
ஏசா 39:2 பாதுகாப்பானது
1பேது 1:8 மகிமை நிரப்பும்
சந்தோஷம் நிரப்பும்
களிகூறுதல் நிரப்பும்
வெளி 18:1 மகிமை (எல்) பிரகாசம்
லேவி 21:12 தைலம் (எல்) கிரீடம்

8. லேவி 21:12 அபிஷேகம் தைலம்:-

யாத் 30:25 அபிஷேகத்தைலம் சுத்தமானது
லேவி 8:10 அபிஷேக தைலம் வீட்டையும் சுத்தப்படுத்தும்
1சாமு 16:13 பரிசுத்த ஆவி இறங்கி இருப்பார்
லேவி 21:12 அபிஷேக தைலம் கிரீடமாக மாறும்

XXXXXIX. கிறிஸ்துவின் மரணம் தந்த நன்மைகள்:-

1. எபி 9:26 பாவப்பரிகாரம் கிடைத்தது
2. கலா. 3:13 நியாயப்பிரமாணச் சாபத்திலிருந்து விடுதலை கிடைத்தது.
3. கொலோ. 2:14 நியாயப்பிரமாண அடிமைத்தனத்திலி-ருந்து விடுதலை கிடைத்தது.
4. எபே. 2:14-16 யூதர்-புறஜாதி என்ற வேறுபாடு அகற்-றப்பட்டது அனைவரும் தேவனுக்குப் பிரியமான பரிசுத்த ஜாதியானோம்.
5. கலா. 4:3-5 புத்திரத்துவம் கொடுக்கப்பட்டது.
6. எபே. 2:13 தேவனுக்குச் சமீபமானவர்களானோம்.
7. ரோம. 5:10 தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டோம்.
8. எபே 1:7 பாவ மன்னிப்புக் கிடைத்தது
9. 1யோவா 1:7,9 சுத்திகரிப்புக் கிடைத்தது.
10. ரோம. 5:9 நீதிகரிப்புக் கிடைத்தது
11. ரோம. 8:1-3,34,35 ஆக்கினைத் தீர்ப்பு அகற்றப்பட்டது.
12. 1பேது 1:18,19 / 1கொரி 6:20 } தேவனுக்காக விலைக்கு வாங்கப்பட்டோம்.
13. கலா 6:14 / ரோம. 6:1-3;6:8 } பாவத்திற்கு மரித்தோம்.
14. ரோம. 8:32 / எபே. 1:3 } உன்னதத்தின் அனைத்து ஆசீர்களுக்கும் உரிமையாளரானோம்.
15. எபி. 2:14,15 மரண பயத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம்
16. யுகாலோ 2:14-17 சாத்தானின் மேல் வெற்றிபெற்றோம்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

தினம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

XXXXXX. பாடுகள் நிறைந்த இயேசுவின் மனிதத்தன்மைகள்:-

1. லூக் 1:31 மனித பெற்றோர்களைக் கொண்ட குடும்பம் இருந்தது
2. மத் 26:12 மனித சரீரம் இருந்தது
3. யோவா 12:27 மனித ஆத்துமா இரந்தது
4. மாற் 2:8; லூக் 23:46 மனித ஆவி இருந்தது
5. லூக் 2:52,40 ஞானத்திலும் வளர்த்தியிலும் வளர்ந்தார்
6. லூக் 2:46, 8:45 கேள்விகளைக் கேட்டார்
7. லூக் 2:51 கீதப்படிதலைக் கற்றுக் கொண்டார்
8. யோவா 4:9, 8:57 10:33; 20:15 } மனிதன் என பலாரலும் அடையாளம் காணப்பட்டார்
9. யோவா 6:51,55 இரத்தமும் சதையும் இருந்தது
10. யோவா 2:1,2 பண்டிகைகளில் கலந்து கொண்டார்
11. லூக் 11:1 ஜெபம் செய்தார்
12. மத் 4:1 சோதிக்கப்பட்டார்
13. மத் 4:2; 21:18 பசியடைந்தார்
14. யோவா 4:7, 19:28 தாகமடைந்தார்
15. யோவா 21:13-15, லூக் 24:41-43 } உணவு உண்டார்
16. யோவா 4:6 களைப்படைந்தார்
17. மத் 8:24 தூங்கினார்
18. மாற் 10:21 அன்பு கூர்ந்தார்
19. மத் 9:36; 14:14 லூக் 7:13 } மனம் உருகினார்
20. மாற் 3:5 கோபப்பட்டார்
21. லூக் 10:21 அழுதார்
22. லூக் 10:21 களிகூர்ந்தார்
23. யோவா 2:17 வைராக்கியம் கொண்டார்
24. மத் 26:37, மாற் 14:34 துயரமடைந்தார்
25. மத் 26:30 பாடினார்
26. லூக் 22:44 வியர்வையால் நனைந்தார்
27. யோவா 11:33, 12:27, 13:21 கலங்கினார்
28. யோவா 19:34 இரத்தம் சிந்தினார்
29. மத் 27:50 மரித்தார்
30. மத் 27:59,60 அடக்கம் பண்ணப்பட்டார்

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXXXXI. இயேசுவும் பரதீசும்:-

இயேசுவின் எந்த பக்கம் தொங்கிய கள்வன் பரதீசின் வாக்குத்தத்தம் பெற்றான் என வேகத்தில் இல்லை.

வேதாகமத்தில் மிகவும் குறைவான இடங்களில் பயன்-படுத்தப்பட்டுள்ள சொல்லாட்சிகளில் பரதீசும் ஒன்று. கிரேக்க மொழியில் பரடைசோஸ் (paradeisos) என்பர். இதனை கிரேக்க மொழியில் முதலில் பயன்படுத்தியவர் செனபோன்தான் என்று கருதப்படுகிறது. அவர் பெர்சிய அரசர்களின் பூந்தோட்டங்களைக் குறிக்கவே இச்சொல்-லைப் பயன்படுத்தினார்.

பரதீசு என்றால் அடைத்து பாதுகாக்கப்பட்ட தோட்டம். பூந்தோட்டம் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். கிரேக்க மொழி பழைய ஏற்பாட்டில் நெகே. 2:8; பிர. 2:5; உன். 4:13 ஆகிய இடங்களில் இந்த சொல்லாட்சி வருகிறது. அவ்விடங்கள் ராஜாவின் வனம், தோட்டங்கள், தோட்டம் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இலத்தீன் மொழிபெயர்ப்பு வேதாகமமான யூதர்கள் இழந்த ஏதேனின் நிலை மீண்டும் தங்களுக்குக் கிடைக்கும் என நம்பியி-ருந்தனர்

புதிய ஏற்பாட்டில் வரும் ஆபிரகாமின் மடி (லூக். 16:19-13), மூன்றாம் வானம் (2கொரி. 12:2) . ஆகியன பரதீசின் உருவகங்கள் என வேதாகம அறிஞர் பலர் கருதுவர்.

மற்றபடி புதிய ஏற்பாட்டில் லூக். 23:43, 2கொரி. 12:3, வெளி. 2:7 ஆகிய மூன்று, இடங்களில் நேரடியாக இது கூறப்படும்.

இயேசுகிறிஸ்துவின் மரணம் வரை தேவனை விசுவா-சித்தவர்கள் இறந்தால் மேல்பாதாளம் என்னும் ஆபிர-காம் மடிக்கு செல்வர் என்றும், அவரது பலியாகுதலுக்-குப் பின் அது பரதீசு என்னும் மூன்றாம் வானத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது என்று கருதுவோர் உளனர். எனவே இப்போது விசுவாசிகள் மரித்தால், நல்ல உணர்-வுள்ள நிலையுடன் பரதீசில் இளைப்பாறுவர். பின்பு கர்த்தரின் இரண்டாம் வருகையில் சரீரத்துடன் உயிர்த்து கர்த்தரோடிருப்பர்.

வெளி 2:7-ல் வரும் பரதீசு வாக்குத்தத்தம் இழந்த இன்பவனமான ஏதேனுக்கு நிகரான புதிய இடத்தைக் குறிப்பிடுறது. ஜெயங்கொள்வோருக்கு அதன் மத்தியிலி-ருந்து ஜீவ விருட்சக்கனியைப் புசிக்கும் அனுபவம் கிடைக்கும். நாம் ஜெயங்கொள்ளப் போராடுகிறோமா...?

திணம் ஓர் பிரசங்கம்
Daily Preaching

சிலுவையின் வரலாறு
History of Cross

XXXXXXII. பாடுகளுக்கும் சிலுவைக்கும் தொடர்புடைய இடங்கள்:–

1. மத். 26:3 காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரிய –னுடைய அரண்மனை.
2. மத் 26:6 பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோனின் வீடு.
3. மத். 26:18 நகரம்
4. மத். 26:30 ஒலிவ மலை
5. மத். 26:32 கலிலேயா
6. மத். 26:36 கெத்செமனே என்னப்பட்ட இடம்
7. மத். 26:39 சற்று அப்புறம்
8. மத். 27:5 தேவாலயம்
9. மத். 26:58 பிரதான ஆசாரியனுடைய அரண்மனை
10. மத். 26:69 அரண்மனை முற்றம்
11. மத். 26:71 வாசல் மண்டபம்
12. மத். 27:7 குயவனுடைய நிலம்
13. மத். 27:8 இரத்த நிலம்
14. மத். 27:27 தேசாதிபதியின் அரண்மனை
15. மத். 27:33 கபாலஸ்தலம்
16. மத். 27:39 அந்த வழி, பூமி
17. மத். 27:51 கன்மலைகள்
18. மத். 27:52 கல்லறைகள்
19. மத். 27:60 கன்மலையில் வெட்டியிருந்த புதிய கல்லறை
20. மாற் 14:14 தகுதியான இடம்
21. மாற் 14:15 விஸ்தாரமான மேல் வீட்டு அறை
22. மாற் 14:54 நெருப்பண்டை
23. மாற் 14:57 கை வேலையாகிய தேவாலயம்
24. மாற் 14:66 அரண்மனை முற்றம்
25. மாற் 14:68 வெளி வாசல் மண்டபம்
26. மாற் 15:16 அரமனையாகிய மாளிகை
27. மாற் 15:21 நாட்டிலிருந்து
28. மாற் 15:22 கபாலஸ்தலம்
29. மாற் 16:3 கல்லறையின் வாசல்
30. லூக் 22:10 போகும் வீட்டிற்குள்
31. லூக் 22:12 மேல் வீட்டிலுள்ள பெரிய அறை
32. லூக் 22:41 கல்லெறிதூரம்
33. லூக் 22:43 வானத்திலிருந்து
34. லூக் 22:54 பிரதான ஆசாரியனுடைய வீடு
35. லூக் 22:55 முற்றத்தின் நடுவே
36. லூக் 22:66 ஆலோசனை சங்கம் கூடின இடம்
37. லூக் 23:5 கலிலேயா நாடு
38. லூக் 23:5 யூதேயா தேசமெங்கும்
39. லூக் 23:7 எருசலேம்
40. லூக் 23:51 அரிமத்தியா

Rev.SSK.Samuel, Jesus Power Ministries,R.R.Nagar-626204.M:+91 99 62 54 74 69, +91 90 87 96 89 55 Email: ssksamuel69@gmail.com

XXXXXXIII. மாற்கு கூறும் கர்த்தரின் இறுதி வார நிகழ்வுகள்:–

நாள்	நிகழ்ச்சி	வேதபகுதி
ஞாயிறு 10ம் தேதி	எருசலேம் நுழைவு பின்பு சாயங்காலத்தில் பெத்தானியாவில் தங்குதல்	மாற் 11:1–11
திங்கள் 11ம் தேதி	அத்திமரத்தைச் சபித்தலும் எருசலேம் தேவாலயத்தைச் சுத்தமாக்குதலும் (பின்பு சாயங்காலம் மீண்டும் பெத்தானியாவுக்கு?)	மாற் 11:12–19
